ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இயற்பா

பொய்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

முதல் திருவந்தாதி.

இந்த க்ரந்தம்·

அபாரகருணாஸாகரரான பெரியவாச்சான்பிள்ளை

திருவாய்மலர்ந்தருளிய –

மணிப்ரவாள வ்யாக்யாநஸஹிதம்·

இச்சயாபண்டிதரான

சிங்கப்பெருமாள்கோவில்

ஸ்ரீமான் - மாடபூசி

தர்க்கதீர்த்தர் - ராமாநுஜாசார்யரால்

எழுதப்பட்ட ப்ரதிபதஸஹிதம்

———(:)———

அநேக தேசாந்த ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினால்

லேககப்ரமாதாதி ஜநிததோஷங்களில்லாமல்

மேற்படி

ராமாநுஜாசார்யராலும்

ஸி. முத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டு

———

ஸ்ரீ வைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்) யாரால்

சென்னப்பட்டணம்,

ஸ்ரீநிகேதந முத்ராக்ஷரசாலையில்

ஸ்ரீபராங்குசதிருவவதாராதி - ௫௦௦௧.

சார்வரிஸம்வத்ஸரத்தில்

பதிப்பித்துப் ப்ரசுரம் செய்யப்பட்டது.

———

௧௯௦௧.

விஜயதேத்தராம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்)

1882 - த்திய ஆராவது ஆக்ட்டுப்ரகாரம் ரிஜிஸ்டர் செய்து ஸ்தாபிக்கப்பட்டது.

ப்ரதிமாதம் 5 - பாரங்களுக்குக் குறையாமல் சாஸ்வதமாய் அச்சிட்டு மூன்றுதலைமுறைகளுக்கு பேட்ரன்களுக்கு 12-காபிகளும், பாகஸ்தர்களுக்கு 5-காபிகளும் போஷகர்களுக்கு 1-காபியும் ப்ரதிமாதம் கொடுக்கப்படும்.

பேட்ரன் சந்தா ரூபாய் - 200, பாகஸ்தர்களுக்கு சந்தா ரூபா 100 போஷகர்களுக்கு சந்தா ரூபா 20 - மொத்தமாயாவது ப்ரதி இங்லீஷ்மீ 15வுக்குள் 10-ல் ஒருபாகமாயாவது கட்டவேண்டும். இவர்களுக்குப் ப்ரவேசவர்த்த ஙீ க்ரமமாக ரூபா, 2-0-0, ரூபா, 1-0-0, ரூபா, -0-4-0.

மற்ற விவரங்களெல்லாம் சட்டபுஸ்தகத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும். இதின் விலை அணா 2.

இந்த ஸபையாரால் இதுவரையில் அச்சிட்டு ப்ரசுரம்செய்யப்பட்ட க்ரந்தங்கள்.

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம் ப்ரதிபததாத்பர்யஸஹிதம் மேலான காகிதம்தமிழ்லிபி 3—4—0
பாரதாதி தனிஸ்லோகம் டிடோ 0—5—0
பாராசரவிசிஷ்ட பரமதர்மசாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம் 0--14—0
ராமசரமஸ்லோகம் ஸவ்யாக்யாநம் டிடோ 0—3—0
இயற்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபதடீகா அரும்பதஸஹிதம் டிடோ 1—2—0
டிடோ இரண்டாந்திருவந்தாதி டிடோ 0--12—0

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம் ப்ரதிபததாத்பர்யஸஹிதம் உயர்ந்த காகிதம் தெலுங்குலிபி 3—4—0
ராமசரமஸ்லோகம் டிடோ 0—3—0
பாரதாதி தனிஸ்லோகம் டிடோ 0—5—0
இயற்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபத டீகா அரும்பதஸஹிதம் 1—3—0
டிடோ இரண்டாந்திருவந்தாதி டிடோ 0--12—0

இப்படிக்கு,

கராலபாடி - ஆழ்வாரய்ய,

கார்யதர்சி-தனாதிகாரி.

நெ. 31, வெங்கடாசலமுதலிதெருவு, சென்னை.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை (லிமிடெட்)

இயற்பா.

முதற்றிருவந்தாதி.

இந்த க்ரந்தம், நாலாயிர ப்ரபந்தத்தில் ௩-வது ஆயிரத்தில் முதல் ப்ரபந்தம். இப்ப்ரபந்தத்தை யருளிச்செய்தவர், பகவந் நிர்ஹேதுக கடாக்ஷ லப்த விபவரான பொய்கையாழ்வார். இவர் முதலாழ்வார்களான மூவரில் முதல்வர். இவர் காஞ்சீநகரத்தில் யதோக்தகாரி ஸந்நிதி ஸமீபத்திலிருக்கிற பொய்கைப் புஷ்கரிணியில் ஸ்வர்ணமயமான தாமரஸபுஷ்பத்தில் லோகோஜ்ஜீவநார்த்தமாக வவதரித்த அயோநிஜர். இவர் பொய்கைப்புஷ்கரணியி லவதரித்தவராகையால் பொய்கையாழ்வார் என்கிற திருநாமத்தைப் பெற்றருளினர்.

இவர் த்வாபரயுகாதி எட்டு லக்ஷம் அறுபதிணுயிரத்துத் தொள்ளாயிரம் ஸம்வத்ஸரமான ஸித்தார்த்தி ஸம்வத்ஸரம் ஐப்பசி மாஸம் சுக்லாஷ்டமீ செவ்வாய்க்கிழமை ஶ்ரவண நக்ஷத்ரத்திலவதரித்தார். இவருக்கு நாமாந்தரங்கள்: காஸாரயோகி, ஸரோமுனீந்த்ரர். திருவாராதநம்: ஆழ்வார்கள் நைனர், ஆசார்யர், ஸேனை முதலியார். அஜ்ஞாநிகளான ஸம்ஸாரிகளோடு ஸஹவாஸ மஸஹ்யமாய்க் காடுகளிலேயே ஒருநாளிருந்தவிடம் மற்றொருநாளிராமல் ஸஞ்சரித்துக்கொண்டு அந்ந பாநாதிகளைவிட்டு பகவத் குணங்களையே தாரகபோஷக போக்யங்களாகக்கொண்டு திவ்யயோக ஸம்பந்நராய் அநேகமாயிரம் வர்ஷம் எழுந்தருளியிருந்தார். இவர் ப்ரபாவத்தைப்பார்த்து ஸ்ரீ பாஞ்சஜந்யாம்சமென்று சொல்லுவர்கள். இவர் ஒருநாள் திருக்கோவலூரில் ஒரு இடைகழியில் மழையினுபத்ரவத்தினல் சயநித்துக்கொண்டிருக்க, அங்கு பூதத்தாழ்வார் எழுந்தருள, இருவர் படுக்க இடம் போராமையால் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். அநந்தரம் அங்கு பேயாழ்வாருமெழுந்தருள, மூவரிருக்க இடம் போராமையால் மூவரும் நின்றுகொண்டிருந்தார்கள். பக்த சிரோமணிகளான இம்மஹாநுபாவர் மூவரும் ஒருகாலத்தில் ஓரிடத்திலெழுந்தருளியிருக்கு மிருப்பைப்பார்க்க ஸர்வேஶ்வரனும் லக்ஷ்மீஸமேதனுய் இவர்களிடையில் ப்ரவேசித்தான்.

அப்பொழுதங்கு நிற்கவும் இடம்போராமலிருக்க, இதுக்கென்னகாரணமென்று யோகத்ருஷ்டியால் பார்த்து ஶ்ரிய:பதியை ஸாக்ஷாத்கரித்தார்கள். தததநுபவபரீவாஹரூபமான ப்ரபந்தங்களையும் அருளிச்செய்தார்கள். அவைகளில் முதலான இந்த ப்ரபந்தத்தில் பாசுரம்-௧00-இதற்கு முதலந்தாதியென்று திருநாமம். ப்ரதிபாசுரத்தி

லும் கடையிலிருக்கும் சப்தம் மேற்பாசுரத்தினுதியில் வருகிறபடியால் இதுக்கு அந்தாதி என்றுபெயர். இதில் பாடின திருப்பதிகள்: கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருக்கோவலூர்.

இந்த ப்ரபந்தத்துக்கு வ்யாக்யாநம் செய்தருளினவர் பெரியவாச்சான்பிள்ளை. இவர் ப்ரபாவம் தனிஸ்லோக பீடிகையில் இச்சபையாரால் விஸ்த்தரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வ்யாக்யாநத்துக்கு அரும்பதம் ஸாதித்தவர் அஷ்டதிக்கஜங்களிலொருவரான அப்புஸ்வாமி.

திருநக்ஷத்ர தனியன்.

𑌤𑍁𑌲𑌾𑌯𑌾𑌂𑌶𑍍𑌰𑌵𑌣𑍇𑌜𑌾𑌤𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌂𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌵𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑍍।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑌂 𑌸𑌰𑍋𑌯𑍋𑌗𑌿𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇॥
𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌂𑌸𑌰𑌸𑌿𑌹𑍇𑌮𑌾𑌬𑍍𑌜𑍇 𑌜𑌾𑌤𑌂𑌕𑌾𑌸𑌾𑌰𑌯𑍋𑌗𑌿𑌨𑌮𑍍।
𑌕𑌲𑌯𑍇𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌪𑌤𑍍𑌯𑍂𑌰𑌵𑌿𑌂𑌦𑍀𑌪𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍॥

துலாயாம்ஸ்ரவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்சநவாரிஜாத்
த்வாபரேபாஞ்சஜந்யாம்சம்ஸரோயோகிநமாஸ்ரயே
காஞ்ச்யாம் ஸரஸிஹேமாப்ஜேஜாதம் காஸாரயோகிநம்
கலயேயச்ச்ரிய:பத்யூரவிந்தீபமகல்பயத்.

வாழித்திருநாமம்.

செய்ய துலா வோணத்தில் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மா நகரம் செழிக்க வந்தான் வாழியே
வையந்தகளி நூறும் வகுத் துரைத்தான் வாழியே
வனசமலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கை முனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன் முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே.

இப்படி,
ஸபாபண்டிதர்கள்.





ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

முதற் றிருவந்தாதி

தனியன் வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(கைதைசேரித்யாதி) இவ்வாழ்வார், "𑌕𑍃𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌮 𑌤𑍇𑌨 𑌤𑌤𑍍𑌰𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑍋 𑌹𑌰𑌿𑌃। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌪𑍁𑌰𑍀 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑍀" "கஇதிப்ரஹ்மணோநாம தேந தத்ராஞ்சிதோஹரி:। தஸ்மாத்காஞ்சீதிவிக்யாதாபுரீ புண்யவிவர்த்தநீ" என்னும்படியான காஞ்சீபுரியில் புஷ்கரணியில் புஷ்கரத்திலே விஷ்ணு நக்ஷத்ரத்திலே ஆவிர்ப்பவித்து திவ்ய ப்ரபந்த தீபமுகேந லோகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கி வாழ்வித்த படியைச் சொல்லுகிறது இதில்.

முதலியாண்டா னருளிச்செய்த தனியன்.

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு-வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழ்நூற் றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

பதவுரை.—கைதை - தாழைகள், சேர் - நெருங்கிவர்த்திக்கிற, பூ - அழகிய, பொழில் - சோலைகளாலே, சூழ் - சூழப்பட்ட, கச்சிநகர் - காஞ்சீநகரத்தில், (திருவெஃகாவிலே) வந்துதித்த - (பொற்றாமரைப் பொய்கையிலே) திருவவதரித்தவராய், கவிஞர்போரேறு - கவிச்ரேஷ்டராய், பொய்கைப் பிரான் - உபகாரகரான பொய்கையாழ்வார், வையத்து - பூமியிலுள்ள, அடியவர்கள் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழ-வாழும்படிக்கீடாக, அரும்-(அர்த்தநிர்ணயம் செய்யப்புகில்) அரிதாய், தமிழ்-தமிழாகையாலே ஸுலபமாய், நூற்றந்தாதி - நூறுபாட்டாயிருக்கிற அந்தாதியை, பரிந்து-ஸ்நேஹயுக்தராய்க்கொண்டு, படி - பூமியிலே, விளங்கச்செய்தான் - ப்ரகாசமாகும்படி செய்தருளினர்.

வ்யா.—(கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்) இத்தால் இவர் ஜந்ம வைபவம் சொல்லுகிறது.

(கைதை) கேதகை-தாழை. "கைதைவேலிமங்கை" என்றும் - "கொக்கலர்தடந்தாழைவேலி" என்றுஞ்சொல்லுமாப்போலே. அதுதான் நீர்நிலங்களிலேயாயிற்றுநிற்பது. "தாழைதண்ணாம்பல் தடம்பெரும் பொய்கைவாய்" என்னும்படி, * அம்பூந் தேனிளஞ்சோலை சூழ்ந்த கச்சிவெஃகாவில் பொய்கையிலே * எம்பெருமான் பொன்வயிற்றில் பூவேபோன்ற பொற்றாமரைப்பூவிலே ஐப்பசியில் திருவோணநாளா யிற்று இவரவதரித்தது. பத்மஜனான பூவனைப்போலே யாயிற்று பொய்கையாரான இவர்பிறப்பும். வந்துதித்த-என்கையாலே, ஆதித் யோதயம்போலே யாயிற்று இவருதயமும். "வருத்தும் புறவிருள் மாய்த்த வெம்பொய்கைப்பிரான்" என்னக்கடவதிறே. பொய்கையி லே யவதரிக்கையாலே அதுவே நிரூபகமா யிருக்கை. அதுதான் ஸரஸ்வதி பயஸ்விநியாய்ப் ப்ரவஹித்த ஸ்தலமாயிற்று. தத்தீரமான பொய்கை யென்கை. (பொய்கைப்பிரான்) மருபூமியில் பொய்கை போலே எல்லார்க்கு முபகாரகராயிருக்கை. தீர்த்தகராய்த் திரியு மவரிறே.

கவிஞர் போரேறுகையாவது - கவிச்ரேஷ்டரென்றபடி. முத லாழ்வார்கள் மூவரிலும் முதலானவராகையாலே, ஆதிகவி என்னும் படியான அதிசயத்தையுடையராயிருப்பர். படைத்தான் கவியாலும், பரகாலகவியாலும், "செஞ்சொற்கவிகாள்" என்றும் - "செந்தமிழ் பாடுவார்" என்றும்-கொண்டாடப்படு மவருமாய், நாட்டிற்கவிகளுக் கும் விலக்ஷணகவியாயிருப்பர். "இதுபொய்கையார் வாக்கினிற்கண் டுகொள்க" என்றிறே தமிழர்கூறுவது. அந்தவேற்றமெல்லாவற்றை யும் பற்ற கவிஞர் போரேறு-என்கிறது.

ஏவம் வித வைலக்ஷண்யத்தை யுடையவர், வைஷ்ணவர்கள் வாழும்படி ஸ்நேஹத்தாலே விலக்ஷண ப்ரமாண நிர்மாணம்பண்ணி னபடி சொல்லுகிறது, (வையத்தடியவர்கள் வாழ அரும்தமிழ் நூற் றந்தாதி படி- விளங்கச்செய்தான் பரிந்து) என்று. வையத்தடியவர் களாகிறார்-பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள். அவர்கட்கேயிறே வாழ வேண்டுவது. *வானத்தணியமரர்க்கு வாழ்வு நித்யமாயிறே இருக்கி றது. இத்தாலே, இவர்கள் வாழுகை யாவது-சேஷத்வவிபவத்தை ஸ்வாநுஸந்தாநத்தாலே யுண்டாக்குமதான ப்ரபந்தமென்கை. "நின் தாளிணைக்கீழ்வாழ்ச்சி" என்னக்கடவதிறே. இவ்வநுஸந்தாநமே வாழ்வாகவுமாம். அருந்தமிழ் நூற்றந்தாதியாவது - அர்த்த நிர்ணய த்தில்வந்தால் அரிதாய், தமிழான ப்ரகாரத்தாலே ஸுலபமாய், அது

தான் நூறுபாட்டாய், அந்தாதியாயிருக்கை. உடையவர் நூற்றந்தா திக் கேற்றம் எட்டுப்பாட்டாயிருக்கும்.

(அருந்தமிழ் நூற்றந்தாதி) அதுதான் வெளிறாயிருக்கை யன்றிக்கே அரிதாய், ஸம்ஸ்க்ருதமா யிருக்கையன்றிக்கே அஸம்ஸ்க்ருதமான த்ராவிடமாய், ஆயிரம் ஐந்நூறாயிருக்கையன்றிக்கே நூறாயிருக்கை. அன்றிக்கே, (வையத்தடியவர்கள் வாழவரும் தமிழ் நூற்றந்தாதி) என்றாகவுமாம். அப்போது வையத்தடியவர்கள்வாழ வரும தான தமிழ் நூற்றந்தாதி என்று நிர்வஹிக்கக்கடவது.

நூற்றந்தாதிபடி விளங்கச்செய்கையாவது - [வையந்தகளியா] என்று தொடங்கி, ஓரடியுஞ் சாடுதைத்தமுடிவாக வருளிச்செய்த திவ்யப்ரபந்ததீபத்தாலே பூதலமெங்கும் நிர்மலமாம்படி நிர்மித்தாரென்கை. * வருத்தும் புறவிருள்மாய்த்த வெம்பொய்கைப்பிரான் மறையின் குருத்தின்பொருளையும் செந்தமிழ் தன்னையுங் கூட்டி ஒன்றத் திரித்தன்றெரித்த திருவிளக்காகையாலே, படியிலே - பூமியிலே, ப்ரகாசிக்கும்படி செய்தருளினாரென்றாகவுமாம். அன்றிக்கே, படி-என்று உபமானமாய், த்ராவிட வேதத்துக்குப் படிச்சந்தமாயிருக்கும்படி செய்தருளினா ரென்னவுமாம். விளக்கம்-ப்ரகாசம். படி-என்று விக்ரஹமாய், "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்" என்னும்படி, கண்டறியும்படி செய்தாரென்றாகவுமாம். பரிவுடனே செய்கையாவது - சேர்ந்தவிஷய ஸ்நேஹத்தாலே என்னுதல்; பாவிஷய ஸ்நேஹத்தாலே என்னுதல். "செய்யசுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்றாரிறே. ஸ்நேஹத்தாலேயிறே விளக்கெரிவது. இத்தால், அவர் திவ்ய ப்ரபந்தோபகாரகத்வத்தால் வந்த உபகாரகௌரவம் சொல்லி ஈடுபட்டதாயிற்று. (க)

*

இயற்பா முதற்றிருவந்தாதியின் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

முதற்றிருவந்தாதி.

வ்யாக்யாந அவதாரிகை.

ஆழ்வார்களிற்காட்டில் பகவத்விஷயத்திலுண்டான அவகாஹநத்தாலே, முதலாழ்வார்கள்மூவரையும் நித்யஸூரிகளோ பாதியாக நினைத்திருப்பார்கள். "இன்கவிபாடும் பரமகவிகள்" என்றும், "செந்தமிழ் பாடுவார்" என்றும். இவர்களவதரித்தது ஓரோதேசங்களிலேயாகிலும் காலப் பழமையாலே இன்னவிடமென்று நிச்சயிக்கப் போகாது. "பேயரோ யெனக்கியாவரும் யானுமோர்பேயனே யெவர்க்கும்" பகவத்விஷயத்தி லவகாஹியாதாரெல்லாரும் தமக்குப்பேயராயிருப்பர். அவர்கள்நிலையில் தாம்நில்லாதபடியாலே, அவர்களுக்குத் தாம்பேயராயிருப்பர். இப்படியாலே, பகவத்விஷயத்தி லவகாஹியாதாரிருக்குமிடத்திற் காட்டில் ஸ்தாவரங்களுள்ள காடே அமையுமென்றிருப்பர்கள். "ஆன்விடையேழன் றடர்த்தார்க்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்றென்மனத்தேவைத்தேனே" ஸர்வேச்வரன்திரு

அரும்பத விளக்கம்.—ப்ரவேசே வக்த்ருவைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்; (ஆழ்வார்களித்யாதி) நினைத்திருப்பர்கள்-ஆசார்யர்கள் என்றபடி. இப்படி நினைக்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன; ஆழ்வார்கள் கொண்டாடுகையாலே என்கிறார். (இன்கவிபாடு மித்யாதி) அவதரித்தவர்களை நித்யஸூரிகளென்று நினைக்கப்போமோவென்ன; அருளிச்செய்கிறார். (இவர்க ளித்யாதி) இன்னவிடமென்றும், இங்குள்ளார் அங்குள்ளாரென்றும் நிச்சயிக்கப்போகாமையாலே, அங்குள்ளாரென்றே நினைத்திருப்ப ரென்றபடி. அன்றிக்கே, ஆழ்வார்கள்தான், அவர்கள் ஊரைப் பேரைச் சொல்லாமல் கவியையிட்டு நிரூபிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார். (இவர்களித்யாதி) இவை இரண்டு ஸங்கதியும் ஸ்வாஸமன்று; பிழையும் தெரியாது; வந்தவிடங்களிலே கண்டுகொள்வது. இப்படிப்பட்டவர்கள் காட்டிலேதிரிவானென் என்ன; அருளிச்செய்கிறார். (பேயரே எனக்கித்யாதி) ஆனாலும், சாஸ்த்ரவச்யரான மநுஷ்யரைவிட்டுக் காட்டிலே போகக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார். (ஆன்விடை யேழன்றித்யாதி)

வுள்ளம்ஊற்றுமறுத்தவளவிலும் க்ருபையைப்பண்ணும்தம்முடைய மனஸ்ஸிலும் கொடுமையைவைத்தேனென்கிறார். இனியவர்கள் மனுஷ்யரல்லரென்று செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்ள வமையும். "சிறந்தார்க்கெழுதுணையாம் செங்கண்மால் நாமம், மறந்தாரைமானிடமாவையேன்" என்னும்படியே, அறிவு நடையாடாதவர்களிருக்குமிடத்தில்வஸிக்குமதில், காட்டிலேவர்த்திக்கவமையுமென்று காடுகளிலேவர்த்திப்பர்கள். இங்ஙனேசெல்லுகிறகாலத்தில், ஒருமழையையும் காற்றையுங்கண்டு திருக்கோவலூரிலே ஒரு இடைகழியிலே ஒருத்தர் புக்குக்கிடக்க, இருவராவார் சென்று, "ஒருவர் கிடக்குமிடம் இருவர்க்குப்போரும்" என்றிருக்க, மூவராவார்சென்று, "இருவரிருக்குமிடம்மூவர்க்கு நிற்கப்போரும்" என்று மூவரும் நிற்க, இருவர்வந்துநெருக்க, [நீயும் திருமகளும்] [தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேலென்னடியாரதுசெய்யார்]என்னும் நீயும், உன்பரிகாரமும் சென்றுநலியப்புக, "நகஸ்ஸ்ரீநாவ(ராஜ)தி" "நகச்சிந்நாபராத்யதி"என்று-ஏறிட்டுக்கொண்டு நோக்கும் திருமகளும், [நின்றுயால் குன்றெடுத்துப்பாயும் பனிமறைத்தபண்பாளா] மலையெடுத்துடம்பிலே விழுகிற மழையைக் காத்த நீர்மையை யுடையவனே. உடம்பிலே விழுந்த மழையை மலையெடுத்துப் பரிஹரித்தபோது பிறந்த ஹர்ஷம்போலே யாயிற்று இவர்கள் நெருக்குப்பெற்றபோது இவனுக்கிருந்தபடி. [வாசல்கடைகழியாவுட்புகா காமரு பூங்கோவலிடை கழியேபற்றியினி] காமுகரானவர்கள், உகந்தவிஷயங்களிலே, போகச்சொன்னாலும் தூணைக்கட்டிக்கொண்டு நிற்குமாப்போலே, இவ்வாசலுக்குப் புறம்போக மாட்டுகிறிலன்; உள்ளுப்புகுர மாட்டுகிறிலன். [இனி] இப்போது. இப்படி இருவருமாகத் தங்களை நெருக்கப்புக்கவாறே, நம்மையொழிய வேறே சிலர் நெருக்குகிறு ருண்டென்று, ஜ்ஞானமாகிற விளக்கை யேற்றினார். "ஜ்ஞாநதீபேந பாஸ்வதா" "ஜ்ஞாநதீபேநபாஸ்வதா" விளக்குண்டானாலும் ஜ்ஞாநமில்லையாகில் பதார்த்தங்களை விவேகிக்கப்போகாது.

முதலாழ்வார்க்கு ஜ்ஞாநம் பிறந்தபடி சொல்லிற்று. இருவராவார்க்கு, ஜ்ஞாநம் முற்றி பக்தியானபடி சொல்லிற்று. மூவரா

அரு—இருவர்வந்து நெருக்கினாரென்னு மதுக்கு ஜ்ஞாபக மேதென்ன அருளிச்செய்கிறார்; (நீயுந் திருமகளுமென்று.) வெறுந்தீபம் போராதோ? ஜ்ஞாநதீபம்வேணுமோ! என்ன; அருளிச்செய்கிறார். (விளக்குண்டானாலு மித்யாதி)

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக-செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

பதவுரை—வையம் - பூமியானது, தகளியா-அகலாகவும், வார்-பெருகுகிற, கடல்-ஸமுத்ரமானது, நெய்யாக-நெய்யாகவும், வெய்ய கதிரோன்-உஷ்ணமானகிரணங்களையுடைய ஸூர்யனானவன், விளக்காக - தீபமாகவும், (இப்படிவைத்து அநுமாநத்தாலே ஸர்வேஶ்வரனையறிந்து), செய்ய - சிவந்த, சுடர் - ஒளியையுடைய, ஆழியான் - சக்ராயுதத்தை யுடையவனுடைய (ஸர்வேச்வரனுடைய), அடிக்கே - திருவடிகளிலே, இடர் - துன்பமாகிற, ஆழி - ஸமுத்ரம், நீங்குக - விலகவேணும், என்று - இப்படி உத்தேசித்து, சொன்மாலை - சப்தஸந்தர்ப்பங்களை, சூட்டினேன் - ஸமர்ப்பித்தேன்.

வ்யா—வார்க்கு, பக்தியுடையராய் அவனை யொழியச்செல்லாதவர்களுடைய ஸாக்ஷாத்காரம் பிறந்தபடி சொல்லிற்று. இம்மூவர்க்குமர்த்த மொன்றே. மூன்று ருஷிகள் கூடி ஒரு வ்யாகரணத்துக்கு கர்த்தாக்களானாற்போலே கர்த்ருபேதமுண்டேயாகிலும் அர்த்த சரீரம் ஒன்று; த்ரிமுநி வ்யாகரணமென்னுமாப்போலே.

‘தகளி’ என்றும் ‘விளக்கு’ என்றும் ‘நெய்’ என்றும் வர்ணிக்கிறபடி எங்ஙனேயென்னில்; ஜகத்தானது ஸாவயவத்வாத் கார்யமென்னக்கடவது; கார்யமானது கர்த்ருமத்தாகக்கடவது; அந்த கர்த்தா சங்கசக்ர கதாதரனென்கிறது. “ஶாஸ்த்ரயோநித்வாத்” “சாஸ்த்ரயோநித்வாத்” என்று-ஆநுமாநிகரை சாஸ்த்ரகாரர் தூஷிக்கச்செய்தே, இங்கு ஆநுமாநிகமாகக் கொளும்படி எங்ஙனேயென்னில்; “வேதஶாஸ்த்ராவிரோதிநா யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:” “வேதசாஸ்த்ராவிரோதிநா, யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸதர்மம் வேதநேதரः” என்று-வேதசாஸ்த்ரங்களோடு விருத்தமான தர்க்கம் நிஷேதிக்கப்படுகிறது; அவிருத்தமானது ஸ்வீகரிக்க

அரு—ஒருவனுக்கே ஜ்ஞாநபக்தி ஸாக்ஷாத்காரமாகிற மூன்றும் வேண்டுகையாலே, (மூவர்க்கும் அர்த்தமொன்றென்கிறது). வக்தா மூவராயிருக்க, ஒன்றாகிறபடி எப்படியென்ன; அருளிச்செய்கிறார். (மூன்றுருஷிக ளித்யாதி) வ்யாகரணம்-சப்தசாஸ்த்ரம்.

வ்யா—ப்படுமென்று சொல்லுகையாலே, அது தர்க்கமாக் கொள்ளு கிறது. "ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்த நிஸ்சாயகத்வாத்" "ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்த நிச்சாயகத்வாத்" என்கிற படியே.

(வையந்தகளியா) ஸாவயவமுமாய் கார்யமு மாகையாலே, வையம் தகளி என்கிறது. (வார்கடலே நெய்யாக) வார்கடல் - சூழ்ந்தகடல். பூர்ணமான கடலென்னவுமாம். நதியினாலே ஜலம் புகுந்த தென்று பூர்ணமாகாதிருக்கையாலும், இல்லையென்று குறையாதிருக்கையாலும், பூமிக்கு உயர்ந்திருக்கச்செய்தே பூமியை அழிக்கமாட்டாமையாலும், கார்யமென்று தோற்றுகையாலே, நெய்யாகக் கொள்ளுகிறது. (வெய்யகதிரோன் விளக்காக) முப்பதுநாழிகையி லொரு நாழிகை குறையவு மேறவும் நிற்கப்போகாமையாலே "பீஷோதேதி ஸூர்ய:" "பீஷோதேதிஸூர்ய:" என்று - ஈச்வர கார்ய பூதனென்று தோற்றுகையாலே. விளக்கு என்று சொல்லிற்று - தன்னையும்காட்டி ஈச்வரனையும் ப்ரகாசிப்பிக்கையாலே. வெய்ய கதிரோன் என்று விளக்கினுடைய ஸ்தாநத்திலே சொல்லுகையாலே. இப்படிக்கு ஸகலத்துக்கும் அவன் சேஷி, ஸகலமும் அவனுக்கு கார்யதயா சேஷமென்றறிந்தால், அங்குத்தைக்கு அஸாதாரண பரிசர்யைபண்ணும்படிசொல்லுகிறதுமேல். (செய்யசுடராழி) செய்யசுடரென்றது - ச்யாமமானதிருமேனிக்குப் பகைத்தொடையாயிருக்கை. இத்தால், "நிர்விசேஷசிந்மாத்ரம் ப்ரஹ்ம" "நிர்விசேஷசிந்மாத்ரம் ப்ரஹ்ம" என்கிறபக்ஷத்தைத் தவிர்க்கிறது. இதராயுதங்களையுடைய தேவதாந்தரங்களையும் வ்யாவர்த்திக்கிறது. (அடிக்கே) என்று - விக்ரஹவத்தையைச்சொல்லுகிறது. அடி என்றத்தாலே, தம்முடையசேஷத்வம் சொல்லுகிறது. (சூட்டினேன் சொன்மாலை) பரிமளம் மாறுதமாலையைச்சூட்டினேன்; "சொற்றொடை" என்னுமாப்போலே. (இடராழி நீங்குகவேயென்று) இடர்கடலானது வற்றவேணுமென்று, தாபத்ரயத்தாலே தப்தரானவர்கள் இதைக்கற்றுத் தம்வழியே போந்து

அரு—முதற்பாட்டு.—தகளியானது ஸாவயவமும் கார்யமுமாயிருக்கையாலே, தகளியோட்டை ஸாம்யம். ஸமுத்ரம் மர்யாதை கெடாதிருக்கையாலே, ஒருத்த னாஜ்ஞையாலே உண்டானது; என்று - அதினுடைய கார்யத்வம் தோற்றுகிறது. ஆதித்யன் அவனாஜ்ஞையிலே நடக்கையாலே தன்னை சேஷத்ரவ்யமாகக்காட்டி ஈச்வரனை சேஷியாகப் ப்ரகாசிப்பிக்கிறானென்றபடி.

வ்யா—இடர்க்கடலைப் பிழைப்பார்களென்று. அன்றிக்கே, அவனைப் பேசப்பெறாத தம்முடைய இடர்போகவென்றுமாம்.

மற்றை யாழ்வார்களில் இவர்கள் ஜ்ஞாநப்ரதாநராய், பரதசை யோடு உகந்தருளின விடங்களோடு வாசியறக் கடல்கோத்தாற்போ லே இவர்களுடையபக்தி எங்குமொக்க வ்யாபித்திருந்ததே யாகி லும், கிண்ணகத்திலாறு எங்கு மொக்கப்பரந்துவாரா நிற்க நீருக் கோரிடத்திலே நோக்காமாப்போலே, திரு வுலகளந்தருளினவிடத்தி லும்திருமலையிலும் ஊன்றியிருக்கும். இவர்கள்,“பேயரேயெனக்கியா வரும்” என்னுமாப்போலே,ஸம்ஸாரிகளோடு பொருந்தாமையாலும், ஸ்தாவரங்களுக்கு விபரீத ஜ்ஞாநமில்லாமையாலும், அவற்றோடே பொருந்திக் காடுகளிலே வர்த்திப்பர்கள். யத்ரஸாயங்க்ருஹராய் அ ஸ்தமித்தவிடத்தே யுறங்கி யொருவரையொருவ ரறியாமல் திரியா நிற்பர்கள்.

இவர்களைக்கூட்டி இவர்கள் தன்னை அனுபவித்து, ஹர்ஷத்துக் குப் போக்குவிட்டு, வழிந்தசொல்லாலே தானும் ஜகத்தும் வாழவே ணுமென்னுநின்றான் எம்பெருமான். யாத்ருச்சிகமாக ஒரு இடைகழி யிலே பெருங்காற்றும் மழையும் கண்டுபுக்கு ஒருவர்கிடக்க, மற்றொ ருவர், “ஒருவர்கிடக்கிறவிடம் இருவர்க்குஇருக்கலாம்” என்றார். மற் றையவர், “இருவரிருக்குமிடம் மூவர்க்குநிற்கலாம்” என்றார். இவர் களை எம்பெருமானும் பிராட்டியும்புகுந்து நெருக்குகிறார்கள். [வாச ல்கடைகழியா வுட்புகா] இவர்கள் ஸம்பந்தமில்லாத புறம்பும் உள்ளு ங்காட்டுத் தீயோடொக்கும். நம்மையொழிய நெருக்குகிறானை யறிய ஒருப்ரகாசகம்வேணு மென்ன உண்டாக்குகிறார் இவர்களிலே யொ ருவர். “வதிம்விஶ்வஸ்ய” “பதிம்விச்வஸ்ய” என்கிறபடியே, ஸ்ரீய:பதி யேஜகத்துக்கு நிர்வாஹகரென்கிறார் ஒருவர்; விஷயத்திலே ஈடுபட் டு பக்திரூபமானவிளக்கேற்றினார் ஒருவர்; அதுடையார்க்கு அவன் காட்டக்காணும் வடிவை ஸாக்ஷாத்கரித்தாரொருவர். ஜ்ஞாநபக்தி ஸாக்ஷாத்காரங்கள் மூன்றும் அடைவே யொருவர்க்குப்பிறந்ததானு லோ வென்னில்; ஒண்ணாது; வ்யாகரணத்துக்கு மூன்று கர்த்தாக்க ளுண்டானாற்போலே மூவருங்கூடி இவ்வர்த்தத்தைநிலையிட்டார்கள்.

அரு—திரியவும் விசதமாக வ்ருத்தியிலே பேறுகைக்காக ப்ரவேசந் தொடங்கிப் பாட்டுக்கர்த்த மருளிச்செய்கிறார். (மற்றை யாழ்வார் களிலித்யாதி)

வ்யா—அநுமாநமுகத்தாலே இழிகை தர்சநத்துக்கு விருத்த மன்றோவென்னில்; வேதசாஸ்த்ர விருத்தமான அநுமாநம் இங்குத் தவிருகிறது. "வேதஶாஸ்த்ராவிரோதிநா। யஸ்தர்கேணாநுஸந்தத்தே" "வேதசாஸ்த்ராவிரோதிநா। யஸ்தர்சேணுநுஸந்தத்தே" என்று-சாஸ்த்ரத்தோடு சேரு மநுமாநமிது. ஸாவயவத்வாத்கார்யம்; கார்யம் விசித்ரமாகையாலே, கர்த்தாவும் ஆச்சர்யசக்தியுக்தனுக வேணும்.

(வையந் தகளியா) பூமி கடினையாகையாலே தகளியாக்கிற்று. (வார்கடல்) த்ரவத்ரவ்யமாகையாலே நெய்யாகக்கொண்டது. (வெய்யகதிரோன்) தேஜஃ பதார்த்தமாகையாலே விளக்காகக்கொண்டது. இம்மூன்றும் பஞ்சபூதங்களுக்கு முபலக்ஷணம். (வையம்) பெரியவெள்ளத்திலே ஓருகழல்மிதக்குமாப்போலே, பூமி ஜலத்திலே நிற்கும்போது இதுக்கு ஓரடி வேண்டாவோ? (வார்கடல்) பூமியை அபிபவியாதே நிற்கும்போது ஓரடிவேண்டாவோ? (வெய்ய கதிரோன்) முப்பதில் ஒன்று ஏறுதல் குறைதல் செய்யாதபோதே, "பீஷோதேதி ஸூர்ய:" "பீஷோதேதிஸூர்ய:" ஆகவேண்டாவோ? "யஸ்ஸர்வஜ்ஞ:" "யஸ்ஸர்வஜ்ஞ:" இத்யாதிகளிற்சொல்லுகிறவனுகவேண்டாவோ? (செய்யவித்யாதி) இதுக்கொரு நாதனுளன் என்றிருந்தால் அடிமைசெய்யவேண்டும். (சுடராழியான்) ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் ஜகத்தில் ஏகதேச ஸம்பந்தமுண்டே யென்னில்; அத்தை வ்யாவர்த்திக்கிறது. ரூபாதிகளில்லையென்னும் வாதிகளை நிரஸ்தராக்குகிறது. (அடிக்கே) பிராட்டியல்லலோ; முறை தப்பாதபடி வேணுமே. (சூட்டினேன்சொல்மாலை) "யதோவாசோ நிவர்த்தந்தே" "யதோவாசோநிவர்தந்தே" என்கிறவிஷயத்தை மறுபாடுருவப்பேசிப்பண்டில்லாத வழகுமுண்டாக்கினேன். (இடரித்யாதி) என்னையுளனாக்குகைக்காக. சொல்லாதிருக்கை இடர். "இடராழ்படுவார்" இத்யாதிவத், குணத்தை அநுஸந்திக்கிலும் ப்ரகாரிபர்யந்தமாயிருக்கும் இவர்களுக்கு.

அரு—வையந்தகளிக்கு கார்யகாரணம் சொல்லிற்றுக் கீழ்; இங்கு ஸ்வபாவபரமாக யோஜிக்கிறார். (பூமி கடினையாகையாலே யித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு எத்தினுல் இடர்போமோ? என்ன; அருளிச்செய்கிறார். (இடராழ்படுவா ரித்யாதி) கார்யரூபமான ஜகத்தை அநுஸந்தித்தால், ஸர்வேச்வரனை யறியப்போமோ? என்ன; அருளிச்செய்கிறார். (குணத்தை யித்யாதி)

என்று கடல்கடைந்த தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன்நான் - அன்ற
தடைத்துடைத்துக் கண்படுத்த வாழி; இதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த பார். (உ)

ப-உ. கடல் - ஸமுத்ரத்தை, கடைந்தது - மதனம்பண்ணியது, என்று-எந்தநாள்; நீர் - (தான) ஜலத்தை, ஏற்றது-வாங்கிக்கொண்டது, எவ்வுலகம் - எந்தபூமிக்காக; அதனை - அந்த வ்யாபாரங்களை, ஒன்றும் - கொஞ்சமும், நான்-யான், உணரேன் - அறியமாட்டேன். அன்று - அப்பொழுது, அடைத்து - தடுத்து, உடைத்து - அழித்து, கண்படுத்த - நித்ரைசெய்த, ஆழி - ஸமுத்ரம், அது - அந்தஸமுத்ரம், நீபடைத்து - நீஸ்ருஷ்டித்து, இடந்து - பிரித்து, உண்டு-(தன் வயிற்றில் வஸிக்கும்படி) புசித்து, உமிழ்ந்த - கொப்பளித்த, (வெளிப்படுத்தின), பார் - பூமி, இது - இந்தபூமி.

வ்யா—மாறனேரிநம்பி, "எம்பெருமானை மறக்க விரகில்லையோ" என்றாராம். ஜகத்தி னிடர்தீருகை அர்த்தாத்ஸித்தம். (க)

இரண்டாம்பாட்டு.—(என்று) இன்னமும் திரையும் நுரையும் மாறிற்றே. (எவ்வுலகம்) லோகாந்தரத்தேயோ; அடிச்சுவடுதெரியாதோ? (ஒன்றுமதனை யுணரேன்நான்) அன்று எங்கேபோனேனோ. (உணரேன்நான்) அன்றைக்கு எனக்கென்னவே யொருவிஷயந்தேடியந்தரப்பட்டேன். (அன்றித்யாதி) ஒன்றேயோ; பருத்திப்பட்ட பன்னிரண்டும் பட்டதில்லையோ. உணரேன் என்று இழந்தநாளைக்கு சோகிக்கிறார்.

அரு—எத்தைக்கண்டாலும் அவனுக்குத்தோற்று மென்னுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார். (மாறனேரி இத்யாதி) (க)

இரண்டாம் பாட்டு.—என்று எவ்வுலகம் என்றது ஸ்வாத்திலேயாய், இன்றன்றே? இவ்வுலகமன்றே? என்று ப்ரத்யக்ஷமாய்த்தோற்றுகிறது. மூலத்திலே அர்த்தமாக்கி, (பன்னிரண்டும் பட்டதில்லையோ.) என்று சுருக்கினபடி. என்று எந்தக்கடல் கடைந்தது; என்று அந்தஸமுத்ரத்தை அடைத்து உடைத்துக் கண்படுத்தது; எவ்வுலகம் நீரேற்றது; இந்தபார், நீபடைத்து இடந்து, உண்டு உமிழ்ந்த இவை ஒன்றுமதனை யுணரேன்நான்; என்று அந்வயமாக்கி யருளிச்செய்கிறார். (உணரேனென் றித்யாதி.)

வ்யா—கார்யாத்காரணாநுமாநம் வேணுமோ அவனுடைய அதிமாநுஷசேஷ்டிதங்கள் கிடக்கச்செய்தே. (என்று) கடைந்ததுனையும் திரையும் மாறிற்றே. (கடைந்தது) கடையப்புக்குக் கைவாங்கினவர்களை ஈச்வரனாகக் கொள்ளவேணுமோ? (எவ்வுலகம் நீரேற்றது) இன்று மஹாபலியாலே நோவுபடாநின்றபோ; அவனடிச்சுவடு மாறிற்றே; "வாமனன்மண்ணிது" என்னும்படி தோற்றுகிற தில்லையோ. இவ்வுலகமன்றே நீரேற்றது என்கிறது. (ஒன்றுமதனை யுணரேன் நான்) இச்சேஷ்டிதங்கள் கிடக்கக் கார்யாத் காரணாநுமாநம் பண்ணித்திரியவோநான், அன்றிக்கே, "ஒன்றுமதனை யுணரேன்" என்றது-அதிமாநுஷசேஷ்டிதங்களைக்கண்டு "எத்திறம்" என்று மோஹிக்கிறாராகவுமாம். "என்று கடல்கடைந்ததெவ்வுலகம்" என்றது, எல்லாச்செயல்களுக்கு முபலக்ஷணம். "என்று" என்றது-ஜ்ஞாநவைசத்யம் சொல்லுகிறது. ஜ்ஞாநமாவது - யத்தேசகால ஸம்பந்திதயா யாதோரர்த்தம் தோற்றிற்று, தத்தேசகால ஸம்பந்திதயா அவ்வர்த்தத்தைக் காட்டுகையிறே. (அன்றித்யாதி) நீ அணை யுடைத்துத் திருவில்லாலே அழித்துண்டாக்கின கடலிலே. கண்படுத்த-கண்வளர்ந்த ஆழி. உடைத்து-ஸம்ஹரித்தென்னவுமாம். (இதுவித்யாதி) இல்லாதவன்று ஸ்ருஷ்டித்து ப்ரளயங்கொள்ள அண்டபித்தியில் நின்றும் ஓட்டுவிடுவித்து, ப்ரளயம்வருகிறதென்று எற்கவே திருவயிற்றிலே வைத்து வெளிநாடு காணப் புறப்பட விட்ட பார்.

அரு—இரண்டாம் யோஜனைக்கு அவதாரிகை யருளிச்செய்கிறார். (கார்யாத்காரணாநு மாந மித்யாதி) அநுமாநம் கீழிற் பாட்டிலே. எவ்வுலகம் என்றது. இவ்வுலக மென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன; அருளிச்செய்கிறார். (இன்று மஹாபலியாலே இத்யாதி) "அதனை" என்றது - கீழ்ச்சொன்ன அநுமாநமாதல்; இப்பாட்டிற் சொன்ன சேஷ்டிதமாதல். மேலே அநுவாதத்திலே எல்லாச் செயல்களும் சொன்னால், இங்கு எடுக்கிறவிடத்திலும், என்று அது அடைத்தது; எவ்வுலகம் படைத்திடந்துண் டுமிழ்ந்தது; என்று சொல்லவேண்டாவோவென்ன; அருளிச்செய்கிறார். (என்று கடல்கடைந்த தெவ்வுலக மித்யாதி) "என்று" என்று கண்டாற்போலேயிருக்க, ப்ரச்ந ரூபமாகையாலே, அன்று செய்ததும் இப்போது செய்தாற்போலே யிருக்கையாலே, (ஜ்ஞாநவைசத்யம்) என்கிறது. அன்று செய்தது இப்போதுதோற்றுகை ஜ்ஞானமோவென்ன; அருளிச் செய்கிறார். (ஜ்ஞாநமாவ தித்யாதி)

பாரளவு மோரடிவைத் தோரடியும் பாருடுத்த
நீரளவுஞ் செல்ல நிமிர்ந்ததே - சூருருவின்
பேயளவு கண்ட பெருமா னறிகிலேன்
நீயளவு கண்ட நெறி. (௩)

ப-உ.—ஓரடி-அத்விதீயமான ஒரு திருப்பாதத்தை, பாரளவும்-பூமிமுழுதும், வைத்து-வைத்து, ஓரடியும்-மற்றொரு திருப்பாதத்தையும், பார் - பூமியை (அண்டகடாஹத்தை), உடுத்த - சூழ்ந்த, நீரளவும் ஜலபர்யந்தமும், செல்ல-போம்படி, நிமிர்ந்ததே-வளர்ந்ததே? சூர் - தெய்வப்பெண்ணினுடைய, (யசோதையினுடைய) உருவின்-வடிவையுடைய, பேய் - பிசாசமான பூதனையினுடைய, அளவு - எல்லையை, கண்ட - அறிந்த, பெருமான் - ஸ்வாமியே! நீ - நீ, அளவுகண்ட - எல்லையாகக்குறித்த, நெறி - நல்வழியை, அறிகிலேன் - அறியமாட்டுகிறிலேன்.

வ்யா.—இது என்றது - தாமிருந்த பூமியாகையாலே. அது என்றது-அத்தோடு ஸம்பந்தித்த கடலாகையாலும், அஸந்நிஹிதமாகையாலும். "ஆழி—அது" என்றந்வயம். செய்யுடையவனன்றோ க்ருஷி பண்ணுவான்; அல்லாதார்க்கும் ஈச்வரத்வ ப்ரஸங்க முண்டாகில், இதிலே யவர்களுக்குமொரு தொழிலுண்டாகாதோ. (௨)

அவ.—மூன்றாம் பாட்டு.—(பாரித்யாதி) அப்பூமியை யடைய வளந்தானென்று இவனுக்கு ஈஸ்வரத்வம் சொல்ல, அளக்கைக்கு விஷய முண்டாகிலன்றோ என்கிறார்.

(பாரளவு மோரடிவைத்து) பூமியுள்ள வளவு மோரடிவைத்து. (ஓரடியும்) வைத்த வடியைச் சொல்லவுமாம் மற்றை யடியாகவுமாம். (பாருடுத்த) "பௌவநீருடையாடையாகச்சுற்றி" என்கிற

அரு.—இது - அது - என்று, ஸந்நிஹிதமாகவும் அஸந்நிஹிதமாகவும் சொல்லுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார். (இதுவென்றது தாமித்யாதி), அத்தோடு - க்ஷீராப்தியோடு, அடைத்துடைத்துக் கண்படுத்தவாழி அது; படைத்திடந்துண் டுமிழ்ந்தபார் இது; என்றந்வயம். என்று இவையெல்லாம் செய்தருளிற்று; அன்று அந்தந்தக் காலங்களிலே, ஒன்று மதனை - அவற்றுளொன்றையும், உணரேன் - அறிந்தேனில்லை யென்றபடி. (௨)

மூன்றாம்பாட்டு.—கீழ்ச்சொன்ன இரண்டுக்கும் அநுகுணமாக இரண்டர்த்த மருளிச்செய்கிறார். (பௌவநீரித்யாதி)

வ்யா—படியே, பூமியை யாவரித்த ஜலத்தைக் கடந்தென்னவு மாம்; மேலில் அண்டத்தைச்சூழ்ந்த ஜலத்தளவும் சென்றதென்ன வுமாம். (சூருநவித்யாதி) "சூர்மணங்குந்தெய்வப்பெண்" என்கிற படியே, விலக்ஷணமான வடிவென்கிறது. பேயைத் தெய்வப்பெண் ணென்னலாமோ வென்னில்; "விஶாவாதேவயோநய:" "பிசாசா தேவயோநய:" என்று-பிசாசங்களையும் தேவயோநியிலே கூட்டுகை யால் ஆர். (பேயளவுகண்ட)பேயாக பரிச்சேதித்த. பேயாக பரிச்சே திக்கையாவது-முடிக்கையென்று பொருளாமிறே. (பெருமான்) பூத னையை முடித்து ஒருசேஷியை ஜகத்துக்குத்தந்தாய். "ஸ்தந்யம் தத்விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீ ஜ்ஜகத்குரோ:" "ஸ்தந்யம் தத்விஷஸம்மிச் ரம் ரஸ்யமாஸீ ஜ்ஜகத்குரோ:" (அறிகிலேனித்யாதி) நீசெய்த ஒரோசெயலை என்னால் பரிச்சேதிக்கப்போகிறதில்லை. அன்றியே, மஹாபலியாலே அபஹ்ருதையான பூமியை யளந்து உன்திருவடி களிலே இட்டுக்கொண்டாற்போலே, என்னை உன்திருவடிகளிலே இட் டுக்கொண்டு, பூதனைபைப்போக்கினாற்போலே என்னுடைய விரோ தியைப்போக்கி என்னை விஷயீகரித்தபடி அறிகிலேனென்னவுமாம்.

பாரளவும்-அளவிலே குசைதாங்கினவருமை. உடுத்த நீரளவும்- ஆவரணஜலம். பேயளவு-எல்லை. பெருமான்-அச்செயலாலே யென் னையுண்டாக்கினவன். நீசிலரைப் பரிச்சேதிக்கும்போது வருத்த மில்லை; உன்னைப் பரிச்சேதிப்பார் முடிந்தேபோமித்தனை. தாயைப் பேயாக்கினபடி. நீஅளவிட்டுவைத்த உபாயம். உணராதொழியப் பண்ணுகிறாயோ, உணரப்பண்ணுகிறாயோ. (௫)

அவ.—நாலாம்பாட்டு.—நீரறிந்திலீராகில் ஈச்வரனறியானோ வென்ன; "எம்பெருமான்ப்ரஸாதமடியாகப்பிறந்த அறிவுடையநான் தடுமாறாநின்றேன், தபஸ்ஸமாதியாலே பெற்ற அறிவுடையவன் உபதேசிப்பதே" என்று க்ஷேபிக்கிறார்.

அரு.—பார்-பூமியாதல், அண்டபித்தியாதல். ஆவரித்தஜலம் - சுத்தோதகம். நெறி-செய்யாதல்; உபாயமாதல். குசைதாங்குகை- கடிவாளத்தை விட்டுப் பிடிக்குமாப்போலே மட்டிலே நிறுத்துகை. எல்லைகாண்கை-முடிக்கை. அளந்தத்தையும் பேயை முடித்ததத்தை யும்பற்ற அருளிச்செய்கிறார். (நீசிலரை இத்யாதி) (௫)

நாலாம்பாட்டு.—"ஸம்ஸ்ஸ்வராஜா நஶ நிவேதஸ்" "ஈச்வராத்ஜ்ஞான மந்விச்சேத்." என்ற-ஈச்வரனாகச் சொல்லப்பட்ட ருத்ரன் அறியா னோவென்ன; "அறிவானும்" என்கையாலே க்ஷேபம்தோற்றுகிறது.

நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து
பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி - அறிவானும்
ஆலமர நீழ லறம்நால்வர்க் கன்றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன். (௪)

ப-உ.—ஆலமரநீழல் - வடவ்ருக்ஷத்தின்சாயையில், அறம்-தர்மத்தை, நால்வர்க்கு - (அகஸ்த்யர் முதலான) நாலுபெயர்களுக்கு, அன்று - அந்தநாளில், உரைத்த - உபதேசித்த, ஆலம் - விஷம், அமர் - அடங்கிய, கண்டத்து - கழுத்தையுடைய, அரன் - சிவன், ஐந்து-ஐந்துவகைப்பட்ட, பொறி - இந்த்ரியங்களினுடைய, வாசல் - த்வாரங்களில், போர் - யுத்தம்செய்கிற, கதவம் - கபாடத்தை, சாத்தி - அடைத்து, நெறி - ஸ்வரூபாநுரூபமான, வாசல் - உபாயம், தானேயாய் - அநந்யஸாத்யமாய், நின்றானை - இருக்கிற ஸர்வேச்வரனை, அறிவானும் - தெரிந்துகொள்வனும்.

வ்யா—(நெறியித்யாதி) நெறியானவாசல்; உபாயமான வாசலென்னவுமாம். "நெறி" என்று உபாயமாய், "வாசல்" என்று உபேயத்தைச் சொல்லிற்றாய், உபாயமும் உபேயமும் தானேயாய் நின்றவனையென்றுமாம். இப்போது இதுசொல்லுகிறது-ப்ராப்தியவனையொழிய உண்டாகிலன்றே அறிவு மவனையொழிய உணர்வதென்கைக்காக. (ஐந்துபொறிவாசல்) ஒன்றையடக்கில் ஒன்று திறக்குமென்கை. நீரையடைக்கப் புக்கால், ஓரிடமடைக்க ஓரிடம் கோழைப்படுமாப்போலே. "வஜ்ரூம் ஹிநுஃ" "சஞ்சலம்ஹிமநஃ" என்கிறபடியே. (போர்க்கதவம்) அடைக்கப்புக்கால் ஒண்ணாதபடி பொராநின்ற கதவம். 'சாத்தி' என்றது-அடைக்கப்போகாமையாலே. 'அறிவானும்' என்று க்ஷேபிக்கிறார். (ஆலமரநீழல்) தான் தபஸ்ஸு பண்ணின ஆலமரநிழலிலே. தான் பகவத்ஸம்பந்தம் பண்ணுவதற்குமுன்னே சிஷ்யபரிக்ரஹம் பண்ணுவாரைப்போலே. ஸர்வஜ்ஞனை அஜாதசத்ருவுக்கு ப்ரஹ்மஜ்ஞாநமின்றியே யிருக்கிற பாலாகி உபதேசித்தாற்போலே. (அறம்) ஸமாஸ்ரயணப்ரகாரம். (நால்வர்க்கு) அகஸ்த்ய

அரு—கோழைப்படுகை-நெகிழ்ந்துசாகை. பண்ணுவதுக்கு-தனக்குண்டாவதுக்கு முன்னே யென்றபடி. "அறிவானும்" என்று இவனுக்கு ஜ்ஞாநஹீநத்வம் சொல்லுகையாலே, இவன் உபதேசிக்கிறதற்கு இதுவு மொரு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார். (ஸர்வஜ்ஞனை வித்யாதி.) அஜாதசத்ரு - தர்மபுத்ரன். இந்தவிடம் தெரியாது.

வ்யா—புலஸ்த்யாதிகளுக்கு. (ஆலமர்சண்டத்தரன்) தாமஸகுணத்துக்குச்சேர்ந்தது செய்யுமதல்லது "ஸகுவாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்" "ஸத்வாத்ஸம்ஜாயதேஜ்ஞாநம்" என்கிறபடியே, குதற அவன்கடவனேவென்கிறார்.

(நெறிவாசல்) ஸ்வரூபாநுரூபமான உபாயமென்றுமாம். (ஆய்நின்றானை) ஸித்தம். (சாத்தி) வருந்திச் சாத்தலாமித்தனை; தாளிடவொண்ணாது, முகத்திலே யறையும். நல்லவிஷபங் சாட்டாவிடில் குதறுகொட்டும். "வரம்ஹ்ருஷ்டாநிவர்த்ததே" "பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே." பண்ணுவிடில் உபாயமுண்டோ. (அறிவானும்) படபடென சிஷ்ஷைக்கொள்ளு மத்தனையல்லது அறிவுக்குஅடைவுண்டோ. சிராமப்பிள்ளைக்கு பட்டர், "இதுவேதாரகமாகவிருக்கிற ஸாதுவை நலியாதே" என்றருளிச்செய்தார். நால்வர்-தக்ஷாதிகள். (ஆலமரித்யாதி) எம்பெருமான்கொடுத்த வெளிச்செறிப்புமாத்ரத்தையும் விஷஹரணசக்தியையுங்கொண்டு இத்துறையிலே இழியப்போமோ. (௪)

அவ.—ஐந்தாம்பாட்டு—நாட்டிலே ஈஶ்வரனாகநிச்சயித்துப்போருகிறவனை "அறிவானும்" என்னு நீர்சொல்லுகிறபடி எங்ஙனேயென்னில்; அவ்வீச்வரத்வம்போலே காணுங்கோள் அறிவுமென்கிறார்.

(அரன் நாரணன்நாமம்) ஒருத்தனுக்கு நாமம் - அரன்; ஒருத்தனுக்கு நாமம் நாராயணன். ஸ்ருஷ்டமான ஜகத்து தீம்பிலே கைவளர்ந்து தன்னை முடித்துக்கொள்ளப் புக்கால், அத்தை ஸம்ஹரிக்கைக்காக அவன் கொண்டவடிவுக்கு ப்ரகாரபூதனன் தான்

அரு—ஆதிக்கு தக்ஷப்ரஜாபதி, கச்யபப்ரஜாபதி. குதறுகொட்டியான இந்த்ரியங்கள் எப்போது நிவ்ருத்தமாமென்ன; அருளிச்செய்கிறார் (வரம்ஹ்ருஷ்டாநிவர்த்ததே" "பரம் த்ருஷ்ட்வாநிவர்த்ததே) என்று. துர்க்ரஹமான இந்த்ரியங்களை நிக்ரஹிக்க வேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (பண்ணுவிடிலித்யாதி). ஸர்வேச்வரனை யறிகைக்கு உபாயமுண்டோ என்றபடி. ருத்ரன் அறிவுகேட்டாலே துரபிமாநி என்கைக்கு ஸம்வாதமாக ஓ ஐதிஹ்ய மருளிச்செய்கிறார். (சிராமப்பிள்ளைக்கு இத்யாதி) பிள்ளை, ருத்ரனுடைய துரபிமாநத்தையிட்டு அநேகமாக நிந்திக்க, அவனுக்கு அதுதாரகங்காணும்; அவன்வழி ஏன் போகிறீர் என்றார் பட்டரென்றபடி. இத்துறையிலே ஸர்வேச்வரனை அறியப்போமோ? அறிவானும் என்றந்வயம்.

அரன் நாரணன்நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரை நூல் மறையுறையுங் கோயில் - வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார் மேனி யொன்று. (ரு)

ப-உ. அரன் - அரனென்று, நாமம் (ஒருவனுக்கு) பெயர்; நாரணன் - நாரணனென்று, நாமம் - (ஒருவனுக்கு) பெயர்; ஆன் - ஜ்ஞானமில்லாத, விடை - எருது, ஊர்தி - (ஒருவனுக்கு) வாஹநம்; புள்- (கருடனென்கிற) பக்ஷி, ஊர்தி - (ஒருவனுக்கு) வாஹநம் ; நூல் - ஆகமம், உரை - (ஒருவன்விஷயத்தில்) ப்ரமாணம்; மறை - வேதம், உரை - (ஒருவன்விஷயத்தில்) ப்ரமாணம்; வரை - மலை (கைலாஸம்), உறையும் கோயில் - (ஒருவனுக்கு) வஸிக்குமிடம் ; நீர் - ஜலம் (ஸமுத்ரம்), உறையும்கோயில் - (ஒருவனுக்கு) வஸிக்குமிடம்; அழிப்பு- நாசம்செய்தல், கருமம் - (ஒருவனுக்கு) தொழில் ; அளிப்பு-க்ருபை செய்தல், கருமம் - (ஒருவனுக்கு) தொழில்; வேல் - வேலென்பது, கையது - (ஒருவனுக்கு) கையிலிருக்குமாயுதம் ; நேமி - சக்ரம், கையது - (ஒருவனுக்கு) கையிலிருக்குமாயுதம்; உருவம் - (ஒருவனுடைய) வடிவு, எரி-தீபோன்றது ; உருவம் - (ஒருவனுடைய) வடிவு, கார் - மேகம்போன்றது; ஒன்று - (இவ்விரண்டில்) ஒருத்தன், மேனி - சரீரம்.

வ்யா—அரனாகிறான், ஈச்வரன் கையடைப்பாகக்கார்யம் செய்யுமிடத்திலும் அழியும் லீலாவிபூதியிலே இவனுக்கு அந்வயம், மாநவிக்கு நிர்வாஹ கரானைப்போலே. (நாரணன்) உபயவிபூதியும் தனக்குவாஸஸ்தாநமாய் அவற்றுக்கு ஆலம்பநமாயிருக்குமென்றிட்டு, "நாராயணன்" என்றுதிருநாமம். (ஆன்விடைபுள்ளூர்தி) கைக்கொளாண்டிகளைப்போலே ஒருத்தனுக்கு ஒரு எருதுவாஹநம் ; ஒருத்தனுக்கு ஒரு வேதாத்மாவாயிருந்துள்ள பெரியதிருவடி. (உரைநூல் மறை) ஒருத்தனுக்கு உத்கர்ஷம்சொல்லுவது ஆகமம்; ஒருத்தனுக்கு உத்கர்ஷம்சொல்லுவது அபௌருஷேயமானவேதம். (உறையுங்கோயில் வரைநீர்) தன்காடிந்யத்துக்குச் சேர்ந்தமலை ஒருவனுக்குவாஸஸ்தாநம் ; தன்னுடைய தண்ணளிக்குச்சேர்ந்தநீர் ஒருவனுக்கு. (கருமமழிப்பளிப்பு) ஒருவனுக்குக் கர்மம் அழிக்கை; ஒருவனுக்குக்கர்யம்

அரு—ஐந்தாம்பாட்டு.—மாநவி - மஹாநவமியிற் பண்ணும் அலங்காரம். அது உடனே அழியுமென்றபடி. ஊர்தி - வாஹநம். உரை - உத்கர்ஷத்தைச் சொல்லுகிறது.

வ்யா.—ரக்ஷை. அழிக்கைஎன்றால் அதொன்றிலும்நிற்கும். அளிப்பு என்றால் அழிக்குமதிலும் செல்லும். (கையதுவேல்நேமி)ஒருவனுக்கு ஆயுதம் பிணங்கின்னிகளைப்போலே வேல்; ஒருவனுக்கு ஆயுதம், "தஸ்வாரோயாதா ஸஜுவகுரதாயாஃ" "தமஸ:பரமோதாதா சங்கசக்ரகதாதர:" என்கிற ஆயுதம். நிலாத்துக்குறிபகவான், பட்டரை,பரமபதத்திலும் ஈச்வரன் சதுர்ப்புஜனாயிருக்குமென்னுமிடத்துக்குப்ரமாணமுண்டோவென்றுகேட்க; "தஸ்வாரோயாதா ஸஜுவகுரதாயாஃ" "தமஸ:பரமோதாதா சங்கசக்ரகதாதர:" என்று பேசாநின்றதிறே என்றருளிச்செய்ய, அவன்கோபிக்க, "ப்ரமாணகதியிருந்தபடி இது, ப்ரஸங்நராமித்தனையிறே" என்றருளிச்செய்தார். (உருவமெரிகார்) ஒருவனுக்கு வடிவு எரி; ஸம்ஸாரதப்தனுய்ச்சென்றவனுக்கு நெருப்பிலே விழுமாப்போலே. ஒருவனுக்குவடிவுகார்; தப்தனுய்ச் சென்றவனுக்கு ஒருநீர்ச்சாவியிலே வர்ஷித்தாற்போலே ச்ரமஹரமானவடிவு. (மேனியொன்று) இப்படி விஸத்ருசமாயிருக்கையாலே, ஒன்று சரீரம்; ஒருத்தன் சரீரி. "அந்த:ப்ரவிஷ்டஃ ஸாஸ்தா ஜநாநாம்ஸர்வாத்மா" "அந்த:ப்ரவிஷ்டச் சாஸ்த்தாஜநாநாம்ஸர்வாத்மா" என்றால், "ஸர்வஞ்சாஸ்யசரீரம்" "ஸர்வஞ்சாஸ்யசரீரம்" என்று தோற்றுமாப்போலே, ஒருத்தன் சரீரம் என்றால், ஒருத்தன் சரீரிஎன்று தோற்றுமிறே.

அவ.—ஜ்ஞாநமில்லாமையாலே இவனைச்வர்யமும் ஆறல்பீறலென்கிறார்.

(அரன்) சிலரை நசிப்பிக்குமவனொருவன். (நாரணன்) ததீயத்தை யொழிய உளனாகாதவ னொருவன். "நீயென்னையன்றியிலை" (ஆன்விடை) அனைச்வர்யஸூசகம். (புள்) "கெருடவாகனன்நிற்க"

அரு.—வேறொரு சப்தத்தாலேசொல்லாமல், "அழிப்பு-அளிப்பு" என்று இத்தையிட்டுச் சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார். (அழிக்கையென்று லித்யாதி) அவன் க்ருத்யந்தானும், இவனே அந்தராத்மாவா யிருக்கச்செய்கையாலே, அதுவும் இவனிட்டவழக் கென்கைக்காக இந்தசப்தத்தாலே சொல்லுகிறதென்று பாவம். திருவாழியே ஆயுத மென்கைக்கு ஸம்வாதமாக ஒரைதிஹ்யமருளிச்செய்கிறார். (நிலாத்துக்குறிபகவானித்யாதி)

மேல் யோஜனைக்கு அவதாரிகை யருளிச்செய்கிறார். (ஜ்ஞாமில்லாமை இத்யாதி) ஆறல் பீறல்-சாடு. ஆறல் சோறும், பீறல் புடைவையும், என்றர்த்தம். நையசல் என்று த்வநி.

வ்யா.—இவனைச்வர்யஸூசகம். (உரை) ஆப்திகேட்கவேண்டில்விப்ரலம்பாதிதோஷதூஷிதம். (மறை) அபௌருஷேய நித்யநிர்த்தோஷ ச்ருதி, (வரை) காடிந்யத்துக்கு ஸத்ருசமானவிடம். (நீர்) தண்ணளிக்குத்தக்கவிடம். (கருமம் அழிப்பு)நசிப்பிக்கை. (அளிப்பு)ரக்ஷிக்கை. (வேல்) காணவயிறழலும், (நேமி) விட்டாலும் "இன்னாரென்றறியேன்" என்னப்பண்ணும். (எரி) நெருப்பைத்தூவும். (கார்) காண ஜீவிப்பிக்கும். (மேனியொன்று) ஒன்றுசரீரம் ; மற்றையவன் சரீரியென்று தன்னடையிலே வருமிறே. அந்தர்யாமி ப்ராஹ்மணத்தை நினைக்கிறார்.

(அரன்) தன்னையொழிய ஒன்றையழியாதே நிற்கில் ஈச்வரத்வமில்லை. (நாரணன்) தன்னை ஒழிந்தவற்றில் ஒன்றழியில் ஈச்வரத்வமில்லை. (ஆன்) அநீச்வரத்வ ஸூசகம் ; (புள்) ஈச்வரத்வஸூசகம். (நூல்) சொன்னவனுக்கு ஆப்தியில்லையாகில் அப்ரமாணம். (மறை) ஆப்தவாக்யமான ப்ரமாணம். (அழிப்புஅளிப்பு) இவற்றை ஸூசிப்பிக்கிறது-அரன்நாரணன். வாசகசப்தத்துக்கு வசநக்ரியைபோலே. (வேல்) கலக்கவரிலும் பயமாம். (நேமி) பிரிந்தாலும், "இன்னாரென்றறியேன்" என்னப்பண்ணும். (உருவம், எரிமேனி ஒன்று; கார்மேனியொன்று). இங்ஙனே சேர்த்திருக்கவேண்டாவோ. க்ஷேபம். அறிவுடையார்க்குச் சொல்லவேணுமோ சேர. (ரு)

அவ.—ஆறும்பாட்டு.—அவனை சரீரதயா சேஷமென்றீராகில் நீரும் சேஷபூதரன்றோ; நீர் உபதேசிக்கிறபடி எங்ஙனேயென்னில்; எனக்கு அவன் ப்ரஸாதம் அடியாகையாலே விஸ்ம்ருதிசங்கை யில்லை யென்கிறார்.

அரு.—உரை-ஆகமம். 'நூல்' என்று ஸாமாந்யமாய், உரையாகிற நூலென்னுதல் ; மறையாகிற நூலென்னுதல். விட்டாலும் - கொல் என்று மேலேவிட்டாலும். அப்போதும் போச்யமாயிருக்குமென்றபடி.

அழிப்பு என்கிற வாச்யத்தை இவற்றுக்கு வாசகமான, "அரன்-நாரணன்" என்கிறசப்தம் காட்டும்படியென்னென்ன ; அருளிச்செய்கிறார். (வாசகசப்தத்துக்கித்யாதி) இந்தவாக்யந் தெரியாது. ருத்ரனை விட்டு ஈச்வரனைப் பற்றுகைக்கு இம்மட்டுப் போருமோ? அவன் ஸ்வரூப ஸ்வபாவங்களெல்லாம் சொல்லவேண்டாவோ ? என்ன ; அருளிச்செய்கிறார். (அறிவுடையார்க்கித்யாதி) (ரு)

ஒன்றுமறந்தறியேனோதநீர் வண்ணனை நான்
இன்று மறப்பனோ ஏழைகாள்—அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை. (சூ)

ப-உ.—அன்று-அப்பொழுது, கருவரங்கத்துள்-கர்ப்பஸ்தாநத்தில், கிடந்து - இருந்தபடியிருந்து, திருவரங்கமேயான் - ஸ்ரீரங்கத்துக்கு ஸ்வாமியான எம்பெருமானுடைய, திசை-விஷயங்களை, கண்டேன் - ஸாக்ஷாத்கரித்தேன்; கைதொழுதேன் - அஞ்சலிபண்ணினேன்; ஒன்றும் - ஒரு அம்சமும், மறந்தறியேன் - மறந்தறியமாட்டேன்; ஏழைகாள் - அறிவில்லாதவர்களே! நான் - யான், இன்று-இப்பொழுது, ஓதநீர்வண்ணனை, சைத்யம்மிகுந்த ஜலத்தினுடைய ஸ்வபாவத்தையுடையவனை, மறப்பனோ - மறப்பனோ?

வ்யா.—(ஒன்று மறந்தறியேன்-அன்று கருவரங்கத்துட் கிடந்து கைதொழுதேன் கண்டேன்) கர்ப்பவாஸம பண்ணுகிறகச் செய்தே, "ஐயோ! நோவுபட்டாயாகாதே" என்று அவன் கடாக்ஷிக்க, அவனைக்கண்டேன். தமமுடைய விலக்காமையைக்கொண்டு ஸாக்ஷாத்கரித்ததாகச் சொல்லுகிறார். (திருவரங்கமேயான் திசை - ஒன்றும் மறந்தறியேன்) பெரியபெருமா ளிடையாட்டத்தில் அவனுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளில் ஒன்றும் மறந்தறியேன். (ஓதநீர்வண்ணனை நான் இன்று மறப்பனோ) ச்ரமஹரமான வடிவையுடைய பெரியபெருமாளை இன்று மறப்பனோ. இதுதான் தேஹயாத்ரையாய் பாப்ரதிபாதநயோக்யமான காலத்திலே மறப்பனோ. (ஏழைகாள்) இவ்விஷயத்தில் புதியதுண் டறியாதவர்களே! என்கிறார். திசை என்றது – அவனிடையாட்டத்திலே என்றபடி. அத்திக்கிலே என்றும் சொல்லக்கடவதிறே.

(ஒன்றித்யாதி) கண்டவளவிலே ஒன்றும் மறந்தறியேன். உம்முடைய ஸௌஜந்யமோவென்னில்; அன்று; (ஓதநீர் வண்ணனை) மறக்க வொண்ணாதவழகு. (ஏழைகாள்) மறக்கவொண்ணாத விஷயத்தை விட்டு நினைக்கவொண்ணாத விஷயத்தைப்பற்றி நிற்கிறவர்களே. (அன்று) "அறியாக்காலத்துள்ளே" "ஜாயமாநம்ஹி — ஜாயமாநம்ஹி". (கருவித்யாதி) மறக்கைக்கு ஹேதுவுள்ள விடத்திலே

ஆறும்பாட்டு.—கர்ப்பாவஸ்தையிலே காணக்கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார்.

(தம்முடைய வித்யாதி) ஜாயமாநம்ஹி-ஜாயமானகாலத்திலே()

திசையும் திசையுறு தெய்வமும், தெய்வத்
திசையும் கருமங்க ளெல்லாம்—அசைவில்சீர்
கண்ணன் நெடுமால் கடல்கடைந்த, காரோத
வண்ணன் படைத்த மயக்கு. (எ)

ப-உ.—திசையும் - திக்குக்களும், (திகுபலகூஷிதபூமியும்) திசை-திக்குக்களிலே, உறு - சேர்ந்திருக்கிற, தெய்வமும் - தேவதைகளும், தெய்வத்து - (அந்த) தேவதைகளுக்கு, இசையும் - சேர்ந்த, கருமங்களெல்லாம் - வ்யாபாரங்களெல்லாம், அசைவு - நாசம், இல் - இல்லாத, சீர்-கல்யாணகுணங்களையுடைய, கண்ணன்-க்ருஷ்ணனுயவதரித்தவனுய், நெடு - அபரிச்சிந்நமான, மால் - பெருமையையுடையனுமாய், கடல்-ஸமுத்ரத்தை, கடைந்த-மதனம்பண்ணின, (அபீஷ்டப்ரதனுமாய்), கார்-கறுத்த, ஓதம்-ஸமுத்ரம்போன்ற, வண்ணன்-வடிவையுடையனுமான (ஸ்ரியஃபதி), படைத்த - உண்டாக்கின, மயக்கு - அறிவுகெடப்பண்ணும் வஸ்துக்கள்.

வ்யா—மறந்திலேன்; நினைக்கைக்கு ஹேதுவுள்ள விடத்திலே இன்று மறப்பனோ. திருவரங்கமேயா னிடையாட்டம் பாதகையிலேயோ; எல்லைநிலத்திலே.

அன்று கருவரங்கத் துட்கிடந்து, திருவரங்கமேயான் திசை, கைதொழுதேன் கண்டேன்; ஒன்றும் மறந்தறியேன்; ஓதநீர் வண்ணனை, நான் இன்று மறப்பனோ ஏழைகாள் - என்றந்வயம். (சு)

அவ.—ஏழாம்பாட்டு.—அல்லாததேவதைகள் சரீரதயா சேஷபூதர்; நிர்வாஹ்யர்; அவனே சேஷி; நிர்வாஹகனென்று சொல்லும்படியெங்ஙனே! அவர்களும் ஒரோதேசங்களுக்கு ஈச்வரருமாய் அவர்களுக்குப் ப்ரதானமான செயல்களு முண்டாய்ச்செல்லாநிற்க வென்ன; அதுக்கும் அடி அவனே; அது அவன் ஸ்வாதந்த்ர்யத்துக்கு வர்த்தகமென்கிறுர்.

(திசையும்) திக்கோடே கூடின பூமியும். (திசையுறு தெய்வமும்) அத்திக்கிலே வ்யாப்தரான தேவர்களும். (தெய்வத்திசையும் கருமங்களெல்லாம்) அவ்வவ தேவதைகளுக்குப் பொருந்தின கர்மங்க ளெல்லாம். த்ரிபுரதஹநாதி. (அசைவில் சீர்) அல்லாதாருடைய சீருக்கு அசைவுண்டு போலேகாணும். (கண்ணன்) தன்னை

ஏழாம்பாட்டு.—இப்படிப்பட்டவர்களுக்கும் அவனே காரணமென்கையாலே அவன் ஸ்வாதந்த்ர்யத்தை வர்த்திப்பிக்கிறது - அவன் பெருமையைக் காட்டுகிறதென்றபடி.

மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்
தியங்கு மெறிகதிரோன் றன்னை-முயங்கமருள்
தேராழி யால்மறைத்த தென்னீ திருமாலே
போராழிக் கையால் பொருது. (அ)

ப-உ.—திரு-லக்ஷ்மியினிடத்தில், மாலே-வ்யாமோஹமுடையவனே! நீ-நீ, முயங்கு-நிறைந்திருக்கிற, அமருள்-யுத்தபூமியில், போர்-யுத்தத்துக்கு ஸாதநமான, ஆழி - சக்ரத்தையுடைய, கையால் - கையினாலே, பொருது - போர்செய்து, மயங்க - சலங்கும்படி, வலம்புரி-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, வாய்வைத்து - திருப்பவளத்திலே வைத்து, வானத்து - ஆகாயத்தில், இயங்கும் - உலாவுகிற, எறி - விடப்படும், கதிரோன்தன்னை - கிரணங்களையுடைய ஸூர்யனை, தேராழியால் - சக்ரத்தினால், மறைத்தது - தோற்றாமல் செய்தது, என் - எதுக்காக.

வ்யா.—இதரஸஜாதீயனுக்குவது தன்னுடைய இச்சையாலே. (நெடுமால்) 'யதோவாசோ நிவதந்தே-யதோவாசோ நிவர்த்தந்தே' என்று ஓதப்படும் பெரியவன். (கடல்கடைந்த) பெரியவன் என்றிராதே அரியனசெய்து நோக்குமவன். (காரோதவண்ணன்) நோக்காதே யழிக்கிலும் விடவொண்ணாதவடிவு. (படைத்தமயக்கு) பலசக்தியையும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியையும் கொடுத்துவைத்தால் தன்வழி வாராதவர்களை அறிவு கெடுக்கும்படி. அல்லாதா ரறியாவிடுவான். "தைவீஹ்யேஷா குணமயீ - தைவீஹ்யேஷா குணமயி"

அரு.—சேதநருக்கு பலசக்தியையும் போக்த்ருத்வ சக்தியையும். தன்நிமித்தமான உபாயத்தை அநுஷ்டிக்கைக்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்தியையும் கொடுத்திருக்கச் செய்தேயும், தன்னை ஆச்ரயியாதேயிருக்குமவர்கள் இதரதேவதைகளைப்பற்றிக் கெட்டுப்போகைக்காக அந்ததேவதைகளைப்படைத்தமாயை. (அறியாவிடுவான்) ஒருத்தரும் அறியாதபடி பண்ணிவைத்தமாயை; அன்றியே, தேவர்களுக்கு பலப்ரதசக்தியையும், அத்தை லபிக்கைக்கு சேதநருக்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியையும் கொடுத்துவைத்தால், அவர்களைவிட்டுத் தன்வழியே வாராதவர்களை, அவர்களைப்பற்றி அறிவுகெடும்படி தேவதைகளை ஸ்ருஷ்டித்தமாயை. இத்தை ஒருத்தருமறியாதபடி பண்ணினனென்றபடியாகவுமாம். (எ)

வ்யா.—(தெய்வத்திசையும்) ஸ்ருஷ்ட்யாதி கர்மங்கள். (அசைவில்சீர்)நித்யமான கல்யாணகுணம். (கண்ணன் நெடுமால்) ஆச்ரிதரைவிடாதபெரும்பித்தன். (கடல்கடைந்த) அபேக்ஷிப்பாரே வேண்டுவது. (காரோதவண்ணன்) குணஹீநனானாலும் விடவொண்ணாது.

அவ.—எட்டாம் பாட்டு.—இம்மயக்குப்பொதுவோவென்னில் ஆச்ரிதரைத் தன்னை யழிய மாறியும் நோக்குமென்கிறார்.

(மயங்கவித்யாதி) அர்ஜுநன் நிமித்தமாக நிருத்தி யுத்தம்பண்ணப்புக்கால், இவன் க்ரமத்தாலே தொடுத்துவிட்ட அம்புக்கு எதிரிகள் போகாதவளவில், தன் திருவாயிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வைக்குமித்தனை; அதுக்கு ஒருத்தராலும் இருக்கப்போகாது; அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற எல்லாரும் மயங்குமித்தனை. உகவையாலே மயங்குவாரும் பயத்தாலே மயங்குவாரும். "தேவாநாம்வவ்ரு யே தேஜஃ ப்ரஸாதச்சைவயோகிநாம்-தேவாநாம்வவ்ருதேதேஜஃ ப்ரஸாதச் சைவயோகிநாம்" என்கிறபடியே. "ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத் - ஸகோஷோதார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்" "ஸுக்ஷ்வநஷ்டம் குரூணாம் பலமிதி தார்த்தராஷ்ட்ராமேநிரே; தஜ்ஜயாகாங்க்ஷிணே ஸஞ்ஜயோகஸ்ய, ராஜஸ்ரீபவதீயாநாம் விஜயஸ்திதிரிதி - அத்யைவநஷ்டம் குரூணாம் பலமிதிதார்த்தராஷ்ட்ராமேநிரே; தத்விஜயாகாங்க்ஷிணே ஸஞ்ஜயோகதயத்,ஈத்ருசிபவதீயாநாம் விஜயஸ்திதிரிதி".(வானத்து) மறைக்கவொண்ணாத நிலத்திலே. (இயங்கும்.) ஒருக்ஷணம் ஓரிடத்தில் நில்லாதவனை. (எறிகதிரோன்றன்னை) குறித்துப்பார்க்கப் போகாதபடி கிரணங்களை விடாநின்றுள்ளவனை. (முயங்கித்யாதி) "ஸத்யஸங்கல்பஃ-ஸத்யஸங்கல்பஃ" என்கிறச்ருதிக்குச் சேருமோ; "நமேமோகம்வசோபவேத் - நமேமோகம்வசோபவேத்" என்றருளிச்செய்த வார்த்தைக்குச் சேருமோ; ஈச்வரத்வத்துக்குச் சேருமோ. (திருமாலே) ஸத்யஸங்கல்பத்தையழிக்குமவனைச் சொல்லுகிறது. (போராழியித்யாதி) ஆயுதமெடுக்கவொண்ணாதென்று சொன்ன பீஷ்மாதிகள்முன்னே ஆயுதத்தையெடுத்துப் பொருது.

அரு.—எட்டாம்பாட்டு.—ஆயுதமெடேனென்ற நீ ஆயுதமெடுத்தது, ஸத்யஸங்கல்பத்துக்குச் சேருமோ; ஸாதாரணமான ஈச்வரத்வத்துக்குப்பொய்சொல்லி யழிக்கைசேருமோ.

பொருகோட்டோ ரேனமாய்ப் புக்கிடந்தாய்க்கு, அன்
ஒருகோட்டின் மேற்கிடந்த தன்றே-விரிதோட்ட[முன்
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க
மாவடிவின் நீயளந்த மண். (கூ)

ப-உ.—விரி - மலர்ந்த, தோட்ட - இதழ்களையுடைய தாமரைப் பூப்போலே, சே - சிவந்த, அடியை - திருப்பாதத்தை, நீட்டி - நீளச்செய்து, திசை - திக்கு, (திகுபலக்ஷித பூமி) நடுங்க - அச்சப்படும்படியும், விண் - ஆகாயம் (மேல் லோகத்திலுள்ளார்), துளங்க - நடுங்கும்படியும், மா - பெரிய, வடிவின் - ரூபத்தையுடைய ஞய்க்கொண்டு, நீ - நீ, அளந்த - ப்ரமாணித்த, மண் - பூமியானது, பொரு- போர்செய்கிற, கோட்டு-கொம்புகளையுடைய, ஓர் - அத்விதீயமான, ஏனமாய் - வராஹரூபியாய்க்கொண்டு, புக்கு-முழுகி, இடந்தாய்க்கு - பிரித்த உனக்கு, அன்று - அக்காலத்தில், உன் - உன்னுடைய, ஒருகோட்டின்மேல் - ஒருகொம்பின்மேலே, கிடந்ததன்றே - இருந்ததன்றோ?

வ்யா.—(மயங்க) எல்லார்க்கும் ஆச்ரிதவிஷயத்தில் அவர்கள் ஸங்கல்பித்தபடியே நடத்தும்பக்ஷபாதி. (மயங்க) "ஆயுதமெடேன்" என்றுவைத்து அர்ஜுந னம்பாலே தனித்தனியே கொல்லப்பற்றுமே ஒருகாலே முழுக்காயாக அவிய. (வானத்து) தூரத்தே நிற்கிறவனை. (இயங்கும்) ஸஞ்சரிக்கிறவனை. (முயங்கமருள்) தனியிடத்திலல்ல; எல்லாரும் காண. எத்திறம் அறிந்தேன். (திருமால்) நாட்டார் பரிமாற்றமல்ல; அவை அந்தஃபுரத்தில் பரிமாற்றம். போரிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தாலே கொன்றான்; ஆதித்யனை மறைத்தான், ஸ்ரீ பீஷ்மரைத்தொடர்ந்தான். (முயங்கமருள்) நெருங்கின யுத்தம். (தோராழி) ரதாங்கம்; திருவாழி (அ)

அவ.—ஒன்பதாம்பாட்டு.—ஆச்ரிதரை யொழியவும் ஜகத்துக்கு ஸத்தாநாசம்வரில் பரிஹரிக்குமென்கிறார்.

அரு.—"மயங்கவலம்புரி வாய்வைத்து-முயங்கமருள் - வானத்தியங்கு மெறிகதிரோன்றன்னை-தோராழியால் மறைத்து நீ-ஆழிக்கையால் பொருதது-திருமாலே-என்தான்." என்றந்வயமாக்கி அருளிச்செய்கிறார். (போரிலேயித்யாதி) (அ)

ஒன்பதாம்பாட்டு.—தோடு-இதழ். பாட்டுக்கெல்லாம் பலிதமருளிச்செய்கிறார். (ஆச்ரிதரித்யாதி)

மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர் - எண்ணில்
அலகளவு கண்டசீ ராழியாய்க்கு அன்றிவ்
வுலகளவு முண்டோவுன் வாய். (௧௦)

ப-உ.—மண்ணும்-பூமியும், மலையும் - பர்வதங்களும், மறி-அலை மடங்கும், கடலும்-ஸமுத்ரமும், மாருதமும் - காற்றும், விண்ணும்-ஆகாசமும், விழுங்கியது - அமுதுசெய்தது, மெய்யென்பர் - யதார்த்தமென்று (வேதவைதிகபுருஷர்கள்) சொல்லுகிறார்கள். எண்ணில்-அநுஸந்தித்தால், அலகு - ஸங்க்யையும், அளவுகண்ட - எல்லைகண்டிருக்கிற, (எண்ணிறந்த) சீர் - கல்யாணகுணங்களையும், ஆழியாய்க்கு - சக்ரத்தையுமுடைய உனக்கு, அன்று - அக்காலத்தில், இவ்வுலகளவும் - இந்த ஜகத்துக்குச் சரியாய், உன்வாய் - உன்னுடைய திருப்பவளம், உண்டோ - இருந்ததோ?

வ்யா—(பொருகோட்டோ ரேனமாய்)பொராநின்ற கோட்டையுடைத்தான ஏனமாய். அத்விதீயமானஏனமாய். ஜாதிச்செருக்காலே பூமியை யுழுதுகொடு திரியாநிற்கும். (புக்கித்யாதி) ப்ரளயங்கொண்டு, உழுகைக்கு பூமியில்லாதவன்று தன்திருவயிற்றிலே வைத்துநோக்கும். இத்தால் சொல்லிற்றாயிற்று - உதாரனாயிருப்பானொருவன் நாலுபேருக்குச் சோறிடநினைத்தால் நாற்பதுபேருக்கு இட்டுமிகும்படி சோறுண்டாக்குமாப்போலே, ரக்ஷயத்தினளவன்றிறே ரக்ஷகன் பாரிப்பு.(விரிதோட்டசேவடியைநீட்டி)விரியாநின்ற தோடுசேரயுடைத்தான தாமரைபோலேயிருந்துள்ள சேவடியைநீட்டி. "விரிதோட்ட"என்று-ஸம்ருத்தியாகவுமாம். திருமேனியிலே ஒளிவிரியும் தோட்டையுடையவனே. (திசைநடுங்க) திக்குக்களெல்லாம்நடுங்க. (விண்துளங்க) விண்ணிலுள்ளதேவஜாதியெல்லாம் நடுங்கும்படியாக. (மாவடிவின் நீயளந்தமண்) பெரியவடிவைக்கொண்டு நீயளந்தமண். ஆச்ரிதர்கார்யம் பெரியவடிவைக்கொண்டு புக்குச்செய்யிலும் செய்யும்; சிறிய வடிவைக்கொண்டு பெரியனாய்ச்செய்யிலும் செய்யும்.

(பொரு)ஆபந்நராய் விலக்காதார்க்கும், தன்னைக்கொண்டு கார்யங்கொள்ளுவார்க்கும் செய்யும்படி. (விரிதோட்ட) விரிகிறதோட்டை யுடையவைபோலே இருந்துள்ள. (விண்துளங்க) அபிமாநிக

அரு.—"நீயளந்தமண், அன்று, ஒரு கோட்டின்மேல் கிடந்ததன்றே" என்றந்வயமாக்கி யருளிச்செய்கிறார் (திருவயிற்றிலே யித்யாதி.)

வ்யா—ளான தேவர்கள் நடுங்க. பெரியவடிவாலே யளந்தமண் திருவெயிற்றுக்கு ஒரு நீலரத்நம்போலேயிருப்பதே ! என்ன ஆச்சர்யம். (கூ)

அவ.—பத்தாம் பாட்டு.—(மண்ணுமித்யாதி) சேராதன செய்தும் ஆச்ரிதரை நோக்குமவனென்கிறார்.

(மண்ணுமித்யாதி) ஆதாரமான மண்ணும், அதற்கு உறுதியான மலையும், வேலியான கடலும், தாரகமான காற்றும், அவகாச ப்ரதாநம் பண்ணும் ஆகாசமும். (விழுங்கியது மெய்யென்பர்) ஐந்த்ரஜாலிகர் செயல்போலே பொய்யன்று இது, ஆப்தரான ஆழ்வார்கள் மெய்யென்பர்கள். (எண்ணில்) ஆராயில். (அலகளவுகண்ட சீராழியாய்க்கு) எண்ணிறந்த குணங்களையும் திருவாழியையு முடையனான உனக்கு. அலகாவது - பரிச்சேதகமிறே. அத்தை அளவுகண்டசீர் - அபரிச்சேதகமான அலகைப் பரிச்சிந்நமாக்கின சீர். (இவ்வுலகளவுமுண்டோ உன்வாய்) இந்த ரக்ஷணத்தில் த்வரைதான் சிறியவடிவிலே பெரிய ஜகத்தைவைத்தான்.

(மண்ணுமித்யாதி) சேராச்சேர்த்தியானவை யடைய மெய்யென்பர். இந்த்ரஜால மென்னப்பெற்றதோ; ருஷிகள் கூப்பிடா நிற்பர்கள். (எண்ணிலலகளவுகண்ட) எண்ணை அளவுபடுத்தும் குணங்கள். "ஸுணாநாகரஃ - குணாநாமாகரஃ" "வஹவோநுவகஸூாணஸுணாஃ-பஹவோந்ருபகல்யாணகுணாஃ". (ஆழியாய்க்கு) குணங்களும் அப்படியே, சீரியகை. (உலகளவுமுண்டோ) ரக்ஷகத்வப்பாரிப்புக்கு அடைவில்லாமை. (ய)

அரு.—பத்தாம்பாட்டு.—(அலகளவு) அலகை அளவுகண்ட. பரிச்சேதகம். 'கலாகாஷ்டாதிரூபமான வத்ஸராதிகளை எண்ணிப் பரிச்சேதிக்கை. "கோடி, சங்கம், மஹாசங்கம், பத்மம்" என்றாற்போலே; காலத்துக்கு அவதியற்றிருக்கையாலே (அபரிச்சேதகமான அலகு) என்கிறது.

பஞ்சபூதங்கள் பரஸ்பரம் பிந்நமாயிருக்கையாலே (சேராச்சேர்த்தி) என்கிறது. (எண்ணிலலகளவு) எண்ணு நிற்கிற அலகை; குண்ங்களும் அப்படியே. திருவாழியிருக்கையாலே கையும் (சீரியகை) என்றபடி. (அடைவில்லாமை) சிறியவாயிலே பெரிய உலகை வைக்கை. (கO)

வாயவனை யல்லது வாழ்த்தாது, கையுலகம்
தாயவனை யல்லது தான்றொழா - பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவொடு பேரல்லால்
காணாகண் கேளா செவி. (கக)

ப-உ.—வாய் - வாகிந்த்ரியம், அவனையல்லது - அவனையொழிய, வாழ்த்தாது-ஸ்தோத்ரம்செய்யாது. கை-கரமானது, உலகம்-லோகத்தை, தாயவனையல்லது - அளந்துகொண்டவனையொழிய, தாந்தொழா-ஸ்வயம்நமஸ்கரிக்காது. கண்-நயநேந்த்ரியம், பேய்-பேயானபூதனையினுடைய, முலை - ஸ்தநத்திலிருக்கிற, நஞ்சு-விஷத்தை, ஊணாக-தாரகமாக, உண்டான் - அமுதுசெய்தவனுடைய, உருவல்லால் - வடிவையொழிய, காணா - பார்க்கமாட்டாது. செவி - ச்ரோத்ரேந்த்ரியம், பேரல்லால் - (அவனுடைய) திருநாமமல்லது, கேளா - கேட்கமாட்டாது.

வ்யா.—அவ.—பதினோராம்பாட்டு.—(வாய்) இவனுடைய ரக்ஷகத்வத்தில் த்வரையைக்கண்டு தம்முடைய இந்த்ரியங்கள் வ்யாகுலமானபடி சொல்லுகிறது.

(வாயித்யாதி) நீ அளவிதாம்படி அமையுங்காண் என்றாலும் கேளாது. (கையித்யாதி) திருவுலகளந்தருளினவனுடைய நீர்மையைக் கண்டால், நான் வேண்டாவென்னிலும் தொழுதல்லது நில்லாது. (பேயித்யாதி) பேய் நஞ்சாகக் கொடுத்தால், இவன் தாரகமாகவுண்டான். அவள் தன்நெஞ்சில் தண்மையாலே முடிந்தாளத்தனை. (உருவித்யாதி) அவனுருவல்லது கண்கள் காணா; அவன் பேரல்லது செவிகள்கேளா. ஆச்ரிதவிஷயத்திலும் ஸாமாந்யவிஷயத்திலு மிருக்குமிருப்பிலே ஸர்வேந்த்ரியங்களும் அப்ஹ்ருதமானபடி.

(வாயித்யாதி) தான் புறம்பே வாழ்த்தப் பார்க்கிலும் தாம் செய்யா. (உலகம் தாயவனை) தொழாதார் தலையிலு மிருந்து

அரு.—பதினோராம்பாட்டு.—நீயளவிதாம்படி-உன் ப்ரேமமிருந்தபடிபோருமென்றபடி. பேய்ச்சியை முடித்துத் தன்னைக் கொடுக்கையாலே (ஆச்ரிதவிஷயம்). உலகமளக்கை (ஸாமாந்ய விஷயம்.) ஏறவாங்கிலும் - அவன் வேண்டாவென்று ஏறவாங்கிலும், நான்றான் தொழவேண்டாவென்று ஏறவாங்கிலும், அவனையொழிய வேறொன்றையும் தொழாதென்றபடி. இத்தால், இந்த்ரியங்களெல்லாம் அநந்யார்ஹமாயிற்றென்றபடி.

செவிவாய்கண் மூக்குடலென் றைம்புலனும், செந்தீ
புவிகால்நீர் விண்பூத மைந்தும் - அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமு மென்பரே
ஏனமாய் நின்றார்க் கியல்வு. (கஉ)

ப-உ.—செவி - ச்ரோத்ரேந்த்ரியம், வாக் - வாகிந்த்ரியம், கண் - சக்ஷுரிந்த்ரியம், மூக்கு - க்ராணேந்த்ரியம், உடல் - த்வகிந்த்ரியம், என்று - என்கிற, ஐம்புலனும் - ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்களும், செம் - சிவந்த, தீ - நெருப்பு, புவி - பூமி, கால் - காற்று, நீர் - ஜலம், விண் - ஆகாசம், (என்கிற, பூதமைந்தும் - ஐந்துபூதங்களும், (இவற்றின் கார்யமான சரீரமும்), அவியாத - விச்சேதமில்லாத, ஞானமும் - (பக்திரூப) ஜ்ஞாநமும், வேள்வியும் - யாகமும், நல் - ச்ரேஷ்டமான, அறமும் - தர்மமும், ஏனமாய் - வராஹமாய், நின்றார்க்கு - இருக்கிற (ஸர்வேச்வரனுக்கு), இயல்வு - தகுந்த உபாயம், என்பர் என்று - சொல்லுவர்கள்.

வ்யா.—தொழுவித்துக்கொள்ளும்திருவடிகளையுடையவனே யல்லது. (தாம்தொழா) அவனும் ஏறவாங்கிலும் நானும் ஏறவாங்கிலும். (ஊணுகவித்யாதி) கொடாவிடில் பிழையேயென்று கொடுக்க, உண்ணுவிடில் பிழையேயென்று உண்டான். அநந்யார்ஹமாயிற்று. ஹ்ருஷீகேசனன்றே. (கக)

அ.—பன்னிரண்டாம் பாட்டு.—(செவி) தம்முடைய அனுபவமான பக்தியைச் சொல்லுகிற தென்னவுமாம்; பக்தியைவிதிக்கிற தென்னவுமாம்.

அரு—(செவி யித்யாதி) ஸ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும். (செந்தீயித்யாதி) இத்தால்-பஞ்சபூதாத்மகமான சரீரத்தைச் சொல்லுகிறது. இந்த்ரியங்களும் சரீரமும் ஹேயதயா அநுஸந்தேயம். (அவியாத ஞாநமும்) கிழிலவற்றைப்பற்றி விடாதஜ்ஞாநமும். அவியாத ஞானம் - அந்தர்க்ருஹீதமான ஆத்ம ஜ்ஞாநம். அன்றியே, தைலதாராவ தவிச்சின்ன ஸ்ம்ருதிஸந்தானரூபஜ்ஞாந மென்றுமாம்.

பன்னிரண்டாம்பாட்டு.—“அவியாதஞானமும்” என்கையாலே பக்திக்கு ஜ்ஞாபகம். இது ஸாத்யபக்தியாதல்; ஸாதநபக்தியாதல். (பற்றிவிடாத) த்யாஜ்யம் என்கிறநிலையை விச்சேதமின்றிக்கே பற்றியிருக்கிற ஜ்ஞாநம். உபாஸகனுக்கு அநுஷ்டிக்கவேணு மென்னு

வ்யா—(வேள்வியும்) பக்தி விவ்ருத்யர்த்தமாகவும் பாபக்ஷயத்துக்கா கவும்அநுஷ்டிக்கிறகர்யங்கள். "அக்னிஹோத்ராதி ஹுதக்கார்யாயைவதத்தர்சநாத் - அக்னிஹோத்ராதிஹுதத்கார்யாயைவதத்தர்சநாத்" "ஸுஸ்ராவணாக்ஷதத்ராவிஹித்ருஷ்டம்-ஆஸ்ரயாணுத் தத்ராபிஹித்ருஷ்டம்" என்றும், "யஜ்ஞேநதாநேந தபஸாநாஸகேந, ப்ராஹ்மணா விவிதிஷந்தி - யஜ்ஞேநதாநேநதபஸாநாஸகேந, ப்ராஹ்மணுவிவிதி ஷந்தி" என்றும் சொல்லுகிறபடியே. (நல்லறம்) விவேகாதிகள், (என்பரே ஏனமாய் நின்றூர்க்கியல்வு) ஏனமாய் நின்றுரைப் பெறு கைக்குப்பண்ணும் ப்ரவ்ருத்தி யிவையென்பர். ஆபத்தே அடையாள மாகத்தானே ரக்ஷிக்குமென்கையாலே - அவன் உபாயமாகத் தம்மு டைய அநுபவமான பக்தியைச் சொல்லுகிறதென்றுமாம்.

அவ.—(செவி) கீழ்-ப்ராப்யசிக்ஷை பண்ணினூர்; இனி ப்ராபக ஞ்சொல்லுகிருர்.

(செவியித்யாதி) ஸர்வேந்த்ரியங்களுக்கு முபலக்ஷணம். (செந் தீயித்யாதி) ஆக இருபத்துநாலுக்கு முபலக்ஷணம். (அவியாதவித் யாதி) கர்மயோகாந்தர்க்கதமான ஜ்ஞாநம். ப்ரக்ருதிஹேயதயாஜ் ஞேயை; ஆத்மா உபாதேயதயாஜ்ஞேயன்; ஈச்வரன் உபாதேயத மஞய்க்கொண்டு ஜ்ஞேயன். "வஞ்சலம்ஹி-சஞ்சலம்ஹி." (வேள்வி) கர்மயோகம். (நல்லறம்) ஆந்ருசம்ஸ்யாதி தர்மங்கள். (என்பர்) வேத சாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தி. (ஏனமாய்நின்றூர்) தளர்ந்தபோது எடு க்குமவன். "என்பரே!" என்று க்ஷேபமானபோது, ப்ரவ்ருத்திகொ ண்டு புகுவதைக் கைவாங்கினவன்று எடுக்கவிருக்க. "ஞானப்பிரா னையல்லாலில்லை" "அறிவானும்" என்ருற்போலே. (இயல்வு) உபா யம்.

(கஉ)

வ்யா.—அவ.—பதின்மூன்றும்பாட்டு.—(இயல்வாக) "வாயவனை யல்லது வாழ்த்தாது" என்னும்படியா யிருந்தது உம்மது, அல்லா தார்க்கு அவனை ஆச்ரயிக்கும்போது அவதாநம் வேணும், எங்ஙனே

அரு.—மதுக்கு ஸூத்ரமும், விஷபவாக்யமும் அருளிச்செய்கிருர் (அக்னிஹோத்ராதி - அக்நி ஹோத்ராதி இத்யாதி.)

கீழ் கீழிற்பாட்டில். "அவியாதஞானம்" என்கைக்கு, இப்படிப் பட்ட ஜ்ஞாநம்பிறக்கை அருமையோவென்ன; அருளிச்செய்கிருர் (வஞ்சலம்ஹி-சஞ்சலம்ஹி என்று.) இயல்வு - ஏனமாய் நின்றூர்க்கு. இவற்றை உபாயமென்பரே! என்று க்ஷேபம்.

(கஉ)

இயல்வாக வீன்துழாயா னடிக்கே செல்ல
முயல்வா ரியலமரார் முன்னம் - இயல்வாக
நீதியா லோதி நியமங்களால் பரவ
ஆதியாய் நின்ருரவர். (கரு)

ப-உ.—முன்னம் - முதலில், இயல் - தகுந்தயோக்யதையையுடைய, அமரர் - தேவர்கள் (நித்யஸூரிகள்), ஈன் - அழகிய, துழாயான் - திருத்துழாயையுடைய ஸர்வேச்வரனுடைய, அடிக்கே - திருவடிகளிலே, செல்ல - கிட்ட, இயல்வாக - தகுதியாக, முயல்வார் - யத்நம் செய்வார்கள். (அல்லாதவர்களுக்கு) இயல்வாக - ஸத்ருசமாக, நீதியால் - ந்யாயமாக, ஓதி - அத்யயநம்பண்ணி, நியமங்களால் - மௌநம் முதலான நியமங்களாலே, பரவ - புகழும்படி, அவர் - அப்பெருமையுடையவர், ஆதியாய் நின்ருர் - முதல்வராயிருந்தார்.

வ்யா.—கூடும்படியென்னில்; ப்ரக்ருத்யா ஆச்ரயித்திருப்பர்கள் நித்யஸூரிகள்; அல்லாதாரும் ஆச்ரயிக்கும்படி தானே ப்ரதமபாவியாமென்கிருர்.

(இயல்வாக) ஸத்ருசமாக. (ஈன்றுழாயா னடிக்கே செல்ல) ஆக, முதலியாகத் தோள்மாலை யிட்டிருக்கிற வதுக்குப் போரும்படியாக. (முயல்வா ரியலமரார்முன்னம்) இயற்றியையுடையரான நித்யஸூரிகள் முன்னே மஹாயத்நம் பண்ணுவர்கள். விஷயப்ரவணராய் அவனையறியாதவர்களும், (இயல்வாக) ஸத்ருசமாக. (நீதியாலோதி) பரமுறையாலே திருநாமங்களைச்சொல்லி. (நியமங்களால், பரவ) பரவும்படிக்கீடாக. சாஸ்த்ரங்களில் சொல்லுகிற நியமங்களாலே பரவசராய்ப் பரவும்படிக்கீடாக. (அவர் ஆதியாய்நின்ருர் அவர் தாமே ப்ரதமஸூக்ருதமானூர்.

அரு.—பதின்மூன்ரும் பாட்டு.—உமக்கு அவதாரம் வேண்டாதபடி இந்த்ரியங்கள் தானே பற்றிற்று, அல்லாதார்க்கு அவதாரங் கூடும்படியென்னென்று சங்காபிப்ராயம். ப்ரதமபாவி-ப்ரதமஸூஹ்ருத்து.

ஆக - ஸத்ருசமாக என்றவித்தால் என்று பலிதம். இத்தையருளிச்செய்கிருர். (முதலியாகத் தோள்மாலை யித்யாதி). (அடிக்கேசெல்ல) திருவடிக்கு, சேரவென்றது-தகுதியாக. திருமேனிக்குப் பாங்கான அடிமைகளைப்பண்ணி யென்றபடி. அப்போது, ஸத்ருசமாக என்றது-தங்கள்ஸ்வரூபத்துக்கு ஸத்ருசமாக. "நீதியாலோதி" என்கையாலே - ஓதுகிற ஸம்ஸாரிகள் அத்யாஹார்யம்.

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று - சுவர்மிசைச்
சாத்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல். (கச)

ப-உ.—அவரவர்-ரஜஸ்தமஃ ப்ரசுரரான அதிகாரிகள், தாந்தாம றிந்தவாறு - தங்கள்குணாநுரூபமாகத் தாங்களறிந்தபடியே, ஏத்தி - துதித்து, இவரிவர் - இந்தஇந்தவ்யக்திகள், எம்-நமக்கு, பெருமான்- ஸ்வாமி, என்று - இப்படி ஆதரித்து, சுவர்மிசை – பித்திமேல், சாத்தியும் - எழுதியும், வைத்தும் - (விக்ரஹரூபமாய்) ப்ரதிஷ்டைசெய்தும், தொழுவர் - ஆச்ரயிப்பர்கள். உலகு - ஜகத்தை, அளந்த - அளந்துகொண்ட, மூர்த்தி – ஸர்வேச்வரனுடைய, உருவே - திருமேனியே, முதல் - ப்ரதாநம்.

வ்யா—அவ.—உபகரணங்களையுங் கொடுத்து, ருசியையும் ஜநிப்பித்து உபாயமுமாய், தானே பலப்ரதாநம்பண்ணுமென்கிறார்.

(இயலமரர்) இயற்றியையுடைய அமரர்: (முன்னம்) முந்துற முன்னம். (இயல்வாக) இதுவே யாத்ரையாக. (ஈன்றுழாயான்) பரிபூர்ணன். (அடிக்கேசெல்ல) திருவடிகளுக்கே சேர. (முயல்வார்) யத்நம்பண்ணுவார். (இயல்வாக) ஸத்ருசமாக. (நீதியாலோதி) சாஸ்த்ரோக்தமானபடியே. (நியமங்கள்) ச்ரவணாதிகள். (பரவ) ஆச்ரயித்து. (ஆதியாய்நின்றார்) அவர்களுக்கு உபேயத்துக்கு அடியானாற்போலே வேண்டினவிடத்துக்கு இவர்களுக்கு உபாயத்துக்கு அடியாய் நின்றால் ஆச்ரயிக்கவொண்ணாதோ. அவனே இதுக்கும் வேண்டின பின்பு அவனையே பற்றவமையாதோ வென்றுமாம். (கரு)

அவ.—பதினாலாம்பாட்டு.—ப்ரக்ருத்யா ஆச்ரயிக்குமவர்களையும் சொல்லி, ஆச்ரயிப்பித்துக்கொள்ளுமவனையும் சொல்லிற்று; இது ஒன்றும் பெருதாரைச் சொல்லுகிறது.

(அவரவர்) ரஜஃப்ரசுரரும், தமஃ ப்ரசுரரும். (தாந்தாமறிந்தவாறேத்தி) குணாநுகுணமாக வெளிச்செறிந்தபடி ஏத்தி. (இவரிவரெம்

அ ந.--மேல்யோஜனைக்கு அவதாரிகை யருளிச்செய்கிறார் (உபகரணங்களையு மித்யாதி) அவர்களுக்கு-நித்யஸூரிகளுக்கு. "நீதியாலோதி" என்கிற உபாஸநத்துக்கு அவனைக்கொண்டு ஸாதிக்கவேண்டினால் அத்தைவிட்டு அவன் றன்னையே பற்றவமையாதோ வென்கிறார். (அவனேயிதுக்கு.மித்யாதி.)
(கச)

முதலாவார் மூவரே, அம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன் - முதலாய
நல்லா னருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லா ரருளும் பழுது. (கரு)

ப-உ.—மூவரே-(ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்களாகிற) மூன்றுபேரே, முதலாவார் - ப்ரதாநராவார்கள். அம்மூவருள்ளும் - அந்த மூவரிலும், மூரி - பரவாநின்றுள்ள, நீர் - ஜலத்தையுடைய ஸமுத்ரம்போலிருக்கிற, வண்ணன் - வடிவையுடைத்தானவன், முதலாவான் - ப்ரதாநனாவான். முதலாய - காரணபூதனான, நல்லான்-உபகாரம்செய்கிறவனுடைய, அருளல்லால் - க்ருபையொழிய, நாமம் - ப்ரஸித்தமான, நீர் - ஜலம் சூழ்ந்த, வையகத்து - ஜகத்தில், பல்லார் - பலருடைய, அருளும் - தயையும், பழுது - வ்யர்த்தம்.

வ்யா.—பெருமானென்று) ரஜஸ்தமஸ்ஸுக்கு விஷயமானானை என்னுடையஸ்வாமியென்று. (சுவரித்யாதி) ஸர்வேச்வரன்பக்கல் "எவ்வண்ணம் சிந்தித்திமையாதிருப்பர்" என்கிற செயலில் பித்தியிலேயெழுதியும் வைத்தும் தொழுவர்.

(உலகித்யாதி) இவர்களுடையவும் ஆச்ரயணீயங்களுடையவும் தலையிலே அடியைவைத்தவனே ப்ரதாநம். (மூர்த்தியுருவேமுதல்) ஸர்வேச்வரனுடைய திருமேனியே ப்ரதாநம்.

அவ.—அவனைவேண்டாதார் படுகிறபாடுபாரீர்.

(அவரவர்) பிங்கருசிகள். தாந்தாமறிந்தவாறு சாஸ்த்ரத்தின் பின்செல்லார். (இவரிவர்) ஸகரபுத்ரர்கள், கண்டானை, 'என் குதிரைபிடித்தாய்" என்று பிடிக்குமாப்போலே தோற்றினானை. (உலகளந்த) ஸமாச்ரயிப்பார் தலையிலும் ஸமாச்ரயணீயர் தலையிலும் ஒக்கத்துகைத்த ஸர்வேச்வரன். (உருவேமுதல்) - வடிவேமுதல். (கசு)

அ—பதினைந்தாம்பாட்டு.—(முதலாவார்) அவ்வோ தேவதைகளும் ஆச்ரயணீயராய்ச் செல்லா நிற்கச்செய்தே அவர்கள் அப்ரதாநர், இவன் ப்ரதாநனென்று சொல்லுகிறது உம்முடைய

அரு.—பதினாலாம்பாட்டு.—செயலில் - அநுகூலர் செய்கிற ந்யாயத்திலே, தாங்களும் ருச்யநுகுணமான பிம்பங்களைப்பண்ணித் தொழுவர்களென்றபடி.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவனை வேண்டாதாரித்யாதி.) (கசு)

பழுதே பலபகலும் போயினவென்று, அஞ்சி
அழுதே னரவணைமேற் கண்டு - தொழுதேன்
கடலோதம் காலலைப்பக் கண்வளரும், செங்கண்
அடலோத வண்ண ரடி. (௧௬)

ப-உ.—கடல் - ஸமுத்ரத்தினுடைய, ஓதம் - திவலைகள், கால்-திருவடிகளை, அலைப்ப-ஸ்பர்சிக்க, (அத்தாலே) கண்வளரும்-பள்ளி கொண்டருளுமவனுமாய், செம் - சிவந்த, கண் - நேத்ரங்களையுடையனுமாய், அடல்-மேல்விழுகிற, ஓதம்-(ஸௌந்தர்ய) தரங்கங்களோடு கூடின, வண்ணர் - வடிவையுடையனுமானவனுடைய, அடி - திருப்பாதங்களை, அரவு - திருவநந்தாழ்வானாகிற, அணைமேல் - படுக்கையின்மேலே, கண்டு-ஸாக்ஷாத்கரித்து, தொழுதேன்-நமஸ்கரித்தேன். பலபகலும் - காலமெல்லாம், பழுதே-வ்யர்த்தமாய், போயினவென்று-போய்விட்டதே என்று, அஞ்சி-பயப்பட்டு, அழுதேன்-சோகித்தேன்.

வ்யா.—பக்ஷத்தாலே யிறேயென்ன; அர்த்ததத்வமிருந்த படியைப் பார்க்கலாகாதோ வென்கிறார்.

(முதலாவார் மூவரே) இருந்ததே குடியாக ஆச்ரயணீயரன்றிறே, மூவரிறே ப்ரதாநர். (அம்மூவரித்யாதி) ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கு ஜீவவ்யவதாநத்தாலே அந்தர்யாமியாயும் தன் பக்கலிலே ஸ்வேநரூபேண நின்றும் காரணமாவான். (மூரிநீர் வண்ணன்) * பொன்னுருவும் தீயுருவுமானவர்களன்று, பரப்பை யுடைத்தான கடல்வண்ணன். (முதலாய) காரணமான. (நல்லானருளல்லால்.) அறவனானவனருளல்லால். (நாமமித்யாதி) அவனுடைய அருளொழிய அல்லாதா ரெல்லாருடைய வருளும் பழுது. அதிகாரிகளாகையாலே அவர்களை முறபடச்சொன்ன வித்தனை; பழுதாமிடத்தில் அவர்களோடு அல்லாதாரோடு வாசியில்லை. அவனுக்கு வசராய்க் கொண்டு பலம்தரிலோவென்னில்; இரண்டும் வ்யர்த்தம்.

(முதலாய நல்லான்) பெற்ற தாயாகையாலே பரிவன். "யஊ-ஜூஸ்லாணாமதவதுஃ - தர்மஜ்ஞஞ்சரணாகதவத்ஸலஃ" முலைப்பாலிருக்க விஷபாநம் பண்ணுவரோ. (நாமம்) நாமமாத்ரனான பல்லா

அரு.—பதினைந்தாமபாட்டு.—(வசராய்) சரீரபூதராய். இரண்டும்-கேவல ஸ்வதந்த்ரராயும், அந்தர்யாமியாகையாலே சரீரவத் பரதந்த்ரராயும் இரண்டுமென்றபடி. (௧௫)

ரென்னுதல்; ப்ரஸித்தமான நீர் வையகமென்னுதல். (பல்லார்) கீழ்ச் சொன்ன ப்ரஹ்ம ருத்ராதிகளகப்பட. தனித் தனியும், திரளவும். (பழுது) வ்யர்த்தம். (கரு)

வ்யா:—அவ.—பதினாறும் பாட்டு:—(பழுதே) * நல்லானருள் பெற்றவெனக்குச் சோகமுண்டாயிற் றென்கிறார்.

(பழுதே பலபகலும் போயினவென்றஞ்சியழுதேன்) போன காலம அநாதி; வருங்காலம் அநந்தம்; இத்தோடொத்தகாலமிறே போயிற்றென்றழுதேன். இழவுக்கு அழுதாராகில் அச்சமாவதென்! வருமத்தைக்குறித்தன்றோ அஞ்சிற்றென்னில்; அதிகாரி நானாகில் போனகாலம்போலே யாகிறதோ வருகிற காலமுமென்கிறார். "யஸ்த்ராமம் நபஸ்யேத்து யம்ச ராமோ நபஸ்யதி। நிந்தித ஸ்ஸவஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே - யச்சராமம்நபச்யேத்து யஞ்ச ராமோநபச்யதி। நிந்திதஸ்ஸவஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம்வி கர்ஹதே" என்று சொல்லுகிறது பெருமாளுடைய * ஒருநாளை யிழவுக்கிறே. (கடலோதம் காலலைப்ப) திருவடிகளை, கடலோதமானது துடைகுத்துமாப்போலே அலைப்ப. (கண்வளருமித்யாதி) (அரவணை மேல்கண்டு தொழுதேன்) தகட்டிலழுத்தின மாணிக்கம் போலே.

அவ.—பண்டு உபாயாந்தரங்களிலும் தேவதாந்தரங்க ளிலும் ப்ரவணனாயிழந்தேனென்று சொல்லுகிறார்.

(பழுதே) பழுதும் பழுதல்லாததும் கூடப்பெற்றேனோ. (பல பகல்) இழந்த அநாதிகாலம் பலவாய், அதுக்கநந்தரம் அநந்தகால மானபடி. (போயின) போனநீர்களைக் கோலவோ. வரும் காலமும் பழைய காலமும் ஒன்று; பழையனானே இன்னம் அப்படியாகிற் செய்வதென்னென்கிறார். "காயேஷ்விவ - காலேஷ்வபிச" (அர வணைமேல்கண்டு) பர்யங்கவித்யைபிற்படியே பூர்ணமாகக்கண்டேன் (கண்டுதொழுதேன்) கண்டால் செய்யும் தொழில். (காலலைப்ப) சிறு திவலை துடைகுத்த. (செங்கண்) வாத்ஸல்யம் தோற்றுகை. (அட லோதம்) நெருங்கின ஓதம். (கசு)

அரு.—பதினாறும்பாட்டு.—இழந்த நாளைக்கு துஃகப்பட்ட பேருண் டோவென்ன; அருளிச்செய்கிறார் (யஸ்த்ராமம்-யச்சராமம்இத்யாதி.)

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (பண்டித்யாதி.) கீழிற் பாட்டின் தாத்பர்யத்தை யுட்கொண்டு (உபாயாந்தரம் தேவதாந்த

---

* ஒருநாளையிழவு - ஒருநாள் சேவையிழக்கை

ரம்) என்கிறது. அஞ்சுகைக்கு ஹேதுவேதென்ன; அருளிச்செய்கிருர். (வருங்காலமித்யாதி.) காலத்தையுந் தன்னையும் பார்த்தால் பயமநுவர்த்திக்கு மென்கிருர்.) (காமேஷ்வபிவ - காலேஷ்வபிச) என்று. (கசு)

அடியும் படி கடப்பத் தோள் திசைமேற் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர் - வடியுகிரா
லீர்ந்தான் இரணியனதாகம், இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்தநான்று. (கஎ)

ப-உ. வடி - கூர்மையான, உகிரால்-நகத்தினல், இரணியனது-ஹிரண்யகசிபுவின், ஆகம் - உடலை, ஈர்ந்தான் - பிளந்தவனும், இரு-பெரிய, சிறை - பக்ஷத்தையுடைய, புள் - பக்ஷியான பெரியதிருவடியை, ஊர்ந்தான் - நடத்துகிறவன், உலகளந்த நான்று - ஜகத்தை அளந்த காலத்திலே, அடி - திருப்பாதம், படி - பூமியை, கடப்ப - அளக்க, தோள் - புஜம், திசைமேல் - திக்குக்களுக்குமேலே, செல்ல - போக, முடியும் - கிரீடமும், விசும்பு - ஆகாசத்தை, அளந்தது- ஆக்ரமித்தது; என்பர் - என்றுசொல்லுவர்கள்.

வ்யா.—அவ.—பதினேழாம்பாட்டு,—ஸம்ஸாரத்தில் நினைத்தபடியெல்லாம் அநுபவிக்கப்போமோ? பரமபதத்திலே போனலன்றே அநுபவிக்கலாவதென்ன; இங்கே வெள்ளமிட்டவன்று தான் பெற்றேனே வென்கிருர்.

(அடியும்படி கடப்ப) "கோலமாமென் சென்னிக்கு" என்றும் திருவடிகளைக்கொண்டு காடுமோடையு மளப்ப. (தோள்திசைமேல் செல்ல) திருத்தோள்கள் திக்குக்களிலே செல்ல. (முடியு மித்யாதி) திருவபிஷேகமும் அண்டபித்தியளவும் நிமிர்ந்தது. (வடியித்யாதி) கூரிய உகிராலே ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்தான். (இருஞ்சிறையித்யாதி) பெரியதிருவடி முதுகிலிருக்கப்பெருத ம்ருதுவான திருவடிகளைக் கொண்டு உலகளந்தவன்று. அடியும்படி கடப்பத்தோள் திசைமேற்செல்ல முடியும் விசும்பளந்ததென்கிருர். நான் கேட்டார் வாய் கேட்டுப்போமத்தனை யென்கிருர்.

அவ.—பழுதென்னென்னில்; இன்று கதைகேட்க விருந்தேனென்பாரிறே.

(அடியும்படி கடப்ப) சென்று காணவேண்டும் திருவடிகள் தானே வந்து பூமியை யகப்படுத்திக்கொண்டது. தோள் திக்குக்

களை யெல்லை கண்டது. முடியும் அபரிச்சேத்யமான ஆகாசத்தை அளவுபடுத்திற்ற. நின்றார் நின்றபடியே வெற்றிகொள்ளுமாப்போலே. (வடியித்யாதி) ஓரிடத்திலே விரோதிநிரஸநம்பண்ணி ஓரிடத்திலே சென்று முகம்காட்டு மளவன்றியே ஜகத்துக்கெல்லாம் ஏககாலத்திலே உதவினவிது. (கஎ)

அரு.—பதினேழாம்பாட்டு.—"என்பரே" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (நான்கேட்டார் வாயித்யாதி.)

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (பழுதென்னென்னி லித்யாதி.) என்பாரிறே - என்கிறாரிறே. இருஞ்சிறைப்புள்ளூருகை- கஜேந்த்ராழ்வானுக்கு. (கஎ)

நான்ற முலைத்தலை நஞ்சுண்டு, உறி வெண்ணெய்
தோன்ற வுண்டான் வென்றி சூழ் களிற்றை-யூன்றிப்,
பொருதுடைவு கண்டானும் புள்ளின் வாய் கீண்டானும்
மருதிடைபோய் மண்ணளந்தமால். (கஅ)

ப-உ. நான்ற - தொங்குகிற, முலைத்தலை - ஸ்தநத்திலிருக்கிற, நஞ்சு-விஷத்தை, உண்டு - அமுதுசெய்து, உறி - தூக்கில்வைத்த, வெண்ணெய்-உருக்காத நெய்யை, தோன்ற - ப்ரசித்தமாய், உண்டான் - அமுதுசெய்தருளினவனாய், வென்றி - ஜயத்தையுடைய, சூழ்-(சத்ருக்களை) ஆக்ரமிக்கிற, களிற்றை-குவலயாபீடமென்கிற யானையை, ஊன்றி - உறைக்கும்படி, பொருது - யுத்தம்செய்து, உடைவு-நாசத்தை, கண்டானும் - செய்தவனும், புள்ளின் - பக்ஷியான கொக்கினுடைய, வாய் - உதடை, கீண்டானும் - பிளந்தவனும், மருது - அர்ஜுனமரங்களுடைய, இடை - நடுவில், போய் - சென்று, மண்- பூமியை, அளந்த - (திருவடிகளாலே) ஆக்ரமித்த, மால் - ஸர்வாதிகன் கிடீர்.

வ்யா—அவ—பதினெட்டாம்பாட்டு—திருவுலகளந்ததிலேயோ இழந்தது, அத்தோடொக்க வாயாதே திண்டிப் பரிமாறின க்ருஷ்ணாவதாரத்தி லுமிழந்திலேனோ வென்கிறார்.

(நான்றவித்யாதி.) இவன் தன்னுடைய வாயை முலையிலே வைக்க ஸ்வரூபாபத்தியைப் பெற்றாள் அவள். ஆரேனுமாக இவனை ஸ்பர்சித்தார்க்கு ஸ்வரூபாபத்திதப்பாது - எல்லாருக்கும் வந்தேறிபோம். "த்வேஷாதபி ஹி கோவிந்தம் ... - ஸ்வேநரூபேணாபிநிஷ்

பத்யதே'' என்கிறபடியே. (உறிவெண்ணெய் தோன்ற வுண்டான்) உறியிலே * சேமித்து வைத்த வெண்ணெயைக்கண்டு எட்டியுண்டு. களவுதோற்றும்படி யுண்டான். (வென்றி சூழ்களிற்றை) வென்றி மிக்ககளிற்றை. வெற்றியையுடைத்தாய் இவனைச்சூழ்க்க நினைத்த களிற்றையென்றுமாம். (ஊன்றி) ''ஆனைப்பூசல்'' என்றிராதேகிட்டி, ''மருப்பொசித்தபாகன்'' என்னும்படியே. (பொருதுடைவுகண்டானும்)† பசலைக்கலம்போலே உடையும்படிகண்டவன். ''இடைவுகண்டான்'' என்றுமாம். (புள்ளினித்யாதி) ''மண்ணளந்தமால்'' என்று-திருவுலகளந்தருளினநீர்மை பின்னாட்டுகிறது. க்ருஷ்ணாவதாரத்துக்கும் திருவுலகளந்தருளினவிடத்துக்கும்அழகும் மௌக்த்யமும்ஆச்ரிதபக்ஷபாதமு முள்ளிட்டவை இரண்டிடத்துக்கு மொத்திருக்கும்.

(நான்றவித்யாதி.) தன்க்ருத்ரிமமானபால்போனவாறே அந்த முலை பையானபடி. (தோன்றவுண்டான்.) சிசுபாலாதிகளும் ஏசும்படி. (வென்றியித்யாதி.) வெற்றியையும் சூழ்ச்சியையு முடைய. (ஊன்றி) தரித்துநின்று. (உடைவு) கருவிப்பைபோலே யாக்கினபடி. (மண்ணளந்தமால்) பின்னாட்டினபடி. (௧௮)

அரு—.பதினெட்டாம் பாட்டு.—ஸ்வரூபாபத்தி-சாடு ; தாய் வடிவு போய் பேய்வடிவானாள்-அர்தம் ; மோக்ஷம் பெற்றாள் என்று-த்வனி. இவளுக்கு மோக்ஷங் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார். (ஆரேனுமாகவித்யாதி.) உறிவெண்ணெய், தோன்ற-கண்ணுக்குத் தோன்றவென்னுதல்; களவுதோன்ற வென்னுதல். இடைவு - இடைந்து போம்படி. கருவிப்பை-ஆயுதமிருக்கிற வுறை. ஆயுதம் வாங்கினால் பைசுருங்குமாப்போலே கொம்பைப்பிடுங்கவே ஆனைசுருங்கினபடி.()

மாலும் கருங்கடலே என்னோற்றாய், வையகமுண்
டாலினிலைத் துயின்ற வாழியான் - கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள், என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று. (௧௯)

ப-உ. வையகம்-ஜகத்தை, உண்டு-அமுதுசெய்து, ஆலினிலை-வடத்தின்தளிரிலே, துயின்ற - கண்வளர்ந்தருளுகிறவனுமாய், ஆழியான் - சக்ரத்தையுடையனுமாய், கோல - அழகிய, கரு - கறுத்த, மேனி - விக்ரஹத்தையும், செம்-சிவந்த, கண்- நேத்ரத்தையுமுடையனுமாய், மால் - (ஆச்ரித) வ்யாமோஹத்தை யுடையனுமானவன்,

* சேமித்துவைத்த - அடக்கிவைத்த.
† பசலைக்கலம் - பச்சைமட்கலம்,

கண்படையுள் - பள்ளிகொண்ட விடத்தில், என்றும் - எக்காலத்தி லும், திருமேனி - அவன்விக்ரஹத்தை, நீ - நீ, தீண்டப்பெற்று - அ நுபவிக்கப் பெற்று, மாலும் - மயங்குகிற, கருங்கடலே - கறுத்த ஸமுத்ரமே, என் - என்ன, நோற்றாய் - நோன்பை அநுஷ்டித்தாய்.

வ்யா.—அவ.—பத்தொன்பதாம் பாட்டு.—(மாலும்) அவதார மொழியப் பெற்றாருமுண்டு கிடீரென்கிறார்.

(மாலும்.) மதுபானமத்தரைப்போலே பிச்சேறுகின்ற. (கரும் கடலே) பெற்றபேறு உன்னுடம்பே கோட்சொல்லுகிறதில்லையோ. இல்லையாகில் உடம்பு வெளுத்திராதோ. (என்நோற்றாய்) ஆசை யைவிட்டு நானும் நோற்கும்படிசொல்லாய். (வையகமித்யாதி) சிறு வயிற்றிலே பூமி யெல்லாவற்றையு மடக்கிப்பவனான ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருமேனியைத் தீண்டப் பெற்று.

(மாலுங் கருங்கடலே) நான் தீண்டப்பெறாதே மயங்கா நின் றேன்; நீ தீண்டப்பெற்று பரவசமாகா நின்றாய் - பூமியைப்போலே ஒருகாலன்றியே நித்யஸம்ச்லேஷம் பெறுவதேகடல்! என்று கொண் டாடுகிறார்.

(மாலும்) மதுபான மத்தரைப்போலே பிச்சேறுகிற கடலே. (கருங்கடலே) உடம்பு வெளுக்கவேண்டாவே. (ஆழியான்) ஏகார்ண வத்திலும், திருப்பாற் கடலிலும் துயின்றதாதல். * ஆசிலேகையை வைத்து ப்ரளயத்தை இருதுண்டமாக விடுவேனென்றிருக்கு மென் றுமாம். பிராட்டிமாரோடு † ஊடினபோதும் உனக்குப் பிரிவில்லை. கடலும் எம்பெருமானும், ஸ்ரீபரதாழ்வானும் பெருமாளும்போலே நிறம். ப்ரஹ்ம ப்ராப்திபலமாய், கைங்கர்ய மாநுஷங்கிக மானாற் போலே, திருமேனிதீண்டுகை ப்ராப்யம்; கைங்கர்யம், அவகாதத்தில் ஸ்வேதம்போலே; உபாயத்திலும் ஸ்வரூபஜ்ஞானம்பிறந்தால் வ்யவ ஸாயம் ஆநுஷங்கிகம்.

அரு.—பத்தொன்பதாம்பாட்டு.—அவதரித்தவிடத்திலே யசோதா திகள் மடியிலேவைத்து ஸ்பர்சிக்கப்பெற்றார்கள். ஆசரியாதேயிரு க்க க்ஷீராப்திமடியிலேவைத்து ஸ்பர்சிக்கப்பெற்ற தென்றபடி.

கீழ்ப்பாட்டிலே, "மண்ணளந்த" என்றதைப்பற்ற மேலுக்கவ தாரிகை யருளிச்செய்கிறார். (பூமியைப்போலே யித்யாதி.) "என்

---

* ஆசிலே - ஆயுதத்தின்பிடியிலே.
† ஊடினபோது - பிரிந்தபோது.

றும் - நீ தீண்டப்பெற்று" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (பிராட்டிமாரோடித்யாதி.) "கருங்கடல், கோலக்கருமேனி" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (கடலும் எம்பெருமானு மித்யாதி.) "தீண்டப்பெற்று" என்கைக்கு, தீண்டுகை பலமோ, கைங்கர்யமன்றோ பலமென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மப்ராப்தீத்யாதி.) ப்ரஸங்காத் அருளிச்செய்கிறார் (உபாயத்திலுமித்யாதி.) ஜ்ஞாநம்-ப்ரதாநம். கண்படையுள்-கண்வளர்ந்தருளுகிற அவஸ்தையிலே. (௧௯)

பெற்றார் தளை கழலப் பேர்ந்தோர் குறளுருவாய்ச்
செற்றார் படிகடந்த செங்கண்மால் - நற்றா
மரைமலர் சேவடியை வானவர்கைகூப்பி
நிரைமலர்கொண் டேத்துவரால் நின்று. (௨௦)

ப-உ. பெற்றார் - தாய்தந்தைகளுடைய, தளை-விலங்கு, கழல-நழுவும்படி, பேர்ந்து - (பரமபதத்தினின்றும்) கிளம்பி, (க்ருஷ்ணனாயவதரித்து) ஓர் - அத்விதீயமான, குறளுருவாய்-வாமநவேஷத்தையுடையனாய், செற்றார் - சத்ருவான மஹாபலியினுடைய, படி - பூமியை, கடந்த - அளந்தவனாய், செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடையனான, மால் - (ஆஸ்ரித) வ்யாமோஹத்தை யுடையவனுடைய, நல் - அழகிய, தாமரைமலர் - கமலம்போலிருக்கிற, சே - சிவந்த, அடியை - திருத்தாள்களை, வானவர் - தேவர்கள், கைகூப்பி - அஞ்சலிபண்ணி, நின்று - (கூட்டமாய்) இருந்து, நிரை - (இதழ்) நிறைந்த, மலர்கொண்டு - பூக்களைக்கொண்டு, ஏத்துவர்-ஸ்தோத்ரம்பண்ணுவர்கள். ஆல் - ஆச்சர்யம்.

வ்யா.—அவ.—இருபகாம்பாட்டு.—"பெற்றார் தளைகழல" என்கிறவித்தால் - க்ருஷ்ணாவதாரம் சொல்லவுமாம்; வாமநாவதாரந் தன்னையே சொல்லுகிறதாகவுமாம்.

(பெற்றார் தளைகழலப்பேர்ந்து) பிறந்து - என்னுமாம். ஆரேனுமாக ஸ்பர்சிக்கப் பெற்றார்க்குத் தளைகழல. (பேர்ந்தோர் குறளுருவாய்ச் செற்றார்படிகடந்த) இந்த்ரனுக் கன்றாகாதே சத்ரு தனக்காகாதே. "த்விஷதந்நம் நபோக்தவ்யம் - த்விஷதந்நம் நபோக்தவ்யம்" "யஸ்த்வாம்த்வேஷ்டி ஸமாம்த்வேஷ்டி-யஸ்த்வாந்த்வேஷ்டி ஸமாந்த்வேஷ்டி" (செற்றாரித்யாதி) மஹாபலி, "என்னது" என்றபிமாநித்த பூமியையளந்த ஸர்வேச்வரன். (நல்தாமரைமலர் சேவடியை) செவ்வி மாறாதே யிருந்துள்ள திருவடிகளை. (வானவர்கைகூப்பி, நின்று

நிரைமலர்கொண்டேத்துவர் ஆல்) திரளநின்று பூவைக்கொண்டேத்துவ ரென்னவுமாம்; தொடுத்தமாலை கொண்டேத்துவ ரென்னவுமாம்.

அவ.—படுக்கையாய்க்கிடந்த கடலுக்குத் தன்னைக் கொடுக்கச் சொல்லவேணுமோ தேவதாந்தரங்களுக்குத் தன்னைக் கொடாநிற்க வென்கிறார்.

(பெற்றார்) நிதியெடுக்கப்பெற்று ரென்னுமாப்போலே. "என் பிள்ளை" என்று அபிமானித்தால் தளை கழலாநின்றால், "அடியோம்" என்றார் தளை கழலச்சொல்லவேணுமோ. (பேர்ந்து) ஸ்ரீ வைகுண்டத்தி னின்று மென்னவுமாம். திருப்பாற்கடல் நின்றும் வந்தானாகவுமாம். (ஓர் குறள்) நாட்டில் வாமநர்கள் இவன் வளர்ந்தருளின விடத்தோடொக்கும். (செற்றார்) தன்னைச் செற்றார். "ஜீவ ஹ்ராணாஹி - மமப்ராணாஹி". (படிகடந்த) இக்காடுமோடையு மளந்த. பிறரது பெற்றாப்போலே யிருப்பதே. (செங்கண்) அபிபக்ஷிதம் முடிக்கப் பெறுகை. (மால்) செய்தது போராதென்றிருக்கை. (நல் தாமரை) செவ்விக்கும், அழகுக்கும், குளிர்த்திக்கும் ஸத்ருசமான தாமரை தேடுகிறார். (வானவர்) எட்டாதபதம் பரணிட்டுக்கொண்டிருக்கிற. (கைகூப்பி) "சுவஸாஃப்ரதிவேதிரே - அவசாஃப்ரதிபேதிரே". (நிரைமலர்) ஏற்கவே * தொடையொத்ததுளபம் கொண்டிருந்தார்களோ. (ஏத்துவரால்) இப்படி பிறந்தார் பெறுதொழிவதே. (நின்று) * கிண்ணகத் தெதிர்த்து நின்று. (௨௦)

அரு.—இருபதாம்பாட்டு.—க்ருஷ்ண பக்ஷத்திலே (பிறந்தென்றுமாம்) என்கிறது. வாமநபக்ஷத்தை யருளிச்செய்கிறார் (ஆரேனுமாக வித்யாதி.) (ஸ்பர்சிக்கப்பெற்றார் தளைகழல) ஸம்ஸார ஸம்பந்தம் கழல என்றபடி. (நிரைமலர்) நிரை, வானவருக்காதல், மலருக்காதல் விசேஷணம். ஆல் - அசை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (படுக்கையாயித்யாதி.) "வானவர்" என்கையாலே-தேவதாந்தரம். (இப்படி) சாடு. இப்படி-இப்படி இவர்களைப்போலே இந்தபூமியிலே பிறந்தார் அவனை ஏத்தப் பெறுதொழிவதே! என்று விஷாதம். ஆல்-விஷாதஸூசகம். (௨௦)

நின்று நில மங்கை நீரேற்று மூவடியால்
சென்று திசை யளந்த செங்கண்மாற்கு - என்றும்

---

* கிண்ணகத்து - ப்ரவாஹத்தில்.

படை யாழி புள்ளூர்தி பாம்பணையான் பாதம்
அடையாழி நெஞ்சே யறி. (உக)

ப-உ. சென்று - கிட்டி, நின்று - நின்று, அம் - அழகிய, கை - கையிலே, நிலம் - பூமியை, நீரேற்று - (தான) ஜலத்தைப்பிடித்து வாங்கிககொண்டு, மூவடியால் - மூன்றுபாதங்களாலே, திசை - திக்குக் களோடுகூடின ஜகத்தை, அளந்த - ஆக்ரமித்துக் கொண்டவனாய், செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடையனுமான, மாற்கு - ஸ்வாமிக்கு, என்றும் - எக்காலத்திலும், படை - ஆயுதம், ஆழி - சக்ரம்; ஊர்தி - வாஹநம், புள் - பெரியதிருவடி; பாம்பு - திருவநந் தாழ்வானை, அணையான் - படுக்கையாகவுடையவனுடைய, பாதம் - திருவடிகளை, அடை - ஆச்ரயி. ஆழி - கம்பீர ஸ்வபாவத்தையுடைய, நெஞ்சே - மநஸ்ஸே, அறி - நன்றாய்த் தெரிந்துகொள்.

வ்யா.—அவ.—இருபத்தோராம்பாட்டு.—(நின்று) ஸர்வேச்வரனவன், அர்த்தித்வம் தோற்றும்படிக் கிடாகநின்று. (நிலம் அங்கைநீரேற்று) கொடுத்துவளர்ந்த அழகியகையிலே பூமியை நீரேற்று. (மூவடியித்யாதி) திக்குக்கள்தோறும் சென்றளந்து, அத்தாலே அலப்யலாபம்பெற்றானா யிருக்கிறவனுக்கு. (என்றுமித்யாதி) எல்லாவற்றையுமுடையவன் கிடீர் இரந்தான். கையிலே திருவாழியைப் பேராதேபிடிக்கவல்லவனும், திருவடிமுதுகிலே * நற்றரிக்க இருக்க வல்லவனும்; திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே சாயவல்லவனும் ஸர்வேச்வர னாகிறான். (பாதமடையாழி நெஞ்சேயறி) மஹாபலியைப்போலே யாகாதே, அவன் திருவடிகளையடை. (ஆழிநெஞ்சேயறி) அளவுடைய நெஞ்சேயறி. † ஓலக்கவார்த்தை யென்றிராதே இத்தை புத்திபண்ணியிரு.

அவ.—இரண்டுபாட்டாலும் ஸர்வேச்வரன் கிடீர் ஆச்ரிதார்த்தமாக இப்படி எளியனானானென்று சொல்லிற்றாய் ஈடுபடுகிறார்.

(நின்றித்யாதி) பிராட்டியை ஸ்ரீஜநகராஜன் நீர்வார்க்கப் பெற்றாற்போலே சென்று நின்றென்னுதல். (சென்று.) நடந்தபடிசென்றளந்தென்னுதல், (செங்கண்மால்) தந்தாமது பெற்றாலும் இனியராகவேணுமோ. (என்றும்) பரிபூர்ணன் கிடீர். (பாதமடை ஆழி நெஞ்சே) என்னை ஓதுவிக்கவல்லநீ, என்செல்லாமையறி. அல்லாத

---

* நற்றரிக்க - நன்றாய் தங்கும்படி.

† ஓலக்கவார்த்தை-ஸபையில் டம்பமாகச்சொல்லும் வார்த்தை.

வார்த்தைபோலல்ல; இத்தை புத்திபண்ணு. [சீரால்பிறந்து] அன்று அறுபதினுயிரம் ஸம்வத்ஸரம் தபஸ்ஸு பண்ணினவன் வயிற்றிலே, "விதாம்ரோவயாஸ - பிதரம்ரோசயாமாஸ" என்று-ஆசைப்படவந்து பிறக்கை. [சிறப்பால் வளராது] வெண்ணெயையும் பெண்களையும் களவுகண்டு மூலையடியே வளருகை. [பேர்வாமனுகாக்கால்] நாராயணனுனுலாகாதோ. [பேராளா] ஐச்வர்யத்திலே இளைப்பாறவேணுமோ. [மார்வித்யாதி] பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டபூமி. (உக)

அரு—இருபத்தோராம் பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறுர். (இரண்டுபாட்டாலுமித்யாதி)இங்கு "நிலமங்கை"என்று பூமிப்பிராட்டியாக்கி அருளிச்செய்கிறுர். (பிராட்டியையித்யாதி) யஜ்ஞவாடத்தளவும் சென்றுநின்றென்னுதல்; நின்றவிடத்திலே நின்று திசையெங்கும் சென்றளந்தென்னுதல். தமக்கு உபதேசிக்கிற நெஞ்சுக்குச் சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறுர். (என் செல்லாமை யென்று) இப்படி வாமநனிடத்திலே ஈடுபெட்டபேருண்டோ வென்ன; அருளிச்செய்கிறுர். (சீரால் பிறந்தித்யாதி) (இளைப்பாற வேணும்) நீர்மையில் இளைப்பாறப் போகாமையாலே மேன்மையிலே இளைப்பாற வேணுமென்றபடி. உன்கையிலே பன்னிரண்டும் பட்ட பூமி. இப்படி வாமநனுகாதபோது ஏற்கவருமையோ வென்றபடி. ()

அறியு முலகெல்லாம் யானேயு மல்லேன்
பொறி கொள் சிறை யுவணமூர்ந்தாய் - வெறிகமழும்
காம்பேய் மென் தோளி கடைவெண்ணெ யுண்டாயைத்
தாம்பே கொண்டார்த்த தழும்பு. (உஉ)

ப-உ. பொறிகொள்-நாநாவர்ணமான, சிறை - பக்ஷத்தையுடைய, உவணம் - கருடனை, ஊர்ந்தாய்-நடத்துமவனுய், வெறி-பரிமளம், கமழும்-வீசுகிற, காம்பு - மூங்கிலோடு, ஏய் - ஸமாநமான, மெல்-ம்ருதுவான, தோளி - புஜத்தையுடைய (யசோதை), கடை - மதித்த, வெண்ணெய் - உருக்காத நெய்யை, உண்டாயை - அமுதுசெய்த உன்னை, தாம்பே - கயிற்றையே, கொண்டு - எடுத்து, ஆர்த்த - இணைத்துக்கட்டுகையாலுண்டான், தழும்பு - வ்ரணம், யானேயுமல்லேன் - நானொருவனே யல்லேன்; உலகெல்லாம் - நாடடங்க, அறியும் - அறிந்திருக்கும். (உஉ)

வ்யா.—அவ.—இருபத்திரண்டாம் பாட்டு.—(அறியும்) ஆச்ரி தார்த்தமாக எளியனானென்னும்படி நீரறிந்தபடி. யெங்ஙனே யென்னில்; (உலகெல்லாம் அறியும் யானேயுமல்லேன்) சிசுபாலன் கூடவறியானோ. (பொறியித்யாதி) பொறிகொண்டிருந்துள்ள சிற கையுடைத்தான திருவடியை யூர்ந்தவுன்னை. (வெறிகமழும்) பிள்ளை முகம் வாடவொண்ணாதென்று எப்போதும் ஒப்பித்தபடியே இருக் கையாலே பரிமளம் கமழாநின்ற. (சாம்பு ஏய் மென்தோளி) மூங் கிலோடொத்து ம்ருதுவான தோளையுடையவள். (கடைவெண்ணெ யுண்டாயை) அவள், மார்த்தவம் பாராதே கடைந்த வெண்ணெயுண் டாயை. (தாம்பித்யாதி) கைக்கெட்டிற்றொருதாம்பாலே கட்டின தழும்பு. (அறியுமுலகெல்லாம்) கயிற்றைநீட்டவொண்ணாது; உரலைச் சிறுக்கவொண்ணாது; இவனுடம்பிலே இடங்காணுமித்தனையிறே.

அவ.—ஆச்ரித பக்ஷபாதம்போலே ஆச்ரிதபவ்யதையும்.

(உலகெல்லாம்) சிசுபாலனையிட்டுச் சொல்லவேணுமோ. (யா னேயித்யாதி) அநுக்ரஹமுடைய நானேயல்லேன். (பொறியித் யாதி) நிரபேக்ஷனாய் அர்த்திக்கப்பிறந்தநீ. (வெறி) ஸ்வாபாவிகமென் னுதல்; பிள்ளை * முசியாமைக்கென்னுதல். (காம்பு)பசுமையும், திரட் சியும், செவ்வையும். (மென்தோளிகடை வெண்ணெயித்யாதி) இரு வர்க்கு தாரகம்; அபலைகட்டிலே கட்டுண்பதே. (தாம்பேகொண்டு) குறுங்கயிற்றைக்கொண்டு. (உஉ)

அரு.—இருபத்திரண்டாம்பாட்டு.—ஆர்த்த-ஆர்க்கப்பட்ட என் றர்த்தமாக்கி யருளிச்செய்கிறார். (கயிற்றைநீட்ட வித்யாதி.)

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார். (ஆஸ்ரிதபக்ஷபாத மித் யாதி) இட்டு - அவன்மாத்ரமல்ல வென்றபடி. இருவர்க்கும் - தாய்க்கும் மகனுக்கும். அவளுக்கு ஜீவநஹேது, இவனுக்கு ஆஸ்ரி தஸ்பர்சமென்றபடி. (உஉ)

தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவா மங்கை
தழும்பிருந்த தாள்சகடம் சாடி - தழும்பிருந்த
பூங்கோதை யாள்வெருவப் பொன்பெயரோன் மார்பிட [ந்த
வீங்கோத வண்ணர் விரல். (உ௩)

ப-உ.—அம்-அழகிய, கை-கரமானது. சார்ங்கம் - சார்ங்கமென் கிற தநுஸ்ஸினுடைய, நாண்-நாணியினால், தோய்ந்த - படிந்த, தழு

* முசியாமைக்கு - இளையாமைக்கு.

ம்பு - வ்ரணத்தை, இருந்தவாம் - உடைத்தாயிருந்தது, தாள் - திருவடி, சகடம் - சகடாஸுரனை, சாடி - உதைத்து, (அத்தாலே) தழும்பிருந்த - வ்ரணத்தை யுடைத்தா யிருந்தது, வீங்கு - வ்ருத்தியடைந்த, ஓத - அலைகளையுடைய ஸமுத்ரம்போலுள்ள, வண்ணர்- திருமேனியையுடையவருடைய, விரல் -அங்குளிகள், பூம் - அழகிய, கோதையாள் - மயிர்முடியையுடைய (பிராட்டி), வெருவ - நடுங்கும்படி, பொன்பெயரோன் - ஹிரண்யனுடைய, மார்வு - வக்ஷஸ்ஸை, இடந்த - பிளந்ததாலுண்டான, தழும்பிருந்த - வ்ரணத்தையுடைத்தாயிருந்தன. (உ௩)

வ்யா.—அவ.—இருபத்துமூன்றாம்பாட்டு.—ஒரு செயலைக்கொண்டு சொல்லும்படி யென்னென்னில்; ஒருசெயலிலேயோ ஒரு அவதாரத்திலேயோ தழும்பு சுமந்ததென்கிறார்.

(தழும்பிருந்தவித்யாதி) பிராட்டியுங்கூடக் கூசி ஸ்பர்சிக்கவேண்டும் அழகியகை, சார்ங்கநாண் தோய்ந்த தழும்பிருந்தவாம். ஜ்யாகிணத்தாலே கர்க்கசமாயிருக்கும். (தாள்சகடம் சாடித்தழும்பிருந்த பூங்கோதையாள் வெருவப்பொன் பெயரோன் மார்விடந்த) "அடலரியாய்ப்பெருகினனே" என்கிறபடியே. (விரல்தழும்பிருந்த) கால்தழும்பு, கைதழும்பு, அவாந்தரா வயவமான விரல் தழும்பு; ஒன்றேயோ தழும்பாயிற் றென்கிறார்.

(பூங்கோதையாள் வெருவ) "ஆச்ரிதருடைய கார்யம்" என்றால், உகக்குமவளும் பயப்படும்படி உடம்படையத்தழும்பு. (சாடி) அவன் * மூரிநிமிர்ந்தான். இவர்க்குக்குவாலாயிருக்கிறபடி. (பூங்கோதையாள் வெருவ) பொறுதென்றிருக்குமவள். வீரவாசியறியுமவள். ருஷிவேஷத்தோடே திரியவேணுமென்னுமவள். (வீங்கோதவண்ணர் விரல்) வளர்த்தியும் குளிர்த்தியும் [மஹாவிஷ்ணும்] விக்ரஹவ்யாப்தியாயிற்று. (உ௩)

அரு.—இருபத்துமூன்றாம்பாட்டு.—மேலுக்குத்தாத்பர்ய மருளிச்செய்கிறார். (பூங்கோதையா ளித்யாதி) பூங்கோதையாளை ராமாவதாரத்தோடே சேர்த்து அருளிச்செய்கிறார். (பொறுதென்றித்யாதி) பொறுது என்று - ஆஶ்ரிதரக்ஷணம் போராதென்னவேணுமென்றிருக்குமவ ளென்றபடி. இப்படிப்பட்டவளும் வெருவும்படி சார்ங்கநாண் தோய்ந்த என்று இங்கும் கூட்டி யோஜிப்பது.

---

* மூரி நிமிர்ந்தான் - திமிர் போம்படி நிமிர்ந்தான்.

விரலொடு வாய் தோய்ந்த வெண்ணெய்கண்டு, ஆய்ச்சி
உரலோ டுறப்பிணித்த நான்று - குரலோவா
தேங்கி நினைந்தயலார் காண விருந்திலையே
ஓங்கோத வண்ணா வுரை. (உச)

ப-உ, விரலொடு-விரல்களாலே எடுத்து, வாய்தோய்ந்த-திருப்பவளத்தில்வைத்த, வெண்ணெய் - உருக்காதநெய்யை, கண்டு-பார்த்து, ஆய்ச்சி - இடைச்சி, உலரோடு-உலூகலத்தோடு, உற-இறுக்கி, பிணித்தநான்று - கட்டினவன்று, குரல் - கண்டத்வநி, ஓவாது - ஓயாமல், ஏங்கி - அழுது, நினைந்து - (வெண்ணெயை) த்யாநித்துக் கொண்டு, அயலார் - பிறர், காண - பார்க்கும்படி, இருந்திலையே - இருக்கவில்லையோ? ஓங்கு - வ்ருத்தியடைந்திருக்கிற, ஓத - கடலோடுஸமாநமான, வண்ணா - வடிவையுடையவனே, உரை - சொல்லு.

வ்யா.—இருபத்துநாலாம்பாட்டு.— (விரலித்யாதி) விரல்வாயிலே தோய்ந்தவளவிலே. "'வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு" என்றும் சொல்லாநின்றது; "விரலொடு வாய்தோய்ந்த" என்றும் சொல்லாநின்றது; இவையெங்ஙனே சேரும்படி" என்று பிள்ளை திருநறையூ ரரையர் பட்டரைக்கேட்க; "இவனுக்கு என்றுந் திருப்பணி யிதுவன்றோ, ஒருநாள் அங்ஙனுமாகிறது, ஒருநாள் இங்ஙனுமாகிறது" என்றருளிச்செய்தார், "வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்" என்கிறபடியே. (உரலித்யாதி) உரலென்றும் அவனென்றும் பிரித்துக்காணப் போகாதபடி கட்டினவன்று. (குரலோவாதேங்கி) அழப்புக்கத்வநிமாறுதே; ஏங்கின ஏக்கம் கீழ்விழாதே. (நினைந்து) இப்படி அழாநிற்கச் செய்தேயும் பெரிய திருப்பணிகளாயிற்று நினைப்பது. வெண்ணெய்களவுகாணும்படி நினைந்து. (அயலார்காண இருந்திலையே) ஐந்துலக்ஷங் குடியில் பெண்களில் காணாதாருண்டோ. இவனாலே நெஞ்சு புண்பட்டாரெல்லாம் இவன்பட்டபாடுகாண வருவர்களிறே. * "ஸுத்ருக்தை:வேணுவாலைவ ஸிலைவெவலவஸ்தே - அத்யுத்கடை: புண்யபாபை ரிஹைவபலமச்நுதே"யிறே. (ஓங்கோதவண்ணாவுரை) இவனைக்கட்டிவைத்தது ஒருகடலைத் தேக்கிவைத்தாற்போலே காணும். (உரை) இவ்வடிவு காணவேணும்; இவ்வடிவோடே கூட வார்த்தையும் கேட்கவேணும். பொய்யாகில் உரலோடேகூட இழுத்துக்கொண்டு புறப்படுவேனே.

(விரலித்யாதி)வயிறுவளர்த்து அகப்படப்பெற்றோமோ. * மிடற்றுக்குக் கீழிழியப்பெற்றோமோ. (உரலொடு) உரலோடு தன்னோடு வாசியில்லாமை. (குரலோவாது) அழப்புக்கவாறே, "இக்கோலுண்டு பார்" என்ன; ஏங்குகின்றான். (நினைந்து) வெண்ணெயை நினைத்திருக்கை. (அயலார்காண) பஞ்சலக்ஷம்குடியில் பெண்களுடைய; அவர்களை பந்தித்துத்தான் அகப்படாதிருக்கும்; அவர்கள் இவன் அகப்படவல்லனே என்றிருப்பர்கள். (இருந்திலையே) ராமசரத்தை ராவணன் மறக்கில் மறக்கலாம். (ஓங்கோதவண்ணா) நெருக்குண்கையாலே வந்தபூர்த்தி. (உரை) "நமோ நமோவத - நமேமோகம்" என்னும் நீசொல்லிக்காண். அவாப்த ஸமஸ்த்தகாமன் குறைபாயழுவதே; ஸர்வசக்தி மிடுக்கின்றி யொழிவதே; ஸர்வஜ்ஞன்புரையறுவதே. ()

அரு.—இருபத்துநாலாம்பாட்டு.—"இவை மௌக்த்ய வைதக்த்யங்கள் சேரும்படி" என்று அரையர். விரலாலே தொட்டுவாய் தோய்ந்தானே வென்ன அருளிச்செய்கிறார். (வைகலு மித்யாதி) அவ்விடத்துக்கு இதுவுமொரு அர்த்தம். காணாதே துஃகப்பட்டவர்கள் காணக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார். (சுதூ—தூடிைெ:— அத்யுக்கடைः இத்யாதி) புண்யபலம். நாளாகை. "உரை" என்றதால் பலித்ததை யருளிச்செய்கிறார். (பொய்யாகி வித்யாதி) பொய்யென்றாயாகில் கையும் களவுமாகக்கட்டுண்டத்தை யவன் நினைத்திருக்குமோ வென்ன ; அருளிச்செய்கிறார். (ராமசரத்தை யித்யாதி) ஆஸ்ரிதவிஷயத்தில் உகந்து கட்டுண்கையாலே மறவாமல் நினைத்திருக்குமென்றபடி. புரையறுகை - அவிழ்க்கைக்கு உபாய மறியாதிருக்கை. (உச)

உரைமேற் கொண்டென் னுள்ள மோவாது, எப்போதும்
வரைமேல் மரதகமே போல - திரைமேல்
கிடந்தானைக் கீண்டானைக், கேழலாய்ப் பூமி
யிடந்தானை யேத்தி யெழும். (உரு)

ப-உ. வரைமேல்-பர்வதத்தின்மேல், மரதகமே போல - மரதகமணிபோல, திரைமேல் - ஸமுத்ரத்தின்மேலே, கிடந்தானை -பள்ளிகொண்டவனாய், கீண்டானை - (ஹிரண்யனை)பிளந்தவனாய், கேழலாய்-வராஹமாய், பூமி - தரணியை, இடந்தானை - குத்தி எடுத்தவனை, என்-என்னுடைய, உள்ளம்-மநஸ்ஸு, ஓவாது-ஒழியாமல், எப்போ

---

* மிடற்றுக்கு - கழுத்துக்கு.

தும் - எந்தகாலத்திலும், மேல் - ச்ரேஷ்டமான, உரைகொண்டு - சப்தங்களைக்கொண்டு ஏத்தி - துதித்து, எழும்-உஜ்ஜீவிக்கும். (௨௫)

வ்யா.—அவ.—இருபத்தைந்தாம்பாட்டு.—இவனுடைய இந் நீர்மை யநுபவித்தால் வேறொன்றால் போதுபோக்க வொண்ணா தென்கிறார்.

(உரைமேல்கொண்டு) மேலானவுரையைக்கொண்டு. அதாவது-வாக்குக்கு விஷயமானத்தைக் கொண்டு. அன்றிக்கே, உரைக்கை யாலே மேற்கொண்டு. அதாகிறது - சொல்லிச்செல்லுகையிலே கிளர்ந்து. (என்னுள்ள மோவாதெப்போதும்) என்னுடைய ஹ்ருத யமானது உச்சிவீடு விடக்கடவதன்றிக்கே. ஸ்வரூபமொருகாலாக அழியுமோ. ஒருமலையிலே ஒருமரதக கிரியானது பரப்புமாறப் படிந் தாற்போலே யாயிற்று திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின போதிருக்கும்படி. ஸர்வேச்வரனாய் ஸர்வசக்தியானவனுடைய ஸௌலப்ய சரிதங்களைச் சொல்லுகைக்கு.

(என்னுள்ள மித்யாதி) தாஸவ்ருத்திகனான வென்னுடைய மந ஸ்ஸானது இடைவிடாது. (எப்போது மித்யாதி) ஒருபர்வத சிகரத் திலே இந்த்ரநீலமணி யிருந்தாற்போலே விளங்குகிற ஸமுத்ரசாயி யானவனை. (கிடந்தானைக்கிண்டானை) ஆர்த்தரைக்கண்டால் படுக்கை அடிகொதிக்கும்படி. (ஏத்தி எழும்) ஸ்துதித்து உஜ்ஜீவிக்கும்.

அவ.—(உரை மேல்கொண்டு) இவனுக்கு நினைவும் பேச்சும் வெண்ணெயிலே யானாற்போலே, ஆழ்வார்க்கு நினைவும் பேச்சும் இவன்பக்கலிலே யானபடிசொல்லுகிறது.

(உரைமேல்கொண்டு) வாக்குக்கு விஷயமாகக்கொண்டு. வாக் வ்ருத்தியை மேற்கொண் டென்னவுமாம். (என்னுள்ள மித்யாதி) ஒருமலைமேலே மரதகம் கிடந்தாற்போலே திரைமேலே கண்வளர்ந் தருளுகிறவனை. (கிண்டானை யித்யாதி) வராஹரூபியாய்ப்புக்கு அண் டபித்தியில் நின்றும் ஒட்டுவிடுவித்து பூமியை யிடந்தவனை. (ஏத்தி யெழும்) ஏத்தி உஜ்ஜீவியாநின்றது. (௨௫)

அரு.—இருபத்தைந்தாம்பாட்டு.—(உரைமேல்) மேலுக்கவதா ரிகை யருளிச்செய்கிறார். (இவனுக்கித்யாதி) கேழலாய்க்கீண்டிடந் தானை யென்றபடி. சேதந ஸமாதியாலே உள்ளம் ஏத்தி எழும் என் று க்ரியை. வாக் வ்ருத்தியை மேற்கொள்ளுகை - வாக் வ்ருத்தியை யுடைத்தாகை யென்றபடி.

(௨௫)

எழுவார் விடைகொள்வா ரீன்றுழா யானை
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவார்
வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே, வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை. (உசு)

ப.உ. எழுவார்-(பலத்தையடைந்து)விட்டுப்போவார், (ஐஶ்வர்யகாமர்) விடைகொள்வார் - ஆஜ்ஞையைப்பெறுவார், (கேவலர்) ஈன் - போக்யமான, துழாயானை - திருத்துழாயையுடையவனை, வழுவாவகை - நீங்காத உபாயத்தை, நினைந்து-அநுஸந்தித்து, வைகல் - தினந்தோறும், தொழுவார் - ஆஶ்ரயிப்பார், (பகவத்காமர்) (இம்மூவர்களுடைய) வினை-பாபமாகிற, சுடரை - அக்நியை, நந்துவிக்கும் - நாசம்செய்யும், வேங்கடமே - திருவேங்கடமென்கிற மலையே, வானோர் - தேவர்களுடைய (நித்யஸூரிகளுடைய,) மனச்சுடரை - திருவுள்ளமாகிற விளக்கை, தூண்டும் - வ்ருத்திபண்ணும், மலை - பர்வதம். (உசு)

வ்யா.—அவ.—இருபத்தாறும் பாட்டு.—(எழுவார்) எல்லார்க்கும் நினைவும் செயலும் ஒக்கப்பரிமாறலாவது பரமபதத்திலேயன்றோ வென்னில்; நித்யஸூரிகளுங்கூட அவனுடைய ஸௌலப்யங்காண வருகிறது திருமலையிலேயன்றோ வென்கிறார்.

(எழுவார்) ஐச்வர்யம் வேணுமென்று மேலேமேலே ப்ரார்த்திக்குமவர்கள். (விடைகொள்வார்) ஆத்ம ப்ராப்தியே யமையும்; நீ வேண்டாவென்று இவன் பக்கலில் நின்றும் அகலுமவர்கள். (ஈன்றுழாயானை யித்யாதி) இவனை நாங்கள் பிரியாதொழிய வேணுமென்று நினைத்து, காலமெல்லாம் தொழுவார்கள். (வினை யித்யாதி) பகவத்ப்ராப்தி விரோதி, ஆத்மப்ராப்தி விரோதி, ஐச்வர்யப்ராப்தி விரோதியான பாபங்களை, எரிகிறநெருப்பை யவித்தாற்போலே நசிப்பிக்கும் வேங்கடமே. (வானோரித்யாதி) நித்யஸூரிகளுடைய கிளர்ந்த மநஸ்ஸை அவனுடைய ஸௌலப்யம் காணப்போரிகோ ளென்று கிளர்த்தாநிற்கும் திருமலை. காலாந்தரமன்று, ஸந்நிஹிதம்.

(எழுவார்) ப்ரயோஜநம் கைபுகுந்தவாறே போவார் ஐஶ்வர்யார்த்திகள். (விடைகொள்வார்) பலம் நித்யமாகையாலே மீட்சியில்லை கேவலர்க்கு. (வினை யித்யாதி) இம்மூவர்க்கும் உத்தேஶ்ய விரோதிகளைப் போக்கும். நந்துவிக்கை - அவிக்கை. (வானோரித்யாதி)

இங்குள்ளார் * ஒழிவில் காலமென்ன, அங்குள்ளார் * அகலகில்லேன் என்னச் சொல்லும். (உசு)

அரு.—இருபத்தாறும்பாட்டு.—(எழுவார்) "மலை" என்கையாலே ஸங்க்ருஹீதம். இது ப்ரத்யக்ஷமன்றோ வென்றபடி.

மீட்சியில்லாமையாலே இவனைவிட்டு விடைகொண் டகன்று போகிறதே அவர்களுக்கு ஸ்வபாவ மென்றபடி. (உசு)

மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து
சிலையால் மராமரமேழ் செற்று - கொலையானைப்
போர்க்கோ டொசித்தனவும்பூங்குருந்தம் சாய்த்தனவும்
கார்க்கோடு பற்றியான் கை. (உஎ)

ப-உ. மலையால் - பர்வதத்தினால், குடை-சத்ரத்தை, கவித்து - மூடி, மா - (கேசி என்கிற) குதிரையினுடைய, வாய் - உதட்டை, பிளந்து-கிழித்து, சிலையால் - தநுஸ்ஸினால், மராமரம்-ஆச்சா மரம், ஏழ் - ஏழையும், செற்று - அழியச்செய்து, கொலை - (பிறரை) கொல்லுகிற, யானை - (குவலயாபீடமென்கிற) ஆனையினுடைய, போர் - யுத்தஸாதநமான, கோடு - கொம்பை, ஒசித்தனவும் - முறித்தனவும், பூங்குருந்தம் - பூத்தகுருக்கத்திமரத்தை, சாய்த்தனவும் - தள்ளினவும், கார் - (ஸ்வபாவத்தால்) மேகத்தோடொத்த, கோடு - சங்கத்தை, பற்றியான் - பிடித்தவனுடைய, கை - கரங்கள் கிடீர். (உஎ)

வ்யா.—அவ.—இருபத்தேழாம் பாட்டு—(மலையித்யாதி) திருவேங்கட முடையானுடைய திருக்கையைப் பார்த்தார்போலே.

(மலையால் குடைகவித்து) வர்ஷத்துக்குக் குடை யபேக்ஷிதமிறே. இந்த்ரன் ஆஸுரப்ரக்ருதி யல்லாமையாலே பசிக்ராஹத்தாலே செய்தானாகில், மலையையெடுத்து நம்மை நோக்கிக்கொள்வோமென்று மலையைக் குடையாகக்கவித்து. (மாவாய்பிளந்து) பண்ணின ப்ராதிகூல்யத்தின் கனத்தாலேகேசியைக்கொன்று. (சிலையித்யாதி) அவதாரத்துக்கடுத்த ஆயுதத்தாலே மராமரமேழையும் செற்று. (கொலை யித்யாதி) கொல்லக்கடவதாக நிறுத்தின குவலயாபீடத்தினுடைய பொராகின்றகோட்டை அநாயாஸேந முறித்தனவும். (பூங்குருந்தம் சாய்த்தனவும்) பூப்பறித்தனவும். (கார்க்கோடித்யாதி) ஶ்ரமஹரமாய் முழக்கத்தையுடைத்தா யிருக்குமென்கை. அன்றிக்கே, திருக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்ய மிருந்தபோது மேகத்

தைப்பற்றி யிருந்த சங்குபோலே யிருந்ததென்கை. இடையர்செய் வதெல்லாம் முன்கை உரத்தாலே, க்ஷத்ரியர், என்றும் வில்லாலே யென்னுமிடம் தோற்றுகிறது. ஸ்ரீபாஞ்சஜந்யம் பிடிக்கவும்பொறுத ம்ருதுவானகையைக் கொண்டு கிடீர் இதெல்லாம் செய்தது.

அவ.—சேஷ்டிதங்களிலேஉருகுகிறார். ஸுகுமாரமானகையைக் கொண்டே இப்பெரிய செயல்களைச் செய்வதே. செய்யாநின்றால் அநாயாஸேந செய்வதே!

(மலையித்யாதி) மலையாக விநியோகங் கொண்டானே. (மாவாய்பிளந்து) நாரதாதிகள் கூப்பிடும்படிவந்த கேசியை நெட்டிக் கோரை கீண்டாற்போலே கீண்ட. (சிலையித்யாதி) எய்யவொண்ணாத படி திரளநின்றமராமரங்களை. (கொலையித்யாதி) கொலையிலே உற்ற ஆனை. (பூங்குருந்தம்) தழைத்துப் பூத்து நின்ற. (கார்க்கோடு) குளிர்ந்து ஶ்ரமஹரமாய் பெருத்து முழங்குகை. ஸ்ரீபாஞ்சஜந்யம் தொடப்பொறுதகைகிடீர். (உஎ)

அரு.—இருபத்தேழாம் பாட்டு.—(மலையால்) கோடு - சங்கம். மேகஸ்வபாவத்தையுடைய சங்கென்னுதல்; மேகத்தோடே கூடின சங்கென்னுதல். க்ருஷ்ணன் கையாலே செய்கையையும், பெருமாள் வில்லாலே செய்கையையும் பற்ற தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இடையரித்யாதி). "பற்றி" என்று ப்ரயாஸங் தோற்றுகையாலே பொறுத ம்ருதுவானகை என்கிறது.

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (சேஷ்டிதங்களி லித் யாதி). நெட்டி-வாடின. (உஎ)

கைய வலம்புரியும் நேமியும், கார்வண்ணத்
தைய மலர்மகள்நின் னாகத்தாள் – செய்ய
மறையான் நின் னுந்தியான் மாமதிள் மூன்றெய்த
இறையான் நின்னாகத் திறை. (உஅ)

ப-உ. கார் - மேகம்போன்ற, வண்ணத்து - திருமேனியையுடைய, ஐய! ஸ்வாமியே! வலம்புரியும் - ஸ்ரீ பாஞ்சஜந்யமும், நேமியும் - திருவாழியும், கைய - கையிலிருக்கின்றன; மலர் - பூவிலவதரித்த, மகள், பெண் (லக்ஷ்மி), நின் - உன்னுடைய, ஆகத்தாள் - மார்விலிருக்கிறாள் ;. செய்ய-நிர்த்துஷ்டமான, மறையான் - வேதத்தை

யுடையவன் (ப்ரஹ்மா), நின் - உன்னுடைய, உந்தியான் - நாபியில் பிறந்தவன்; மா - பெரிய, மதிள் - ப்ராகாரத்தையுடைய, மூன்று - மூன்றுபட்டணத்தையும், எய்த - அடித்த, இறையான் - ஈஶ்வராபிமாநியான ருத்ரன், நின்னாகத்து - உன்திருமேனியில், இறை - ஒரு மூலையிலிருக்கிறவன். (உஅ)

வ்யா—அவ.—இருபத்தெட்டாம்பாட்டு.—(கையித்யாதி) ஐஶ்வர்யம் சொல்லுகிற தென்னவுமாம். நீர்மை சொல்லுகிறதென்னவுமாம்.

(கையவலம்புரியும் நேமியும்) கைய - கையிலேயுள்ள. (கார்வண்ணத்தைய) ஶ்ரமஹரமான வடிவையுடைய ஸ்வாமியானவனே. (மலர்மகள் நின்னாகத்தாள்) * கோலமலர்ப்பாவை நின்திருமார்விலாள். (செய்யவித்யாதி) நேரே உன்னைக் காட்டவற்றான வேதத்தையுடைய ப்ரஹ்மா உன் திருநாபீகமலத்திலானான். (மாமதிளித்யாதி) த்ரிபுரதஹநம்பண்ணி ஈஶ்வராபிமாநியா யிருக்கிற ருத்ரன் உன் திருமேனியைப்பற்றி இறையாயிற்று. அன்றியே, (நின்னாகத்திறை) என்று திருமேனியில் ஏகதேசத்திலே என்னவுமாம்.

(கையித்யாதி) ஐஶ்வர்யமாதல்; அழகாதல். (கார்வண்ணம்) வேறே வேணுமோ; வடிவேயமையாதோ. (ஐய) என்னது என்னலாயிருக்கை. (மலர்மகள் நின்னாகத்தாள்) * அலர்மேல் மங்கையுறைமார்வன். (மாமதிளித்யாதி) ஊரைச்சுட்டுப் பேரைப்படைத்தான். கோட்சொல்லி ப்ரஸித்தராமாப்போலே. ஆகத்தில் ஏகதேசத்தைப் பற்றினானென்னுதல். ஆகத்தைப்பற்றி இறையானானென்னுதல். (உஅ)

அரு.— இருபத்தெட்டாம் பாட்டு.—(கையவலம்புரி) திவ்யாயுதங்கள் அழகுக்கு முடல். (உஅ)

இறையும் நிலனு மிருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயு மாவான் - பிறைமருப்பில்
பைங்கண்மால் யானை படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி. (உ௯)

ப-உ. இறையும் - ஸர்வேச்வரனும், நிலனும் - பூமியும், இரு - விசாலமான, விசும்பும் - ஆகாசமும், காற்றும் - வாயுவும், அறை -

ஒலிக்கிற, புனலும் - ஜலமும், செம் - சிவந்த, தீயும் - நெருப்பும், (இந்த பஞ்சபூத நிர்மிதலீலா விபூதியை) ஆவான் - (சேஷமாக) உடைத்தாயிருக்குமவன், பிறை - பாலசந்த்ரன்போன்ற, மருப்பு - கொம்பையும், பை - அழகிய, கண் - நேத்ரங்களையுமுடைய, மால் - (கைங்கர்யத்தில்) வ்யாமோஹத்தையுடைய, யானை - கஜேந்த்ராழ்வானால், படு - அநுபவிக்கப்பட்ட, துயரம் - துஃகத்தை, காத்து - போக்கடித்து, அளித்த - ரக்ஷித்த, செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடைய, மால்கண்டாய் - ஸர்வேச்வரன் கிடாய்; தெளி - இதைநன்ருய் அறி. (உகூ)

வ்யா.—அவ.—இருபத்தொன்பதாம்பாட்டு.—(இறையும்) ஐச்வர்யங்கண்டு அஞ்சவேண்டா ; ஆஸ்ரிதபாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்கிருர்.

(இறையும்) பரமபதத்திலிருப்பைச் சொல்லுகிறது. (நிலனுமித்யாதி) ஜகதாகாரனுய் லீலாவிபூதி யுக்தனானபடி சொல்லுகிறது. (பிறைமருப்பிலித்யாதி) பிறைபோலும் கொம்பையுடைத்தாய், ஜாத்யுசிதமான கண்ணையுடைத்தாய், பெருத்த ஆனையினுடைய. (படுதுயரங் காத்தளித்த) ஆனைக்குப்போரும்படியான துயரைப் போக்கி ரக்ஷித்த. (செங்கண்மால்கண்டாய் தெளி) வாத்ஸல்யாம்ருதத்தை வர்ஷியாநின்ற கண்ணையுடையனான ஸர்வேச்வரன். (தெளி) இவனுக்கு ஆஸ்ரிதபாரதந்த்ர்யமே ஸ்வரூபமென்னுமிடத்தை புத்தி பண்ணு.

அவ.—ஐச்வர்யங்கண்டு * வெருவாதே சீலத்தையநுஸந்தியென்கிருர்.

(இறையும்) நியாமகனுய்க்கொண்டு பரமபதத்திலிருக்கும். (நிலனுமித்யாதி) இந்த விபூதியையுடையனு யிருக்கிறவிருப்பு. (மால்யானை) உடம்பில் பெருமை † பாடாற்ற வொண்ணுமை. (அளித்த) புண்பட்டத்தை ஸ்பர்சித்தருளினபடி. (செங்கண்) வாத்ஸல்யம். (மால்) அரைகுலையத்தலை குலையவந்து தோற்றினபடி. அவன், தம்மை "ஸாஹஸிக : - மாசுச :" என்ற திருவுள்ளத்தை, தாம் "ஸாஹஸிக:-மாசுச:" என்கிருர். வாசலைத்திறந்து வைப்பாரைப்போலே பெறுகைக்கு அங்கும் போகவேண்டா ; இசைவே வேண்

* வெருவாதே - பயப்படாதே.

† பாடாற்ற - ஸஹிக்க.

டுவது; ஆர்த்தியேவேண்டுவது. அவனே வாராவிடில் ஸமாப்யதிக தரித்ரனே அவன். மற்றவனைப்பெற உபாயமுண்டோ. வாஸனை யாலே "அம்மே" என்பாரைப்போலே அழைத்ததித்தனை. (உகூ)

அரு.—இருபத்தொ ன்பதாம் பாட்டு.—(இறையும்) மேலுக்கவ தாரிகை யருளிச்செய்கிறார் (ஐஸ்வர்யங் கண்டித்யாதி). தெளிவு போருமோவென்ன; அருளிச்செய்கிறார் (வாசலைத்திறந்தித்யாதி). இசைவுமாத்ரத்திலே வரக்கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (அவனே வாராவிடி லித்யாதி). ஸமாப்யதிக தரித்ரனாகப் பொரு ளென்றபடி. ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் அழைத்தானே யென்ன; அரு ளிச்செய்கிறார் (வாஸனையாலேயித்யாதி). (உகூ)

தெளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை - எளிதாகத்
தாய் நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே
போய் நாடிக்கொள்ளும் புரிந்து. (௩௰)

ப-உ. தெளிதாக-கலக்கம்போம்படி, உள்ளத்தை - மநஸ்ஸை, செம் - நன்றாக, நிறீஇ - நிறுத்தி, ஞாநம் - புத்தியால், தெளி தாக - நைர்மல்யமுண்டாம்படி, நன்கு - செவ்வையாய், உணர்வார்- அறிந்தவர்களுடைய, சிந்தை - மநஸ்ஸு, எளிதாக - வருத்தமற, தாய் - (தன்) மாதாவை, நாடு - தேடும், கன்றுபோல் - வத்ஸம்போ ல், தண் - குளிர்ச்சியுடைய, துழாயான் - திருத்துழாயையுடைய எம்பெருமானுடைய, அடியே - திருவடிகளையே, புரிந்து - விரும்பி, போய் - சென்று, நாடிக்கொள்ளும் - தேடிக்கொள்ளும். (௩௰)

வ்யா.—அவ.—முப்பதாம்பாட்டு.—(தெளிதாக) ஸம்ஸாரத்தி லே ஸமாஸ்ரயணீயர் பலருண்டென்று ப்ரமிக்கவேண்டா; ஸம்பந்த ஜ்ஞாநமுண்டாகவே நெஞ்சுதானே அவனை ஆராய்ந்து பற்றும்.

(உள்ளத்தை - தெளிதாக) விஷயப்ராவண்யத்தாலே கலுஷ மான ஹ்ருதயத்தினுடைய காலுஷ்யம்போக. (செந்நிறீஇ) செவ் விதாக நிறுத்தி. (ஞானத்தித்யாதி) ஞானத்தாலே எளிதாம்படி, "அவன் ஸ்வாமி நாம் சேஷபூதர்" என்று அவனை உணர்வாருடைய சிந்தை, அநேகம் பசுக்கள்நின்றால் தாயைத் தேடுங் கன்றுபோலே, தண்டுழாயானடியே புரிந்துபோய் நாடிக்கொள்ளும். (செந்நிறீஇ)

இந்த்ரியங்களைத் தான் வெல்லப்பாராதே எம்பெருமான் பக்கலிலே மூட்டி விஷயங்களை ஜயிக்கப்பார்க்கை.

(தெளிதாக) ஜ்ஞாநத்தாலே விசதமான பக்தியாலே. (எளிதாக) விஷயங்களில் பழக்கம்போலே தானே * மூளும்படியாயிருக்கை. தாயாரிருக்கிறபடி. (அடியே) அல்லாதஸ்தலங்களைக்கடந்து. (புரிந்து) விரும்பி. (௩௰)

அரு.—மூப்பதாம்பாட்டு.—(தெளிதாக) புரிந்து - பின்னை ஒன்றையும் பாராமல் திரும்பி. "தண்டுழாயான்" என்றத்தைப்பற்ற (தாயாரென்கிறது). (௩௦)

புரியொருகை பற்றியோர் பொன்னாழி யேந்தி
அரியுருவு மாளுருவு மாகி - எரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்த மாலடியை யல்லால், மற்
றெண்ணத்தா னாமோ விமை. (௩௧)

ப-உ. புரி - சங்கத்தை, ஒருகை - ஒருகையிலே, பற்றி - பிடித்து, ஒருகை - மற்றொருகையிலே, ஓர் - அத்விதீயமான, பொன் - அழகிய, ஆழி-சக்ரத்தை, ஏந்தி-தரித்து, அரியுருவும் -ஸிம்ஹரூபமும், ஆளுருவுமாகி - மனுஷ்யரூபமுமாய், (நரஸிம்ஹமாய்) எரி - அக்நியினுடைய, உருவம் - வடிவுபோன்ற, வண்ணத்தான் - வடிவையுடைய (ஹிரண்யனுடைய), மார்வு - வக்ஷஸ்ஸை, இடந்த - பிளந்த, மால் - விஷ்ணுவினுடைய, அடியல்லால் - பாதத்தையொழிய, இமை - க்ஷணமும், மற்று - வேறுவிஷயத்தை, எண்ணத்தானாமோ - நினைக்கத்தானாமோ. (௩௧)

வ்யா.—அவ.—முப்பத்தோராம் பாட்டு.—(புரியித்யாதி) அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தால் வேறே யொன்றை ஒருசற்றுப்போது அநுஸந்திக்கலாமோவென்கிறார்.

(புரியித்யாதி) வலம்புரியில், "வலம்" என்கிறவிடத்தைக் குறைத்துக்கிடக்கிறது. (அரியித்யாதி) ஆயுதங்களை யொழியவும் இரண்டு வடிவாலும் பார்ப்பேனென்று வேண்டிக்கொண்டபடியாலே நரத்வ ஸிம்ஹத்வங்களை ஒரு வடிவாகக்கொண்டான். (எரியித்யாதி) அநபிபவநீயனை ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்த. (மாலித்யாதி) இமைகொட்டி விழிக்கும்போது வேறொன்றை யெண்ணலாமோ.

* மூளும்படி - கூடும்படி.

அன்றிக்கே, செஞ்சை யநாதரித்து வேறொன்றை யெண்ணப் போமோ. இமை-பார் என்றுமாம்.

அவ.—இவ்விஷயத்தை ஒருக்ஷணகாலம் விட்டிருக்கை ஸா ஹஸிகமென்கிறார்.

(புரியித்யாதி) ஹிரண்யன்மேலேவிழுகிறவனை விலக்கினாற் போலே. (பொன்னாழியேந்தி) ஹிரண்யன் திருவுகிருக்கிரையாய்ப் போனான். திருவாழி அழகுக்குப் பிடித்தவித்தனை. (அரியித்யாதி) விசாரியாநிற்கப் பற்றுமே இரண்டு வடிவையுங்கொண்டு தோற்றி னபடி. (எரியுருவவண்ணத்தான்) அணுகவொண்ணாதபடி அநபிபவநீ யனாயிருந்தபடி. (மால்) கார்யப்பாட்டாலன்றியே பிள்ளை பக்கல்வ்யா மோஹத்தால் கீண்டான். (இமை)பாரென்னவுமாம், (௩க)

அரு.—முப்பத்தோராம்பாட்டு.—(புரி) இரண்டு வடிவாலும் கேவலஸிம்ஹத்தாலும் கேவல மநுஷ்யனாலும். இமை. இமைகொட் டுதல்; பார்த்தல்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (இவ்விஷயத்தை யித் யாதி). (பற்றி) ஹிரண்யன்மேலே போகிற சங்கை; பற்றி, - வாங்கி யென்கிறபடி. (௩க)

இமையாத கண்ணா லிருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்க ளைந்தும் - நமையாமல்
ஆகத் தணைப்பா ரணைவரே, ஆயிரவாய்
நாகத் தணையான் நகர். (௩உ)

ப-உ. இமையாத - ஸங்கோசமில்லாத, கண்ணால்- (உள்) கண் ணால், இருள் - அந்தகாரம் (அஞ்ஞாநம்), அகல - போம்படி, நோ க்கி - பார்த்து, அமையா - அடங்காத, பொறிஐந்தும் - இந்த்ரியங்க ளைந்தும், புலன்களைந்தும் - (தஜ்ஜந்ய) ஞானங்களைந்தும், நமையா மல் - உபத்ரவம்செய்யாமல், ஆகத்து - ஹ்ருதயத்தில், அணைப்பார் - (அவனை) சேர்ப்பார், ஆயிரவாய் - ஸஹஸ்ர வக்த்ரத்தையுடைய, நாகத்தணையான், ஆதிசேஷனைப்படுக்கையாகவுடைய ஸர்வேச்வர னுடைய, நகர் - பட்டணத்தை, அணைவர் - சேருவர்கள். (௩உ)

வ்யா.—அவ.—முப்பத்திரண்டாம் பாட்டு.—(இமையாத வித் யாதி) அவன்மேல்விழ விலக்காதார்க்கு இந்த்ரியஜயம்பண்ண சக்த ரன்றாகிலும் கிட்டலாமென்கிறார்.

(இமையாதகண்ணால்) "கண்" என்றும் - "உட்கண்" என்றும்- சொல்லக்கடவது. அதில் உட்கண்ணாலே. "ஜ்ஞாநத: ஹிருசாஹிநா - மநஸாது விசுத்தேந" என்னும்படி. (இருளகல நோக்கி) அஜ்ஞாநாந்தகாரம் போம்படியாக நோக்கி. (அமையாவித்யாதி) அமைக்கப்போகாத இந்த்ரியங்களைந்தும். (நமையாமல்) ஜயியாதிருக்கச்செய்தே. (ஆகத்தணைப்பார்) அவன்மேல்விழ விலக்காதவர்களனை வரும். (அணைவரே ஆயிரவாய் நாகத்தணையான் நகர்) என்கிறவித்தால், ஒருவனே யெல்லாவடிமைகளும் செய்யவேணுமென்னு மிடமும் ஒரு தேசவிசேஷமுண்டென்னு மிடமும், அத்தேசமே ப்ராப்யமென்னுமிடமும் சொல்லுகிறது.

அவ.—ஸர்வேச்வரனுடைய பரமபதம் ஆஸ்ரயியாதார்க்குக் கிடைக்குமோ ; ஆஸ்ரயித்தால் பேரவிரகுண்டோ? ருசிமாத்ரமுடையார் அவனாலே பெறுமித்தனையென்றும், அவனல்ல தில்லையென்றும்.

(இமையாத கண்) நெஞ்சென்னுமுட்கண். திருவாசலைநீக்கி அவனையும் தன்னையும் உள்ளபடியறிகை. (அமையா) திரியவிடுவிக்க வொண்ணாத பொறியைந்தும் புலனைந்தும். (நமையாமல்) நியமியாமல். (ஆகத்தணைப்பார்) * மூலையடியென்னுதல் ; அவன் மேல் விழா நின்றால் இறாயாமலென்னுதல். (நாகத்தணை) பர்யங்கவித்யை. (௩௨)

அரு.—முப்பத்திரண்டாம்பாட்டு.—(இமையாத)"தெளிதாக" என்கிறபாட்டிலே "செங்கிறீஇ" என்று இந்த்ரியஜயத்தைச்சொன்னார் ; இப்பாட்டில் அதில்லாவிட்டாலுமென்கிறார். (அவன்மேல் விழவித்யாதி) ஆகம் - மநஸ்ஸு.

அர்த்தசிக்ஷா பூர்வகமாக மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (ஸர்வேச்வரனுடைய வித்யாதி). ஆஸ்ரயியாதார்.—ஸம்ஸாரிகள். ஆஸ்ரயித்தார்-உபாஸகர். ருசியுடையார் - ப்ரபந்நர். "அணைவரே" என்றது பிரிநிலையாய், அணையார் என்றாய், ஆகத்தை - ஸ்த்ரீகள் தேஹத்தை அணைத்து மூலையடியே திரியும் ஸம்ஸாரிகள் பரமபதத்தைக் கிட்டாரென்னுதல். அன்றியே, "அணைவரே" என்றது தேற்றமாய், இந்த்ரிய ஜயம்பண்ணவிட்டாலும் அவனை ஹ்ருதயத்திலேவைக்குமவர்கள் பரமபதத்தைக் கிட்டுவரென்னுதல் (௩௨)

* மூலையடி - யதேச்ச ஸஞ்சாரம்

‡ இறையாதபடி - பின்வாங்காதபடி

நகரமருள் புரிந்து நான்முகற்குப், பூமேல்
பகரமறை பயந்த பண்பன் - பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதி யுரு வெண்ணும்
அந்தியா லாம் பய னங் கென். (௩௩)

ப-உ. பூமேல் - (நாபீகமல) புஷ்பத்தின்மேல், நான்முகற்கு - சதுர்முகனான ப்ரஹ்மாவுக்கு, நகரம்-இருப்பிடத்தை, அருள்புரிந்து - க்ருபைசெய்து கொடுத்து, பகர - (பிறர்க்கு) உபதேசிக்கும்படி, மறை - வேதத்தை, பயந்த - உபகரித்த, பண்பன் - நல்லகுணங்களையுடையவனுடைய, பெயரினை - திருநாமத்தை, புந்தியால் - புத்தியினால், சிந்தியாது - த்யாநியாதே, ஓதி - ஜபித்து, உருவெண்ணும் - கணக்கெண்ணும், அந்தியால்-ஸந்த்யாவந்தநாதி கர்மத்தால், அங்கு-அவ்விடத்தில், ஆம் - உண்டாகிற, பயன் - ப்ரயோஜநம், என்-ஏது.

வ்யா.—அவ.—முப்பத்துமூன்றாம்பாட்டு.—(நகரம்) ஸர்வேச்வரனை நெஞ்சாலே ஆதரியாதே பண்ணுகிற கர்த்தவ்யதந்த்ரத்தால் என்ன ப்ரயோஜநமுண்டென்கிறார்.

(நான்முகற்குப் பூமேல் நகரமருள்புரிந்து) (பகரவித்யாதி) பிறர்க்கு ஓதுவிக்கும்படி ப்ரஹ்மாவை ஓதுவித்த நீர்மையையுடையவனுடைய. செல்வப்பிள்ளையைத் தேவைக்கு ஓதுவிக்குமாப்போலே. (பெயரினையே புந்தியால் சிந்தியாது) அவனுடைய திருநாமங்களையே நெஞ்சால் நினையாது. (ஓதியித்யாதி) அல்லாதவற்றை யோதிச்சென்று அவ்வுருவையெண்ணும் ஸந்த்யாவந்தநாதிகளால் என்ன ப்ரயோஜநமுண்டு. எம்பெருமானுக் குடலல்லாத கேவலஸந்த்யை வ்யர்த்தம்.

(நகரமித்யாதி) திருநாபீகமலத்தைக்*கலவிருக்கையாக ப்ரஸாதித்தான். ப்ரஹ்மாவுக்கு ஜந்மதேசத்தையே கொடுத்தான். அந்தரங்கர்க்குக்கிட்ட மாளிகை சமைக்குமாப்போலே. (பகரவித்யாதி) அந்த வேண்டப்பாட்டுக்குமேலே நாட்டாரை ஓதுவிக்கைக்கு வேதத்தைக் கொடுத்தான். (பண்பன்) அந்நீர்மை மறக்கவொண்ணாமை. (பெயரித்யாதி) ஸ்வாபாவிகஸம்பந்தத்தை யநுஸந்தித்து அவனை யுகப்பியாதே. (ஆம்பயனங்கென்) எம்பெருமானை யகலுகையே பலித்துவிடுவது.

* கலவிருக்கை - ஸபாஸ்தாநம்.

(பெயரினையே) அவன் குணங்களுக்கு வாசகமான திருநாமம். (ஓதியித்யாதி) அஹ்ருதயமாகப் பண்ணும் ஆயாஸரூபமான கர்மத்தைப் பற்றுவதே. (௩௩)

அரு.—முப்பத்துமூன்றாம்பாட்டு.—(நகர்)வேண்டப்பாடு-மேன்மையாய், அத்தாலே கிட்டவைக்கும்படியான அதிசயம்.

என்னொருவர் மெய்யென்ப ரேழுலகுண்டு, ஆலிலையில்
முன்னொருவ னாய முகில் வண்ணா - நின்னுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால், பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்தவாறு. (௩௪)

ப-உ. ஏழுலகு - ஸப்தலோகங்களையும், உண்டு - அமுதுசெய்து, ஆலிலையில் - வடபத்ரத்தில், முன் - ஆதியில், ஒருவனாய - அத்விதீயனாயிருந்த, முகில் - மேகப்போன்ற, வண்ணா - வடிவையுடையவனே! முலைதந்தாள் - ஸ்தநம்கொடுத்த, பேய்த்தாய் - தாயாய் வந்த பிசாசமானபூதனை, - பேர்ந்திலள் - திரும்பமாட்டாமல் பிணமாய்க்கிடந்தாள்; பேர் - பெரிய, அமர்க்கண் - யுத்தபூமியிலே, ஆய்த்தாய்-இடைத்தாய் (யசோதை), நின்-உன் விஷயத்தில், உருகி-ப்ரீதிபண்ணி, முலைதந்தவாறு - ஸ்தநம்கொடுத்த ப்ரகாரத்தை, ஒருவர் - அத்விதீயர் (ருஷிகள்), மெய்யென்பர் - பரமார்த்தமென்று சொல்லுவர்; என் - அது எங்ஙனே. (௩௪)

வ்யா.—அவ.—முப்பத்துநாலாம்பாட்டு.—(என்னொருவர்) ப்ரளயத்தில் லோகத்தை யெல்லாம் தன் திருவயிற்றிலே வைத்து ஒரு * பவனான ஆலிலையிலே தனியே கண்வளராநின்ற ஈஸ்வரனுக்கு அஞ்சுகிற யசோதைப் பிராட்டியுடைய ஸ்நேஹம் ஒரு ஸ்நேஹமே! என்கிறார்.

(என்னொருவர் மெய்யென்பர்) இத்தை ஒருவர் மெய்யென்னும்படி யெங்ஙனே யென்னவுமாம். "என்" என்று "எத்திறம்" என்னும்படியே சொல்லவுமாம். (ஒருவர் மெய்யென்பர்) அறிந்தருஷிகளிலே சிலர், அர்த்தவாதசங்கையில்லை, இது மெய்யென்பர். (ஏழுலகித்யாதி) ஏழுலகத்தையும் திருவயிற்றிலே வைத்து ஆலிலையிலே. (முன்) முன்பு தனியேயாய். ஶ்ரமஹரமான வடிவையுடையவனே. (பேயித்யாதி) பேயானதாய் முலையைத்தந்து திருமேனியினின்றும் போகாதே கிடக்கச்செய்தே. (நின்னுருகி பேரமர்க்கண் ஆய்த்தாய்

* பவனான - அப்போதுண்டான, (௧)
முகிழ்விரியாத. (௨)

முலைதந்தவாறு) உனக்கு நல்லவளாய், யசோதைப்பிராட்டி, விஷத்துக்கு அம்ருதமாக முலைதந்தவாறு ; இதென்ன ஆச்சர்யம்.

அவ.—ஸோபாதிகமாகவன்றியே ஸ்வபாவத ஏவ ஸ்நேஹிக்குமவனை நினைக்கிறார்.

(என்) எத்திறம். (ஒருவர் மெய்யென்பர்) விலக்ஷணர் மெய்யென்பர். இத்தை ஒருவர் மெய்யென்பதே! "என்" என்றபோது ஜகத்தில் நடையாடுவதொரு ஸ்நேஹமாகிலன்றோ மெய்யென்னலாவது. (ஏழித்யாதி) நீ செய்யும் செயலுக்கு அடைவுண்டாகிலிறே உன்னை ஆஶ்ரயித்தார் செயலுக்கு அடைவுண்டாவது. (ஒருவனுய) பரிஹரிக்கத் தாயும் தமப்பனும் ஒருவருமில்லை. (முகில்வண்ணு)பரிவர் வேண்டியிருக்கிறபடி. (நின்னுருகி) உன் குணங்களுக்கு உருகி. (பேர்ந்திலளால்) அப்பிணம் கிடக்கச்செய்தே. அப்பேயின் கையில் அகப்பட்ட தடையப்படுத்திக் கால்நடைதந்து, நஞ்சுக்குப் பரிஹாரமாக அம்ருதமான முலையைக்கொடுத்தபடி. (௩௪)

அரு.—முப்பத்துநாலாம்பாட்டு.—(என்னொருவர்) "ஏழுலகுண்டாலிலையில் முன்னொருவனுயமுகில்வண்ணு, பேய்த்தாய்முலைதந்தாள்பேர்ந்திலளால், நின்னுருகி, பேரமர்க்கண் ஆய்த்தாய் முலைதந்தவாறு, என்னொருவர்மெய்யென்பர்" இத்தை ஒருவர் மெய்யென்னும்படி என்-எங்ஙனே யென்று க்ஷேபமாதல் ; ஒருவர் மெய்யென்பர், என்-இதென்ன நீர்மை தான் என்று ஈடுபாடாதல். (பேரமர்க்கண்) பெரிதாயிருக்கிற யுத்தஸ்தலத்திலே. (பேய்ச்சியுண்டு) அவள் பிணமாய்க் கிடக்கிற அவஸ்தையிலே என்னுதல். பெரிய அமர்போலே ஒன்றுக்கொன்று பொராநிற்கிற கண். அந்த அவஸ்தையைக் கண்டு துஃகத்தாலே பார்த்த கண்ணையுடைய யசோதை யென்னுதல்.

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார். (ஸோபாதிகேத்யாதி) க்ஷேபபரம். இத்தையருளிச் செய்கிறார். (ஒருவரித்யாதி) மெய்யென்னப் போகாமைக்கு ஹேதுவருளிச் செய்கிறார் (என்னென்றபோதித்யாதி). ஜகத்திலே பிணத்திலே யிருக்கச்செய்தே கண்டால் பயப்படுகை யொழிய எடுத்து முலை கொடுக்கப்போமோ ; ஆகையாலே இது பொய்யென்றபடி. (அடையப்படுத்தி) அவள் * உறுக்கி உண்ணச்சொன்னாற்போலே இவளும் விஷத்துக்கு மாற்றாகையாலே உறுக்கியுண்ணச்சொல்லி. (௩௪)

* உறுக்கி - அதட்டி.

ஆறிய வன்பி லடியார்த மார்வத்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ - தேறி
நெடியோ யடியடைதற் கன்றே, ஈரைந்து
முடியான் படைத்த முரண். (௩௫)

ப-உ. ஆறிய - தணிந்த, அன்பு - ப்ரீதி, இல் - இல்லாத, அடியார் - தாஸபூதர், தம்-தம்முடைய, ஆர்வத்தால் - ஸ்நேஹத்தால், கூறிய - (ஸ்வப்ரயோஜநமாய்) சொன்ன சொற்களை, நீ - நீ, குற்றமாகக் கொள்ளல் - தப்பாகக்கொள்ளாதொழிய வேணும்; ஈரைந்து முடி யான் - பத்துத்தலைகளையுடைய ராவணன், படைத்த - செய்த, முரண் - பகை, தேறி - (க்ரமமாய்) தெளிந்து, நெடியோயடி - பெரியனான உன்னுடைய திருப்பாதங்களை, அடைதற்கன்றே - கிட்டுகைக்காகவன்றோ. (௩௫)

வ்யா.—அவ.—முப்பத்தைந்தாம்பாட்டு.—யசோதைப் பிராட்டியோபாதி ஸ்நேஹமின்றிக்கே, அவளுடைய ஸ்நேஹத்தை யுடைத்தாக பாவிக்கிறவர்களுடைய குற்றத்தைப் பொறுத்தருளவேணுமென்கிறார்.

(ஆறியவன்பிலடியார்) * எறிமறிந்த பக்தியில்லாதவர்கள். (தம் ஆர்வத்தால் கூறிய) தங்களுடைய ஸ்நேஹத்தாலே சொன்னவற்றை. (குற்றமாக்கொள்ளல்) நீ குற்றமாகக்கொண்டருளாதொழிய வேணும். நீர்குற்றத்தைச் செய்துவைத்து, "குற்றமாகக்கொள்ளாதொழியவேணும்" என்னப்போமோவென்னில்; (ஈரைந்துமுடியான் படைத்த முரண் - தேறி நெடியோய் அடியடைதற்கன்றே) ராவணன் பண்ணின ப்ராதிகூல்யம் க்ரமத்திலே சிசுபாலனுக்கு உன்னையடைகைக்கு உடலாயிற்றில்லையோ. ப்ராதிகூல்யமாநுகூல்யமாய்ப் பலித்தால். ஆநுகூல்யாபாஸம்ஆநுகூல்யமாகத் தட்டுண்டோ. "தேறி" என்றது, செய்த குற்றத்தைக் குற்றமாகக்கொள்ளாதொழியவேணுமென்னவுமாம். அன்றிக்கே, "தேறி" என்றது, சிசுபாலன் கையும் திருவாழியுமாயிருந்தபடி யென்னென்று நினைத்துக்கிடக்க, அது அந்திமஸ்ம்ருதியானாற்போலே யாகவுமாம்.

(ஆறியவன்பு) எறிமறிந்து தன்னைப்பேணாதே அத்தலைக்குப் பரிகை. யசோதைப்பிராட்டி பரிவு தம்முடைய ப்ராதிகூல்யத்தோ

* எறிமறிந்த - சாந்தமான.

டொக்குமென்கை. அவனுடைய ப்ராதிகூல்யம் தேறி அடைகை க்கு உடலாயிற்றில்லையோ. "செய்த குற்றம் நற்றமாகவேகொள்" பொறுக்கவே அடைய நன்றுமென்றிருக்கிறார். (நெடியோய்) ஆநு கூல்ய லேசமுடையார்திறத்து நீ யிருக்குமிருப்பு எல்லைகாணப் போமோ. (கூரு)

அரு.—முப்பத்தைந்தாம்பாட்டு.—(தேறி) கலங்கினது தேறு மாப்போலே க்ரமத்திலே யென்றபடி. ராவணனுடைய இரண்டாஞ் ஜந்மமான சிசுபாலனுக்கும்.

(அன்பின்) இல் - அல்லாமையாய், தனக்குப் பரிவரில்லையோ வென்ன ; அருளிச்செய்கிறார் (யசோதைப்பிராட்டி யித்யாதி). இத் தனை ப்ராதி கூல்யமுடைய வுமக்குக்கிட்டப்போமோவென்ன ; அரு ளிச்செய்கிறார் (அவனுடைய வித்யாதி). (கூரு)

முரணை வலி தொலைதற்காமென்றே, முன்னம்
தரணி தனதாகத்தானே - இரணியனைப்
புண்ணிரந்த வள்ளுகிரால் பொன்னாழிக் கையால், நீ
மண்ணிரந்து கொண்ட வகை. (கூசு)

ப-உ. முன்னம் - முன்பே, தரணி - பூமியை, தனதாகத்தா னே - ஸ்வீயமாகவே அபிமாநித்திருந்த, இரணியனை - ஹிரண்ய கசிபுவை, புண்ணிரந்த - புண்படும்படி பிளந்த, வள் - கூர்மை யான, உகிரால் - நகங்களோடுகூடிய, பொன் - அழகிய, ஆழி - சக் ரத்தையுடைய, கையால் - கரத்தால், நீ - நீ, மண் - பூமியை, இர ந்துகொண்ட - யாசித்த, வகை - ப்ரகாரம், முரணை - கொடுமை யான, வலி - வல்லமையை, (அஹங்காரமமகாரங்களை) தொலை தற்காமென்றே - நசிப்பிக்கலாமென்றே. (கூசு)

வ்யா.—அவ.—முப்பத்தாறும்பாட்டு.—(முரணை) யசோதைப் பிராட்டி ஸ்நேஹமின்றியிலே யிருக்கச்செய்தே அவளுடைய ஸ்நே ஹமுண்டாக பாவித்துச்சொன்னவற்றைக் குற்றமாகக்கொள்ளா தொழியவேணுமென்று நீர் இரக்கவேணுமோ? தன்னுடைமையை வேறொருத்தனதாக்கிவந்து இரக்குமவனுக்கு.

(முன்னமித்யாதி) முன்பே பூமியடையத் தன்னதாக அபிமா நித்திருந்த ஹிரண்யனைப்புண்படுத்திப் பிளந்த வுகிரையுடைத்தா

யிருந்துள்ள பொன்னுழிக்கையால். (நீயித்யாதி) ப்ரகாரம். (மூரணை வலி தொலைதற்காமென்றே) ஸர்வேஸ்வரனுயிருந்துள்ள நம்முடைய அர்த்தித்வந்தோற்றநின்ற ஸௌலப்யத்தைக்காண நாட்டாருடைய அஹங்கார மமகாரத்தாலே பிறந்ததண்மை நெகிழுமன்றே நீயிப்படி செய்தது. (முன்னம் தரணிதனதாகத்தானே) முன்னே பூமியடங்கலும் தன்னதாக அபிமாநித்த மஹாபலிபக்கலிலே யென்னவுமாம்.

(மூரணையித்யாதி) யசோதைப் பிராட்டியைப்போலே எங்களை உருக்கலாமென்றே. (முன்னமித்யாதி) தன்னதாக வுகக்குமாகில், நாம் இன்று பெற்றோமாக வமையாதோ வென்று இரந்துகொண்ட வகை. (௩௬)

அரு.— முப்பத்தாரும்பாட்டு.—“மண்ணிரந்துகொண்டவகை மூரணைவலி தொலைதற்காமென்றே” என்றந்வயம். ப்ராதிகூல்யத்தினுடைய மிடுக்கைப்போக்குகைக்காக வென்படி.

இத்தையவதாரிகையிலே யருளிச்செய்கிறார் (யசோதைப்பிராட்டி யித்யாதி). எங்களை உருக்கலாமென்றது கீழ்ப்பாட்டிலே-அவனுடைய சேஷ்டிதத்தைக் கண்டவளாகையாலே எங்களையுமுருக்கலாமென்ன நீ மண்ணிரந்துகொண்டது, நாங்கள் வன்னெஞ்சராகையாலே உருகமாட்டோமென்றபடி. இரக்கவேண்டுவானென்னென்ன ; அருளிச்செய்கிறார் (தன்னதாக வுகக்குமாகிலித்யாதி). (௩௬)

வகையறு நுண் கேள்வி வாய்வார்கள், நாளும்
புகை விளக்கும் பூம்புனலு மேந்தித்-திசைதிசையின்
வேதியர்கள் சென் றிறைஞ்சும் வேங்கடமே,வெண்சங்க
மூதியவாய் மாலுகந்த வூர். **(௩௭)**

ப-உ. வகையறும் - உபாயாந்தரங்களைச் சேதிக்கும்படி, நுண்-ஸூக்ஷ்மமான அர்த்தங்களையுடைய, கேள்வி - ஶ்ரவணத்தை, வாய்வார்கள் - அடைந்திருக்கும், வேதியர்கள் - வேதார்த்தமறிந்தவர்கள், நாளும் - தினந்தோறும், புகை - தூபமும், விளக்கும் - தீபமும், பூம்புனலும் - புஷ்பத்தோடு கூடின ஜலத்தையும், ஏந்தி - தரித்து, திசைதிசையும் - திக்குகள்தோறும், சென்று - போய், இறைஞ்சும் - ஆஶ்ரயிக்கும், வேங்கடமே - வேங்கடமென்கிற திருமலையே, வெண்-வெளுத்த, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, ஊதிய -

த்வநிப்பித்த, வாய் - திருப்பவளத்தையுடைய, மால் - ஸ்வாமி, (க்ருஷ்ணன்) உகந்த - விரும்பின, ஊர் - தேசம். (௩௭)

வ்யா.—அவ.—முப்பத்தேழாம் பாட்டு. (வகையித்யாதி) நாம் அந்த அவதாரத்துக்குப் பிற்பட்டோமிறே; அது தீர்த்தம் ப்ரஸாதித்துப் போயிற்றிறே யென்ன; அவன்றான் ஸம்ஸாரத்திலே திருமலையையுகந்துவந்து நிற்கவும் அதுக்கு வெறுக்கவேணுமோ வென்கிறது.

(வகையறும்) "பஹுஶாகாஹ்யநந்தாஶ்ச - பஹுசாகாஹ்யநந்தாச்ச" என்னும்படி ப்ரயோஜநாந்தர பரமான தேவதாந்தர ஸ்பர்சியான வகையறுகை. (நுண்கேள்விவாய்வார்கள்) ஸ்தூலமாகவன்றிக்கே ஶ்ரவணவேளையிலே ஸூக்ஷ்மமானகேள்வி வாய்த்தவர்களான. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள். (புகையித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு. (திசையித்யாதி) ஸர்வதோதிக்கமாக வந்து தொழப்படும் திருமலை. (வெண்சங்கமித்யாதி) பாரதஸமரத்திலே அர்ஜுநன் தொடுத்துவிட்ட அம்புகளுக்கு எதிரிகள் எட்டுமளவன்றியே யொழிந்தால் ஒருவராலும் * இறாய்க்கப்போகாதபடி நின்ற நிலையிலே * முழுக்காயாக அவியும்படிக்கீடாக ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலேவைத் தூதின க்ருஷ்ணனுகந்தவூர்.

(வகையறும்) முழுகுவாரைக் கண்டவாறே முழுகி, ஜபிப்பாரைக்கண்டவாறே ஜபியா. (நுண்கேள்வி) ஸூக்ஷ்மார்த்தம் கேட்டுக் கைபுகுந்தார். "வஞ்சநம் ஹி நஃ க்ருஷ்ண - சஞ்சலம்ஹிமநஃ க்ருஷ்ண." (திசைதிசையில்) ஸர்வதோதிக்கமாக. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டார். (வெண்சங்கம்) ஆஶ்ரிதபக்ஷபாதி வர்த்திக்கிறவூர். (௩௭)

அரு.—முப்பத்தேழாம்பாட்டு.—அதுக்கு-பெறப்பட்டதுக்கு. வகையறுகை. ப்ரயோஜநாந்தர தேவதாந்தரங்களைப் ப்ரதிபாதிக்கிற சாகைகளையும் தத்பரமான புத்திகளையும் அறுகை. இவ்விடத்துக்கு வகையறுகை - ஸாதநாந்தரங்களை யறுகை. ஸூக்ஷ்மார்த்தம் கைபுகுருகை யருமையோவென்ன; அருளிச்செய்கிறார் (வஞ்சநம் ஹி நஃ-சஞ்சலம்ஹிமநஃ என்று). (௩௭)

---

* இறாய்க்கப்போகாதபடி - ப்ரதிக்ரியை பண்ணப்போகாதபடி.
† முழுக்காயாக அவியும்படி - உருதெரியாமல் அழியும்படி.

ஊரும் வரியரவ மொண்குறவர் மால்யானை
பேர வெறிந்த பெருமணியை · காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே, மேலசுரர்
எம்மென்னு மால திடம். (ஙஅ)

ப-உ. ஊரும் - ஸஞ்சரிக்கிற, வரி - ரேகைகளையுடைய, அரவம் - ஸர்பமானது, மால் - பெரிய, யானை - கஜம், பேர - கிளம்பும்படி, ஒண் - விலக்ஷணரான, குறவர் - வேடர், எறிந்த - வீசின பெரு-ஶ்லாக்யமான, மணியை - மாணிக்கத்தை, காருடைய - மேகத்தோடுகூடின, மின்னென்று - மின்னலென்று, (எண்ணி) புற்று - வல்மீகத்தை, அடையும் - ப்ரவேசிக்கும், வேங்கடமே - திருமலையே, மேல - உத்தமரான, சுரர் - தேவர்கள், எம்மென்னும் - எங்களதென்று, மாலதிடம் - அபிமாநித்திருக்கும், தேசம். (ஙஅ)

வ்யா.—அவ.—முப்பத்தெட்டாம்பாட்டு.—(ஊரும்)பரமபதத்திலுள்ளாரடைய உத்தேஶ்யரான வோபாதி திருமலையில்வர்த்திக்கும் ஸர்பம், குறவர், பட்டிதின்னு மானையடைய இவர்க்குத் தேஶ்யமாயிருக்கிறபடி. "எம்பெருமான் பொன்மலைமே லேதேனுமாவேனே."

(ஊரும்) ஒரு கார்யப் பாடறத் திருமலையிலே ஊர்ந்து திரிகையே உத்தேஶ்யமாயிருக்கிறபடி. (வரியரவம்) பாம்பினுடைய உடம்பில்வரி திருவேங்கடமுடையானுடைய திருமேனியில் ஓரவயவத்தோபாதி உத்தேஶ்யமாயிருக்கிறபடி. (ஒண்குறவர்) திருவேடுவர்க்கு ஒண்மையாவது - "இவர்கள் பாட்டன் பாட்டனிலே யொருத்தன் பூமியிலே இறங்கினன்" என்னும் பழியின்றிக்கே யிருக்கை. (மால்யானையித்யாதி) மலைபோலேயிருந்துள்ள ஆனை, தன்னை ஒருமலை சலித்தாற்போலேயிருக்கப் போம்படிக்கிடாக. (எறிந்த பெருமணியை) மஹார்க்கமானமணியை. ஆனை மேகம்போலே யிருக்கையாலும், அதிலே பட்டமணி மின்போலே யிருக்கையாலும், பாம்பானது, இடிக்கஞ்சுகையாலே மின்னின வநந்தரம் இடி யுண்டாமென்றுகொண்டு அதுக்கு முன்னே புற்றடையா நிற்குந்திருமலை. (மேல சுரர் எம்மென்னுமாலதிடம்) ஆக்கரான தேவர்களன்றியே, மேலான, சுரர் - நித்ய ஸூரிகள் - எம்மென்னுமாலதிடம் - × அஹமஹமிகயா விரும்புமிடம்.

அவ.—அங்கே புக்காலோவென்னில் உள்ளுப்புகவொட்டா நின்றதோ.

(ஊரும்) * ஞாதரிமஹதி - ப்ராதரிகச்சதி போலே. (வரி) அதுவும் ஸ்ப்ருஹணீயம். (மால் யானை) மலைநடந்தாற்போலே. (பேர) ஆமிஷார்த்தமாக வந்து மலைபேர்ந்தாற்போலே பேர. (பெரு மணியை) மலைபோலே யிருக்கை. (ஊரும் வரியரவம்) இவை ஸ்வைரஸஞ்சாரத்தாலே ஸௌபாக்யம் கொண்டாடப் புறப்பட்டு. (புற்றடையும்) இடிக்கு முன்னான மின்னுகையாலே. (௩௮)

அரு.—முப்பத்தெட்டாம்பாட்டு.—* என்னென்ற-என்னதென்ற.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (அங்கே புக்காலித்யாதி). (உள்ளுப்போகவொட்டாது) ஊரில் போக்யதையென்றபடி.

இடந்தது பூமி யெடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன் னஞ்ச - கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது. (௩௯)

ப-உ. பேர் - பெரிய, ஓதம் - அலைகளையுடைய கடல்போன்ற, வண்ணர் - வடிவையுடையவர், இடந்தது - தோண்டினது, பூமி - தரணி; எடுத்தது - தரித்தது, குன்றம் - மலை ; கஞ்சனை - கம்ஸனை, முன் - முற்காலத்தில், அஞ்ச - பயப்படும்படி, கடந்தது - ஆக்ரமித்தது; நீர்-பெரிய ஜலத்தையுடைத்தாய், ஓதம் - அலையெறிகிற, மா- பெரிய, கடல் - ஸமுத்ரத்திலே, கிடந்தது - பள்ளிகொண்டது ; பெரிது - மிகவும், நின்றது - நின்றருளினது, வேங்கடமே - திருமலையே கிடீர். (௬௯)

வ்யா.—அவ.—முப்பத்தொன்பதாம்பாட்டு (இடந்தது) ஆபத்திலே பூமியை ரக்ஷிப்பது, அவதாரங்கள் ஸாது பரித்ராணார்த்தம் துஷ்க்ருத் விநாசார்த்தமாவது, எப்போதும் உகந்து திருமலையிலே நிற்பதென்கிறார்.

(இடந்ததுபூமி)ப்ரளயாபத்திலே பூமியை யெடுத்தவழகு காணலாவது. (எடுத்தது குன்றம்) கோவர்த்தநோத்தரணத்திலே அவ்வழகு காணலாவது. (கடந்ததித்யாதி) கம்ஸனஞ்சும்படி யவனை யழித்தவன்று வெற்றியழகு காணலாவது. (கிடந்ததுவும் நீரோதமாகடலே) கண்வளர்ந்த வழகு காணலாவது ஆழ்ந்த கடலிலே சாய்ந்தபோது. (பேரோத வண்ணர் பெரிது. நின்றதுவும் வேங்கடமே) கடல்போலே

* என்னென்ற-என்றபாடத்தைக்கொண்டும் இந்த அரும்பதம்

ஸ்ரமஹரமான வடிவை யுடையவன், எப்போது முகந்து நிற்பது திருமலையிலே.

(இடந்தது) ப்ரளயத்தாலே வந்த நலிவுதீர. (எடுத்தது) இந்த்ரனால் வந்த நலிவுதீர. (கடந்தது) கம்ஸனால் வந்த நலிவுதீர. (கிடந்ததும்) அவதாரத்துக்கு ஏகாந்தமாம். நாம் பெருமானை யுகந்தோமென்று சோற்றையுகப்புதோம், சோற்றை யுகந்தோமென்று நாலும் பத்தும்பட்டினி விடுவுதோம்; ஸ்த்ரீகளை யுகந்தோமென்று சதுரங்கம் பொருதல் உறங்குதல் செய்வுதோம்; ஒன்றிலும் ஸ்நேஹமில்லை. (௩௯)

அரு.—முப்பத்தொன்பதாம் பாட்டு.—ஆழ்வார்கள், ஈஸ்வரனுடையகுணசேஷ்டிதங்களை வாய்புலத்துகையாலே இருந்திலை - அஸ்மதாதிகளுக் கில்லையென்னு மிழவாலே யருளிச்செய்கிறார் (நாம் பெருமானை யித்யாதி). (௩௯)

பெருவில் பகழிக் குறவர் கைச்செந்தீ
வெருவிப் புனம் துறந்த வேழம் - இருவிசும்பில்
மீன் வீழக் கண்டஞ்சும் வேங்கடமே, மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று. (௪0)

ப-உ. பெரு - பெருத்த, வில் - தநுஸ்ஸையும், பகழி - பாணத்தையுமுடைய, குறவர் - வேடர், கை - கரத்திலே (பிடித்த), செம் - சிவந்த, தீ - நெருப்பை (கண்டு), வெருவி - பயந்து, புனம் - வயலை, துறந்த - விட்ட, வேழம் - யானையானது, இரு - விசாலமான, விசும்பில் - ஆகாசத்தில் நின்றும், மீன் - நக்ஷத்ரம், வீழ - விழ, (அத்தை) கண்டு - பார்த்து, அஞ்சும் - பயப்படும்படியான, வேங்கடமே - திருமலையே, மேல் - முற்காலத்தில், அசுரர் - அரக்கர்களுக்கு, கோன் - ஸ்வாமியான ஹிரண்யன், வீழ - விழ, (அதை) கண்டு - பார்த்து, உகந்தான் - ஸந்தோஷித்தவன், குன்று - (நித்யவாஸம்பண்ணும்) மலை. (௪0)

வ்யா.—நாற்பதாம்பாட்டு. (பெருவில்) திருமலையை யுகக்கிறார். "கூவஷூஹூஊஹ ஐ ந-ஃ - அவஷ்டப்யமஹத்தநுः" என்கிறபடியே, சக்ரவர்த்தித்திருமகன் கையும் வில்லும்போலே பெரியவில்லையும்

தெரிந்த பகழியையுமுடையரான திருவேடுவர். (குறவரித்யாதி) * சூளிலே கொளுத்திக் கையிலே கொடுபோகிற நெருப்பொளியிலே வில்லின் பெருமையையுங் கண்டு நெருப்பு தனக்கு ஆனை யஞ்சும்ப டியாகவும், பட்டிமேய்ந்த ஆனை இப்புனங்கொய்தாலுமிங்கு வாரே னென்று ஸங்கல்பித்துப்போனது. (இருவிசும்பித்யாதி) வெளியையும் பரப்பையுமுடைத்தான ஆகாசத்தினின்றும் மீன்விழக்கண்டு இனி ஒரிடத்திலும் போக்கில்லையென்று கின்ற நிலையிலே நின்று அஞ்சு கிற திருவேங்கடம். மேல்-பண்டு. (அசுரரித்யாதி) "சிறுக்கனுடையவி ரோதிபோயிற்று" என்றுகந்து இன்னமுமாச்ரிதவிரோதியேதேனும் வரிலும் பரிஹரிக்கவேணுமென்றலன் பற்றி நிற்கும் திருமலை.

(பெருவிலித்யாதி) இதிலுத்தரார்த்தம் மீன்வீழக் கண்டஞ் சும்-நிலத்திலே நெருப்பை விழவிட்டார்களென்று குறவரெறிந்த கொள்ளிக்கு வெருவினதாகையாலே. (வேங்கடம்) நிர்ப்பயமான தே சம்; அஸ்த்தாநே பயசங்கை பண்ணு மித்தனை. (௪௦)

அரு.—நாற்பதாம் பாட்டு.—நக்ஷத்ரம் விழுந்தால் பயப்பட வேண்டுவானெனென்னென்ன; அருளிச்செய்கிறார் (நிலத்திலே நெருப் பை யித்யாதி). குறவர் பரண்களிலேயிருந்து கொள்ளியை யெறியும துகண்டிருக்குமதாகையாலே மீன்விழுகிறத்தையுமவர்களெறிந்தார் களாக நினைத்து பயப்பட்டதென்றபடி. (௪௦)

குன்றனைய குற்றஞ் செய்யினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக வென்னெஞ்சே - என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு. (௪௧)

ப-உ. என் - என்னுடைய, நெஞ்சே - மனமே, என்றும் - ஸர் வகாலமும், புறனுரையேயாயினும் - அங்யபரமான சொல்லாலே யாகிலும் (அஹ்ருதயச் சொல்லாலேயாகிலும்), பொன் - அழகிய, ஆழி - சக்ரத்தை, கையான் - கரத்திலேந்திய ஸர்வேச்வரனுடைய, திறன் - விஷயத்தில், உரையே - (நதுஜேயஃ - என்கிற) சொல்லை யே, சிந்தித்து - த்யாநித்து, இரு - ஸ்திரப்படு. இன்றுமுதலாக - இப்பொழுது தொடங்கி, குன்றனைய - மலைபோன்ற, குற்றம் -

* சூளிலே - பந்தத்திலே.

அபராதங்களை - செயினும், அனுஷ்டித்தாலும், குணக்கொள்ளும் - குணமாகஸ்வீகரிக்கும். (சக)

வ்யா.—நாற்பத்தோராம்பாட்டு (குன்றனைய) அவன் குற்றம் பொறுக்கைக்காகத் திருமலையிலே வந்து நின்றான். ஆபிமுக்யத்தைப் பண்ணினாலும் தோஷாம்சத்தைப்பாராதே குணாம்சத்தைக் கொள்ளும். அவனுள்ளவன்றோ இவ்வாத்மாவுண்டென்கிறார். இத்தனைநாளும் இத்தைச் செய்யாதொழிவானென்னென்னில்; (இன்று முதலாக)இவனுக்கே ஸ்வபாவமென்றறிந்த இன்று தொடக்கமாக. (என்னெஞ்சே) எனக்கு ஹிதம் பார்க்கும் நெஞ்சே. ஸஹ்ருதயமாக அவன் குணங்களைப் பேசப்போமோ வென்னில்; (புறனுரையேயாயினும்) அஹ்ருதயமான பேச்சேயாகிலும். ப்ரயோஜந மின்றிக்கே அநர்த்தமாயிற்றாகிலு மென்றுமாம். (பொன்னாழி யித்யாதி) ஸர்வேஸ்வரன் திறத்தில் சப்தங்களையே யறிந்து. (சிந்தித்திரு)க்ருதார்த்தமாயிரு.

அவனோடே ஸம்பந்தமுண்டாகிலும் முன்பு அங்ஙன் செய்தருளாவிடுவானென்னென்னில்; "குற்றம்-குணம்" என்று நினையாமை. (பொன்னாழி) தானே ஸஹ்ருதயமாக்கும். (சக)

அரு.—நாற்பத்தோராம் பாட்டு.—குற்றம் பொறுக்கை ஸ்வபாவமென்றறிந்த இன்றென்றபடி. (சக)

திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவா றென்கொல் - திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநாகணைக் கிடந்த
மாலோத வண்ணர் மனம். (சஉ)

ப-உ. பாலோதம் - பாற்கடலில் திவலை, சிந்த - சிதற, படம் - பணங்களையுடைய, நாகணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே, கிடந்த - பள்ளிகொண்ட, மால் - பெரிய, ஓதம் - ஸமுத்ரம் போன்ற, வண்ணர் - வடிவையுடையவருடைய, திருமகள்மேல் - லக்ஷ்மிமேல் (செல்லுகிற), மனம் - திருவுள்ளம், திருமகளும் - லக்ஷ்மியும், மண்மகளும் - பூதேவியும், ஆய்மகளும் - நப்பின்னைப்பிராட்டியும், சேர்ந்தால் - ஸம்ஸ்லேஷித்தால், திருமகட்கே - பெரியபிரா

ட்டியார் விஷயத்திலேயே, தீர்ந்தவாறு - ப்ரீதமானபடி (நடக்கிற படி), என்கொல்! எங்ஙனேதான்! (சஉ)

வ்யா.—அவ.—(திருமகளும்) பாராதே பொறுக்கைக்கடி பிராட்டிமா ரருகே யிருக்கையென்கிறார்.

(திருமகளித்யாதி) அநந்தாழ்வான், "திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்று பணிக்கும். (பாலோதம் சிந்த) "திருப்பாற்கடலின் குறுந்திவலை திருமுகத்திலே படும்படிக் கீடாகத்திருவநந்தாழ்வான் மேலே கிடந்த மாலோத வண்ணருடைய திருமகள்மேல் வைத்த திருவுள்ளம், திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்றருளிச்செய்வர் பட்டர். பிராட்டியோடு கலந்தபோது, "வஷாஜூ ரா மௌஷஜூ - புஷ்பாங்கராகைஸ்ஸமம்" என்கிறபடியே அல்லாத பிராட்டிமார் உபகரண கோடியிலே நிற்பர்கள்; அல்லாத பிராட்டிமாரோடு பரிமாறும்போது, இவள் தன்னிடையிலும் முலையிலும், கலந்தாற்போலே யிருக்கும். போகந்தான் உன்மஸ்த்தகமானல் வ்ருத்த கீர்த்தநாதிகளுக்குக் கூட்டமாய் நிற்பர்கள். இத்தால் சொல்லிற்றாயிற்று, இதா விஷயங்களிருவர்க்கும் போராமையாலே "தீரு-பாறு" என்கைக்குடலாம்; இங்கு போக்யதாதிசயத்தாலே கிண்ணகத்தி லிழிவாரைப்போலே திரண்டு அவகாஹிக்கவேணுமென்றதாயிற்று. (சஉ)

மனமாசு தீரு மருவினையும் சாரா
தனமாய தானே கைகூடும் - புனமேய
பூந்துழாயா னடிக்கே போதொடு நீரேந்தித்
தாந்தொழா நிற்பார் தமர். (சஙு)

ப-உ. புனமேய - தன் நிலத்திலிருந்தாற்போலே (செழித்து), பூம் - பூத்த, துழாயான் - திருத்துழாயையுடையவனுடைய, அடிக்கே - திருப்பாதங்களுக்கே, போதொடு - விகாஸோந்முகமான அரும்புகளோடு, நீர் - ஜலத்தை, ஏந்தி - தரித்து, தமர் - பக்தர், தாம் - தாங்களே, தொழாநிற்பார் - அடிமைசெய்வர்கள்; (அடிமை செய்யவே) மனம் - மனதிலிருக்கிற, மாசு - (அஞ்ஞாநம் முதலிய)

அழுக்கு, தீரும் - கழியும் ; அரு - அஸாத்யமான, வினையும் . பாபங்களும், சாரா - கிட்டாது; தனமாய - ஸம்பத்தான பக்தியும், தானே - அதுவே, கைகூடும் - சேரும். (சுங)

வ்யா.—அவ.—நாற்பத்துமூன்றும்பாட்டு.— (மனமித்யாதி) பிராட்டிமாரடியாக அவனைப்பற்றினார்க்கு போகத்தில் ப்ரதிபந்தகங்கள் போகவேணுமென்றும் பக்த்யாதிகளுண்டாகவேணுமென்றும் இவர்களுக்குக் கரைய வேண்டாவென்கிறது.

(மனமாசுதீரும்) மனஸ்ஸுக்குமாசாகிறது - ருசிவாஸனைகள். (அருவினையும் சாரா) அவித்யாதிகர்மங்களனையா. (தனமித்யாதி) இப்படியானவதிகாரிக்கு தனமான கைங்கர்ய பூர்வபாவியான பக்த்யாதிகள் தானே யுண்டாம். (புனமித்யாதி) தமரானவர்கள் ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளிலே தாங்களே தொழாநிற்பர்கள். இவர்களுக்கு அவனுடைய திருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு தொழுவது அவனை யநுபவிக்கையிலே அந்வயம்.

* திறனுரையே சிந்தித்திருக்கவொட்டுமோ இவனுடைய அவித்யாதிகளென்னில் ; (தனமாய) அவித்யாதிகள் போனார்க்கு வரும் தநம். "ஸோந்தரிக்ஷகத ஸ்ஸ்ரீமாந்-அந்தரிக்ஷகத ஸ்ஸ்ரீமான்" (பூந்துழாயானடிக்கே) குடிக்கிற வேப்பங்குடிநீர். (தாமித்யாதி) இவன் வகுத்தது செய்ய அவன் வகுத்தது செய்யாதொழியுமோ. (சங)

அரு.—நாற்பத்துமூன்றும் பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (திறனுரையேயித்யாதி). அவன் வகுத்தது செய்கை-அநிஷ்டத்தைப்போக்கி இஷ்டத்தைக்கொடுக்கை. (சங)

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தம ருகந்த தெப்பேர் மற்றப்பேர் - தமருகந்த
தெவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரோ
அவ்வண்ண மாழியா னும். (சச)

ப-உ. ஆழியான் - சக்ராயுதனான ஸர்வேஶ்வரன், தமர் - பக்தர், உகந்தது - விரும்பியது, எவ்வுருவம் - எந்த விக்ரஹமோ ; அவ்வுருவம் - அந்த விக்ரஹத்தை, தானே-ஸ்வயமே, ஆம் - ஸ்வீகரி

க்கும்; மற்று - இப்படியே யன்றிக்கே, தமர் - பக்தர், உகந்தது - விரும்பியது, எப்பேர் - எந்தத்திருநாமமோ; அப்பேர் - அந்த திருநாமத்தை, ஆம் - அங்கீகரிக்கும்; தமர் - பக்தர், உகந்து - விரும்பி, எவ்வண்ணம், எந்த ப்ரகாரத்தை - சிந்தித்து, அநுஸந்தித்து - இமையாதிருப்பர் - இமைகொட்டாமல் நிற்பார்களோ (அநவரதபாவனை பண்ணுகிறார்களோ); அவ்வண்ணம் - அந்த ப்ரகாரத்தையுடையனாய், ஆம் - இருக்கும். (சச)

வ்யா.—அவ,—நாற்பத்துநாலாம்பாட்டு. (தமரித்யாதி) "தமர்" என்று சிலவரும் அவர்களுக்கு ப்ரதிபந்தகம் போக்கவேண்டா, போகத்திலே அந்வயஞ் சொல்லுகிறபடி யெங்ஙனே யென்னில்; அவனுடைய ஸ்வரூப மாஸ்ரிதபரதந்த்ரமாகையாலே சொல்லுகிறது.

(தமருகந்ததித்யாதி) "யேயயாமாம்ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் - யேபதாமாம்ப்ரபத்யந்தே தாந்ததைவபஜாம்யஹம்" நமக்கு நல்லவர்களின்னுமொன்றுமில்லை, இன்னபடி பஜிப்பாரென்றுமில்லை; அவர்கள் நின்ற நிலையிலே அவர்கள் பஜித்தபடியே அவர்களைப் பற்றுவானென்கிறது. தமரானவர்கள் ப்ராக்ருதத்ரவ்யங்களிலே யொன்றை "உனக்குத்திருமேனியாகக் கொள்ளவேணும்" என்றால் அத்தைத் திருமேனியாகக் கொள்ளும். "ஸுவர்ணரஜதாதிபி: - ஸுவர்ணரஜதாதிபி:". எம்பெருமானார் மாதுகரத்துக்கெழுந்தருளாநிற்க, சிலபிள்ளைகள் காலாலேகீறி, "உம்முடைய எம்பெருமான் திருமேனி" என்று காட்ட, பாத்ரத்தை வைத்து தண்டனிட்டருளினார். இவ்வர்த்தத்திலே, "கோயிலிலே சில பிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சிமாரும் பெரிய திருமண்டபமும் கற்பித்துப் பெரும் திருப்பாவாடையு மமுது செய்வித்து, "எம்பெருமானார்! ப்ரஸாதப்படும்" என்று மணலைக்கையாலே * முகந்தெடுக்க, தத்காலத்திலே மாதுகரத்துக்கெழுந்தருளுகிற உடையவர், அவ்விடத்திலே அது கேட்டருளி தண்டனிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே யேற்றார்" என்றுஜீயரருளிச்செய்தார். (தமருகந்ததெப்பேர்மற்றப்பேர்) நல்லவர், "சதங்கை யழகியார்" என்று திருநாமம் சாத்தினாராகில், நாராயணாதி நாமங்களைக்காட்டிலுமத்தை விரும்பும். (தமரித்யாதி) நல்லவருகந்து "யேயயா-யேயதா" என்னும்படி யாதொரு ப்ரகாரத்திலே உகந்து ஸாவதாநராயிருப்பர்கள்; அந்தப்ரகாரத்தாலே அத்தை யுடையனான.

---

* முகந்து - ஸந்தோஷித்து.

(ஆழியான்) அப்ராக்ருதமாயிருந்துள்ள ஸகலபரிகரத்துக்கு முபலக்ஷணம். அவையெல்லாங்கிடக்க இவர்கள் நினைத்தபடியாகத் தன்னை யமைத்துக்கொடுக்கும்.

(தமரித்யாதி) இவன் கண்டு தொழவேண்டாவோ. எங்கே காண்பதென்னில்; (அவ்வுருவந்தானே)"ரூதாநஂரோநஷஂஙே)-ஆத்மாகம்மாநுஷம்மங்யே." "யேயமு - யேயதா". (எப்பேர்மற்றப்பேர்) எங்களாழ்வார்பாடே ஆயர்தேவு சென்று நாவற்பழம் வேண்ட, "நீயார்" என்று அவர்கேட்க, "ஜீயர் மகனான ஆயர்தேவு" என்ன, ஜீயரைக்கண்டு "உம்முடைய பிள்ளை எங்களைக்குடியிருக்கவொட்டுகிறிலன்" என்றார். (ஆழியானும்) ஸ்ரஷ்டாவாய் நியாமகனாயிருக்கிறவன் ஸ்ருஜ்யனுமாய் நியாம்யனுமாம். (சச)

அரு.—நாற்பத்துநாலாம்பாட்டு.—அதிகாரி நியமம் த்ரவ்ய நியமமின்றிக்கேயொழிந்தாலும், எம்பெருமான் ஸாந்நித்யம் பண்ணுமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (எம்பெருமானாரித்யாதி). எவ்வண்ணம் எந்தப்ரகாரம் ஸ்திதி கமந ஶயநாதிகள் என்றபடி,

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (இவன்கண்டித்யாதி). ஆஶ்ரிதனிட்ட பேரை யுகப்பனென்னுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (எங்களாழ்வாரித்யாதி). ஆயர்தேவு- நஞ்சீயர் திருவாராதநம். அவர் ஸ்வப்நத்திலே பழம்முதலான வற்றைக்கேட்க, ரஸோக்தியாக எங்களாழ்வாருளிச்செய்தா ரென்றபடி. (சச)

ஆமே யமரர்க் கறிய வது நிற்க
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே - பூமேய
மாதவத்தோன்தாள்பணிந்தவாளரக்கன் நீண்முடியைப்
பாதமத்தா லெண்ணினான் பண்பு. (சரு)

ப-உ. நன்னெஞ்சே - நன்மையுடைய மனமே! பூ - (நாபீ) கமலத்தில், மேய - வாஸம்பண்ணுகிற, மா - பெரிய, தவத்தோன் - ஜ்ஞாநத்தையுடைய, (ப்ரஹ்மாவினுடைய), தாள்-பாதங்களை, பணிந்த - வணங்கின, வாள் - வாள் என்கிற ஆயுதத்தையுடைய, அரக்கன் - அஸுரனான ராவணனுடைய, நீள் - தீர்க்கமான, முடியை - தலைகளை, அப்பாதத்தால் - அந்ததிருவடிகளினால், எண்ணினான் -

கணக்கிட்டவனுடைய, பண்பு - குணங்களை, அமரர்க்கு - தேவர்களுக்கு, அறியவாமே - தெரிந்துகொள்ளப்போமோ; அதுநிற்க-அது கிடக்க, நாமே - நாமே, அறிகிற்போம் - அறிய ஸமர்த்தராளுேம்.

வ்யா.—அவ.—நாற்பத்தைந்தாம்பாட்டு.(ஆமே இது அவன் காட்டக்கண்டவருக்கொழிய அல்லாதார்க்கறியப் போகாதென்கிறார்.

(ஆமேயமரர்க்கறிய) எத்தனையேனுமதிசயித ஜ்ஞாநரான தேவர்களுக்கு மறியப்போகாதென்கிறது. (அது நிற்க நாமே யறிகிற்போம்) அவ்விடையாட்டம் நிற்க நமக்கறியத்தட்டென். (நன்னெஞ்சே) அவன் காட்டக்கண்ட நெஞ்சே. (பூமேயவித்யாதி) ப்ரஹ்மாவின் மடியிலே ஒரு சிறுபிள்ளையாய்க் கண் வளருவாரைப் போலே கிடந்து "இவனுக்கு வரங் கொடுக்க வேண்டா, இது அநர்த்தமாம்" என்று ராவணன்தலையைத்தன் திருவடிகளாலேஎண்ணினவனுடைய நீர்மையை "அமரர்க்கு அறியவாமே" என்கிறது-இத்தால் ப்ரஹ்மாவினுடைய அறிவு கேடு சொல்லுகிறது.

(ஆமே) அபிமாநிகளான ப்ரஹ்மாதிகளுக்கு மெளியனும் (தாள் பணிந்த வாளரக்கன்) புதுத்தண்டன்கண்டு * இறுமாந்து விளைவதறியாதே வரங்கொடுத்தபடி. (சரு)

அரு.—நாற்பத்தைந்தாம்பாட்டு.—இது ஆஸ்ரிதபார தந்த்ர்யம். ராவணன் பத்துத் தலையையும் மறைத்துவர அத்தைச் சிறுபிள்ளைகள் காலையாட்டுமாப்போலே எண்ணிக் காட்டினன்.

(ப்ரஹ்மாதிகளுக்கு மெளியனும்) அவர்களுக்கு மெளியனுமவன் நமக்கெளியனுகச் சொல்லவேணுமோவென்று இரண்டாம் தாத்பர்யம். (சரு)

பண் புரிந்த நான்மறையோன் சென்னிப் பலியேற்ற
வெண் புரிநூல் மார்பன் வினைதீரப் -. புண்புரிந்த
ஆகத்தான் தாள்பணிவார் கண்டீர், அமரர்தம்
போகத்தால் பூமியாள்வார். (சசு)

ப-உ. பண் - ஸ்வரத்தோடு, புரிந்த - யுக்தமான, நான்மறையோன் - நாலுவேதங்களையுடைய ப்ராஹ்மாவினுடைய, சென்னி-

* இறுமாந்து - மிகவும் ஸந்தோஷித்து.

தலையிலே, பலி - பிக்ஷையை, ஏற்ற - வாங்கினவனாய், வெண் - வெளுத்த, புரி - புரியையுடைய, நூல் - ஸூத்ரத்தை, மார்பன் - வக்ஷஸ்ஸிலேயுடைய (ருத்ரனுடைய), வினை - பாபங்கள், தீர - போம்படி, புண் - வ்ரணத்தோடு, புரிந்த - கூடிய, ஆகத்தான் - திருமேனியையுடைய ஸர்வேஶ்வரனுடைய, தாள் - திருவடிகளை, பணிவார்கண்டீர் - தொழுமவர்கள் கிடீர், அமரர்தம் - நித்யஸூரிகளுடைய, போகத்தால் - செல்வத்தோடு கூட, பூமி - தரணியோடுகூடின லீலா விபூதியை, ஆள்வார் - நிர்வஹிப்பர்கள். (சகூ)

வ்யா.—அவ.—நாற்பத்தாறும்பாட்டு.—(பண்ணித்யாதி) ருத்ரனுடைய லஜ்ஜைகேடு சொல்லுகிறது.

(பண்புரிந்த நான்மறையோன்) ஸ்வரயுக்தமாக ஸர்வேஶ்வரனாலே ஓதுவிக்கப்பட்ட ப்ரஹ்மாவின். (சென்னிப்பலியேற்ற) "வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய ஶிரோமயா - வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம்தஸ்ய சிரோமயா" என்கிறபடியே ப்ரஹ்மாவின் தலையை யறுக்க, அவன், "கபாலியாவாய்" என்று சபிக்க. அவனுடைய தலையோட்டிலே பிக்ஷையேற்ற. (வெண்புரிநூல் மார்பன் வினைதீர) விநீதவேஷனாய் ப்ராயச்சித்தியானபடி. இவனோடு ஸம்பந்தித்தார்க்கெல்லா மதுவேயிறேபணி. அகமுடையவளும் தகப்பனாரைக்கொன்றாள்; இவளை யாஶ்ரயித்தவனும் தகப்பனைக்கொன்றான். "வினைதீர" என்கிறவித்தால் இவனுடைய கர்மவஶ்யத்வமும், தான் பண்ணின கர்மம் தன்னால் பரிஹரிக்கப்போகாமையும் சொல்லுகிறது. இத்தால் ஈஶ்வரத்வ சங்கையில்லை யென்றபடி. (புண்புரிந்த வித்யாதி) ஈஶ்வராபிமாநியாய் ஒருத்தனைத் திரிந்தவன் வாசல்தோறும் இடறித்திரிவதே! என்று திருவுள்ளத்திலே புண்பட்ட ஸர்வேஶ்வரனுடைய தாள் பணிவார் கிடீர். (அமரரித்யாதி) பூமியுமாண்டு பரமபதத்தில் போகமுமநுபவிப்பார்கள். அன்றியே, போகபூமியிலே யிருக்கச்செய்தே பரமபதத்தில் போகமெல்லா மநுபவிப்பார்களென்றுமாம்.

அவ.—ப்ரஹ்மாவாலே ஒரு ருத்ரனலைந்துகொடுகிடக்க அது தீர்த்தாரார்.

(பண்ணித்யாதி) ஓத்துச்சொல்லாநிற்கத் தலையறுத்தபடி. மூலையடியே திரிந்தார் பாதகியானவாறே முழுகித்திரியும்படி. "விண்ணுளாரிலும் சீரியர்" என்றுமாம். (சகூ)

அரு.—நாற்பத்தாறும்பாட்டு.—பலி - வலி ; பிக்ஷையென்ற படி. அகமுடையவள்-பார்வதி. தகப்பனைக்கொன்றது-தக்ஷப்ரஜாபதி பகவத்பராஙுகையாலே யாகத்திலே பெண்ணான பார்வதியையழையா திருக்க, அவள் ருத்ரனைக் கூட்டிக்கொண்டுபோக, அவன் ருத்ரனை யுதாஸிக்கையாலே, ருத்ரன், ஜடையிலே வீரமுஷ்டிகளை யுண்டாக்கி க்கொல்லுகையாலே "அவள்கொன்றாள்" என்கிறது. இவளையாஶ்ர யித்தவன்-ருத்ரன். அவன் ப்ரஹ்மாவைத் தலையையறுத்தான்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாவாலே யி த்யாதி). ருத்ரனுக்கு ஒத்துச்சொல்லாகிற்க, வெள்ளைப் பூணூலும், என்கையாலே முழுகினமைதோற்றுகிறது. பூமியிலேயிருக்க அம ரர்போகம் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (விண்ணுளாரிலு மித்யாதி). (சுசு)

வாரி சுருக்கி மதக் களி றைந்தினையும்
சேரி திரியாமற் செந்நிறீஇக் - கூரிய [நாள்
மெய்ஞ் ஞானத் தாலுணர்வார் காண்பரே, மேலொரு
கைந்நாகம் காத்தான் கழல்.

ப-உ. மதம்-கொழுத்த, களிறு - இந்த்ரியங்களாகிற யானைகள், ஐந்தினையும் - ஐந்தையும், வாரி-விஷயங்களாகிற ஜலத்தில், சுருக்கி - ஒடுக்கி, சேரி - விஷயங்களாகிற தெருவில், திரியாமல் - ஸஞ்சரி யாதபடி, செந்நிறீஇ - நன்றாய் நிறுத்தி, கூரிய - ஸூக்ஷ்மமான, மெய் - பரமார்த்தமான, ஞானத்தால் - பக்தியால், உணர்வார் - அறிய ஸமர்த்தரானவர்கள், மேலொருநாள் - முன்பொருகாலத்தில், கை - குணவானான, நாகம் - கஜத்தை, காத்தான் - ரக்ஷித்தவனு டைய, கழல் - திருவடிகளை, காண்பர் - ஸாக்ஷாத்கரிப்பர்கள். (சஎ)

வ்யா.—அவ.—நாற்பத்தேழாம்பாட்டு. (வாரிசுருக்கி யித்யாதி) இந்த்ரியங்களுடைய போகத்தைச் * செறுத்து, விஷயத்தி னுடைய ஸந்நிதியில் நில்லாமல் பரிஹரித்து, மெய்யான பக்தியையு டையவர்களவனைக் காண்பரென்கிறார். "விஷயாவிநிவர்த்தந்தே நிராஹாரஸ்யதேஹிநः । ரஸவர்ஜம்ரஸோऽப்யஸ்ய பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே

நிவர்த்தந்தே-விஷயாவி நிவர்த்தந்தே நிராஹாரஸ்யதேஹிநः ரஸவர் ஜம்ரஸோப்யஸ்ய பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே"

---

* செறுத்து-நெருக்கி.

(வாரிசுருக்கி) மதித்த வானைகளைத் தண்ணீரிலே செறுக்குமாப்போலே இந்த்ரியங்களினுடைய போகத்தைக் குறுக்கி. (சேரி திரியாமல்) தெருவேதிரியில்கொல்லுமிறே ஆனை. அப்படி விஷயத்தி னுடைய ஸந்நிதியில் திரியாமல். (செந்நிறீஇ) செவ்விதாக நிறுத்தி; பதார்த்தங்களில் போகாமல் ப்ரத்யக்வஸ்து விஷயமாக்கி. (கூரிய வித்யாதி) விஹித கர்மங்களை பலாபிஸந்திரஹிதமாக வநுஷ்டித்து க்ஷீணபாபராய் ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநமுண்டாய் ஈஶ்வர பாரதந்த்ர்யமென்னு மிடம், " உபாஸநாஜ்யுபாயஸ்திதி தர்ஶநஸமாநாகார ப்ரத்யக்ஷாபிவ்யக்திவிஶதே ததநந்தரம் - உபாஸநாத்யுபாயஸ்திதி தர்சநஸமாநாகார ப்ரத்யக்ஷாபிவ்யக்திவிசதேததநந்தரம் " என்று சொல்லுகிற பக்தியாலே காண்பர்கள். (மேலித்யாதி) பண்டொருநாள் ஸ்ரீகஜேந்த்ரமோக்ஷம் பண்ணினவனுடைய திருவடிகளை. இத்தால் விரோதியான முதலையைப்போக்கித் தன்னைக் காட்டிக் கொடுத்தாற்போலே இவர்களுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கித் தன்னைக்காட்டிக்கொடுக்குமென்கிறது. (சேரிதிரியாமல்) ஆள்நடையாடாதவிடத்தே கொண்டுபோய். (கூரியவித்யாதி) சுபாஶ்ரயமாகவும், நாதனாகவும், உபாயமாகவும், உபேயமாகவும், அநுஸந்திக்கை. (கைந்நாகம்) "வாஸோ வஹோவளுஃ-பரமாபுதமாபங்கஃ".

அரு.—நாற்பத்தேழாம்பாட்டு.—ஆனைக்கு மதஹேதுவான ஜலத்தைச்செறுக்கவே மதம் போமாப்போலே, முமுக்ஷுவுக்குமாஹாராதிகளைச் செறுக்கவே வீர்யம் போமென்னு மதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (விஷயாவிநிவர்த்தந்தே. விஷயாவிநிவர்த்தந்தே, இத்யாதி). தண்ணீரிலே செறுக்கை தண்ணீர்காட்டாதிருக்கை .(சஎ)

கழ லொன் றெடுத் தொருகை சுற்றி யோர் கைமேல்
சுழலும் சுராசுரர்களஞ்ச - அழலும்
செருவாழி யேந்தினான் சேவடிக்கே செல்ல
மருவாழி நெஞ்சே மகிழ். (சஅ)

ப-உ. ஒருகழல் - ஒருதிருவடியை, எடுத்து - தூக்கி, ஒருகை - ஒருகையாலே, சுற்றி - (நமுசியை) ப்ரமிப்பித்து, சுழலும் - கலங்கியிருக்கிற, சுராசுரர்கள் - தேவர்களும் அரக்கர்களும், அஞ்ச - பயப்படும்படி, அழலும் - எரிகிற, செரு - யுத்தஸாதநமான, ஆழி - சக்

ரத்தை, ஓர்கைமேல் - ஒருகரத்தில், ஏந்தினன் - பிடித்தவனுடைய, சே - சிவந்த, அடிக்கே - பாதங்களிலே, செல்ல - கிட்டும்படி, ஆழி - கம்பீரமான, நெஞ்சே - மனமே, மருவு - பொருந்து; மகிழ் - ஸந்தோஷப்படு. (சஅ)

வ்யா.—அவ.—நாற்பத்தெட்டாம் பாட்டு.—(கழல்) இப்படி "இந்த்ரிய ஜயம்பண்ணி நாம் பெறுகையாவதென்" என்று தம்முடைய திருவுள்ளம் பயப்பட, எளிதாகப்பற்றலாம், நீ பயப்படவேண்டா வென்கிறார்.

(கழலித்யாதி) நமுசியுடைய ஒரு காலையெடுத்துக் கையாலே சுற்றி என்னவுமாம். அன்றியே, பூமியளக்க வென்று தன்னுடைய ஒரு திருவடி மலரையெடுத்து (அவஸரத்திலே) நமுசியை ஒருகையாலே சுற்றியென்னவுமாம். (ஓர்கைமேலித்யாதி) ஒரு திருக்கை மலரிலே அநுகூலப்ரதிகூலரோடு வாசியற அழலாநின்ற * செருவுடைத்தான திருவாழியை யேந்தினவனுடைய. (சேவடிக்கேசெல்ல, ஆழிநெஞ்சே மகிழ்ந்து மருவு) உகந்துகந்து அநுபவி.

(கழலித்யாதி) அளந்தபடி. (ஆழிநெஞ்சே) உனக்கு உபதேசிக்கவேண்டா விறே. சேவடிதானே யிருந்த விடத்தேவந்தால், † இருயாமையே வேண்டுவது (சஅ)

அரு.—நாற்பத்தெட்டாம்பாட்டு.— ஆழிநெஞ்சு - அன்புடையநெஞ்சு. "மருவு" என்றத்தைப் பற்றவருளிச்செய்கிறார் (சேவடிதானேயித்யாதி). (சஅ)

மகிழலகொன்றேபோல் மாறும்பல் யாக்கை
நெகிழமுயல் கிற்பார்க்கல்லால் - முகிழ் விரிந்த
சோதிபோற் றோன்றும் சுடர்பொன் னெடுமுடி, எம்
ஆதிகாண் பார்க்கு மரிது. (சகூ)

ப-உ. மகிழ் - மகிழமரத்தினுடைய, ஒரு அலகுபோல் - ஒரு விரைபோல், மாறும் - வேறுவேறாய் வருகிற, பல் - அநேகமான, யாக்கை - சரீரத்தை, நெகிழ - நீங்க, முயல்கிற்பார்க்கல்லால் - யத்நம்பண்ணுமவர்களுக்கல்லது, முகிழ்விரிந்த - விகஸித்த, சோதிபோல் - தேஜஸ்ஸைப்போல், தோன்றும் - காணப்படுகிற, சுடர் -

* செரு-சண்டை,

† இருயாமை-பின்வாங்காமை.

தீப்தியையுடைய், பொன் - அழகிய, நெடு - நீண்ட, முடி-கிரீடத்தையுடையனுய், எம் - நமக்கு, ஆதி - காரணபூதனுனவன், காண்பார்க்கும் - காணவேணு மென்றிருப்பார்க்கும், (கேட்பார்க்கும்), அரிது - துர்லபன். (சகூ)

வ்யா.—அவ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. (மகிழலகித்யாதி) இப்படி யிராதார்க்கு அவனைக் கிடையாதென்று பின்னையுமதினுடைய வருமைசொல்லுகிறது.

(மகிழலகித்யாதி) அலகானது கோடிஸ்த்தாநத்திலும் நின்று காணிஸ்த்தாநத்திலும் நிற்குமாப்போலே, இவ்வாத்மாவானது தேவசரீரத்திலே புகுவது திர்யக் சரீரத்திலே புகுவதாய் மாறிமாறி வருகிற பலயாக்கையை நெகிழ்ந்துபோம்படியாகப் பண்ணுவார்க்கல்லால். (முகிழித்யாதி) விகஸிதமாயிருந்த தேஜஸ்ஸைப்போலே தோன்றுமதாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையனுய் எனக்குக் காரணமாயிருக்கிறவனைக் காணுமவர்களுக்கரிது.

அவ.—ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் அருசியும் எம்பெருமானைக் காண்கையில் ருசியுமுடையார்க்கு எளிதாகக் காணலாமென்கிறது. "பொய்ந்நின்ற" இத்யாதி.

(மகிழித்யாதி) கர்மாநுகுணமாக சரீரங்கள்தோறும் நுழைகை. "யாதானுமோராக்கை". (முகிழ்விரிந்தசோதி) "செவ்விப்படிக்கோலம்."(எம்மாதி) ப்ராபகனை. (காண்பார்க்கும்)கேட்பார்க்குமரிது. இப்படியாஸ்ரயிப்பார்க் கல்லது ப்ரக்ருதியை யுகப்பார்க்கு முகங்கொடுக்குமிதரபுருஷனல்லன். (சகூ)

அரு.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.—"முயல்கிற்பார்க்கல்லால்" என்றத்தைப்பற்ற வவதாரிகை யருளிச்செய்கிறுர் (இப்படி யிராதார்க்கித்யாதி). பண்ணுவார்க்கு-கர்மாத்யுபாயங்களைப் பண்ணுவார்க்கு,

மேலுக்கு ப்ரதிபத்திபரமாக அவதாரிகையருளிச்செய்கிறுர் (ப்ரக்ருதி ப்ராக்ருதங்களித்யாதி) சகாரத்தாலே கேட்பார்க்குமென்கிறது. மகிலழகு - மகிழம்விரை. (சகூ)

அரிய புல னைந்தடக்கி யாய் மலர்கொண்டு, ஆர்வம்
புரிய பரிசினுற் புல்கில் - பெரியனுய்

மாற்ருது வீற்றிருந்த மாவலிபால், வண்கைநீர்
ஏற்ருனைக் காண்பமெளிது. (ருo)

ப-உ. அரிய - கொடுமையான, புலனைந்து - ஐந்து இந்த்ரியங்களை, அடக்கி - ஸ்வாதீநப்படுத்தி, ஆய் - சோதித்த, மலர் - புஷ்பங்களை, கொண்டு - ஸம்பாதித்து, ஆர்வம் - ப்ரீதி, புரிய - வ்ருத்தியடையும்படியான, பரிசினல் - ப்ரகாரத்தாலே, புல்கில் - தொழுதால், பெரியனைப் - (தன்னை) பெருக்க நினைத்திருக்குமவனுய், மாற்ருது - (தாநத்தில்) வேறுபடாமல், வீற்றிருந்த - வேறுபாடுதோற்றும்படியிருந்த, மாவலிபால் - மஹாபலிபக்கலில், வண் - பெரிய, கை - கரத்திலே, நீர் - (தாந) ஜலத்தை, ஏற்ருனை - பிடித்தவனை, காண்பது - ஸாக்ஷாத்கரிப்பது, எளிது - ஸுலபமாயிருக்கும். (ருo)

வ்யா.—அவ.—ஐம்பதாம் பாட்டு.—இந்த்ரியங்களை விஷயங்களிற் போகாமல் காத்து அவன் பக்கலிலேஸ்நேஹிக்கில் காண எளிதென்கிருர்.

(அரியவித்யாதி)ஒரு * செய்யிலே பாயும் நீர் இரண்டுசெய்யிலே பாய்ந்தால் இரண்டு செய்க்கும் போராதொழியுமிறே. ஸர்வேஸ்வரனையிச்சிக்கக் கடவவான விந்த்ரியங்களை விஷயங்களிற் போகாதபடியடக்கி. "அரிய" என்றது "தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே வாயோரிவஸு துஷ்கரம்" ப்ரதிகூலமானவாயுவை நியமிக்கவரிதானுற்போலே மநஸ்ஸை நியமிக்கவரிதென்று அர்ஜுநன் சொன்னபடியே யிருக்கை. (ஆய் மலர்கொண்டு) செவ்விப்பூக்களைக்கொண்டு. (ஆர்வம் புரியபரிசினல்) ஸ்நேஹம் மிக்க ப்ரகாரத்தாலே. புல்கில்) அணையில். (பெரியனுயித்யாதி) உதாரமான கையைக்கொண்டு நீரேற்றவனைக் காண்கையெளிது.

(புல்கில்) புல்கப்பெறில். (பெரியனுய்) ஐஸ்வர்யமும் ஔதார்யமும். (வண்கை) கொடுத்துவளர்ந்தகை. (நீரேற்ருனைக் காண்பதெளிது) அப்ரதிஷேதமுடையார்க்கு அர்த்தியாய் வருமென்றவாறு. (ருo)

அரு.—ஐம்பதாம்பாட்டு.—"அடக்கி" என்று விஷயங்களைவிட்டே பற்றவேணுமே, அவற்றையுங்கூட விரும்பினுலாகாதோவென்ன;

---

* செய்யிலே-வயலிலே.

அருளிச்செய்கிறார் (ஒரு செய்யித்யாதி). மாற்றாதே வீற்றிருந்த ஔதார்யம் மாறாதே வீற்றிருந்த.

"ஏற்றானை" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (அப்ரதி ஷேதமித்யாதி). (ருo)

எளிதி லிரண்டடியும் காண்பதற்கு, என்னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே – களியில்
பொருந்தாதவனைப் பொரலுற்று, அரியாய்
இருந்தான் திருநாமமெண், (ருக)

ப-உ. என்னுள்ளம் - என்னுடைய மனமே! எளிதில் - ஸுலபத்தில் இரண்டடியும்-இரண்டுபாதங்களையும், காண்பதற்கு - ஸாக்ஷாத்கரிக்க, தெளிய-நிர்மலமானால், செவ்வே-நன்றாக, தெளிந்தொழியும்-ப்ரஸந்நனாய்விடுவன். (ஆனபின்பு) களியில்-கர்வத்தினால். பொருந்தாதவனை-அடிக்காதவனை, பொரல் - போர்செய்து முடிக்கையிலே, உற்று-ஒருப்பட்டு, அரியாய் - நரஸிம்ஹமாய், இருந்தான் - ஸ்திதனானவனுடைய, திருநாமம்-திருநாமங்களை, எண்-த்யாநம்செய். (ருக)

வ்யா.—அவ.—ஐம்பத்தோராம்பாட்டு.—(எளிதில்) தம்முடைய திருவுள்ளத்தை ஸம்போதித்து, நீ விஷய காலுஷ்யத்தைத் தவிர்; அவன் ப்ரஸந்நனுமென்றார்.

(எளிதிலித்யாதி) எளிதின்றிக்கே யிருந்துள்ள விரண்டு திருவடிகளும்காண்பதற்கு. எளிதாக வென்னவுமாம். (என்னுள்ளம்)என்னெஞ்சே! என்றபடி. (தெளிய) விஷயகாலுஷ்யத்தைத் தவிர. (செவ்வேதெளிந்தொழியும்)அவன் நேரேப்ராஸந்நனும்.(களியித்யாதி) செருக்காலே பொருந்தேனென்றிருந்த ஹிரண்யனை. (பொரலுற்று அரியாயிருந்தான் திருநாமமெண்) சிறுபிள்ளைக்காக * உதவி ஹிரண்யனை முடித்தவனுடைய திருநாமத்தை எண்ணு.

(என்னுள்ளம்) உள்ளமே! நீ தெளியில் அவன் செவ்வே நம்திறத்துத் தெளிந்தொழியும். ப்ரமாணமென்! ப்ரஹ்லாதன் தெளிய அவன்விஷயத்துத்தெளிந்துநின்று கார்யம் பார்த்தபடிகண்டிலையோ.

பாடாந்தரம்- * உதவி-பொருத.

(பொரலுற்று) பொருது. சீற்றத்துக்கிளை * போராமல் † சோம்பியிருந்தான். (திருநாமம்) வாக்காலே. (தெளி) எண்ணவொட்டாதவன் பட்டபாடறிவுதியிறே. (ருக)

அரு.—ஐம்பத்தோராம் பாட்டு.—என்னுள்ளம் - அண்மைவிளி. பொரலுற்று. பொருகையிலேயுற்று. சாணத்தகுந்திருநாமமென்றந்வயம். (ருக)

எண்மர் பதினொருவ ரீரறுவ ரோரிருவர்
வண்ண மல ரேந்தி வைகலும் - நண்ணி
ஒருமாலை யால்பரவி யோவாது, எப்போதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று. (ருஉ)

ப.உ. எண்மர் - அஷ்டவஸுக்களும், பதினொருவர் - ஏகாதசருத்ரர்களும், ஈராறுவர் - பன்னிரண்டு ஆதித்யர்களும், ஓர்-அத்விதீயமான, இருவர்-அஸ்விநீதேவதைகளிருவரும், வண்ணம்-நாநாவர்ணத்தையுடைய, மலர்-பூவை, ஏந்தி-தரித்துக்கொண்டு, வைகலும்-தினந்தோறும், நண்ணி-கிட்டி, ஒரு-அத்விதீயமான, மாலையால்-புருஷஸூக்தாதி சப்தஸந்தர்ப்பங்களாலே, பரவி - துதித்து, எப்போதும்-ஸர்வகாலமும், ஓவாது-விடாமல், திரு - லக்ஷ்மியோடு கூடின, மாலை - ஸர்வேஸ்வரனை, சென்று - கிட்டி, கைதொழுவர் - கையால் நமஸ்கரிப்பர்கள். (ருஉ.)

வ்யா.—அவ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.— (எண்மரித்யாதி) கீழ் தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குதவினவனுடைய திருநாமத்தை யெண்ணு; அவன் ப்ரஸந்நனுமென்றது - மற்றும் தூர்மாநிகளான தேவாதிகளுமவனை யாஸ்ரயிக்கத்தக்க கரணங்கள் அதிகாரம் பெற்றதென்கிறார்.

(எண்மரித்யாதி) அஷ்டவஸுக்கள், ஏகாதஸருத்ரர்கள், த்வாதஸாதித்யர்கள், அஸ்விநிகள். (வண்ணமலரேந்தி) நாநாவர்ணமான புஷ்பங்களைக்கொண்டு. (வைகலும் நண்ணி ஒருமாலையால்) புருஷஸூக்தத்தாலே. (ஓவாதெப்போதும்) விச்சேதமின்றிக்கே. (திருமாலித்யாதி) ஸ்ரீயஃபதியைச்சென்று ஆஸ்ரயிப்பர்கள் "ததுவ

* போராமல்-பொறாமல்.

† சோம்பியிருந்தான்-வாடியிருந்தான்.

ரூவிவாஹநாயணஹ்ஸம்ஹவாக-ததுபர்யபிபாதராயணஸ்ஸம்பவாத் ”
தேவர்களுக்கும் பவிஷ்யத்திற் பெறவிருந்துள்ள வதிகாரார்த்தமாக
ஆதித்யாந்தர்யாமியா யிருந்துள்ள பரமாத்மோபாஸநம் விதியா நின்
றதே.

வ்யாபாரயோக்யரான ப்ரயோஜநாந்தரபரர் ஒரு மாலையால் பர
வியோவுகையன்றிக்கே, எல்லாக் காலமும் எப்போதுமென்றுமாம்.
(திருமால்) வேண்டுவதெல்லாம் பெறுகைக்கடி. (ருஉ)

அரு.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.—வகுத்த விஷயமாகையாலே,
அதிகாரம்பெற்றது. தேவர்களும் பெற்றார்கள்; கரணங்களும்பெற்றன
வென்றபடி.

தேவர்களுக் காஸ்ரயமுண்டோவென்ன ; அருளிச்செய்கிறார்
(தஷ-ரூவரூவி - ததுபர்யபிஇத்யாதி).

எண்மர் - வ்யாபார யோக்யரானதிக்பாலர்கள். எப்போதும்
எல்லாக்காலமாதல், எல்லாப்புஷ்பமாதல். (ருஉ)

சென்றால் குடையா மிருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு. (ருங)

ப-உ.—அரவு - திருவநந்தாழ்வான், திரு - பிராட்டியோடு
கூடின, மாற்கு - ஸர்வேஸ்வரனுக்கு, சென்றால் - உலாவினால், குடை
யாம்-சத்ரமாயிருப்பர்; இருந்தால்-எழுந்தருளி யிருந்தால், சிங்காசன
மாம்-ஸிம்ஹாஸநமாயிருப்பர்; நின்றால்-நின்றால், மரவடியாம் - பாது
கையாயிருப்பர்; நீள்-விசாலமான, கடலுள்-ஸமுத்ரத்தில், (பள்ளி
கொண்டால்), என்றும்-ஸர்வகாலமும், புணையாம் - தெப்பமாயிருப்
பர்; மணிவிளக்காம்-ரத்நத்தால் செய்யப்பட்ட தீபமாயிருப்பர்; பூம்
பட்டாம் - அழகிய பரியட்டமாயிருப்பர்; புல்குமணையாம் - தழுவிக்
கொள்ளும் மெத்தையாயிருப்பர். (ருங)

வ்யா.—அவ.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு.—(சென்றால்) கீழே
யெல்லா நேர்த்தியும் நேர்ந்து தங்களுக்குறுப்பாக வாஸ்ரயிக்குமவர்

களைச் சொல்லிற்று ; இதில் தங்களையெல்லாமழிய அங்குத்தைக் குறுப்பாமவர்களைச் சொல்லுகிறது.

(சென்றால் குடையாம்) கைங்கர்யம் ஸ்வபுத்யதீநமன்றென்கிறது. நான்குடையாய் நின்றேன், நீ இங்கேவா வென்கையன்றிக்கே அவனுலாவப் புக்கால் குடை யபேக்ஷிதமானபோது குடையாகை. (இருந்தால் சிங்காசனமாம்) இருக்கை திருவுள்ளமானபோது திவ்ய ஸிம்ஹாஸநமாம். நிற்கை திருவுள்ளமானபோது மரவடியாம். கண் வளர வபேக்ஷிதமானபோது கடலிலே எல்லாக்காலத்திலும் படுக்கையாம். (மணிவிளக்காம்) ஒருவிளக்காலே ஒரு பதார்த்தத்தைக் காணவேணுமென்றபோது மங்களதீபமாயிருக்கும். (பூம்பட்டாம்) திருப்பரியட்ட மபேக்ஷிதமானபோது அழகிய பட்டாம். (புல்குமணையாம்) தழுவணை யபேக்ஷிதமானபோது தழுவணையாம். (திருமாற்கு) ஸ்ரியஃபதிக்கு. (அரவு) கட்டிப்பொன்போலே எல்லாவடிவையுமாக்கிக்கொள்ளலாம்படி யிருக்கிறபடி.

(சென்றால்) "குடையானேன்-செல்" என்று சேஷியை நியமியாதே. (இருந்தால்) அபேக்ஷையுள்ளபோது. (நின்றால்) நின்றபின்பு. (புணை) தெப்பம். (மணிவிளக்கு) மங்களதீபம். (பூம்பட்டு) பும்ஸ்த்வாவஹமான பரியட்டம். (புல்குமணை) பிராட்டிமாரூடினால், வ்யஸநம் மறப்பிக்கவற்றாகை, ஊடலுக்கு ஹேதுவாகவுமாம். (திருமாற்கு) இளையபெருமாளுக் கந்தரங்கஸேவை. (அரவு) தான் ஒரு சேதநனென்று கூசவேண்டாதபடி தன்னை யமைத்தபடி. ராஜநிவேசநங்களில் கூனர் குறளைப்போலே. (௫௩)

அரு.—ஐம்பத்துமூன்றாம் பாட்டு.—திருவநந்தாழ்வானைச்சொன்னது உபலக்ஷணமாய், தங்களை யெல்லாமென்று - நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. க்ஷீராப்தியிலே யழுந்தாமைக்குத் தெப்பமாய். வ்யஸநம் மறப்பிக்கை. தன்னுடைய ஸ்பர்சத்தாலே யவர்களைப்பிரிந்த வ்யஸநம் தோற்றாதபடிபண்ணுகை. தன்னுடையஸ்பர்சம்போக்யமாம்படி உடம்புகொடுக்கையாலே பிராட்டிமாரூடுகைக்கும் ஹேதுவென்றபடி,

"திருமாற்கரவு" என்றசேர்த்தி எப்படி யிருக்கிறதென்ன ; "ராமாணுவநேத்ரயஃ- ரமமாணுவநேத்ரயஃ" என்று-ரமித்த இளைய பெருமாளைப்போலே யென்கிறார் (இளையபெருமாளுக்கித்யாதி). (௫௩)

அரவ மடல்வேழம் ஆன்குருந்தம் புள்வாய்
குரவை குடமுலை மற் குன்றம் - கரவின்றி
விட் டிறுத்து மேய்த்தொசித்துக்கீண்டுகோத்தாடி, உண்
டிட்டெடுத்த செங்க ணவன். (ருச)

ப-உ.—செம்-சிவந்த, கண்-நேத்ரத்தையுடைய; அவன் - அந்த ஸர்வேஸ்வரன், கரவு-மறைத்தல், இன்றி - இல்லாமல், அரவு - காளியனை, விட்டு-அனுப்பி, அடல்-சண்டைக்குவந்த, வேழம் - குவலயாபீடமென்கிற யானையை, இறுத்து - முறித்து, ஆன்-பசுக்களை, மேய்த்து-புஜிக்கப்பண்ணி, குருந்தம் - குருக்கத்திமரத்தை, ஒசித்து - ஒடித்து, புள்வாய்-பகமென்கிறபக்ஷியினுடைய வாயை, கீண்டு-பிளந்து, குரவை - கைகோத்த விளையாட்டை, கோத்து-தொடுத்து, குடமாடி-குடக்கூத்தாடி, முலை - (பூதனையின்) ஸ்தநத்தை, உண்டு - புஜித்து, மல்-மல்லரை, அட்டு - கொன்று, குன்றம் - கோவர்த்தநமலையை, எடுத்த - தூக்கின, (இது முதலான செயல்களிருந்தபடி என்). (ருச)

வ்யா.—அவ.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—(அரவம்) ஆஸ்ரிதர்க்குச் சிலவிரோதம்வந்து போக்கவேண்டில் படுக்கையும் பொருந்தாமல் வந்துநிற்குமென்கிறது. இப்பாட்டு - நிரனிறை

(அரவமித்யாதி) காளியனைவிட்டு, குவலயாபீடத்தின் கொம்பைமுறித்து, ஆனேமேய்த்து, குருந்தமொசித்து. புள்வாய் கீண்டு-பகாஸுரனைக்கொன்று, குரவைகோத்து, குடமாடி, பேய்முலையுண்டு, மல்லரை யட்டு, குன்றமெடுத்த ஸர்வேஸ்வரன். எடுத்தவிச்செயல்க ளெம்பெருமான் சேஷவிஷயத்திற் குறைந்து பரிமாறும்படி யவன்ஸ்வரூபம்.

"செங்கணவன் - விட்டிறுத்து மேய்த்தொசித்துக் கீண்டு கோத்தாடி உண்டு அட்டு எடுத்தவை - அரவமித்யாதி". (ருச)

அரு.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—எடுத்த - இப்பாட்டிலெடுத்த இந்த வ்யாபாரங்கள், தாழ்ந்து பரிமாறின சேஷியுடைய ஸ்வரூபஞ் சொல்லுகிறது.

அந்வயங்காட்டுகிறார் (செங்கணவனித்யாதி). (ருச)

அவன்தம ரெவ்வினைய ராகிலும், எங்கோ
னவன்தமரே யென்றொழிவ தல்லால் - நமன்தமரால்
ஆராயப் பட்ட றியார் கண்டீர், அரவணைமேல்
பேராயர்க் காட் பட்டார் பேர். (௫௫)

ப-உ.—அவன் - அந்த ஸர்வேஶ்வரனுடைய, தமர் - பக்தர், எவ்வினையராகிலும்-எந்தக் கர்மங்களையுடையராகிலும், எம்-நமக்கு, கோன் - ஸ்வாமியான, அவன் - அந்த ஸர்வேஶ்வரனுடைய, தமரே-பக்தர்களிறே; என்று-இப்படி கொண்டாடி, ஒழிவதல்லால்-நீங்குவ தல்லாமல், அரவணைமேல்-ஸர்ப்பமாகிறபடுக்கையின்மேல்,(இருக்கத் தக்க), பேர்-பெரிய, ஆயர்க்கு - இடையரான க்ருஷ்ணனுக்கு, ஆள் பட்டார் - அடிமைபூண்டவர்களுடைய, பேர் - நாமமும், நமன்-யம னுடைய, தமரால் - தூதரால், ஆராயப்பட்டறியார்கண்டீர் - தேடப் பட்டறியார்கிடீர். (௫௫)

வ்யா.—அவ.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.—(அவன் தமர்) இப் படி அவ னாஶ்ரிதவிரோதி நிரஸநஸ்வரூபனென பின்பு அவனு டைய தமரை யமபட னாராய்வதெங்ஙனே யென்கிறார்.

(அவனித்யாதி.) அவனுக் கநுகூலமானவர்கள் எத்தொழிலா ராகிலென்; விஹிதத்தைச் செய்யிலென், நிஷித்தத்தைச் செய்யி லென். (எங்கோனித்யாதி) "ப்ரபவதிஸம்யமநோமமாபிவிஷ்ணுঃ" ப்ரபவதிஸம்யமநேமமாபிவிஷ்ணுঃ" என்னும்படியே. (நமன்தமரித் யாதி)நமன்தமராலாராயப்படா தொழிகிறார், அரவணைமேல் பேரா யர்க்காட்பட்டார்பேர். இவர்கள் தாங்களோ வென்னில்; அன்று; ஒருபாகவதனுடைய பேரை ஒரு அபாகவதன் தரித்தால் அவனு டைய பேரும் யமஸதஸ்ஸிலே வாசிக்கப்பெறுதென்கிறது, பேரரா யில்,குவலயாபீடம் தொடக்கமானவை பட்டதுபடுமத்தனை. "ஜய-ஸமித்ரவ்யவநாநு - மதுஸூதநப்ரபந்நாந்".

(எங்கோனவன்தமரே) என்னுயனுனவடியார். (எவ்வினையரா கிலென்னென் றொழிவதல்லால்) அவர் புண்யம்பண்ணிலென், பா பம்பண்ணிலென் ; அத்துறை நா மாராயுந் துறையல்லவென்று கை விடுமதொழிய. "த்யஜபட தூரதரேண தாநபாபாந்". (அரவணைமேல் பேராயர்க் காட்பட்டார்)படு

க்கைபாராட்டிலிறே ஆராய்வது. "நன்று செய்தாரென்பர்போலும்" என்று பிராட்டிக்கு மகப்பட நிலமல்லாதவிடத்தே யமனே ஆராயப் புகுகிறான். அவனுடைய ஒருபேரான ஸம்ஸாரிபேரும் தீட்டி வாட்டான். (ருரு)

அரு.—ஐம்பத்தைந்தாம் பாட்டு.—ஆட்பட்டார் பேர் - ஆட்பட்டாருடைய மநுஷ்யரென்றாய், "பேர்" என்கிற ஸமாதியாலே திருநாமமுமாராயப்படாதென்றபடி.

படுக்கைபாராட்டில் - ஸமுத்ரம்பார்த்து கேவலம் நித்ராபண்ணினாலன்றோ யமனாராய, இதப்படியன்றியே, அவனேறிட்டுக்கொண்ட பின்பு இவனுலாராயப்போகாதென்றபடி. பாகவதனுடைய பேரன்றியே அவனுடைய திருநாமம்சுமந்த ஸம்ஸாரிபேரையு மெழுத்தாணியைத்தீட்டி ஓலையிலேவாட்ட எழுதமாட்டா னென்றபடி. (ருரு)

பேரே வரப்பிதற்ற லல்லாலெம் பெம்மானை
ஆரே யறிவா ரதுநிற்க-நேரே
கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான், கண்ணன்
அடிக்கமலந் தன்னை யயன். (ருசு)

ப-உ,—பேர் - திருநாமத்தை, வர (வாயில்) வரும்படி, பிதற்ற லல்லால்-பலகால் சொல்லுகை யொழிய, எம்-நமக்கு, பெம்மானை - ஸ்வாமியானவனை, ஆர் - எவர்கள், அறிவார் - தெரிந்து கொள்வர்கள், அது நிற்க-அந்த விஷயமிருக்க, கடி - பரிமளமுள்ள, கமலத்து - நாபீகமலத்தினுடைய, உள்-மத்யத்தில், நேரே-நிரந்தரம், இருந்தும்-வாஸம் பண்ணியும், அயன்-ப்ரஹ்மா, கண்ணன் - திருமாலுடைய, அடிக்கமலந்தன்னை - தாமரைப்பூப்போன்ற பாதத்தை, காண்கிலான் - அறிய ஸமர்த்தனல்லன். (ருசு)

வ்யா.—அவ.—ஐம்பத்தாறும்பாட்டு.—(பேரே) பேராயர்க்காட்படுகையாவது, அவன் விஷயீகரிக்கப்புக்கால் தன் செல்லாமை தோற்ற நிற்கையல்லது இவனவனைப் பரிச்சேதித்தறிகையாவதென்னென்கிறது.

(பேரித்யாதி) பேராலே அவன் வரும்படி. (பிதற்றலல்லால்) திருநாமத்தைச் சொல்லலாமென்றுமாம். அன்றிக்கே, ஏதேனும்

சொல்லப்புக்காலும் திருநாமம் வாயிலே வரும்படி பிதற்றலல்லால். இதுக்கீடாகச் சொல்லுகை யென்றுமாம். (எம்பெம்மானித்யாதி) என்னுடைய ஸ்வாமியை ஆரேயறிவார். அவ்விடையாட்டம் நிற்க, (நேரித்யாதி) அறிவார் கிடக்கிடீர், அறியாதாரைக் கேட்கலாகாதோ. ஸர்வேஸ்வரனுடைய பரிமளத்தை யுடைத்தான திருநாபீகமலத்திலே அவ்யவதானேந பிறந்து அவன்றன்னாலே ஓதுவிக்கப்பட்டு அங்கேயிருக்கிற ப்ரஹ்மா, ஸர்வேஸ்வரனைக் காண்கிறிலன் - அறிகிறிலன்.

நம்மாலறிய வொண்ணுமோவென்னில்; (பேரேவரப் பிதற்றல்)கன்று நின்றவிடத்தே தாய் வருமாப்போலே வாஸிதமாக வென்றுமாம். (எம்பெம்மானை) நமக்கு நேரே காட்டினபடி. (உள்ளிருந்தும் காண்கிலான்) கடற்கரையிலே குடில் கட்டிக்கொண்டிருக்குங் காட்டில் கடலைப் பரிச்சேதிக்க வொண்ணுமோ? அபரிச்சேத்யமென்றறியில் அறியலாம். பெரியகிழாயார் "ப்ரஹ்மவிதாம்வர:- ப்ரஹ்மவிதாம்வரஃ". (ருகூ)

அரு.—ஐம்பத்தாறும் பாட்டு.—மேலுக்கவதாரிகை (நம்மாலித்யாதி). திருநாமம் வாயிலேவாஸிதமாக. பெரியகிழாயார்-பெரியவன். ப்ரஹ்மா பெரியவனேவென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மவிதாம்வர: - ப்ரஹ்மவிதாம்வரஃ என்று). (ருகூ)

அயனின்ற வல்வினையை யஞ்சினே னஞ்சி
உய நின் திருவடியே சேர்வான் - நயநின்ற
நன்மாலை கொண்டுநமோ நாரணா வென்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது. (ருஎ)

ப-உ.—அயல் - பக்கத்தில், நின்ற - இருக்கிற, வல் - ப்ரபலமான, வினையை - பாபத்தைக்குறித்து, அஞ்சினேன் - பயப்பட்டேன்; அஞ்சி - பயப்பட்டு, உய - உஜ்ஜீவிக்க, நின் - உன்னுடைய, திருவடி - திருப்பாதங்களை, சேர்வான் - அடைவதற்காக, நயம்நின்ற - இன்பமாயிருக்கிற, நல் - ஶ்ரேஷ்டமான, மாலைகொண்டு - சப்த ஸந்தர்பங்களைக்கொண்டு, தொழுது - ஆஶ்ரயித்து, நமோநாரணாவென்னும் - திருமந்த்ரமென்கிற, சொல்மாலை - சப்தஸந்தர்ப்பத்தை, கற்றேன் - அப்யஸித்தேன். (ருஎ)

வ்யா.—அவ.—ஐம்பத்தேழாம் பாட்டு.—(அயல் நின்ற) நீர் பகவத்விஷயத்தில் செய்ததென்னென்னில்; ஸம்ஸாரம் பயஸ்தாந மென்னுமிடமும் உஜ்ஜீவிப்பா ரவனைப்பற்றியென்னு மிடமுமறிந் தேனென்கிறார்.

(அயலித்யாதி) நானிட்டவடியிலேயிட்டு வாராநின்ற மஹா பாபங்களை யஞ்சினேன். (அஞ்சி உய) அவற்றை யஞ்சி உஜ்ஜீவி க்கைக்காக. (நின்திருவடியே சேர்வான் நயம்நின்ற நன்மாலைகொ ண்டு) நிர்வசநரூபமாக நின்ற நல்லமாலை கொண்டு. (நமோநாரணா வென்னும் சொன்மாலை கற்றேன்) சொல்தொடை கற்றேன். (தொ ழுது) வணங்கி, சொன்மாலைகற்றேன். ஆற்றாமையாலே நானுகைக் குப் பேசினேன்.

(அயல் நின்ற) விஸ்லேஷத்தாலேவரும் வ்யஸநத்துக் கஞ்சி, திருநாமஞ் சொல்லுந்தனையும் கடக்க, சாபலத்தாலே நின்ற. (ருஎ)

அரு.—ஐம்பத்தேழாம்பாட்டு.—அயல்நின்ற - அண்டையிலே யெ ன்றபடி. நயம்நின்ற-சாஸ்த்ரரூபமாய்நின்ற. அதாவது-திருமந்த்ரார்த் தத்தை நிர்வஹிக்கிற தமிழ்த்தொடை என்றபடி. "கற்றேன்" என்று வருத்தம் தோற்றுகையாலே ஆற்றாமை சொல்லுவிக்கச் சொன்னே னென்றபடி. நானுகைக்கு - ஸத்தை பெறுகைக்கு.

வல்வினையானது தூரப்போகாமல் கிட்டநிற்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (விஸ்லேஷத்தாலேயித்யாதி). இத்தனைநாளுங் கூடியிருந்து நாமிவனைப்பிரிந்து போகிறோமென்றஞ்சி துக்கப்பட்டு, சாபலத்தாலே நின்றதென்றபடி. (ருஎ)

தொழுது மலர்கொண்டு தூபம்கை யேந்தி
எழுது மெழு வாழி நெஞ்சே-பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன் றில்லை யடை. (ருஅ)

ப-உ.—நெஞ்சே - மனமே, மலர் - பூவை, கொண்டு - ஸம் பாதித்து, தூபம் - புகையை, கையேந்தி - கையிலேபிடித்து, தொ ழுது - ஆஸ்ரயித்து, எழுதும் - உஜ்ஜீவிப்போம்; எழு - எழுந்திரு;

வாழி - இந்த ஸம்பத்து உனக்கு நித்யமாய்ச் செல்லுக; பழுதின்றி- தோஷமில்லாமல், மந்திரங்கள் - மந்த்ரங்களை, கற்பனவும் - அப்ய ஸிக்கையும், மால் - ஸர்வேஸ்வரனுடைய, அடியே - பாதங்களையே, கைதொழுவான் - அஞ்சலிபண்ணுகைக்காக. (ஆனபின்பு) அந்தரம் - விலம்பம், ஒன்றில்லை - கொஞ்சமுமில்லை; அடை - கிட்டு. (ருஅ)

வ்யா.—ஐம்பத்தெட்டாம்பாட்டு.—(தொழுது) கையாலே தொழுது. புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு தொழுது. (எழுதும்) எழுவோம். போவோம். (எழு) போகு. (வாழிநெஞ்சே) நெஞ்சே! உனக்கு நன்மையுண்டாக. (பழுதின்றியித்யாதி) விச்சேதமின்றிக் கே எல்லாத்திருமந்த்ரங்கள்கற்கிறதும் கைதொழுகை. ஆனபின்பு, (அந்தரமொன்றில்லை யடை) ஒருக்ஷணமாத்ரம்போகாதே அவன் திருவடிகளிலே யடை.

(எழுதும்) உஜ்ஜீவிப்போம். (எழு) ஒருப்படு. (வாழி)ஒருப்பட்ட படிக்கு மங்களாசாஸநம். இது வுனக்கு நித்யமாயுண்டாக. (பழுதி ன்றி) குருகுலவாஸம் பண்ணிப் பழுத்துவிழக்காண்கை. முதலிலே சொல் என்னில் உத்பத்திதோஷமாமிறே. (கற்பனவும்) கிடந்தா னைக் கண்டேறுதே சந்தையிட்டுக் கற்கை. (ருஅ)

அரு.—ஐம்பத்தெட்டாம் பாட்டு.—கைதொழுகை - தொழுகைக் காக வென்று துமுல். அந்தரமொன்றில்லை - ரந்த்ரமின்றிக்கே சீக்ர மாகவென்றபடி. மந்த்ரத்துக்குப் பழுதில்லாமையேதென்ன; அருளிச் செய்கிறார் (குருகுல வாஸமித்யாதி). பழுத்துவிழுகை - அடியிலே யிருக்க மடியிலேவிழுகை. அநுவர்த்தந பூர்வகமாகக் கேளாவிட்டால் விரோத மேதென்ன ; அருளிச்செய்கிறார் (முதலிலே யித்யாதி). ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணுமல் சொல்லென்று கேட்கி லென்றபடி. உத்பத்திதோஷம்-மந்த்ரத்துக்கு வீர்யமின்றிக்கேயொழிகை.(ருஅ)

அடைந்த வருவினையோ டல்லல்நோய்பாவம் [யை
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் - துடங்கிடை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய, முன்னொருநாள்
தன் விலங்கை வைத்தான் சரண். (ருகூ)

ப-உ.—அடைந்த - ப்ராப்தமான, (ப்ராசீநமான) அரு - கொடு மையான, வினை - பாபம், அல்லல் - துன்பம், நோய் - வ்யாதி,

பாவம்-கெட்டநடத்தை, மிடைந்தவை-நெருங்கினவிவைகளை, மீண்டொழியவேண்டில் - திரும்பாமல்போகவிட இச்சித்தால், நுடங்கு - துவளுகிற, இடையை - மத்யத்தையுடைய பிராட்டியை, முன் - பூர்வகாலத்தில், இலங்கை வைத்தான் - லங்கையிலே ஸ்தாபித்த ராவணனுடைய, முரண் - பலம், அழிய - நசிக்கும்படி, முன்னொரு நாள் - முன்பு ஒரு காலத்தில், தன் - ஸ்வீயமான, வில் - சார்ங்கத்தை, அம் - அழகிய, கை - கரத்திலே, வைத்தான் - தரித்த வனே, சரண் - உபாயம். (ருo)

வ்யா.—அவ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—(அடைந்த)காலக்ஷேபம் பண்ணும்படி சொல்லுகிறது.

(அடைந்தவருவினை) ஆத்மஸ்வரூபத்திலன்றியே அசித்ப்ரத்யாஸத்தியாலே வந்தேறியான அஜ்ஞாநாதிகள். (அல்லல்) மாநஸவ்யாதி. (நோய்)சரீரவ்யாதி. ஆதிவ்யாதிகளென்றபடி. (பாவம்)பரிக்ரஹித்த சரீரத்தாலே பண்ணின நிஷித்தாநுஷ்டாநம். (மிடைந்தவை) சரீராரம்பகஹேதுவான பாபங்களுமாக நெருங்கினவை. (மீண்டொழியவேண்டில்) "ஆஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - அஹந்த்வாஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்னும்படி ஒரு ராஜகுலஸம்பந்தத்தாலே மீளாதபடி போகவேண்டில், (நுடங்கிடையை) பிரியத் தகாதவளை. (முன்னித்யாதி) பண்டுலங்கையிலே வைத்தவனுடைய மிடுக்கொழிய. (தன்விலங்கை வைத்தான்) தன்னுடைய திருவில்லை யழகிய திருக்கையிலே வைத்தவன் உபாயம். இத்தால், ஸர்வேஸ்வரனுக்கு போக்யமாயிருந்துள்ள வாத்மாவை "என்னது" என்றிருக்குமவன் பிராட்டியைப் பிரித்த ராவணனோடொக்குமென்னுமிடமும், "இவ்வாத்மா அவனுடையது" என்றநுகூலித்தவனுக்குப் பிராட்டியிருந்த மார்விலே அம்பேற்றிப் பரிஹரித்தாற்போலே பரிஹரிக்குமென்னுமிடமும், அவளோடு கூடினவ னுபாயமென்கையாலே, பற்றுவார்கள் அவள் முன்னாகப்பற்ற வேணுமென்னுமிடமும் சொல்லுகிறது.

திருவுள்ளம் இந்த்ரிய ஜயம்பண்ணென்றது, தொழு என்றது, திருநாமம் சொல்லென்றது, நினையென்றது. பலபடிகள் சொன்ன விவற்றுக்குத் தாத்பர்யமென்னென்னில்; இதுக்குக் கீழெல்லாம் ஷட்கத்ரயத்திற் சொன்னவார்த்தைபோலே ஸ்வரூபம் விசத

மாகைக்குச் சொன்னநிலே ; இது சரமஶ்லோகத்தில் நிலேபோலே. உணர்ந்தவன்று அவனல்லதில்லே.

(அடைந்தவருவினே) அவித்யாதிகள். ஆத்மா ஹேயஸம்ஸர்க்கத்துக் கநர்ஹனுகையாலே "அடைந்த" என்றது. பரமாத்மாவுக்கும் ப்ரவேசமொக்குமிறே. "கூநஶ்நு - அநச்நந்" (அல்லல் நோய்) ஆதிவ்யாதி. (பாவம்) சரீரத்துடன் பண்ணும்பாவம். (மிடைந்தவை)ஸமிதை யிடாமாணிபோலே; பரணிக்கூடு வரிந்தாற்போலே. (மீண்டொழியவேண்டில்) தொடருகிற பாம்பைத்திரிய விடுத்தாற்போலே "ஸவுவாவேஹ்யோ மோக்ஷயிஷ்யாமி - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" யிறே. ஸர்வசக்தியைக் கொண்டு கார்யங்கொள்ளமீவண்டாவோ. (நுடங்கிடையை) ஏக த்ரவ்யத்தை பிந்நமாக்கின. (இலங்கை வைத்தான்) தாயையும் தமப்பனேயும் பிரித்த பையல் மிடுக்கழிய. பிராட்டி அம்பெய்யுமன்று இவனுல் போக்கலாவது. "தத்தஸ்யஸத்ருசம்பவேத்-தத்தஸ்யஸத்ருசம்பவேத்". கூர்மையை விஶ்வஸித்திருக்குமத்தனே அவனுக்குப் பரியுமாப்போலே பரியும்; அவதாரஸௌலப்யம். பிறந்து முன்னே யுன்னேப்பெறுகைக்கு யத்நம் பண்ணுகின்றான்; இனிப்ரதிபத்தியே யுள்ளது (ருகூ)

அரு.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—இதில் உபாயஸ்வீகாரம் சொல்லுகிறதென்று கண்டுகொள்வது. மீண்டொழிய-மீளுகையொழிய. போனது திரியவுமிவனிடத்திலே மீளாதபடி.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (திருவுள்ள மித்யாதி). திருவுள்ளமானது "எழுதும் எழு" என்று இங்கே சொன்னீர் ; இப்படி பல்படியாகச் சொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்று ஆழ்வாரைக்கேட்கவென்று சங்காபிப்ராயம். ஸ்வரூபம் விசதமானலவனே உபாயமாக வேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (உணர்ந்தவன்றித்யாதி).

வங்கேசுறியானது பரமாத்மாவுக்குமொவ்வாதோவென்று சங்கை. "இறை" என்று-சங்காஸூசகம். அதுக்கு உத்தரம். (கூநஶ்நு-அநச்நந் என்று). ஸமிதையிடாமாணி-சுப்பிலேமேலே சூழ்த்துக்கொளளுகிறபூச்சி. பற்றுகைக்கு ஸௌலப்யமென்னென்ன; அருளிச்செய்கிறார். (அவதாரம் ஸௌலப்யமென்று). அது இப்போதில்லேயேயென்ன ; அருளிச்செய்கிறார். (பிறந்துமுன்னேயித்யாதி). (ருகூ)

சரணு மறைபயந்த தாமரையானேடு
மரணுய மன்னுயிர்கட் கெல்லாம் - அரணுய
பேராழிகொண்ட பிரானன்றி மற்றறியாது
ஓராழி சூழ்ந்த வுலகு. (கூo)

ப-உ.—சரணு - உபாயமாக, மறை - வேதத்தை, பயந்த - உபதேசிக்கப்பட்ட, தாமரையானேடு - நாபீகமலத்திற் பிறந்த ப்ரஹ்மாவோடுகூட, மரணுய - மரணதர்மத்தையுடைய, மன் - நித்யரான, உயிர்கட்கெல்லாம் - ஜீவாத்மாக்களுக்கெல்லாம், அரணுய - ரக்ஷக மான, பேர் - பெரிய, ஆழிகொண்ட - சக்ரத்தையுடைய, பிரான ன்றி - உபகாரகனையல்லது, ஓர் - அத்விதீயமான, - ஆழி ஸமுத்ரத் தால், சூழ்ந்த - ஆவரிக்கப்பட்ட, உலகு - பூலோகத்திலுள்ளார், மற்று - வேருென்றை, அறியாது. அறியமாட்டார்கள். (கூo)

வ்யா.—அவ.—அறுபதாம்பாட்டு.—(சரணித்யாதி) கீழ் அவனை யே உபாயமென்றது; பேறு இவர்களதேயானபின்பு இவ்வாத் மாக்கள் உபாயமாளுலாகாதோ வென்னில்; கீழ் போக்கறிவான்; இப்போது தாங்கள் படுகிறது இன்னத்தாலே என்றறியார்கள்; வரக்கடவதறியார்கள். ஈஸ்வரன் இவை யெல்லாமறிந்து பரிஹரிக்க வல்ல ஜ்ஞாந சக்த்யாதிகளையுடையவன். "பழகியான் தாளே" என்னு மாப்போலே. ஆகையாலே அவனே உபாயமாமித்தனை; இத்தை லோக மறியாதென்கிறது.

(சரணுவித்யாதி) எல்லார்க்கும் ஹிதத்தைச்சொல்லக்கடவதான வேதத்தை யோதுவிக்கப்பட்ட ப்ரஹ்மாவோடு."சரணுமறைபயந்த" என்றத்தை, "அரணுய" என்றத்தோடே கூட்டி ஈஸ்வரனுக்குவிசே ஷணமாக்கவுமாம். (மரணுய மன்னுயிர்கட்கெல்லாம்) கல்பாதியிலே யுண்டாய் கல்பாந்தத்திலில்லையாகிற ப்ரஹ்மாவோடே கூட "நஜா யதே௺யதேவா - நஜாயதேம்ருய தேவா" "ஜாயஸ்வ௺யஸ்வ-ஜாய ஸ்வ ம்ருயஸ்வ" என்று ஜநநமரண தர்மாக்களான வுயிர்களுக்கெல் லாம். (அரணுய) ரக்ஷகமான. (பேராழியித்யாதி) கீழ்ப்பெருமாள் ப்ரஸ்துதராகையாலே கடலைவெதுப்பித் தமக்கு வசமாக்கிக்கொ ண்ட சக்கரவர்த்தித் திருமகனென்னவுமாம். கையிலே திருவாழியை யுடையனுய் உபகாரகனுன ஸர்வேஸ்வரனுடைய உபாயபாவத்தை

யறிவர். (மற்றறியாதோராழிசூழ்ந்தஉலகு) மற்றுயிருந்துள்ள கடல் சூழ்ந்த லோகமானது உபாயமாகவறியாது.

(சரணமறைபயந்த) அபிமதஸித்திகளுக் கடைத்த உபாயபேதங்களையுடைய வேதங்களை ஜகத்துக்கோதுவிக்கும்*ப்ரஹ்மவிதாம்வரனுன ப்ரஹ்மா மந்த்ரக்ருத் என்பது.(மரணய)சாவது பிறப்பதாகிற சரீரதர்மம். (மன்னுயிர்) ஆத்மதர்மம் மரணதர்மங்களுடைய. அஜனுய், அசக்தனுய். அரணனவை - இவற்றை விநாசகன் அறியுமத்தனே. "ஊஏஷோய ந்ாஹிஜா நாதி - மூடோயம் நாபிஜாநாதி" "வேஷாஹஂ - வேதாஹம்". ஆப்பான், ஜீயர்க்கு, "ஜீயரே! இவ்வுலகு எம்பெருமானை யல்லாதிருந்ததோ" என்ன; "அதுக்குப் பொருளென்" என்ன; "உயர்ந்தோர் எம்பெருமானை யல்லதறியார்" என்ன; இத்தை பட்டரைக்கேட்க, "அதுக்கொருகுற்றமுண்டு, "ஓராழி சூழ்ந்த" என்று விசேஷிக்கவொண்ணுது" என்ன; இதுக்குப்பொருளோவென்ன; "ஜீயரே நான் சொல்லும்பொருளென்" என்ன; "உலகறியாது" என்ன; "அதுவேபொருள்" என்றுர். இத்தைப்பிள்ளையும் ஜீயருக்குரைக்கத் திருக்கலிகன்றி தாஸர் மறந்ததை உணர்த்தினுரென்றருளிச் செய்தார். (கூO)

அரு.—அறுபதாம்பாட்டு.—உபாயமானுல்-உபாயயத்நம் பண்ணினுல். அறிவான்-தன்னுடைய உபாயபாவத்தைத்தானே யொழிய வேறெருவரு மறிவாரில்லையென்றபடி. ஈஸ்வரனை யுபாயமாகவறியாது.

நித்யமானவேதத்தை யுண்டாக்குகையாவதென்னென்ன; அருளிச்செய்கிறுர் (மந்த்ரக்ருத்தித்யாதி). மந்த்ரத்ரஷ்டாவை "மந்த்ரக்ருத்" என்னக்கடவது. இவற்றை-அரணன உபாயத்தை. விநாசகன்-ஜந்மாதிகளைப்போக்குகிற ஈஸ்வரன். லோகமறியாது, ஈஸ்வரனறியுமென்னு மதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறுர்.(ஊஏஷோயஂ-மூடோயம் இத்யாதி). "பிரானன்றி மற்றறியாது- உலகு" என்று உலகானது ஈஸ்வரனை யொழிய வேறெரு உபாயத்தை யறியாதென்னும் சப்தம்தோற்றுநிற்க, சப்தத்தை நெருக்கி உபாயமீஸ்வரனறியு மொழிய உலகறியாதென்னு மதுக்கு ஸம்வாதமாக வருளிச்செய்கிறுர்.(ஆப்பானித்யாதி) பொருளென்-பொருளேது "பொருளென்" என்று வெறுத்தாற்போலே சொல்ல, "ஆனுலும் கேட்ட வுமக்குச் சொல்ல

வேணுமே; உபாயமீஸ்வரனறியுமத்தனை உலகறியாது" என்று பட்டர் ஜீயர்க்கருளிச்செய்தாரென்றபடி. (௬௦)

உலகு முலகிறந்த வூழியும், ஒண்கேழ்
விலகு கருங்கடலும் வெற்பும் - உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும், திருமால்தன்
புந்தியிலாய புணர்ப்பு. (௬௧)

ப-உ.—உலகும் - லோகங்களும், உலகு - லோகம், இறந்த - அழிந்துகிடக்கிற, ஊழியும் - ப்ரளயகாலமும், ஒண் - அழகிய, கேழ்-நிறத்தையுடைய, விலகு-(அலை) எறிகிற, கரும் - கறுத்த, கடலும் - ஸமுத்ரமும், வெற்பும் - மலைகளும், உலகினில் - ஜகத்திலிருக்கிற, செம்-சிவந்த, தீயும் - தேஜஸ்ஸும், மாருதமும்-காற்றும், வானும் - ஆகாசமும், புந்தியில்(ஸ்ருஷ்டி விஷயமான) ஸங்கல்ப ரூபஞ்ஞானத்தில், ஆய - ஒருப்பட்ட, திருமால் - ஸ்ரியःபதியினுடைய, புணர்ப்பு - ஸ்ருஷ்டி. (௬௧)

வ்யா.—அவ.—அறுபத்தோராம்பாட்டு.—(உலகு) ஹிதத்திலே யறியாததுக்குத் தந்தாமுடைய உத்பத்தியிலே வைத்து அறிவுணர்த்துகிறூர்.

(உலகும்) லோகமடங்கத்தானே சேஷித்தகாலமும். (ஒண்கேழ்) அழகிய நிறத்தையுடைத்தாய் அலை யெறியாநின்ற கடலும், லோகத்துக்காதாரமான மலையும். (செந்தீயித்யாதி) இவ்வோக்கமான கடலிலே லோகமலைந்து நோவுபடப்புக்கவாறே, ஐயோ! நோவுபடாநின்றதே! என்று அதுக்கு துக்கித்த பிராட்டிக்கு ப்ரியமாகத் தன் ஸங்கல்ப ஜ்ஞானத்தாலே ஸ்ருஷ்டித்து

(ஒண்ணித்யாதி) தெளிந்து அழகியதாய்ச் சலிக்கின்ற கடலும். (வெற்பும்) பூமிக்கு ஆணியடித்தாற்போலே யிருக்கும். (திருமாலித்யாதி) தாய்க்கு ப்ரியமாக ப்ராஜைகளை நோக்குமித்தனையிறே. இத்தலை யறிந்தோ ஸ்ருஷ்டித்தது; விலக்காமையேயுள்ளது. (௬௧)

அரு.—அறுபத்தோராம்பாட்டு.—புந்தி - புத்தியாய், அத்தால் ஸங்கல்பஜ்ஞாந மென்கிறது. புணர்ப்பு - ஸ்ருஷ்டி. இவை யறியாதகாலத்திலுமவனே ஸ்ருஷ்டிக்கையாலே இப்போது உபாயமறிவானுமவனென்றபடி. (௬௧)

**புணர்மருதி னூடுபோய்ப் பூங்குருந்தம் சாய்த்து
மணமருவ மால்விடையேழ் செற்று - கணம்வெருவ
ஏழுலகம் தாயனவு மெண்டிசையும் போயினவும்
சூழரவப் பொங்கணையான் தோள். (கூஉ)**

ப.உ.—புணர் - சேர்ந்திருக்கிற, மருதின் - மருதமரத்தினு டைய, ஊடு - நடுவில், போய் - சென்று, பூம் - புஷ்பித்த, குருந் தம் - குருக்கத்திமரத்தை, சாய்த்து - தள்ளி, மணம் - விவாஹம், மருவ - தலைக்கட்டுகைக்காக, மால் - பெரிய, விடை - எருதுகள், ஏழ் - ஏழையும், செற்று - கொன்று, கணம் - கூட்டம், வெருவ - நடுங்கும்படி, ஏழுலகும் - ஸப்தலோகங்களையும், தாயினவும் - அளந்தனவும், எண்டிசையும் - எட்டுதிக்குக்களிலும், போயின வும் - சென்றனவும், சூழ் - பரந்த, அரவம் - திருவநந்தாழ்வானு கிற, பொங்கு - கிளர்ந்த, அணையான் - படுக்கையுடையவனுடைய, தோள் - புஜங்கள் கிடீர். (கூஉ)

வ்யா.—அவ.—அறுபத்திரண்டாம்பாட்டு.—(புணர்) உத்பந்ந மானபின் இவரதோ தம்கார்யத்துக்குக் கடவராயிருக்கிறதென்கி றது.

(புணரித்யாதி) ஒன்றென்னலாம்படி நிர்விவரமாயிருந்த மருதி னிடைபோய். (பூங்குருந்தம் சாய்த்து) தர்சநீயமான குருந்தத்தைச் சாய்த்தும்.(மணமித்யாதி) நப்பின்னைப்பிராட்டியுடைய பாணிக்ரஹ ண மங்களமானது தலைக்கட்டும்படிக்கீடாகப்பெரிய எருதுகளேழை யும்செற்று. (கணமித்யாதி) "ஸமஸ்த ஸ்தாணாநி-ஸங்கைஸ்ஸ ராணும்" என்கிறபடியே அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற "இது வென்னுகப் புகுகிறதோ" என்று வெருவும்படிக்கீடாக ஏழுல கையு மநாயாஸேந கடந்தனவும், எட்டுதிக்குக்களிலும் போய் வ்யாபித்தனவும். (சூழித்யாதி) பரந்து, மேன்மை குளிர்த்தி நாற்றங் களையுடைத்தாயிருந்துள்ள திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவு டையவன்.

கன்று பிடுங்கும்படி. (பூங்குருந்தம்) பூவைக்காட்டி அந்யபரதை பண்ணி வஞ்சிக்கப்பார்க்கை. (மணமித்யாதி) தனக்கு வந்த கர்மத் தைத் தீர்த்தபடி. (எழுலகித்யாதி) பிராட்டிக்குச்செய்யும் செயலை

இந்த்ரனுக்குச்செய்கை. (எண்டிசையும் போயினவும்) திக்குக்களை வெளியடைக்கை. (சூழரவித்யாதி) இப்படிப்படுக்கையில் கண்வளரப் பெருதே அலமந்து திரிவதே. "வாணூரஸ்யாதபத்ரஸ்யச்சாயா யாம் ஜரிதம் மயா - பாண்டரஸ்யாத பத்ரஸ்யச் சாயாயாம் ஜரிதம் மயா" ஸிம்ஹாஸநத்திலிருக்க அவஸரம் பெற்றிலன்; இக்காலத்தி லேயிறே நிழலிலே முத்துக்குடையிடுவது. (சூஉ)

அரு.— அறுபத்திரண்டாம்பாட்டு.— இவரதோ இவருடைய யத்நமோ-பொங்கணை-கிளர்ந்தவணே.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிருர் (களை பிடுங்கும்படி யென்று) தோளே இவையெல்லாம் செய்ததென்றபடி. படுக்கைவிட்டு ரக்ஷணார்த்தமாகத்திரிந்த விடமுண்டோ வென்ன; அருளிச்செய்கிருர் (வாணூரஸ்யாதபத்ரஸ்ய-பாண்டரஸ்யாதபத்ரஸ்யஇத்யாதி) இக்காலத்திலே-வ்ருத்தனுனவிக்காலத்திலே.ராஜ சிங்நார்த்தமாகஸிம்ஹாஸநத்திலே யிருக்கிறபோது நிழலிலே குடையிடுவது. இதுக்கு முன்பெல்லாம் ரக்ஷணார்த்தமாக வெய்யிலிலே குடையிட்டுத் திரிந்தேனென்றபடி. (சூஉ)

தோளவனை யல்லால் தொழா, என்செவியிரண்டும்
கேளவனதின் மொழியே கேட்டிருக்கும்- நாநாளும்
கோணாகணையான் குரைகழலே கூறுவதே
நாணாமை நள்ளேன் நயம். (சூங)

ப-உ.—தோள் - கையானது, அவனையல்லால் - அந்த ஸர்வேஸ்வரனை யல்லது, தொழா - ஆச்ரயிக்கிறதில்லை; என் - என்னுடைய, செவியிரண்டும் - இரண்டுகாதுகளும், கேள் - பந்துவான, அவனது - அவனுடைய, இன் - மதுரமான, மொழி - பேச்சை, கேட்டு - ஸ்ரவணம்பண்ணி, இருக்கும் - (தரித்து) இருக்கும்; நா - நாக்கு, நாளும் - எப்போதும், கோள் - பலத்தையுடைய, நாகம்- ஸர்ப்பத்தை. அணையான் - படுக்கையாகவுடையவனுடைய, குரை - (ஆபரணத்தின்) த்வநியையுடைய, கழலே - திருவடிகளையே, கூறுவது - சொல்லாநிற்கும்; நாணாமை - லஜ்ஜையில்லாமல், (விஷயத்தை) நள்ளேன் - நெருங்கேன், நயம்-என்னுடைய ப்ராண்யம். (சூங)

வ்யா.—அவ.—அறுபத்துமூன்றும்பாட்டு.—(தோள்) இப்படி அவன் ஸௌலபனென் றநுஸந்தித்த பின்பு என்னுடையஇந்த்ரியங்க ளவனையல்ல தறிகிறதில்லை.

(தோளித்யாதி) நான் வேறே யொன்றைத் தொழச்சொன்னு லும் என்தோளானது அவனை யல்லது தொழுகிறதில்லை. (என்செவி யித்யாதி) என் செவிகள், உறவானவனுடைய இனிய மொழியைக் கேட்டிராநின்றது. (நாநாளும்) என்னுடைய நாக்கானது எப்போ தும். (கோள் நாகணையித்யாதி) "கோள்" என்று ஒளிக்கும், மிடுக் குக்கும் பேர். "ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநபலைகதாமநி - ப்ரக்ருஷ்டவி ஜ்ஞாநபலைகதாமநி" என்னும்படியே, அநந்தசாயியான ஸர்வேஶ்வ ரனையே கூறுமத்தனை. (நயம்நாணுமைநள்ளேன்) ஆசைப்படப்படு வதான சப்தாதிகளை லஜ்ஜியாதேகிட்டேன்; ஹாஸ்யமான விஷய மென்றுமாம். அவன் ரக்ஷகனுகவுமாம், தவிரவுமாம்.

(தோளவனை) அவன் தான் தனக்குப் பகையென்னலாம்படி யிருந்தாலுமென் செவிதானும்கேட்பது. ஆசைப்படும் விஷயங் கள். (நாணுமை நள்ளேன்)ஆண்பிள்ளைச் சொற்குழ்வியை யாசைப் பட்டவனைப்போலே உணர்ந்தவனுக்கு லஜ்ஜிக்கவேணும். (கோள்) பிராட்டிக்கும் தனக்கும் கிடக்கைக் குண்டாகை. (சூ௩)

அரு.—அறுபத்து மூன்றும்பாட்டு.—கேள் - உறவு. சப்தாதி கள்-ஆசைக்கும் ஹாஸ்யத்துக்கும் விஷயம் நயம் விரும்புகை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறூர் (அவன்றனித்யாதி)"நய ம்" என்றத்தை யருளிச்செய்கிறூர் (ஆசைப்படுமித்யாதி) விஷயங்க ளைக்கண்டால் நாணவேண்டுவா னென்னென்ன; அருளிச்செய்கிறூர் (ஆண்பிள்ளையித்யாதி)ஆண்பிள்ளைச் சொற்குழ்வி-பெண்வடிவு கொ ண்ட புருஷன் - கோள்-மிடுக்கும், பரப்பும். கிடக்கைக்குண்டா கை-இருவரும் கிடக்கைக்கிடம்போருகை. (சூ௩)

நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு
உயவேனுயர்ந்தவரோடல்லால் - வியவேன்
திருமாலை யல்லது தெய்வமென் றேத்தேன்
வருமாறென் நம்மேல் வினை. (சூச)

ப.உ.—பிறர் - விஜாதீயனான ஸர்வேஶ்வரனுடைய, பொருளை - தநமான ஆத்மாவை, நயவேன் - விரும்பேன்; கீழாரோடு - தாழ்ந்த ஸம்ஸாரிகளோடு, நள்ளேன் - சேரமாட்டேன்; உயர்ந்தவரோடல்லால் - ஶ்ரேஷ்டர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களோடுதப்ப, உயவேன் - ஸஹவாஸம் பண்ணமாட்டேன்; திருமாலையல்லது - ஶ்ரியஃபதியை யல்லது வேறுசிலரை, தெய்வமென்று (ஆஶ்ரயணீய) தேவதையென்று, ஏத்தேன் - துதிக்கமாட்டேன்; வியவேன் - ஆச்சர்யப்படமாட்டேன்; நம்மேல் - நம்முடையமேலே, வினை-பாபம், வருமாறு - வரும்ப்ரகாரம், என் - எங்ஙனே. (கூச)

வ்யா.—அவ.—அறுபத்துநாலாம்பாட்டு.—(நயவேன்) ப்ராப்தத்தைச் செய்துஅப்ராப்தத்தைச் செய்யேனென்றிருக்கிறவென்பக்கல் பாபத்துக்கு வரப்போமோவென்கிறார்.

(நயவேன் பிறர்பொருளை) பிறர்பொருளைஆசைப்படேன். த்ரவ்யத்துக்கு உத்கர்ஷமாவது - த்ரவ்யந் தன்னுடைய நன்மையாலும் உடையவனுடைய நன்மையாலும். த்ரவ்யம்பரிணாமியானஅசித்தன்றிக்கே ஆத்மத்ரவ்யமாயிருந்தது. "யஸ்யாத்மாஶரீரம் - யஸ்யாத்மாசரீரம்" "பதிம்விஶ்வஸ்ய-பதிம்விஶ்வஸ்ய" என்று ஓதப்படுகிறவன் உடையவன். உத்க்ருஷ்டமான வாத்மாவை "என்னது" என்கிறேன். (நள்ளேன் கீழாரோடு) ஆத்மாவை "என்னது" என்றிருக்குமவர்களாயிற்றுக் கீழாராகிறார்; அவர்களோடு கிட்டேன்; தங்கள்படி யாக்கிக்கொள்வரென்று. (உயவேனுயர்ந்தவரோடல்லால்)உத்தமரென்னுமவர்களோடல்லது உசாவேன். (வியவேன் திருமாலையல்லது) ஶ்ரியஃபதியைக்கண்டல்லது விஸ்மயப்படேன். (தெய்வமென்றேத்தேன்) அவனையல்லது வேறு சிலரைத் தெய்வமென்று ஸ்துதியேன்; (வியவேன் திருமாலை) ஶ்ரியஃபதியினுடைய வைஶ்வர்யத்தை யர்த்தவாதமென்கிறேன். (வருமாறென் என்மேல்வினை) "அவஶ்யமநுபோக்தவ்யம் - அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிறவசநத்தைக்கொண்டு என்பக்கலிலே வரப்போமோ பாபத்துக்கென்கிறார்.

(நயவேன்) வாக்யார்த்தம் க்ருத க்ருத்யனென்கிறார். எம்பெருமான் விரும்புமாத்மாவை யபஹரியேன். ராவணன் செயலைச்செய்யேன். கீழார்-அவனுக்குக் கூட்டுப்படும் மாரீசப்ரப்ருதிகள். உயர்ந்தவர்-விஶ்வாமித்ராதிகள். "மஹாத்மாநஸ்து - மஹாத்மாநஸ்து",

பெரியோர். (வியவேன்) "த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதயஃ - த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதயஃ" ப்ரஹ்மாதிகளைக்கண்டால் அடுப்படைக்கல்லாக நினைத்திருக்குமத்தனை. (திருமாலையல்லது வியவேன் - தெய்வமென்றேத்தேன் - வருமாறென்னென்மேல் வினை) "அவஶ்யமநுபோக்தவ்யம் - அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிறவை என்னைநலியவோ. (கூச)

அரு.—அறுபத்துநாலாம்பாட்டு.—உயவுகை-உசாவுகை. "பொருள்" என்றது உதாரத்துக்குபலக்ஷணமாக்கியருளிச்செய்கிறார் (ராவணனித்யாதி) உயர்ந்தவர்-மஹாத்மாக்களாய்ப் பெரியோராயிருக்கிற விஶ்வாமித்ராதிகள். (கூச)

வினையா லடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் - நினைதற்
கரியானைச் சேயானை யாயிரம்பேர், செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால். (கூ௫)

ப-உ.—நினைதற்கு - த்யாநிக்க, அரியானை - துர்லபனாய், சேயானை - தூரத்திலிருக்கிறவனாய், ஆயிரம்பேர் - ஸஹஸ்ரநாமங்களையுடையனாய், செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடையனாய், கரியானை - கறுத்த திருமேனியையுடையனானவனை, கைதொழுதக்கால் - கையினால் நமஸ்கரித்தால், வினையால் - கர்மங்களால், அடர்ப்படார் - நெருக்குப்படமாட்டார்கள்; வெம் - க்ரூரமான, நரகில் - நரகத்தில், சேரார் - செல்லமாட்டார்கள்; தினையேனும் - கொஞ்சமும், தீ - துஷ்டமான, கதிக்கண் - வழியில், செல்லார் - போகமாட்டார்கள். (கூ௫)

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டு.—(வினையித்யாதி) பாபத்தாலடர்க்கப்படார். (வெந்நரகில்சேரார்) பாபபலமானநரகிலும் சேரார். (தினையித்யாதி) தர்மபுத்ரன் நரகதர்ஶநம் பண்ணினவோபாதியுங்கூடாது இவர்களுக்கு. (நினைதற்கரியானை) ஸ்வ யத்நத்தாலே அறியப்போகாதவனை. (சேயானை) அதுக்கடிதூரஸ்தனானகை. (ஆயிரமித்யாதி) தான்கொடுத்த வறிவையுடையவர்களுக் கேத்துகைக்கு ஆயிரந்திருநாமத்தையும் கண் டநுபவிக்கைக்கு ஶ்ரமஹரமான வடிவையுமுடையவனை. (கைதொழுதக்கால்) அஞ்சலிபண்ணினால்.

(வினையாலடர்ப்படார்) என்னைப்போலே விதேயகரணமின்றியே பாவநமென்றுஸ்ரயித்தார்க்குப் பாபம்போம். (வினை) இங்கநுபவிக்கும் பாபபலமநுபவியார். (வெந்நரகு) போய் அநுபவிக்கும் பாபபலம். (தினை) அஸத்யாபாவத்தாலே. (நினைதற்கரியானை) ஸ்வயத்நத்தாலே நினைப்பார்க்கரியானை. (சேயானை) இவன்குற்றமன்று, வஸ்துஸ்வபாவம். (ஆயிரமித்யாதி) தானே காட்டுவார்க்கு இழிந்தவிடமெல்லாம் துறையாகை. (கைதொழுதக்கால்) பாலைக் குடிக்கநோய்போம். வகுத்தது செய்யவமையும். (கூரு)

அரு.—அறுபத்தைந்தாம்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (என்னைப்போலே யித்யாதி) விதேயகரணம் - "தோளவனை யல்லால் தொழா" என்கிறபடியே ப்ராப்யமாகப்பற்றுகை. "செங்கட்கரியான்" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (பாலைக் குடிக்கநோய்போமென்று). "கைதொழுதக்கால்" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (வகுத்ததித்யாதி). (கூரு)

காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த
மேலைத் தலைமறையோர் வேட்பனவும் - வேலைக்கண்
ஓராழி யானடியே யோதுவது மோர்ப்பனவும்
பேராழி கொண்டான் பெயர். (கூகூ)

ப-உ.—காலை - பால்யாவஸ்தையில், எழுந்து - கிளர்ந்து, உலகம் - லோகத்தார், கற்பனவும் - அப்யஸிக்குமவை யெல்லாம், கற்று -அப்யஸித்து, உணர்ந்த - அறிந்தவர்களாய், மேலை - உயர்த்தியையுடைய, தலை - ச்ரேஷ்டர்களான, மறையோர் - வைதிகர்கள், வேட்பனவும் - ஆசைப்படுவனவும், வேலை - கரையோடுகூடின, கண் - விசாலமான, ஓர் - ஒப்பற்ற, ஆழியான் - ஸமுத்ரதில் பள்ளிகொண்டவனுடைய, அடியே - பாதங்களையே, ஓதுவதும்-சொல்லுவதும், ஓர்ப்பனவும் - மநநம் பண்ணுவதும், பேர் - பெரிய, ஆழி - சக்ரத்தை, கொண்டான் - உடையவனுடைய, பெயர் - திருநாமங்கள். (கூகூ)

வ்யா.—அறுபத்தாறும்பாட்டு.—(காலையெழுந்து) ஸத்வோத்தரமானகாலத்திலே எழுந்திருந்து. (உலகம்) மோக்ஷேச்சையுடையவர்கள் கற்பனவும். (கற்றுணர்ந்தவித்யாதி) அறிவுதலைக்கட்டின

வர்கள் பாவநாப்ரகர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரிப்பனவும். (வேலையித்யாதி) இவற்றினுடைய ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலே கையுந்திருவாழியுமாய்க் கிடக்கிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளையே (பேராழிகொண்டான் பெயரே ஓதுவதும்ஓர்ப்பனவும்) ஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களே யிவர்களுடைய ஶ்ரவணத்துக்குமாநநத்துக்கும் விஷயமாவது.

(காலே) ஸத்வோத்தரமான காலம். (வேலைக்கணோராழியானடியே) கரையையுடைத்தாய் ஒப்பில்லாதகடல். (பேராழிகொண்டான்)இவர்களைரக்ஷிக்கைக் குருவினபத்திரமுந் தானுமாயிருக்கை. "கைகழலாநேமியான்." (௬௬)

அரு.—அறுபத்தாறும்பாட்டு.—மேலைத்தலைமறையோர் - உத்தரபாகத்தில் உபநிஷத்தாத்பர்யங் கைப்பட்ட ஜ்ஞாநாதிகர். (வேலைக்கண்) வேலை-ஸமுத்ரமாதல், கரையாதல். கண்-இடம். ஆழி - ஆயுதமாதல், ஸமுத்ரமாதல். (பேராழி) முந்தினது நிரூபகம்; இரண்டாவது ஆயுதம். பத்திரம்-ஆயுதம். (௬௬)

பெயரும் கருங்கடலே நோக்குமாறு, ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்
தருமனையே நோக்குமொண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கு முணர்வு. (௬எ)

ப-உ.—ஆறு - நதியானது, பெயரும் - சலிக்கிற, கரும் - விசாலமான, கடலே - ஸமுத்ரத்தையே, நோக்கும் - பார்க்கும்; ஒண் - அழகிய, பூ - தாமரைப்பூவானது, உயரும் - உயரத்தில் வரும், கதிரவனே - ஸூர்யனையே, நோக்கும் - விரும்பும்; உயிரும் - ப்ராணிகளும், (முடிவில்) தருமனையே - யமனையே, நோக்கும் - பார்ப்பர்கள்; (அப்படியே) உணர்வு - ஜ்ஞாநமானது, ஒண் - அழகிய, தாமரையாள் - தாமரைப்பூவில் வாஸம்பண்ணுகிற லக்ஷ்மிக்கு, கேள்வன் - வல்லபனான, ஒருவனையே - ஒருத்தனையுமே, நோக்கும் - விரும்பும். (௬எ)

வ்யா.—அவ.—அறுபத்தேழாம்பாட்டு.—(பெயரும்) மோக்ஷேச்சையுடையவர்களுக்கு மறிவு தலைநின்றவர்களுக்கும், அவனுடைய திருவடிகளை யேத்துவது, அவனுடைய திருநாமங்களையே

ஏத்துவது என்றுசொல்லிற்று, ஜ்ஞாநத்துக்கு அவனேவிஷயமாகை யாலே யென்கிறது.

(பெயருமித்யாதி) ஆறானது, பூர்ணமாய்ச் சலியாநின்றகடலையே நோக்கா நின்றது. ஆறுகடலை நிறைக்கைக்கன்று புகுகிறது; புக்கல்லது தான் தரிக்கமாட்டாமை. தாமரைப்பூவானது, தூரஸ்தனாகிலும் ஆதித்யனுக் கலருமத்தனை, அக்ந்யாதிகளுக்கலராது. (உயிரும் தருமனையேநோக்கும்) யமனைக்கிட்டியல்லது வேறோரிடத்தில் புக வொண்ணாது. (ஒண்தாமரையித்யாதி) ஜ்ஞாநமாகில் ஸ்ரியஃபதியை யறியுமத்தனை; மற்றொன்றையறியாது. "தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்" "வித்யாந்யாசில்பநைபுணம்" என்னும்படியே. (கூஎ)

உணர்வாரா ருன்பெருமை யூழிதோ றூழி
உணர்வாரா ருன்னுருவந் தன்னை - உணர்வாரார் [தப்
விண்ணகத்தாய்மண்ணகத்தாய் வேங்கடத்தாய்,நால்வே
பண்ணகத்தாய் நீகிடந்த பால். (கூஅ)

ப-உ.—விண்-பரமபதத்தை, அகத்தாய் - ஸ்தாநமாகவுடையவனே! மண்-பூமியடங்கின லீலாவிபூதியை, அகத்தாய்-ஸ்தாநமாகவுடையவனே! வேங்கடத்தாய் - திருமலையிலெழுந்தருளியிருக்கிறவனே! பண்-ஸ்வரப்ரதாநமான, நால்வேதம்-நான்குவேதங்களை, அகத்தாய் - இடமாகவுடையவனே! (அவைகளால் ப்ரதிபாதிக்கப்பட்டவனே) உன் - உன்னுடைய, பெருமை - மேன்மையை, ஊழிதோறூழி - காலமெல்லாம் கூடினாலும், உணர்வார் - அறியவல்லர், ஆர்-எவர்; உன் - உன்னுடைய, உருவந்தன்னை - ஸ்வரூபத்தை, உணர்வாரார் - அறியவல்லாரெவர்; நீ கிடந்த - நீ பள்ளிகொண்ட, பால் - க்ஷீரஸமுத்ரத்தை, உணர்வாரார் - அறியவல்லாரெவர். (கூஅ)

வ்யா.—அவ.—அறுபத்தெட்டாம்பாட்டு.—(உணர்வாரார்)கீழ் அஜ்ஞாநத்துக்கு விஷயமவனென்றது; உணரவரிதென்கிறது இப் பாட்டில்.

(உணர்வாராருன்பெருமை) "ஜுஷ்டம் யதா பச்யத்யந்யமீசம்" "ஜுஷ்டம் யதாபச்யத்யந்யமீசம்" என்கிறபடியே, குணங்களோடே கூடியிருக்கிற வுன்னை யுணர்வாராரென்கிறது. (ஊழியித்யாதி)

காலத்தையெல்லா மொருபோகியாக்கி உன்னுடைய ஸ்வரூபரூப குணங்களை யுணரப்புக்கால் உணரவரிதென்கிறது. (விண்ணகத்தாய் மண்ணகத்தாய்)ஸ்ரீவைகுண்டத்திலே யிருந்தநீ அவதாரரூபேண பூமியிலேவந்தவதரித்து அத்தாலே ஸௌலப்யத்தையுடையவனே! கடல்கிட்டிற்றென்னு பரிச்சேதிக்கப்போகாதிறே. (வேங்கடத்தாய்) ஸம்ஸாரிகளுடைய ஸகலதுரிதங்களும் போம்படி திருமலையிலே வந்து நிற்கிறவனே! (நால்வேதப்பண்ணகத்தாய்) ஸ்வரத்துக்குள் ளீடாய்நின்று ப்ரதிபாதிக்கிற வேதங்களுக்கு ப்ராவர்த்தகனானவனே! நீகிடந்தபால் உணர்வாரார்.

(உணர்வாராரித்யாதி) உன்னாலுமறியவொண்ணாது உன்னை ஸ்வர்யம். (ஊழிதோறூழியித்யாதி) காலமெல்லாங்கூடினாலும் ஸௌலப்யமறியவொண்ணாது. விண்ணகம் - அவதாரம், இவையென்கை. விண்ணகத்தானாய், பாற்கடலானாய், மண்ணகத்தானாய், வேங்கடத்தானாய் நின்றான். (நால்வேதப்பண்ணகம்) ஐஶ்வர்யம் ப்ரதிபாதிக்கிறது கண்ணுக்கு விஷயமிறே. மற்றையது இங்குச்சொல்லிற்று அநுவாதம் காண்கையாலே. [தஸ்யயோநிம் - தஸ்யயோநிம்] அவனுடைய பிறப்பு.* உயர்வற உயர்நலமுடையவன் பிறப்பிறே. [தீராঃ-தீராঃ] தீமதாமக்ரேஸராঃ - தீமதாமக்ரேஸராঃ. * மயர்வறமதிநலம் பெற்றார். [வரிஜாநந்தி - பரிஜாநந்தி.] க்ஷணந்தோறும் எத்திறமென்பர்.

அரு.—அறுபத்தெட்டாம்பாட்டு.—நீ கிடந்தபால் - பாவிலே நீகிடந்தது. ஏவமாதியெல்லா முணர்வாரா ரென்றபடி.

“உரு” என்று கண்ணுக்கு விஷயமாய் ஸௌலப்யம். கீழ்ச் சொன்ன பரத்வ ஸௌலப்யங்களுக்கெல்லையேதென்ன; அருளிச் செய்கிறார் (விண்ணகம் அவதாரமென்று) பரத்வ ஸௌலப்யங்களுக்கு ஜ்ஞாபகமேதென்ன; அருளிச்செய்கிறார் (மற்றையதிங்கித்யாதி) இவையெல்லார்க்குந் தோற்றவில்லையே யென்ன; ஜ்ஞாநாதிகர்க்குத் தோற்றுமென்கிறார் (காண்கையாலென்று) அப்படி கண்டார்களோ வென்ன; அருளிச்செய்கிறார் (தஸ்யயோநிம்-தஸ்யயோநிம் இத்யாதி) “ தஸ்ய ” என்று பரத்வம் “யோநிம்” என்று ஸௌலப்யம்.

(கூஅ)

பாலன் றனதுருவா யேழுலகுண்டு, ஆலிலையின்
மேலன்று நீவளர்ந்தது மெய்யென்பர் - ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு. (சுகூ)

ப-உ.—பாலன்றனது - பால்மாறுத முக்த சிசுவினுடைய, உருவாய் - திருமேனியையுடையனாய், ஏழுலகு - ஸப்தலோகங்களையும், உண்டு - அமுதுசெய்து, ஆலிலையின்மேல் - வடத்தின் தளிரில், அன்று - அக்காலத்தில், நீ - தேவரீர், வளர்ந்தது - கண் வளர்ந்ததை, மெய்யென்பர் - (வைதிகர்கள்) யதார்த்தமென்பர்கள் ; அன்று - அக்காலத்தில், ஆல் - வடமானது, வேலைநீர் - ஸமுத்ரஜலத்தில், உள்ளதோ - இருந்ததோ ? விண்ணதோ - ஆகாசத்திலிருந்ததோ? மண்ணதோ - பூமியிலிருந்ததோ? சோலை - தோப்புகளால், சூழ் - சுற்றப்பட்ட, குன்று - கோவர்த்தந பர்வதத்தை, எடுத்தாய் - தூக்கினவனே! சொல்லு - உரை. (சுகூ)

வ்யா.—அவ.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—(பாலன்) எல்லா மொழிய ஓரோவொன்றை யறியப்போமே யென்கிறது.

(பாலனித்யாதி) ரக்ஷகாபேக்ஷமான வடிவையுடையையாய். (ஏழுலகுண்டு) ஸ்வவ்யதிரிக்த ஸகலபதார்த்தத்தையும் ரக்ஷித்து. (ஆலிலையின்மேல்) ஸர்வர்க்கு மாதாரமான ஸர்வரக்ஷகனுக்குக் கண்வளரப்போகாத வாலிலையின்மேலே. (அன்றித்யாதி) அன்று வளர்ந்தத்தை ஆப்ததமரானவர்கள் மெய்யென்பர்கள். வேதமர்யாதையில்லையாகில் சூன்யமாதல், உண்டாகில் ஸத்யமாதலே யுள்ளது. (சோலையித்யாதி). ஏழுவயஸ்ஸிலே மலையைக் கீழ்மேலாக வெடுத்தநீ அவற்றைச் சொல்லவேணும். (அன்று) திக்கெல்லாமழிந்தவன்று. (வேலையித்யாதி) நீ கண்வளர்ந்த பாற்கடலுள்ளதோ, நிராலம்பநமானவாகாசத்ததோ, கரைந்துபோனபூமியிலதோ, சொல்லவேணும். பின்பு மலையெடுத்த வாச்சர்யமிதுக்கு ஸத்ருசமோ. இத்தால் அவன்றன்படியை யவன்றானேசொல்லுகையு மரிதென்றபடி.

(பாலன்றனதுருவாய்) பாலனுடைய ரூபத்தையுடையையாய். அப்ராக்ருதமாய் மஹத்தரமான திருமேனியைச் சிறுக்கி ஸஜாதீயமாக்குகை மெய்யென்பர் ருஷிகள். "எத்திறம்" என்ன ;"பொய்'

என்னவொண்ணுது. (மெய்) நீயே ஸர்வத்துக்கும் தாரகனுனமையும் மெய். இருந்தபடியென். (சோலையித்யாதி) ஏழுபிராயத்திலே பெரிய மலையையெடுத்த வாச்சர்யமுஞ் சொல்லவேணும். இது ஆழ்வார்வந்தால் கேட்கவிருந்தோமோ வென்ருனே எம்பெருமான். இது அத்யந்தம் விஸ்மயமென்கிருர். (சுகூ)

அரு.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—இவர்கள் “மெய்” என்கிறது, என்கொண்டென்ன ; அருளிச்செய்கிருர் (வேதமர்யாதையித்யாதி). வளர்ந்த - கண்வளர்ந்ததை.

இவர் “சொல்” என்கைக்கு அவன்ரு னிவர்வார்த்தைகேட்க ஆசைப்பட்டிருக்குமோவென்ன ; அருளிச்செய்கிருர் (இது ஆழ்வாரித்யாதி). கேட்கவிருந்தான்போலே யென்று வ்யாக்யாதா. (சுகூ)

சொல்லுந் தனையும் தொழுமின், விழுமுடம்பு
செல்லுந் தனையும் திருமாலை - நல்லிதழ்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தா லேத்துதிரேல் நன்று. (எo)

ப-உ.—திருமாலை - பிராட்டியோடு கூடின ஸர்வேஸ்வரனை, விழும் - நசிக்கத்தக்க, உடம்பு - சரீரமானது, செல்லுந்தனையும் - விழுமளவும், நல் - அழகிய, இதழ் - தளங்களையுடைய, தாமத்தால் - மாலையாலும், வேள்வியால் - யாகத்தாலும், தந்திரத்தால் - மந்த்ரமில்லாத க்ரியைகளாலும், மந்திரத்தால் - க்ரியையில்லாத மந்த்ரத்தினுலும், தொழுமின் - ஆஶ்ரயியுங்கோள். சொல்லுந்தனையும் - வாகிந்த்ரியம் நடக்குமளவும், நாமத்தால் - திருநாமங்களாலே, ஏத்துதிரேல் - புகழ்வீர்கோளாகில், நன்று - நல்லது. (எo)

வ்யா.—அவ.—எழுபதாம்பாட்டு.—இப்படி அபரிச்சிந்ந சக்தியானபின்பு அவனை யெல்லாருமாஶ்ரயியுங்கோளென்கிருர்.

(சொல்லுமித்யாதி) நாக்குச்சொல்லப் பாங்கானபோதெல்லாம்சொல்லி ஆஶ்ரயியுங்கோள். (விழுமுடம்பு செல்லுந்தனையும்) உடம்பு பாங்கானபோதெல்லாமாஶ்ரயியுங்கோள். (திருமாலை) பாங்கானபோதாஶ்ரயிக்க யாவதாத்மபாவி ஆஶ்ரயித்தாளுகக் கொள்ளும் பித்தனைச்சொல்லுகிறது. (நல்லிதழ்தாமத்தால்) நல்ல

செவ்விப்பூவையுடைய மாலையால்.(வேள்வியால்) செவ்விமாலை கிடையாதாகில் கர்த்தவ்யமான கர்மத்தாலே,அது கிடையாதாகில் அதுக்கடியான தந்த்ரத்தாலே, அடையப்போகாதாகில் மந்த்ரத்தைக் கொண்டு செய்வது ; க்ரியாரூபமான தந்த்ரமரிதாகில் வாக்வ்ருத்தியான மந்த்ரத்தாலே செய்வது. மந்த்ரத்துக்கு தேசகாலநியதியு மதிகாரி நியதியும் வேணுமென்றிருந்திகோளாகில் நாமத்தாலே எத்துவது. தாய்பேர்சொல்லக் குளித்துவரவேண்டாவிறே. (திருமாலை) நியதியுண்டென்னில், "அம்மே" என்னுமோபாதி சொல்லவமையும். (எo)

அரு.—எழுபதாம்பாட்டு.—விழுமுடம்பு.திருவடிகளிலேவிழுந்தாஶ்ரயியுங்கோள். வேள்வி - ஸ்வயமேவபண்ணுகை. மந்த்ரம் - சங்கையாய்ப்பண்ணுவிக்கை. க்ரியாரூபமான மந்த்ரம் - வேதமந்த்ரம். வாக்வ்ருத்தியானமந்த்ரம் - பகவந்மந்த்ரம். நியதி-விஷயநியதி. மிதுனமென்றபடி. (எo)

நன்று பிணி மூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலமுழுது மாண்டாலும் - என்றும்
விட லாழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடலாழி கொண்டான்மாட் டன்பு. (எக)

ப-உ.—ஆழி - கம்பீரமான, நெஞ்சமே - மனமே, பிணி - நோயையும், மூப்பு - கிழத்தனத்தையும், நன்று - செவ்வையாய், கையகற்றி - விட்டு, நான்கூழி - நாலுயுகங்களில், நின்று - ஸ்திரமாயிருந்து, நிலமுழுதும் - பூமியோடுகூடின அண்டமெல்லாம், ஆண்டாலும் - நிர்வஹித்தாலும்,அடல் - யுத்தத்தில் பின்வாங்காத, ஆழி - சக்ரத்தை, கொண்டான்மாட்டு - பிடித்தவனுடைய விஷயத்தில், அன்பு - ஸ்நேஹத்தை, என்றும்-எக்காலத்திலும், விடல் - விடாதே கொள் ; வேண்டினேன் கண்டாய், இரக்கிறேன் கிடாய். (எக)

வ்யா.—அவ.—எழுபத்தோராம் பாட்டு.—(நன்று) ஐஶ்வர்ய கைவல்யங்களில் புகாதே அவன்றன்னையே ஆசைப்படப்பாரென்கிறார்.

(நன்றித்யாதி) இத்தால் கைவல்யத்தைச்சொல்லுகிறது. நான்கூழியித்யாதி) ப்ரஹ்மாவினுடைய வைஶ்வர்யத்தைப் பெற்றாலும்

(ஆழிநெஞ்சமே) அளவுடைய நெஞ்சே! நீயே முற்பட்டிருக்கிற வுன்னை யிரக்கிறேனிறே. (அடலாழிகொண்டான் மாட்டன்பு - விடல்)விடாதே கொள். (வேண்டினேன் கண்டாய்)பால்குடிக்க இரக்கிறேனிறே. ஐஶ்வர்யம் நிலைநில்லாது; கைவல்யம் பகவத்கைங்கர்யத்தைப் பார்க்க அல்பமென்கை.

அன்றியே, இரண்டையும் சேர்த்துத்தரிலும், விடல் - இவை நன்றானவன்றும் விடுகைக்கு அவனல்லாமையையும், பற்றுகைக்கு அவனாகவமையும். (வேண்டினேன்) இவ்வர்த்தம். (அடலாழியித்யாதி) எனக்குக் கைக்கூலிதந்து பற்றும் விஷயம். (எக)

அரு.—எழுபத்தோராம்பாட்டு.—நன்றாக - ஸவாஸநமாக. பிணியையும் மூப்பையும் கையகற்றி-கைவிட்டு. நான்கூழி-நாலுயுகஸஹிதமாயிருக்கிறகாலம். "நின்று"என்கையாலே,ஐஶ்வர்யஸ்தைர்யத்தையும் "நன்று" என்று கைவல்யவைலக்ஷண்யத்தையுஞ் சொல்லி, இவற்றையென்று மாண்டாலும் அவனிடத்திலன்பு விடல் என்கிறார் (ஐஶ்வர்யமித்யாதி). (எக)

அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும் - முன்பூழி
காணானைக் காணென்னும் கண்செவி கேளென்னும்
பூணாரம் பூண்டான் புகழ். (எ௨)

ப - உ.—அன்பு - ப்ரீதிக்கு ஆதாரமான மநஸ்ஸு, ஆழியானை - திருவாழியுடையவனை, அணுகு - கிட்டு; என்னும் - என்று சொல்லும்; நா - வாகிந்த்ரியம், அவன்தன் - அவனுடைய, பண்பு - அழகுக்கு, ஆழி - ஸமுத்ரமாயிருக்கிற, தோள் - புஜங்களை, பரவி - பரக்கச்சொல்லி, ஏத்து - துதி; என்னும் - என்றுபேசும்; கண் - நயநேந்த்ரியம், முன்பு - பூர்வமுள்ள, (அபராதம் பண்ணின) ஊழி - காலத்தையும், காணானை - அறியாதவனை, காண் - பார்; என்னும் - என்றுசொல்லும்; செவி - ஶ்ரவணேந்த்ரியம், பூண் - அணியத்தக்க, ஆரம் - முத்துமாலையை, பூண்டான் - தரித்தவனுடைய, புகழ் - கீர்த்தியை, கேள்-ஶ்ரவணம்பண்ணு; என்னும்-என்றுசொல்லும். (எ௨)

வ்யா.—அவ.—எழுபத்திரண்டாம்பாட்டு.—(அன்பு) சிஷ்யர்கள் ஆசார்யர்களானார்கள்.

(அன்பு) என்று நெஞ்சைச்சொல்லிற்று. "அடலாழிகொண்டா ன்மாட்டன்பு - விடாதே" என்று திருவுள்ளத்தை யிரக்க, அதுவும் நீர் ஆழியானைவிடாதே கொள்ளுமென்கிறது. (நாவித்யாதி) நாவா னது அவனுடைய ஸௌந்தர்யஸாகரமான தோள்களை அக்ரமமாக ஏத்தென்னு நின்றது; முடியும்படி யாதொன்றறியாது காணும். (முன்பித்யாதி) ஸாபராதராயிருந்துள்ள நம்மாலவனைக் கிட்டப் போமோவென்னில்; ஓரடிவரநின்றால் குற்றமே யன்றியே குற்ற ங்கிடக்கும்நாளும் காணவறியானென்கிறது. (முன்பூழிகாணானை) அவனைக்காணும் என்னு நின்றது கண். (செவியித்யாதி) குற்றம் பார்த்துப் போகிறானாகிலும் விடப்போகாத ஆபரண சோபையையு டையனானவனுடைய புகழைக்கேளென்னு நின்றது செவி,

(ஆழியானை) ராஜபுத்ரர்களிடைச்சேரிக்கு மகப்படுமாப்போ லே. (பண்பு ஆழித்தோள்) ஸௌந்தர்யஸாகரமான. (பரவியேத்து) நீஏத்தும் க்ரமம் தப்பாமே. (முன்பித்யாதி) நாம் பண்ணிவைத்தபா பங்களை நினைத்துச் சீறிலோவென்னில்; பாபமும் கீழ்க்கிடந்த கால மும் மறக்கும். கண்கண்டவாறே தெரியுமிறே சீறிநோக்கும் நோக் கும், வாத்ஸல்யத்தாலே நோக்கும் நோக்கும். (செவிகேளென்னும்) செவிக்கு விக்ருதிசொல்ல அவஸரமில்லை. (பூணாரம்) ஆபரணமான உடம்புக் காபரணம். [ஸர்வ பூஷண பூஷார்ஹாः] மற்றையாபரணங்களுக் காபரணமென்றும். (பூண்டான்) பூணவல்லவழகு. (புகழ்) ப்ரஹ்மபூஷணம். (எஉ)

அரு.—எழுபத்திரண்டாம் பாட்டு.—கரணங்கள் கரணிக்குப தேசிக்கையாலே (ஆசார்யர்களானார்கள்) என்கிறது.

காண்கைக்கு ப்ரயோஜநமேதென்ன; அருளிச்செய்கிறார் (கண்கண்டவாறேயித்யாதி). கீழில்இந்த்ரியங்களைப்போலே அவனைச் சொல்லி, பின்னை இன்னபடி செய்யென்னாமல் கேவலம் "கேள் என் னும்" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (செவிச்கித்யாதி). விக்ருதிசொல்ல-தன்னுடைய பகதிக்கு விஷயஞ்சொல்ல அவஸர மில்லை யென்றபடி. முன்பு அவஸரமில்லாமையாலே பின்பு "பூணா ரம்பூண்டான்" என்று விஷயத்தைச்சொல்லிற் றென்றபடி. அன்றி க்கே, தன்னுடைய பக்தியாலே விஷயஞ்சொல்ல அவஸரமின்றியே, "கேள் என்னும்" என்னவுமாம். பூண் - திருமேனியாதல், மற்றை

யாபரணமாதல். ஆரம்-விக்ரஹபூஷணம். புகழ் - ஸ்வரூபபூஷணமெ ன்றபடி. ப்ரஹ்மம்-ஸ்வரூபம். (எ௨)

புகழ்வாய் பழிப்பாய் நீ பூந்துழாயானை
இகழ்வாய் கருதுவாய் என்னெஞ்சே - திகழ்நீர்க்
கடலு மலையு மிருவிசும்பும் காற்றும்
உடலு முயிரு மேற் றான். (எ௩)

ப-உ.—என்னெஞ்சே! என்னுடைய மனமே! நீ - நீ, பூம் - அழகிய, துழாயானை - திருத்துழாயாலே அலங்கரிக்கப்பட்டவனை, புகழ்வாய் - ஸ்தோத்ரம் பண்ணினாலும் பண்ணு; பழிப்பாய் - நிந்தித் தாலும் நிந்தி. இகழ்வாய் - அநாதரம் செய்தாலும் செய்; கருது வாய் - விரும்பினாலும் விரும்பு. (அந்த ஸர்வேஸ்வரன்) திகழ் - ப்ரகாசிக்கிற, நீர்-ஜலத்தையுடைய, கடலும்-ஸமுத்ரத்தையும், மலை யும் - பர்வதத்தையும், இரு - விசாலமான, விசும்பும் - ஆகாசத் தையும், காற்றும் - வாயுவையும், உடலும்-சரீரத்தையும், உயிரும் - ஆத்மாவையும், ஏற்றான் - தரித்தவன். (எ௩)

வ்யா.—அவ.—எழுபத்துமூன்றாம்பாட்டு.—(புகழ்வாய்) கீழ் தம்முடைய இந்த்ரியங்கள் ப்ரவணமானபடி சொல்லிற்று; அவ்விஷ யந்தானினியறிய ப்ராப்தமாயிருந்தது, நீ அத்தைப்பற்றிலும் பற்று, விடிலும்விடு என்கிறது.

(புகழ்வாய் பழிப்பாய்) புகழிலும் புகழ்; பழிக்கிலும் பழி.(இகழ் வாய்கருதுவாய்) இகழிலும் இகழ்; கருதிலும் கருது. (பூந்துழா யானை) பழித்தல், இகழ்தல் செய்யப்போமோவென்கிறது. (என்னெ ஞ்சே) நாட்டுக்குச் சொல்லுகிறேனோ; உனக்கன்றோ. (திகழ்நீர்கட லும் மலையும்) இரண்டாலுமாகக்கார்யத்தைச்சொல்லுகிறது. (இரு விசும்பும் காற்றும்) காரணபூதங்களுக்கு முபலக்ஷணம்.(உடலுமுயி ரும்) காரணமான சிதசித்துக்களைச் சொல்லுகிறது. (உடலுமுயிரு மேற்றான்) இத்தால் இவையெல்லாமவனுக்குக் கார்யதயாசேஷம், அவன் சேஷியென்கிறது.

அவை மத்யஸ்த்தமென்னும்படி தம்முடைய ப்ராவண்யம். (புக ழித்யாதி) வாசகத்துக்கு. (இகழ்வாய் கருதுவாய்) மநஸ்ஸுக்கு. (என்

னெஞ்சே) புகழ்ந்து பழகின நெஞ்சே. பூந்துழாயானைப்புகழ்ந்த ல்லது நிற்கவொட்டாது. (ஏற்றான்) ஆதாரத்தைப்பற்றிலும் பற்று, ஆதேயத்தைப்பற்றிலும் பற்று. இது இருந்தபடி. (எங)

அரு.—எழுபத்துமூன்றும்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவையித்யாதி). மத்யஸ்த்தமென்கிறது – தம்முடையகரணங்கள் இகழுகைக்கும் கருதுகைக்கும் பொதுவாயிருக்கும். தமக்குக் கருதுகை ப்ரயோஜநம். "ஏற்றான்" என்று சேஷித்வஞ் சொல்லுகையாலே ப்ராப்யம். ஏற்றான் - சரீரவத்தரித்தான் ஏற்றான்-ஆதாரபூதனென்றபடி. (எங)

ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்-கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான், நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. (எச)

ப-உ.—ஏற்றான் - எருதையுடையனாய், எயில் - மதிளையுடைய த்ரிபுரத்தை, எரித்தான் - கொளுத்தினவனாய், நீற்றான் - சாம்பல் பூசினவனாய், கூற்றொருபால் - (சரீரத்தில்) ஒருபக்கத்தில், மங்கையான் – பார்வதியைத் தரித்தவனாய், வார் - தொங்கின, சடையான் - சிக்குப்பட்ட மயிர்முடியையுடையனாய், கங்கையான்-கங்காநதியை ஏந்தினவனான ருத்ரன், புள் - கருத்மானை, ஊர்ந்தான் – வாஹநமாகவுடையனாய், மார்வு - (ஹிரண்யனுடைய) வக்ஷஸ்ஸை, இடந்தான் - பிளந்தவனாய், நிழல் – குளிர்ந்த (ஶ்ரமஹரமான), மணி - நீலரத்நம்போன்ற, வண்ணத்தான்-வடிவையுடையனாய், பூ - தாமரைப்பூவில் வஸிக்கிற, மகளான் – பிராட்டியையுடையனாய், நீள் - தீர்க்கமான, முடியான் – கிரீடத்தைபுடையனாய், நீள் - நீண்ட, கழலான்-திருவடியையுடையனான விஷ்ணுவினுடைய, காப்பு - ரக்ஷையாயிருக்கும். (எச)

வ்யா.—அவ.—எழுபத்துநாலாம்பாட்டு.—(ஏற்றான்) இது இவனுக்கேற்றமாகச்சொல்லுவானென் ; அல்லாத ருத்ரனு மிப்படி சேஷியாயன்றோ விருப்பதென்னில் ; அவனுடைய ப்ரகாரங்களைப் பார்த்தால் ரக்ஷ்யமாய்த்தோற்றும் ; இவனைப் பார்த்தால் ரக்ஷகனாயிருக்குமென்கிறது.

(ஏற்றான்புள்ளூர்ந்தான்) * வேதாத்மாவான திருவடியைத் தனக்கு வாஹநமாகவுடையனு யிருக்குமாகில், அவனப்ரஸித்தமாயிருப்பதொரு எருத்தை வாஹநமாக வுடையனுயிருக்கும். (எயிலெரித்தான்) ஆஶ்ரிதரை யொருவ்யாஜத்திலே யழிக்குமவன். (மார்விடந்தான்) ஆஶ்ரிதனுக்காகத் தன்னையழியமாறும் இவன். (நீற்றான்) "ஹஹஹஹ-பஸ்மச்சந்ந:" என்று ப்ராயச்சித்தம் பண்ணும் அவன். (நிழல்மணிவண்ணத்தான்) கண்டால் ஶ்ரமஹரமான வடிவு இவனது. (கூற்றொருபால் மங்கையான்) ஒரு ஸ்த்ரீயைத் தனக்கே வைத்துக்கொண்டிருக்கும் அவன். (பூமகளான்) "ஸுவேஶ்யா நாஜமதோவிஷ்ணு-பத்நீ-அஸ்யேசாநாஜகதோ விஷ்ணுபத்நீ" என்னுமவளைத் தனக்காக வுடையவன் இவன். (வார்சடையான்) ஸாதகவேஷன் அவன். (நீண் முடியான்) ஆதிராஜ்யஸூசகமான திருமுடியை யுடையவன் இவன். (கங்கையான்) பாவநார்த்தமாகக் கங்கையைத் தரித்துக்கொண்டிருக்கும் அவன். (நீள்கழலான்) அந்தத் தீர்த்தபூதையான கங்கைக் குத்பாதகமான திருவடியை யுடையவன் இவன். "ஏற்றான் - எயிலெரித்தான் - நீற்றான் - கூற்றொருபால் மங்கையான் - வார்சடையான்-கங்கையானுன அவன், புள்ளூர்ந்தான் - மார்விடந்தான் - நிழல்மணிவண்ணத்தான் - பூமகளான்-நீண்முடியான் - நீள்கழலான் காப்பு" அவனுடைய ரக்ஷையிவன். "உடலுமுயிரும்" என்றத்தோடு இவனோடு வாசியில்லை அவனுக்கு சேஷமாமிடத்தில். (எச)

அரு.—எழுபத்துநாலாம்பாட்டு.—எயில்-மதிளாய், த்ரிபுரம். நீற்றான். நீற்றையுடையவன். கூற்றொருபால் - லோகரக்ஷணார்த்தமாக வன்றியே தனக்கே கூறாகவென்றபடி. (எச)

காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள்
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும் - மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே, நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி. (எரு)

ப.உ.—உன்னை - உன்னை, உன்ன - த்யாநித்தால், காப்பு - ரக்ஷகரான யமன் முதலானுர், கழியும் - நீங்குவர்கள். உன்னையுன்ன - உன்னை யநுஸந்தித்தால், அரு-க்ரூரமான, வினைகள்-கர்மங்களின், ஆப்பு-பந்தம், அவிழ்ந்து - விட்டு, ஒழியும்-நசிக்கும். திரு-பிராட்டி

திறத்தில்,மாலே - வ்யாமோஹத்தையுடையவனே ! உன்னைச்சிந்திப்பார்க்கு - உன்னைத்யானம் பண்ணுமவர்களுக்கு, மூப்பு - கிழத்தனம் முதலானவிகாரங்கள், இல்லை - கிடையாது. நின் - உன்னுடைய, அடியை-பாதத்தை, வந்திப்பார் - நமஸ்கரிக்குமவர்கள், வழி - (அர்ச்சிராதி) மார்க்கத்தை, காண்பர் - பார்ப்பர்கள். (எரு)

வ்யா.—அவ.—எழுபத்தைந்தாம் பாட்டு.—(காப்பு) சேஷியாயிருந்துள்ள உன்னையுணர ப்ரதிபந்தகமெல்லாம் போமென்கிறது.

உன்னையுணரக் காப்புக்கழியும். "காப்பு" என்கிறது ஈஸ்வரனுக்குப் புரவர்போலே இவ்வாத்மாக்கள் செய்த கர்மங்களை யாராயக்கடவரான சந்த்ராதித்யர்கள் தொடக்கமான பதினலுபேருடைய சிறைகள். கர்மவஸ்யனுகையிறே இவர்கள் காக்கைக்கடி.(உன்னையுன்ன அருவினைகளாப்பு அவிழ்ந்தொழியும்) அக்காப்புக்கடியான அவித்யாதிகளாலுண்டான பந்தம் உன்னை நினைக்க நெகிழும். (மூப்பித்யாதி)காப்பு மருவினைகளும்போன வதிகாரிகளுக்கு, மூப்பாவது கைவல்யம். அன்றியே, ஷட்பாவவிகாரங்களுக்கு முபலக்ஷணமாகவுமாம். (திருமாலே) ஈச்வரன் ஸ்வாதந்த்ர்யத்தாலே ஆராயப்புக்காலும் ப்ராயச்சித்தஸாத்யமில்லாத பாபம் நாம்பொறுக்குமத்தனை யன்றோவென் றுணர்த்துவாளொருத்தி யருகேயுண்டென்கிறது. "தாஸீநாம்ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா! ராஜஸம்ஸ்ரயவஸ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா - தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா ! ராஜஸம்ஸ்ரயவச்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா" என்னும்படியே. (நின்னடியை வந்திப்பார்காண்பர்வழி) உன் திருவடிகளிலே விழுவார்கள் நல்லவழிகாண்பர். "வழி" என்று - அர்ச்சிராதியாகவுமாம். பரமபதம் போலேபரமபதத்துக்குப் போம்வழி; நரகம்போலே பொல்லாதாயிருக்கும் நரகத்துக்குப் போம்வழி.

(காப்பித்யாதி) "ப்ரபுரஹமந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம் - ப்ரபுரஹமந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம்" "தேவர்ஷி - தேவர்ஷி" இத்யாதி. (அருவினை) அவித்யாதிகளால் பிறக்கும் புண்யபாபங்கள். சரீரமான மூப்பு. (திருமாலே) "யுவாகுமார: - யுவாகுமார:" "யுவதிஸ்ச குமாரிணீ - யுவதிச்சகுமாரிணீ" என்கிறவும்

களை யாச்ரயித்தால் உங்களைப்போலே * பரமம் ஸாம்யமுபைதியி ரே - வந்தியாதார்க்கு முள்ளும் முடிக்குமானவழி. (எரு)

அரு.—எழுபத்தைந்தாம்பாட்டு.—புரவர்-தலையாரிகள். ஈச்வரனுடைய பட்டணமான லோகத்தைக்காக்கிற சந்த்ராதித்யர்கள். வழி-ஸித்தோபாயமாதல். "காண்பர்" என்கைக்கதிசயமென்னென்ன; அருளிச்செய்கிறார் (பரமபதமித்யாதி). காப்பு இங்குயமவச்யதையும் இதரசேஷமுமாக்கி யருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாஹம் - ப்ரபுரஹம் இத்யாதி). (எரு)

வழிநின்று நின்னைத் தொழுவார், வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர் - பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும், மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். (எசு)

ப-உ.—வழி - (பக்தி) மார்க்கத்தில், நின்று - (ஸ்திரமாய்) இருந்து, நின்னை - உன்னை, தொழுவார் - ஆச்ரயிக்குமவர்கள், வழுவா - அழிவில்லாத, மொழி - (வேதச்) சொற்களிலே, நின்ற - ப்ரதிபாதிக்கப்பட்ட, மூர்த்தியர் - ஸ்வரூபத்தையுடையவர்களாய், ஆவர் - ஆவர்கள். மண் - பூமியை, அளந்த - ஆக்ரமித்த, சீரான் - கல்யாண குணங்களையுடையவனே! திருவேங்கடம் - திருமலை, பழுதொன்றும் - ஒருகுறையும், வாராதவண்ணம் - ஸம்பவியாதபடி, விண் - பரமபதத்தை, கொடுக்கும் - தரும். (எசு)

வ்யா.—அவ.—எழுபத்தாறும்பாட்டு.—(வழிநின்று) உன்னைத் தொழுவார்பிழைப்பரென்று சொல்லவேணுமோ? உன்னோடு ஸம்பந்தித்த தேசமே எல்லா நன்மையும் கொடுப்பதாகவிருக்க வென்கிறது.

(வழிநின்று நின்னைத்தொழுவார்) "ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:-ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய ஶ்ரோதவ்யோமந்தவ்யோநிதித்யாஸிதவ்ய:"விஜ்ஞாயப்ரஜ்ஞாம் குர்வீத விஜ்ஞாயப்ரஜ்ஞாம் குர்வீத" "உபாஸநம் த்ருவாஸ்ம்ருதி: தர்சந ஸமாநாகாரதா ப்ரத்யக்ஷதாபத்தி: விசதே ததஃ நஞ்ச - உபாஸ நம். த்ருவாஸ்ம்ருதி: தர்சநஸமாநாகாரதாப்ரத்யக்ஷதாபத்தி: விசதே

ததநந்தரம்" என்னுமளவுஞ் சொல்லுகிறது. (வழுவாமொழி நின்ற மூர்த்தியரேயாவர்) யதாபூதவாதியானவேதத்திற் சொன்ன வடிவை யுடையராவர். "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே - பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்கிறபடியே. (பழுதித்யாதி)ப்ராப்ய ப்ராபகங்களொன்றும் குறையாதபடி பரமபதத்தைக்கொடுக்கும், திருவுலகளந்த சீர்மை யையுடையவனுடைய திருமலை. "மண்ணளந்த சீரான்" என்று ஸம்புத்தியாகவுமாம்.

(வழுவாமொழி) ஒருவர்க்கொருவர் ஓதுவித்துப்போருகை. (மூர்த்தியரே யாவர்) அதுக்கீடான ஸ்வரூபத்தையுடையராவர். (மண்ணளந்த சீரான்) அந்தஸ்வபாவமுண்டு திருமலைக்கு. எம்பார் விடிவோடே அநுஸந்திக்கும்பாட்டு. (எசு)

அரு.—எழுபத்தாறும்பாட்டு.—வழிநின்று-உபாஸநமார்க்கத்திலே நின்று. அதுக்கீடான-வேதோச்சாரணத்துக்கீடான. "ஹா ந உ ஹா ந உ ஹா ந உ, ஹாவு ஹாவு ஹாவு - அஹமந்நமஹமந்நமஹமந்நம்" என்று உச்சரிக்கைக்கீடான என்றபடி. (எசு)

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் - நான் கிடத்
நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தானே [தும்
என்றால் கெடுமாமிடர். (எஎ)

ப-உ.—வேங்கடமும் - திருமலையும், விண்ணகரும் - ஸ்ரீவைகுண்டமும், வெஃகாவும் - திருவெஃகாவும், அஃகாத - மாறாத, பூம் - புஷ்பங்களையுடைய, கிடங்கின் - அகழையுடைய, நீள் - தீர்க்கமான, (போக்யதையுடைய), கோவல் - திருக்கோவலூராகிற, பொன் - அழகிய, நகரும் - திவ்யநகரமும் (ஆன), நான் கிடத்தும் - இந்த நாலு திவ்ய தேசங்களிலும்,(க்ரமமாக) நின்றான் - நின்றருளினன்; இருந்தான் - எழுந்தருளியிருந்தான்; கிடந்தான் - பள்ளிகொண்டான்; நடந்தான் - ஸஞ்சரித்தான்; என்றால்-என்று சொன்னால், இடர்-துக்கம், கெடுமாம் - போம். (எஎ)

வ்யா.—அவ.—எழுபத்தேழாம்பாட்டு.—(வேங்கடமுமித்யாதி) உகந்தருளின தேசங்கள் பூமியிலே உண்டாயிருக்க, ஸம்ஸாரமுண் டோவென்கிறது.

(வேங்கடமுமித்யாதி) பூமாருதேயிருந்துள்ள அழகையுடைத் தான திருக்கோவலூரும். "விண்ணகரும்" என்று பரமபதத்தைச் சொல்லுகிறது. (நான் கிடத்துமித்யாதி) நான் கிடத்தும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தபடியையுஞ்சொல்ல,நின்றுமிருந்தும் கிட ந்தும் நடந்தும் செய்தபாப பரம்போமென்கிறது. (என்றால் கெடுமா மிடர்) தாய்பேர்சொல்ல க்லேசம்போமாப்போலே.

அவ.—நம்முடைய இடரானவை திருமலையை யாஶ்ரயிக்கப் போமோவென்னில; அநாதிகாலம் நம்மைப்பெறுகைக்கு அவன் படு கிறபாட்டை யநுஸந்தியாய்.

(நடந்தானே) (வேங்கடமும் விண்ணகரும்) இவர்களுக்கெல் லாம் ஒரு போகியாயிருக்கிறபடி. (பொன்னகர்)தானே வந்துநோக் கினவிடம். (எஎ)

அரு.—எழுபத்தேழாம்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச் செய்கிறார் (நம்முடையவித்யாதி). திருப்பதிகளைச் சொல்லுகிறவி டத்திலே பரமபதத்தைச்சொல்லுவானென்னென்ன; அருளிச்செய் கிறார் (பொன்னகர்தானேயித்யாதி). (எஎ)

இடரார் படுவா ரெழு நெஞ்சே, வேழந்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த - படமுடைய
பைந்நாகப்பள்ளியான் பாதமே கைதொழுதும்
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு. (எஅ)

ப-உ.—வேழம்-யானையை, தொடர்வான் - பின்சென்ற,கொடு - க்ரூரமான, முதலை - மகரத்தை, சூழ்ந்த - அழித்தவனாய், படமு டைய - பணத்தையுடைத்தான, பை - பரந்த, நாகம் - திருவநந் தாழ்வானை, பள்ளியான் - படுக்கையாகவுடையனானவனுடைய, பாதம் - திருவடிகளை, கொய் - அறுக்கத்தக்க, பூம் - அழகிய, நாகம்- புன்னையினுடைய, போது - பூக்களை, கொண்டு - ஸம்பாதித்து,

கைதொழுதும் - ஆஶ்ரயிப்போம். இடர் - துக்கத்தை, ஆர் - எவர், படுவார் - அநுபவிப்பார்; நெஞ்சே-மனமே, எழு-எழுந்திரு. (எஅ)

வ்யா.—அவ.—எழுபத்தெட்டாம்பாட்டு.—(இடரித்யாதி)* நீ துக்கப்படுகைக்கு சங்கையுண்டோவென்னில்; போராய்நெஞ்சே! இனி நம்பக்கலிடர் வந்ததாகில் முதலைபட்டது படுமித்தனை.

(வேழமித்யாதி) ஆனையைத் தொடருவதான கொடிய முதலையை முடித்த, "சூழ்ச்சி" என்று வஞ்சித்தலாய், முடித்தவென்றபடி. (படமித்யாதி) இத்தால்அநாஶ்ரிதர் வந்தாலும் ஆஶ்ரிதர் வந்தாலும் அவனிருக்கும்படிசொல்லுகிறது. (கொய்ந்நாக மித்யாதி) கொய்யப்பட்டுச் செவ்வியையுடைய நாகப்பூவைக்கொண்டு "பைந்நாகப்பள்ளி யான்பாதமேகைதொழுதும் - இடரார்படுவார் - எழுநெஞ்சே" என்றந்வயம்.

(எழு) போது. "நாகப்பூ" என்கையாலே அப்ராக்ருத புஷ்பம் தேடிப்போகவேண்டா, காட்டிலொரு பூவமையுமென்கிறது. இவர்கள் என்றும் காட்டிலேயிறே பழகிற்று. (எஅ)

அரு.—எழுபத்தெட்டாம் பாட்டு.—ஆஶ்ரிதர்-திருவநந்தாழ்வான். அநாஶ்ரிதர்-முதலை. நாகப்பூ-புஷ்பவிசேஷம். காட்டிலே திரிகையாலே (காட்டுப்பூ) என்கிறார்கள். (எஅ)

கொண்டானையல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார்
மண்தா வெனவிரந்து மாவலியை - ஒண்தாரை
நீரங்கைதோய நிமிர்ந்திலையே, நீள்விசும்பி
லாரங்கை தோயவடுத்து. (எகூ)

ப-உ.—மண் - பூமியை, தாவென - கொடு என்று, மாவலியை - மஹாபலியை, இரந்து - யாசித்து, ஒண் - அழகிய, தாரைநீர் - தாரையாகவிட்ட ஜலமானது, அம் - அழகிய, கை - கரத்திலே, தோய - விழுந்தஉடனே, நீள் - பரந்த, விசும்பிலார் - ஆகாசத்தில் வர்த்திக்கிற தேவர்களுடைய, அம் - அழகிய, கை - கரமானது, தோய - உறையும்படி, அடுத்து - கிட்டி, நிமிர்ந்திலையே - வளரவில்லையோ? கொண்டானை - (தாநம்) வாங்கினவனை, பழிப்பாரல்

(பா) * இனி.

லால் - நிந்திப்பார்களேயொழிய, கொடுத்தாரை - (தாநம்) கொடுத்த வனை, பழிப்பாரார் - ஆர்நிந்திப்பர்கள். (நிந்திக்கமாட்டார்களே என்று கருத்து). (எகூ)

வ்யா.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—(கொண்டானை) குண மே குற்றமாம், குற்றம்குணமாங் கிடீர் ஸம்ஸாரம். ராவணனோ பாதி வத்யனாயிருக்க ஔதார்யகுணம் இவன் பக்கலிலே கிடக்கையாலே தன்னதான பூமியை யவனுக்காக மேலெழுத்திட்டு அவன் கொடுத் தானாக இவன் கொண்டதத்தை, தன்கையிலே நீர்வார்த்தவனைப்பாதா ளத்திலே தள்ளினானென்று பழிசொல்லா நிற்பர்கள். தன்னதல் லாத பூமியைத் தன்னதென்று கொடுத்தவனையிறே நெல்வாவிலே வைத்துத் தெறிக்கவேண்டுவது. அவனைப் பழிசொல்லுவாரில்லை. (கொண்டானையித்யாதி) ஆரத்தை யிரக்கிறானோவிவன். (ஒண்டாரை யித்யாதி) அலப்யலாபம் பெற்றாரைப்போலே, "வஷேஷ்ணவீஜம் வ்ருதிஸஂஜஹஷ்ஃ - வர்ஷேணபீஜம்ப்ரதி ஸஞ்ஜஹர்ஷ" என்னு மாப்போலே. அழகிய கையிலே நீர்விழுங் காட்டில் வளர்ந்திலேயோ. (நீள்விசும்பித்யாதி) பரந்த விசும்பிலே ஆரமும் கையுமடுத்துத் தோயும்படிக்கீடாக. அன்றிக்கே, நீள்விசும்பிலார்-விசும்பிலுள்ளார் அழகிய தோளிலே யணையவென்றுமாம். நாமாஶ்ரயிக்கவேணுமோ, தானே அர்த்தியாய. நானர்த்தியோவென்ன; (நிமிர்ந்திலேயே).

(கொண்டானை யல்லால்) தன்னதென்று கொடுக்கப் புகுமா கில் நமக்கிதில் ப்ராப்தியில்லையென்று * இருந்தாலாகாதோ என் றிருக்க, அது குணமாகை தவிர்ந்து நிற்கைக் குடலாவதே. பையலை நெல்லிலேவைத்துத் தெறிக்கவேணுமென்பாருண்டாயிற்றே. ஆறி யப்பட்டான். (மண்தாவென) தன்னதிலேகதேசத்தை (மாவலியை) அஸுரனைக்கிடீர். (நீர்தோய நிமிர்ந்திலேயே) மறுமாஸ்ஸுப் படு மென்று அப்போதே. (நீள்விசும்பிலாரங்கை தோயவடுத்து) ஆஶ் ரயிக்க நிமிர்ந்திலேயே யென்றுமாம். (எகூ)

அரு.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—நெல்வாவிலே-வாலானநெ ல்லின்நுனியிலே. பரமத்திலே சிறுகச்சிறுக வறுத்துத் செறிக்கவே ணுமென்றபடி. ஆர்பழிப்பார் - ஒருவரும்பழிக்கிறார்களில்லை. ஒண்தா

(பா) * இரந்தாலாகாதோ வென்றிரக்க அது நிந்திக்கைக் குட லாவதே.

ரை - ஒள்ளியதாரை ; தெளிந்தஜலம். ஆரத்தையுடையமார்வும் கையையுடைய தோளும் அகித்துக்கூட்டி ஆகாசத்தைக்கிட்டும்படிக் கீடாக என்னுதல்.அர்த்தியாயன்றே செய்தானென்று தாத்பர்யம்.

வாமநன்கருத்தை யருளிச்செய்கிறார் (தன்னதென்றித்யாதி). இதில் ப்ராப்தியில்லை - பூமி என்னதென்று பலி சொல்லுமதில் விசாரிக்கப்ராப்தியில்லை. ப்ரயோஜநமே போருமென்றிருந்தான். அடுத்துத்தோய-கூட்டித் தோய ஸ்பர்சிக்க."ஸஜௌஸ-ாணாமு-ஸங்கைஸ்ஸ-ாணும்" என்னும்படி எல்லாருமாஸ்ரயிக்கநிமிர்ந்திலையே யென்றுமூன்றுமர்த்தம். (எகூ)

அடுத்த கடும் பகைஞர்க் காற்றேனென்றோடி
படுத்த பெரும்பாழி சூழ்ந்த - விடத்தரவை
வல்லாளன் கைகொடுத்த மாமேனி மாயவனுக்கு
அல்லாது மாவரோ ஆள். (அ௦)

ப.உ.—அடுத்த - நெருங்கின (ஸஹஜமான), கடும் - கொடிதான, பகைஞர்க்கு - த்வேஷத்தையுடைய (பெரிய திருவடிக்கு), ஆற்றேன் - பொறுக்கமாட்டேன், என்று - என்று, ஓடி - சீக்ரமாய்ச் சென்று, படுத்த - விரித்த, பெரும் - மஹத்தான, பாழி - படுக்கையை, சூழ்ந்த - சுற்றிக்கொண்ட, விடத்து - விஷத்தையுடைய, அரவை - (ஸு-முகனென்கிற) ஸர்பத்தை, வல்லாளன் - பலவானான கருத்மானுடைய, கை - கரத்திலே, கொடுத்த - (ரக்ஷிக்கும்படி)ஸமர்ப்பித்தவனாய், மா - சிறந்த, மேனி - விக்ரஹத்தையுடையனாய், மாயவனுக்கல்லாது - ஆச்சர்ய பூதனானவனுக்கொழிய, ஆளாவரோ - அடிமையாவர்களோ. (அ௦)

வ்யா.—அவ.—எண்பதாம்பாட்டு.—(அடுத்த) பரிஹாரமில்லாத ஆஸ்ரிதவிரோதம் பிறக்கிலும் அவர்களைப் பொறுப்பித்து புருஷகாரமாக அவர்களைக் †கைக்கொண்டு ரக்ஷிக்குமென்கிறது."ஸுஹயமு-அபயம்", என்று புகுந்த ஸ்ரீவிபீஷணப் பெருமாளை "புகுரவொட்டோம்." என்றவரைப்பொறுப்பித்து,"ஆநயைநம் ஹரிஸ்ரேஷ்ட-ஆநயைநம்ஹரிஸ்ரேஷ்ட" என்றுஅவரைக்கொண்டழைப்பித்தார்

(பா) † கொண்டு.

போலே, பாதாளத்திலே ஸுமுகனென்றொரு ஸர்பத்தைப் பெரிய திருவடியமுதுசெய்ய நினைக்க, அத்தையறிந்துஸ்வர்க்கத்திலேஉபேந்த்ரமூர்த்தியா யெழுந்தருளியிருக்கிற விடத்திலே திருப்பள்ளிக்கட்டிலைக் கட்டிக்கொண்டு கிடக்க, திருவடி பாதாளத்திலே சென்று தேடிக்காணமல் திருவடிகளிலே வந்து இவன் கிடக்கிறபடியைக் கண்டு * சிவிகையார்சொல்லும் வார்த்தையை விண்ணப்பஞ்செய்ய, திருவாழியை இவன்கையிலேகொடுத்து பலத்தை க்ஷயிப்பிக்க, பின்பு திருவடி ஸ்தோத்ரம்பண்ண, க்ருபைபண்ணித் திருவடிகையிலே † அடைக்கலமாகக் காட்டிக்கொடுத்து ரக்ஷித்தானென்கிற உபாக்யாநத்தை யநுஸந்தித்தருளிச் செய்கிறார்.

(அடுத்தவித்யாதி) அடுத்த-ஸஹஜசத்ரு. (கடும்பகைஞன்) திருவடியோடு விரோதங்கொண்டால் பிழைக்கப்போகாதென்கை. (ஆற்றேனென்றோடி) "பாழி" என்று - படுக்கைக்குப்பேர். (சூழ்ந்த) சுற்றின. (விடத்தரவை) சரண்யனுக்கு க்ருபாவிஷயமென்கிறது. (வல்லாளன்கைகொடுத்த) ப்ரஸந்நனனபோது அவனைப் பொறுக்கமாட்டேனென்னாதே ரக்ஷிக்கவல்லனானவன் கையிலே காட்டிக்கொடுத்த. (மாமேனி) காட்டிக்கொடுத்தபின்பு வடிவிற்பிறந்த பௌஷ்கல்யம். (மாயவனுக்கித்யாதி) எல்லாவவஸ்த்தையிலும் விட்டுக்கொடாத ஆச்சர்யபூதனுக்கொழிய வேறொருவருக்காளாவரோ.

அவ.—"நக்ஷஶாமி - நக்ஷமாமி" என்னும் தப்புக்குப் போக்கடி காணவல்லனென்கிறார்.

(வல்லாளன்) நலியநினைக்கில் அத்தைவெல்லவல்லாருமில்லை; ரக்ஷிக்கநினைக்கில் அத்தைத் தடுக்கவல்லாருமில்லை. (அல்லாதுமாவரோ ஆள்) ஆஶ்ரிதவிரோதியென்று கைவிடவேண்டும் விஷயத்தையும் பொருத்திவிட வல்லவனையொழிய. கடித்தவாயாலே தீர்க்கை. $ "வத்யதாம் - வத்யதாம்" என்ற வனையே. "ஸுஹ்ருத்ஸு - ஹ்யோஹவது-அஸ்மாபிஸ்துல் யோபவது" என்னப்பண்ணுகை.

(அடுத்த) ஸஹஜசத்ருவினுடையஸத்தையுண்டாகில்பகையாயேயிருக்கும். (கடும்பகை) பேர்சொல்ல முடியும்படி கொடிதாகை

---

* சிவிகையார் - பல்லக்குத் தூக்குகிற ஓர் நீசஜாதி.

† அடைக்கலமாக - புகலிடமாக.

$ வத்யதாம் என்று அரும்பதத்துக்கு பாடமில்லை.

யும். (பெரும்பாழி) இந்த்ராநுஜன்படுக்கை. திருப்பாற்கடலாகவு மாம். (அ0)

அரு.—எண்பதாம்பாட்டு.—விடத்தரவை - விஷத்தையுடைய தென்கையாலே க்ருபாவிஷயம் தோஷயுக்தமென்றபடி. வல்லாளன்- ஜ்ஞாநாதிக்யத்தால் வந்தமிடுக்கு.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (நக்ஷமாமி - நக்ஷமாமி இத்யாதி)-என்றவரையே. "வத்யதாம் - வத்யதாம்" என்றவரையே.

ஆளமர்வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று
வாளமர்வேண்டி வரைநட்டு - நீளரவைச்
சுற்றிக்கடைந்தான் பெயரன்றே, தொல்நரகைப்
பற்றிக்கடத்தும் படை. (அக)

ப-உ.—ஆள் - ஜனங்களால், அமர் - பொருந்தின, வென்றி - ஜயத்தையுடைய, அடுகளத்துள் - யுத்தஸ்தாநத்தில், அஞ்ஞான்று - அக்காலத்தில், வாள் - ஒளியையுடைய, அமர் - யுத்தத்தை, வேண்டி - அபேக்ஷித்து, வரை - (மந்தரமென்கிற) மலையை, நட்டு - நாட்டி, நீள் - நீண்ட, அரவை - (வாஸுகியாகிற) ஸர்பத்தை, சுற்றி - சூழ்த்து, கடைந்தான் - மதித்தவனுடைய, பெயரன்றே - திருநாமமன்றோ, தொல் - அநாதியான, நரகை - நரகத்தை, பற்றி - பிடித்துக்கொண்டுபோய், கடத்தும் - தாண்டிவைக்கும், படை-ஸாதநம்.

வ்யா.—அவ.—எண்பத்தோராம் பாட்டு.—(ஆளமர்) ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட உடம்புநோவக் கடலைக்கடைந்து அம்ருதம் கொடுத்து அவர்களைச் சாவாமல் காத்தவனுடைய பேரன்றோ அநாதியான நரகத்தினின்றும் கைப்பிடித்தேறவிடும் பரிகாரமென்கிறார்.

(ஆளமரித்யாதி) அமர்ந்து - நிறைந்து. ஆள்நிறைந்து வென்றியையுடைத்தாய் முடிப்பதானயுத்தஸ்தலத்திலே. (வாளமர்வேண்டி) மதிப்புடைத்தான பூசலை வேண்டி மந்தரத்தைநட்டு (அஞ்ஞான்று) அஸுரர் தேவர்களை முறிக்து வாயிலிட்டுச் செல்லுகிறவன் ந. (வாளித்யாதி) தேவர்களுக்கு மதிப்பும் ஆயுஸ்ஸு முண்டாகும்படி. (நீளரவை) சேதநத்தை. (பற்றிக்கடத்தும்படை) அள்ளியெடுத்துக்

கொடுபோய் பரமபதத்திலே வைக்கும். (பற்றி) "அல்லேன்" என்று லும்விடாது. (அக)

அரு.—எண்பத்தோராம்பாட்டு.—"வாள்" என்று ஒளியாய், அத்தால்மதிப்பை யுடைத்தாகை. தேவர்களுக்குவெற்றியையுடைய பூசலென்றபடி. அமர்-பூசலாதல், ஆயுஸ்ஸாதல். படை-ஸாதநம். (அக)

படையாரும் வாள்கண்ணார் பாரசிநாள், பைம்பூந்
தொடையலோ டேந்திய தூபம்- இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே, மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. (அ௨)

ப-உ.—படை - (வேலென்கிற) ஆயுதத்தோடு, ஆரும் - ஸமானமான, வாள் - ஒளியையுடைய, கண்ணார் - நேத்ரங்களையுடையபெண்கள், பாரசிநாள் - த்வாதசியன்றைக்கு, பை - அழகிய, பூ-புஷ்பங்களுடைய, தொடையலோடு - மாலைகளோடுகூட, ஏந்திய - தரித்த, தூபம் - புகையானது, இடையிடையில் - நடுநடுவே, மீன் - நக்ஷத்ரங்களோடுகூடின ஆகாசம், மாய - மறையும்படி, மாசூணும் - அழுக்கடையும்படி பண்ணுநிற்கும், வேங்கடமே - திருமலையே, மேலொருநாள் - முன்பொருகாலத்தில், மான் - மான் என்னும் ம்ருகம், மாய-மடியும்படி, எய்தான் - அடித்தவனுடைய, மலை - பர்வதம். (அ௨)

வ்யா.—எண்பத்திரண்டாம்பாடு.—(படையித்யாதி) வாள்போன்ற ஒளியையுடைத்தான கண்களையுடையரான ஸ்த்ரீகள். (பாரசிநாள்) த்வாதசிநாள். (பைம்பூமித்யாதி) அழகிய தாகத்தொடுத்த மாலையோடே யேந்தினதூபம். (இடையிடையிலித்யாதி) பூக்களோடேகூடின புகையானது, ஆகாசத்திலே கலக்கத்தோற்றின நக்ஷத்ரங்களை மாசூணப்பண்ணுநின்றது. (மேலொருநாளித்யாதி) பண்டொருநாள் ராக்ஷஸன் மாயாம்ருகமாய்வர, "இத்தைப் பிடித்துத் தரவேணும்" என்று பிராட்டியருளிச்செய்தது மறுக்கமாட்டாமே அத்தை முடித்தவனுடையமலை.

அவ.—இப்பாட்டாலே ஸர்வஸமாஸ்ரயணீயத்வமும் ஆஸ்ரித பாரதந்த்ர்யமுஞ் சொல்லுகிறது.

(வாள்கண்ணார்) தங்களைச் சிலர் ஆஸ்ரயிக்க விருக்குமவர்கள். (மீன்மாய) ஆகாசந் தோற்றுதபடி பூக்களும் புகையுமாகத் தோற்று கை. (மானித்யாதி) பிராட்டிக்கு நியாம்யனானாற்போலே நியாம்யனு ய்ப்புக்கு, தன்ன நர்த்தமென்று மீளாது கார்யஞ்செய்யுமவன். (அஉ)

அரு.—எண்பதிரண்டாம்பாட்டு.—பார் - பூமி. அசிநாள் என் கையாலே (த்வாதசிநாள்) என்கிறது. (அஉ)

வரைகுடை தோள்காம்பாக ஆநிரைகாத்து, ஆயர்
நிரைவிடையேழ் செற்றவாறென்னே - உரவுடைய
நேராழியுட்கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்டபிரான். (அங)

ப-உ.—உரவுடைய-பலத்தையுடைய, நீர் - ஜலத்தையுடைய, ஆழியுள் - ஸமுத்ரத்துக்குள், கிடந்து - பள்ளிகொண்டு, நேரா - எதிரிட்ட, நிசாசரர்மேல்-அஸுரர்களான மது கை டபர்கள்மேலே, பேர் - பெரிய, ஆழி - சக்ரத்தை, கொண்டான் - எடுத்த, பிரான் - உபகாரகனே! வரை - மலை, குடையாக - சத்ரமாகவும், தோள் - புஜம், காம்பாக - ஆதாரதண்டமாகவும் (செய்து), ஆநிரை - பசுக் கூட்டங்களை, காத்து-ரக்ஷித்து, ஆயர் - இடையரை (முன்னிட்ட), நிரை - திரண்ட, விடையேழ் - ஏழுஎருதுகளையும், செற்றவாறு - அழித்தப்ரகாரம், என்னே - எங்ஙனே. (அங)

வ்யா.—எண்பத்துமூன்றும்பாட்டு.—(வரையித்யாதி) மலை குடை யாகவும், தோள்காம்பாகவும், பசுக்களைக்காக்க. (ஆயரித்யாதி) நப் பின்னைப்பிராட்டிக்கு ப்ரதிபந்தகமானஏழுவ்ருஷபத்தையும் முடித்த படி எங்ஙனே. (உரவுடைய வித்யாதி) "உரவு" என்று மிடுக்குக்குப் பேர். ஸர்ப்பமென்றுமாம். திருப்பாற்கடலிலே கிடந்து. (நேராவித் யாதி) எதிரான மதுகைட்பர் மேலே திருவாழியை வாங்கின உபகா ரகன். இத்தால் ஆஸ்ரிதர்க்கு விரோதம் வந்தபோது தன்னுடம்பு நோவக்கார்யம் செய்யுமென்றபடி.

ஒருசெயலேயோ. (வரையித்யாதி) வந்ததுக்குத் தக்கது கொ ண்டு கார்யஞ்செய்வதே. (உரவுடைய நீர்) * முதுநீர். (பேராழியித்

* முதுநீர் - வலிவையுடைய ஜலம்

யாதி) கையில் திருவாழியைக்கொண்டு இந்த்ரன் நோவாதபடி உன் தோள் நோவ ரக்ஷிப்பதே. (அங)

அரு.—என்பத்து மூன்றும்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறுர் (ஒரு செயலேயோ வென்று). (அங)

பிரானுன் பெருமை பிறராரறிவார்
உராயுலகளந்த நான்று - வராகத்
தெயிற்றளவு போதாவாறென்கொலோ, எந்தை
யடிக்களவு போந்தபடி (அச)

ப-உ.—பிரான் - உபகாரகனே ! உராய் - ஶ்ரமமின்றி, உலகு- பூமியை, அளந்தநான்று - ஆக்ரமித்த காலத்தில், எந்தை - என்ஸ்வாமியான உன்னுடைய, அடிக்கு - பாதத்துக்கு, அளவுபோந்த - ப்ரமாணமாய்ச் சரிப்பட்ட, படி - பூமியானது, வராகம் - ஏனமான உன்னுடைய, எயிற்றளவும் - கொம்புக்கும், போதாவாறு - பூர்ணமாகாதபடி, என்கொலோ - எங்ஙனே!. (ஆனபின்பு), உன் - உன்னுடைய, பெருமை - ஆதிக்யத்தை, பிறர் - வேறொருவர், ஆர் - எவர்- அறிவார் - தெரிந்துகொள்வர்கள். (அச)

வ்யா.—எண்பத்துநாலாம்பாட்டு.—(பிரானித்யாதி) உபகாரகனை வுன்னுடைய பெருமையை வேறுசிலராலறியப்போமோ. (உராயித்யாதி) "உராய்" என்று, பட்டர் "அநாயாஸேந அளந்தவன்று" என்றருளிச்செய்தார். உலாவியென்றுமாம். பூமியிலே பொருந்த விட்டென்னிலுமாம். (எந்தையடிக்களவு போந்தபடி வராகத்தெயிற்றளவு போதாவாறென்கொலோ) ஒருநாள் திருவடிக்குள்ளடங்கியது திருவெயிற்றுக்குப் போந்ததில்லையென்கிறது. ரக்ஷ்யத்தினளவன்று ரக்ஷகன் பாரிப்பு. நானொருவனுமே உன் குணங்களிலே குமிழ் நீருண்ணுகின்றேன். (அச)

அரு.—எண்பத்துநாலாம்பாட்டு.—உராய் - அநாயாஸமாதல்; உரோசியென்றாய் - பூமியிலே பொருந்த விட்டென்னுதல். "என்கொலோ - பிறராரறிவார்" என்கையாலே (நானொருவனுமேயென்கிறது). (அச)

படிகண்டறிதியே பாம்பணையினான், புள்
கொடிகண்டறிதியே கூறாய் - வடிவில்
பொறியைந்து முள்ளடக்கிப் போதொடு நீரேந்தி
நெறிநின்ற நெஞ்சமே நீ. (அரு)

ப-உ.—நெஞ்சமே - மநஸ்ஸே! பொறியைந்தும் - இந்த்ரியங்களைந்தையும், வடிவில் - சரீரத்தினுடைய, உள் - உள்ளே, அடக்கி-நியமித்து, போதொடு - புஷ்பங்களோடுகூடி, நீர் - ஜலத்தை, ஏந்தி-தரித்து, நெறி - வழியில், நின்ற - ஸ்திரமான, நீ - நீ, பாம்பணையினான்-திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனுடைய, புள்-பக்ஷியாகிற, கொடி - த்வஜத்தை, கண்டு - பார்த்து, அறிதியே - அநுபவித்தாயோ? படி - திருமேனியை, கண்டறிதியே - பார்த்தநுபவித்தாயோ? (இல்லையே என்று கருத்து). (அரு)

வ்யா—அவ.—எண்பத்தைந்தாம்பாட்டு.—"பிறராரறிவார்" * என்பாரைத்தம்முடைய திருவுள்ளம் நானறிந்திருக்க வென்ன; நீயும் இந்த்ரிய ஜயம்பண்ணி ஆஶ்ரயணத்திலே யிழிந்தாயல்லது ஸாக்ஷாத்கரித்தாயோ வென்கிறார்.

(படியித்யாதி) திருமேனி கண்டறிதியோ. (பாம்பணையித்யாதி) அவனுடைய படுக்கைகண்டறிதியோ. (கூறாய்) சொல்லாய். (வடிவித்யாதி) சரீரத்தில் இந்த்ரியங்களைந்தையு மடக்கி. வடிவில்லாத இந்த்ரியங்களை யடக்கி யென்றுமாம். "கண்டவாதிரிந்த தொண்டனேன்" என்னுமாப்போலே என்னவுமாம். (போதொடித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆஶ்ரயணத்திலே யிழிந்தாயித்தனை யிறே நீ.

நாமறியா திருக்கப்பெற்றபடி யென்னென்ன; திருவுள்ளத்தைக் குறித்து, (வடிவில் பொறியைந்து முள்ளடக்கி) வடிவிலே-உடம்பிலே யடக்கி. வடிவில்லாதபடி ஒருபடிப் பட்டிராதென்றுமாம். (அரு)

அரு.—எண்பத்தைந்தாம்பாட்டு.—புட்கொடிகண்டறிதியே - கண்டாயோ? இல்லையேயென்றபடி. வடிவு-ஸ்வபாவமாய் அத்தால்

(பா) * என்றவாறே.

ஒரு படிப்பட்டிராமை. இத்தையருளிச்செய்கிறூர், (கண்டவாதிரி ந்தவித்யாதி).

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறூர் (காமறியாதிருக்கப்பெற் றபடி யித்யாதி). (அரு)

நீயும் திருமகளும் நின்றூயால், குன்றெடுத் துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா - வாசல்
கடைகழியா வுட் புகா காமர்பூங்கோவல்
இடைகழியே பற்றியினி. (அசு)

ப-உ.—பாயும் - மேலேவிழுகிற, பனி - மழையை, குன்றெடு த்து - மலையைத்தூக்கி, மறைத்த - தடுத்த, பண்பாளா - ஸௌலப்ய குணமுடையவனே ! வாசற்கடை - வீட்டுக்கு வெளிப்ரதேசத்தில், கழியா - போகாமலும், உள்புகா - உள்ளேபோகாமலும், காமர் - அலங்காரமான, பூ - அழகிய, கோவல் - திருக்கோவலூருடைய, இடைகழி - மத்யப்ரதேசத்தை, பற்றி - அவலம்பித்து, நீயும் - நீ யும், திருமகளும் - பிராட்டியுமாக, இனி - இப்போது, நின்றூய் - இருந்தாயே ! ஆல் - ஆச்சர்யம். (அசு)

வ்யா.—அவ.—எண்பத்தாறும்பாட்டு.—(நீயும்) இவர், தம்மு டைய திருவுள்ளத்தைக் குறித்து, "ஸாக்ஷாத்கரித்திலேயிறே" என்னத் தரியானிறே அவன்.

(நீயுமித்யாதி) "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என் னடியாரது செய்யார்" என்ற நீயும், உன்னுடைய பரிகரம் நலியப் புக, "நகஸ்ச்ந்நாவராயுதி - நகச்சின்நாபராத்யதி" என்ற அவளு மாய் நின்றூயால். (குன்றித்யாதி) உடம்பிலேவிழப்புக்க மழை யை மலையையெடுத்துப் பரிஹரித்த நீர்மைபோலே யிருந்தது இப் போது நெருக்கு. அபேக்ஷிதமாக நெருக்கினபடி. (வாசலித்யாதி) இடைகழிக்கு உள்ளும் புறம்பும் காட்டுத்தீபோலே யிராநின்றது. காமுகரானவர்கள் உகந்த விஷயத்தினுடைய கண் வட்டம் விட்டுப் போகமாட்டாதாப்போலே. (இனி) இப்போது. இனி திருக்கோவலூ

ரிலே நிற்கிறது கர்மபலாநுபவத்துக் கன்றிறே. ஸம்ஸாரிகளை நரகத்தில் புகாமல் காக்கவிறே.

(நீயுமித்யாதி) ஆஶ்ரிதரக்ஷணத்தில் முற்பாடனான நீயும் "அக்ரதஸ்தேகமிஷ்யாமி - அக்ரதஸ்தேகமிஷ்யாமி" என்று உனக்கு முற்படும் பிராட்டியும். (பண்பாளா) அன்று அங்ஙனே உதவினாய். (கடைகழியாவுள் புகா) அங்கு அவர்களாபத்துத்தீர்த்தான்; இங்கு தன்னாபத்து தீர்த்தபடி. புறம்பு காட்டுத்தீயோ டொக்கும். (அசு)

அரு.—எண்பத்தாறும்பாட்டு.—இடை கழிக்குப் புறம்பு ஸம்ஸாரிகளும், உள்ளே உபாஸகனான ருஷியுமாகையாலே, அநந்யப்ரயோஜநரான ஆழ்வார்கள் பற்றியிருக்கிற இடைகழியைப் பற்றிநின்றானென்றபடி. "இனி" என்று மேலில் பாட்டைப்பற்றவருளிச்செய்கிறார் (திருக்கோவலூரித்யாதி) இன்று இங்ஙனே உதவினாய். (அசு)

இனியார் புகுவா ரெழுநரகவாசல்
முனியாது மூரித்தாள் கோமின் - கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலம் சூழ் நாடு. (அஎ)

ப-உ.—கனி - (விளவின்) பழம், சாய - விழும்படி, கன்று - வத்ஸத்தை, எறிந்த - வீசிப்போகட்ட, தோளான்-புஜங்களையுடையவனுடைய, கனை - (ஆபரண) த்வநியையுடைய, கழல் - திருவடிகளை, காண்பதற்கு - ஸாக்ஷாத்கரிக்கைக்கு, நாவல் - நாவல்மரத்தின் சாயையிலிருக்கிற, சூழ் - விசாலமான, நாடு - தேசம் (ஜம்பூத்வீபம்), நன்று - செவ்வையாய், அறிந்தது - (உபாயத்தை) தெரிந்துகொண்டது; (ஆனபின்பு), எழு - ஏழுவிதமான, நரகம் - நரகத்தினுடைய, வாசல் - த்வாரங்களில், இனி - இதுக்குமேல், புகுவார் - நுழைவர்கள், யார் - எவர்; முனியாது - கோபித்துக்கொள்ளாமல், மூரி - த்ருடமான, தாள் - பூட்டை, கோமின்-பூட்டுங்கோள். (அஎ)

வ்யா.—எண்பத்தேழாம்பாட்டு.—(இனியித்யாதி) "எழுநரகவாசல்" என்கிறது-கிளர்த்தியை யுடைத்தான நரகமென்னவுமாம்; ஏழுவகை நரகமென்னவுமாம். (முனியாது) யமபடருடைய கோபத்து

க்கு இனி பலமில்லையென்கிறது. (மூரித்தாள் கோமின்) இனிப்புகுவாரில்லை; மிடுக்குடையதாளைக் கோவுங்கோள்.(கனிசாய வித்யாதி) "கனைகழல்" என்றது - இலக்கைக்குறித்து நடக்கிறபோது திருவடிகளினுபரணத்வநியை ஜம்பூத்வீபமானது நன்றாகவறிந்தது.நன்றாகவறிகை - ஸம்ஸாரத்தினின்றும் போகோமென்றிருக்கை. உகந்தருளின தேசமிங்குண்டாயிற்றே யென்று அஸூயையைபண்ணாதே பொறுத்திருக்கை.

(இனியித்யாதி) எங்கள் பதத்துக்கு அழிவுசொல்லுவதே என்று பொடியாதே. (கனைகழல்) ஆபரணவொலி. (நாவலம்) ஜம்பூத்வீபம். "ஏகாந்தரணீ ஸம்ஸ்ரிதௌ - ஏகாந்தரணிமாஸ்ரிதௌ" ஒரு படுக்கையிலே யிருப்பார்க்கு பயமுண்டோ. (அஎ)

அரு.—எண்பத்தேழாம்பாட்டு. — கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (உகந்தருளின தேசமித்யாதி). "அஸூயை" என்றது - பகவத்த்விட்டுக்களாகையாலே திவ்யதேசத்தை விட்டு தேசாந்தரத்தேபோதல்; அங்கொரு அதிசயங்கண்டால் ப்ராணத்யாகம் பண்ணுதல். பொடியாதே - ஆழ்வாரைப்பொடியாதே. திவ்யதேசமுள்ள நாட்டிலிருப்பு மாத்ரம் போருமோவென்ன ; அருளிச்செய்கிறார் (ஏகாந்தரணீம் - ஏகாந்தரணிம்; இத்யாதி). (அஎ)

நாடிலும் நின்னடியே நாடுவன், நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன் - சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகி லென்னே யெனக்கு. (அஅ)

ப-உ.—நாடிலும் - விரும்பினாலும், நின் - உன்னுடைய, அடியே - பாதத்தையே, நாடுவன் - விரும்புவன்; நாடோறும் - ப்ரதிதினமும், பாடினும் - ஸ்தோத்ரம்பண்ணினாலும், நின்புகழே - உன்னுடைய கீர்த்தியையே, பாடுவன் - துதிப்பன்; சூடிலும் - சிரஸ்ஸிலணிந்தாலும், பொன் - அழகிய, ஆழி - சக்ரத்தை, ஏந்தினான் - தரித்தவனுடைய, பொன் - அழகிய, அடியே-பாதங்களையே, சூடுவேற்கு - தலையில் தரிக்கப்பட்டவனான, எனக்கு - எனக்கு, என்னாகில்- எப்படியானால், என் - என்ன. (அஅ)

வ்யா.—எண்பத்தெட்டாம்பாட்டு.—(நாடிலுமித்யாதி) நினைக்கிலும் உன் திருவடியையே நினைப்பன். எப்போதும் பாடிலும் உன்னுடைய புகழையே பாடுவன். (சூடிலுமித்யாதி) ஒன்றைச் சூடிலும் திருவாழியேந்தின உன்னுடைய விலக்ஷணமான திருவடிகளைச் சூடாநின்ற வெனக்கு பரமபதத்திலே போனாலும் வாங்மனஃகாயங்கள் அங்கே ப்ரவணமாகையாகச் செய்வது; அது இங்கே பெற்றேனாகில் எனக்கு இங்கே யிருக்கை நல்லதென்கிறார். அவன் படிக்கு ஸம்ஸாரிகள் படியைப்பார்த்தால் யமனுக்கு அவகாசமுண்டாயிருந்தது. "தேநமைத்ரீபவது - தேநமைத்ரீபவது" என்றும் "யதிவா-யதிவா" என்றும் சொல்லத் தலையறுப்புண்டிலனோ. (பொன்னடியே) இதுவே ப்ரயோஜநமாக வாக்காயங்களை யொழிய நினைக்கிலும். (என்னுகிலென்னே யெனக்கு) நாட்டார் நரகம்புகிலென் தவிரிலென். ஆரானுழ. (அஅ)

அரு.—எண்பத்தெட்டாம்பாட்டு.— "சூடுவேற்கு" என்றது மாநஸமாகச்சூடுகையைச்சொல்லி, இப்படி மாநஸமாகச்சூடுவார்க்கு என்று பரகதமாக்குகிறார் (அவன்படிக்கித்யாதி). இப்படி நினைத்தமட்டிலே அவனைப்பெறலாயிருக்க அதுவும் செய்யாமையாலேயமனுக்கு அவகாச முண்டென்றபடி.

இப்படி அல்பாநுகூல்யத்திலே அவன் கார்யம் செய்யலாயிருக்க இழந்த பேருண்டோ வென்ன ; அருளிச்செய்கிறார் (தேநமைத்ரீ- தேநமைத்ரீ இத்யாதி). சூடுகை - மாநஸப்பற்றுக்கி யருளிச்செய்கிறார் (வாக்காயங்களை யித்யாதி). (எனக்கு-என்னுகிலென்) இப்படி அல்பாநுகூல்யத்திலே பெறலாயிருக்க இத்தை இழக்கிறஸம்ஸாரிகள் படி எனக்கு ஏதானால் தாவில்லை. அத்தை யாராயக்கார்யமில்லை என்றபடி. ஆரானுழ - இப்படி ஆர்தான் பிறருக்குத் துக்கப்படுவாரென்றபடி. (அஅ)

எனக்காவா ராரொருவரே, எம்பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால் - புனக்காயாம்
பூமேனிகாணப் பொதியவிழும் பூவைப்பூ
மாமேனி காட்டும் வரம். (அகூ)

ப-உ.—எனக்கு - எனக்கு, ஆவார் - ஒப்பாவார், ஆரொருவரே - ஒருவராகிலும் ஆருண்டு; எம்பெருமான் - ஸர்வேஶ்வரன், தா

னே - ஸ்வயமே, தனக்கு - தனக்கு, ஆவானல்லால் - ஒப்பாமல்லது, மற்று - எனக்கொப்பாவனோ ? புனம் - தன்னிலத்திலிருக்கிற, காயாம்பூ - காயாம்பூவினுடைய, மேனி - நிறமும், காண - பார்க்கப் பார்க்க, பொதியவிழும் - மலரும், பூவைப்பூ - பூவைப்பூவினுடைய, மேனி - நிறமும், மா - ஶ்லாக்யமான, மேனி-விக்ரஹத்தை, வரம்-நன்றாக, காட்டும் - தர்சிப்பிக்கும். (அகூ)

வ்யா.—எண்பத்தொன்பதாம்பாட்டு.—(எனக்கித்யாதி)என்னோடொப்பா ரொருவருமில்லையிறே என்னவுமாம். எனக்காவா ரெவரென்னவுமாம். என்னோடொப்பா ரொருவருமில்லை யென்று நீர்சொல்லுவானென்; பரமசேதநனுண்டே யென்னில்; (எம்பெருமானித்யாதி) என்னோடொத்தா ரில்லையென்றே னித்தனையல்லது, எம்பெருமானுடைய உயர்த்தியில்லை யென்றேனோ. நீர்என்னோடொப்பாரில்லையென்று சொல்லிற்று எத்தாலே யென்னில்; அவனோடு ஸத்ருசமான பதார்த்தங்கள் வர்த்திக்கிற தேசத்திலே நின்றேன்; ஓரடியன்றோ குறைய நின்றது. அவன் என்று ஸாக்ஷாத் கரிக்கு மத்தனையன்றோவேண்டுவது. (புனக்காயாம் பூமேனி) புனத்திலே நிற்கிற காயாம்பூமேனியை. (காணப்பொதிய விழும்பூவைப்பூ) காணக்காண அலராநின்ற பூவைப்பூ. இவையிரண்டு மவனுடைய வரமானமாமேனியைக் காட்டா நின்றது. நாட்டார்க்கு நினைக்கையிலுள்ள வருத்தம் போரும் எனக்கு மறக்க. நானுமொருவனே. வரமாக - தன்னிலும் விசதமாகவென்றுமாம். (அகூ)

அரு.—எண்பத்தொன்பதாம்பாட்டு,—எனக்குஹிதபார் எவர், ஈஶ்வரனையொழிய வொருவருமில்லை யென்று இரண்டாமர்த்தம்; ஸத்ருச பதார்த்தம் - காயாம்பூ முதலானவை. அவற்றைக்கண்டு தரிக்கலாயிருக்கையாலே என்னோடொப்பாரில்லை யென்றபடி. அவற்றைக்கண்டு தரிக்கப் போமோ, அவனைக்காணவேண்டாவோ வென்ன ; அருளிச்செய்கிறார், (ஓரடியன்றோவித்யாதி). குறை - ப்ரத்யக்ஷமாக அவனைக்காணுமை. ஆனல் வேணதுளதென்ன ; அருளிச்செய்கிறார் (அவனென்றித்யாதி). ஸத்ருசபதார்த்தங்களை அவனாகக்கொண்டு ஸாக்ஷாத்கரிக்கு மத்தனையென்றபடி. (பொதியவிழும்) கண்பொதிய - கண்காணவென்றபடி. பூக்கள் காட்டுகையாலேமறக்கவருமை. (அகூ)

வரத்தால் வலிநினைந்து மாதவநின் பாதம்
சிரத்தால் வணங்கானு மென்றே - உரத்தினல்
ஈராரியாய் நேர்வலியோ னய விரணியனை
ஓராரியாய் நீயிடந்த தூன். (கூ0)

ப-உ.—மாதவ - ஸ்ரியஃபதியானவனே! ஈர் - பிளக்கப்பட்ட, அரியாய் - சத்ருவாய், நேர் - எதிரில் (நிற்கவல்ல), வலியோனய - பலவானன, இரணியனை - ஹிரண்யகசிபுவை, ஓர் - ஒப்பற்ற, அரியாய் - ஸிம்ஹமாய், உரத்தினல் - பலத்தாலே, ஊன் - கொழுத்த (உடம்பை), நீ - நீ, இடந்தது - கிழித்தது, வரத்தால் - (தேவர்களுடைய) ஆசீர்வாதத்தால் (வந்த), வலி - பலத்தை, நினைந்து - எண்ணி, நின் - உன்னுடைய, பாதம் - திருவடிகளை, சிரத்தால் - தலையால், வணங்கானும் - தொழாதேயிருந்தான், என்றே - என்றோ!. ()

வ்யா.—அவ.—தொண்ணூரும்பாட்டு.—(வரத்தால்) நரஸிம்ஹ ரூபியான ஈஸ்வரனுடைய ஆஸ்ரித விரோதி நிரஸந ஸீலத்தையும் வாத்ஸல்யத்தையுமநுஸந்திக்கிருர்.

(வரத்தால்வலி நினைந்து) வரத்தாலே தனக்கு மிடுக்குண்டாக நினைத்தானல்லது வரங்கொடுத்தவர்கள் சக்தி பகவததீந மென்றறிந்திலன். (மாதவ) வரங்கொடுத்தவர்களாலும் வணங்கப்படுமவன். (நின்பாதமித்யாதி) அவனிழவுக்கு வெறுக்கிருர். (உரத்தினலீரரியாய்) மிடுக்காலே ஈரப்படும் அரியானவன் - சத்ருவானவன். பெரிய சத்ருவென்றுமாம். (நேர்வலியோன்) நேரே வலியான ஹிரண்யனை. (ஓராரியாய்) நாட்டில் நடையாடும் ஸிம்ஹமன்று. தன்னுடைய இச்சையாலே பிறந்த ஸிம்ஹமென்றுமாம். ஓரப்படும் அரியாய் - எல்லாரும் த்யாநம்பண்ணும் ஸிம்ஹமென்றுமாம்.

(வரத்தால்) தேவர்கள் வரத்தை மிடுக்காக நினைத்தான். வணங்குவித்துக்கொள்ளும் விஷயமிருக்கும்படி. (வணங்கானுமென்றே) பிள்ளை பக்கல் பரிவு தப்பச் செய்தோம். என்னுமென்றுமாம். உன் வஸ்து அழியாமைக்கென்றுமாம். (ஈரரி) பெரிய சத்ரு. (ஓரரி) ஸிம்ஹங்களில் ஒப்புப்பிடிக்க வொண்ணது.

(ஶ்ரீ

அரு.—தொண்ணூறாம்பாட்டு.—"ஓர்" என்று - விசாரமாய் (இச்சைபாலே யென்றது). பரிவு தப்பச் செய்தோம்-பரிவு தப்பும்படி தண்டித்தோமே யென்னுமநுதாபமில்லாதவனென்னுதல்; வணங்காமையாலே தன் வஸ்துவான ஹிரண்யனுக்கு ஸ்வரூபநாசம் வாராமைக் சென்னுதல். விரோதியான சரீரத்தைப் போக்கினனென்றபடி. (கூ௦)

ஊனக் குரம்பையி னுள்புக் கிருள் நீக்கி
ஞானச் சுடர்கொளீஇ நாடோறும் - ஏனத்
துருவா யுலகிடந்த வூழியான் பாதம்
மருவாதார்க் குண்டாமோ வான். (கூக)

ப-உ.—ஊன - மாம்ஸமயமான, குரம்பையில் - சரீரமாகிற குடிசையில், உள்புக்கு - உள்ளேநுழைந்து, இருள் - அஞ்ஞானத்தை, நீக்கி - போக்கி, ஞானம் - ஞானமாகிற, சுடர் – விளக்கை, கொளீஇ - ஏற்றி, ஏனத்து - வராஹத்தினுடைய, உருவாய்-ரூபத்தையுடையனாய்க்கொண்டு, உலகு - ஜகத்தை, இடந்த - பிரித்தெடுத்த, ஊழியான் - ப்ரளயகாலத்தில் வர்த்திக்கிறவனுடைய, பாதம் - திருவடிகளை, நாடோறும்-தினந்தோறும், மருவாதார்க்கு - கிட்டாதவர்களுக்கு, வான்-பரமபதம், உண்டாமோ - கிடைக்குமோ ? (கூக)

வ்யா.—அவ.—தொண்ணூற்றோராம்பாட்டு.—(ஊனக் குரம்பை) பரமபதம் ஸ்வயத்நஸாத்யமன்று என்றவோபாதி இச்சையும் வேண்டாவோ வென்கிறது. ஹேயத்திலே ஹேயதாபுத்தியும், உபாதேயத்திலே உபாதேயதாபுத்தியும் வேண்டாவோ பேற்றுக்கு.

(ஊனமித்யாதி) சரீரங் கண்டதெல்லாம் பொல்லாதாயிருக்கச் செய்தே ஆபாதப்ரதீதியில் நன்றுபோலே யிருப்பதொன்றுண்டு; அந்தவிருள் சரீரத்தை அவகாஹிக்கப்போம். (ஞானச்சுடர்கொளீஇ) ஜ்ஞாநமாகிற விளக்கை ப்ரகாசிப்பித்து. இதினுடைய ஹேயதையும் அந்யதா ஜ்ஞாநமும் யதார்த்தஜ்ஞாநத்தாலேபோம். ஆக, யதார்த்த ஜ்ஞாந பூர்வகமாக பரஜ்ஞாநம் வேணும். (நாடோறுமித்யாதி) நோவுபட்டபோது உதவினவனாய் இவை யில்லாதவன்று தானுண்டாய் ரக்ஷிக்குமவனுடைய திருவடிகளில் ருசி யில்லாதார்க்கு மூ[illegible]ோ பரமபதம். (நாடோறும்) அவன் ஆபிமுக்யம் பண்ணுகிற

படியை அநுஸந்திக்க வைமுக்ய சங்கையுண்டோ? ஜீயர் திரு களை ஆஶ்ரயித்திருப்பானொரு வைஷ்ணவன் வர, "நீபலநாள் வரத் தவிர்த்தாயே" என்றருளிச்செய்ய, "நீர் ஒருகாலருளிச்செய்தபடி யைநினைத்திருக்கவமையாதோ" என்ன, "நம்பிக்கை நிலையிலே வர்த் திக்கிறதும்மாண்டு, "நாடோறு மேனத்துருவா யுலகிடந்த ஊழி யான் பாதம்மருவாதார்க்குண்டாமோவான்" என்கிற விப்பாட்டுங் கெடுவாய்கேட்டறியாயோ" என்கிறார். ருசியில்லாதார்க்கும் ஸ்ரீ வைகுண்டம் கிடைக்குமோ.

கீழிற்பாட்டு ருசியுடையவனுக்குதவினபடி. (ஊனக் குரம்பை) ஹேயமாய் அல்பமாய் அஸ்திரமாய் அநர்த்தமாய் அகவாய் தெரியா தபடி மேலே தோலை வைத்து மினுக்கி, ஆபாதப்ரதீதியில் நன் றென்று தோற்றும்படி யிருக்கிற வித்தை உள்ளபடியே அநுஸந்தி த்து அபுருஷார்த்தமென்றும், புருஷார்த்தவிரோதியென்றும் பேசி ற்று. "பொய்ந் நின்ற" இத்யாதி. (ஞானச்சுடர்கொளீஇ) ப்ரகாரமா னதன்னை யநுஸந்தித்து ப்ரகாரியான * தாமரையாள் கேள்வனொரு வனையே நோக்கி. (எனமித்யாதி) இத்தலைநினையாதபோதும் நினைத் திருந்து நோக்குமவன். விரோதியான இவ்வாகாரத்தை யன்றோ துடைத்தது. "ஏனத்துருவாயிடந்த-ஞானப்பிரான்".   (கூக)

அரு.—தொண்ணூற்றோராம்பாட்டு.—அவகாஹிக்கை - சரீர தோஷங்களை யறிகை - ஊழியான் - ஸம்ஹாரகாலத்திலும் தான் உளனாய்ரக்ஷிக்குமவன். நாடோறும் மருவவேணுமென்னு மதுக்கு ஸம்வாதமாக வருளிச்செய்கிறார் (ஜீயரித்யாதி). நாடோறும் மருவு கைக்குப் பண்ணின உபகார மேதென்ன; அருளிச்செய்கிறார் (இத்தலை யித்யாதி). விரோதியைப்போக்கி உபதேசித்த தெங்கே யென்ன; அருளிச்செய்கிறார் (ஏனத்துருவாயித்யாதி).   (கூக)

வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்
தேனாகிப் பாலாம் திருமாலே - ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.   (கூஉ)

ப-உ.—வானாகி - ஆகாசரூபனாய், தீயாய் - அக்நிரூபனாய், மறி - அலையெறிகிற, கடலாய் - ஸமுத்ரரூபனாய், மாருதமாய் - வா

னளவுக்கு; "க்ஷயிகிம்ஷி தூலாவநே-த்வயிகிஞ்சித்ஸமாபங்நே" என்னும் விஷயங்களிலன்று. "அதராமோமஹாதேஜா:-அதராமோமஹாதேஜா:" "கொடியவாய் விலங்கின்னுயிர்மலங்கக் கொண்ட சீற்றம்"என்று சரணுகதர்க்குத் தஞ்சமானதனமாவது ஆஸ்ரிதார்த்தமாக ஹிரண்யனைப்பற்றப் பண்ணும் சீற்றம்.

"எங்ஙனேயுய்வர்தாநவர் நினைந்தால்" என்று நரஸிம்ஹத்தைக்கண்ட அஸுரராக்ஷஸஜாதியாகப் படும்பாட்டை அவனைக்கண்ட வநுகூலர்படும்படி.

(வயிறழல)"அஸ்மாந்ஹந்துந்நஸம்சய:ராக்ஷஸோப்யேதி-அஸ்மாந்ஹந்தும்நஸம்சய:ராக்ஷஸோப்யேதி" இத்யாதிவத். தனித்தனியே சொல்லில் ஒருவரல்லா வொருவர் பிழைக்கிலுமாம் என்று வேர்ப்பற்றிலே நலிய. (பொறியுகிரால்) போகத்துக்கு ஏகாந்தமான அழகையுடைய அறுகாழியென்னுதல்; திருவாழி பிடிக்கத்தகும் கையென்னுதல். (செற்றுவைத்து வாய்மடுத்ததென்னீ) ஸங்கல்பம் தவிர்ந்து திருவாழி தவிர்ந்து திருவுகிராலே பிளந்து பிணத்தின் முகத்திலே நாமடிக்கொள்வதே. (கூங)

அரு.—தொண்ணூற்று மூன்றும்பாட்டு.—இப்படி பீதராய் மங்களாசாஸநம் பண்ணின பேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (என்றுமென் பிள்ளைக்கித்யாதி) முடிந்தபின்னும் சீற்றம் மாறுமைக்குஹேதுவை யருளிச்செய்கிறார் (முடித்தாலித்யாதி). ஆஸ்ரிதவிரோதமாகக் கொண்ட சீற்றம் அதிகமென்னு மதுக்குப்ரமாணமருளிச்செய்கிறார். (அதராம: - அதராம: - இத்யாதி).

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (எங்ஙனேயுய்வரித்யாதி). "அஸ்மாந்ஹந்தும் - அஸ்மாந்ஹந்தும்" என்ற பஹுவசநத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனித்தனியே யித்யாதி). (கூங)

செற்றெழுந்து தீவிழித்துச் சென்றவிந்த வேழுலகும்
மற்றிவையா வென்று வாயங்காந்து – முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனை யல்லால்
இறையேனு மேத்தாதென் நா. (கூச)

ப-உ.—எழுந்து - கிளர்ந்து, தீவிழித்து - நெருப்புவிழும்படி பார்த்து, சென்ற - (தன்னிடத்தில்) சேர்ந்த, இந்தவேழுலகும் - இந்த ஏழுலோகத்தையும், செற்று - அழித்து, மற்று - அதுக்கு மேலே, இவையாவென்று - (அழிந்தவை) இதுகளென்று, வாய் - திருப்பவளத்தை, அங்காந்து - திறந்து, முற்றும் - ஸகலத்தையும், மறையவற்கு - வைதிகரான மார்க்கண்டேயருக்கு, காட்டிய - தர்சிப்பித்த, மாயவனையல்லால் - ஆச்சர்ய சக்தியுடையவனையல்லது, இறையேனும் - கொஞ்சமும், என்நா - என்னுடைய, நாக்கு, ஏத்தாது - துதியாது. (கூச)

வ்யா.—அவ.—தொண்ணூற்று நாலாம் பாட்டு.—(செற்றெழுந்து) இப்பாட்டு கீழ்ப்பாட்டில் வ்ருத்தாந்தமாகவுமாம்; இந்த வைஶ்வரூப்யம் துர்யோதநஸதஸ்ஸிலே காட்டினதாகவுமாம்; மார்க்கண்டேயபகவானுக்கு இதனையத் தன் வயிற்றிலே யிருந்தபடியைக்காட்டிற்றாகவுமாம். "தஜவஶ்யமஹம் ஸவ்ம் தஸ்ய குக்ஷௌ மஹாத்மந:- ததபச்யமஹம் ஸர்வம் தஸ்யகுக்ஷௌமஹாத்மந:" என்கிறபடியே.

(செற்றெழுந்து தீவிழித்து) என்றது - நீயொரு தூதுவரவிட வேண்டாவென்று துர்யோதநாதிகளைச் சீறிப்பார்த்தபடியாகவுமாம். (சென்ற வித்யாதி) நரகில் பாபகர்மம் போக்குகைக்கென்று ஸங்கல்பம் வேண்டா. (மறையவற்கு) ஸ்ரீமார்க்கண்டேய பகவானுக்காகவுமாம்; பீஷ்மத்ரோணாதிகளாதல். "ஸாமாந்யலக்ஷ்யாவயம்- ஸாமாந்யலக்ஷ்யாவயம்". (இறையேனும்) பரவ்யூஹாதிகளில் போகாது. (கூச)

அரு.—தொண்ணூற்றுநாலாம்பாட்டு.—வேண்டா வென்று சொன்ன துர்யோதநாதிகள் வதம்; பீஷ்மாதிகள் கோபித்துப்பாராதே ஸாமாந்யமாக ஸாந்தமாகப் பார்க்கைக்கு விஷயமென்றூர்கள். (வாய் அங்காந்து) துர்யோதந பக்ஷத்தில் பொய்யாஸந வேளையிலே விஶ்வரூபத்தைக்காட்டினது. மறையவர்க்கும் வாயை ஆவென்று காட்டுகை. (கூச)

நா வாயிலுண்டே நமோ நாரணாவென்று
ஓவாதுரைக்கு முரையுண்டே - மூவாத

மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே, என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம். (கூரு)

ப.உ.—நா - நாக்கு, வாயிலுண்டே - வாயிலே யிருக்கிறதே; ஓவாது - ஓயாமல், நமோநாரணவென்று - நமோநாராயணாயவென்று, உரைக்கும் - சொல்லும்படியான, உரை - திருமந்த்ரம், உண்டே-இருக்கிறதே; மூவாத-திரும்புதலில்லாத, மா-ஶ்ரேஷ்டமான, கதிக்கண் - (மோக்ஷ) மார்க்கத்தில், செல்லும் - போகைக்கு, வகை - உபாயம், உண்டே - இருக்கிறதே; ஒருவர்-ஒருத்தர், தீக்கதிக்கண் - துர்மார்க்கங்களிலே, செல்லும் - போகிற, திறம் - ப்ரகாரம், என் - எதுவாகலாம். (கூரு)

வ்யா.—அவ.—தொண்ணூற்றைந்தாம் பாட்டு.—(நாவாயில்) இதுவிடப்போகாதாயிருந்தது, இது கீழ்ப்போகாதாயிருந்தது, இதுக்கு எங்ஙனே விலக்கடியுண்டானபடி; அபரிகரராயிருக்கில் செய்யலாவதில்லை யிறேயென்னில், ஈஶ்வரன் ஒரு பரிகரம் தேடும்படி வைத்தானேயென்கிறது.

(நாவாயிலுண்டே) "ஹ்ருஷீகேஶவநவாஸாய - ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்கிறபடியே நாக்காகில் அவனை யேத்தக்கடவது. (நமோவித்யாதி) அந்நாக்குக் கண்டவோபாதி திருமந்த்ரமும் இவனுக்கு இளைப்பாறிச்சொல்ல வேண்டாததுண்டே. ஒரு ஸஹஸ்ராக்ஷரீ மாலாமந்த்ரம், இது சொல்லுமதில் நரகாநுபவம் அமையுமென்னுத் திருமந்த்ரமுண்டே. (மூவாத வித்யாதி) அபுநராவ்ருத்திலக்ஷணமான ப்ராப்யத்துக்குச் செல்லும் அர்ச்சிராதிமார்க்கமுண்டே. (என்னொருவரித்யாதி) நரகத்துக்குப் போகவழி நேராகக்கண்டிலோம். இதுக்கு விலக்கடி எங்ஙனே யுண்டாயிற்று. ஸம்ஸாரி ஹிதம்காண்கிறிலோம், நாளோ செல்லாநின்றது. (என்னொருவரித்யாதி)வலிய விலக்கடிதேடவேணும். (கூரு)

அரு.—தொண்ணூற்றைந்தாம்பாட்டு.—திருநாமத்தினுடைய போக்யதையாலே விடப்போகாது; பாவநத்வத்தாலே தீக்கதிபான் கீழ்ப்போகாது. ஓவாது - ஓயாதே. நடுஇளைப்பாருதே ஒருமூச்சிலே சொல்லலாயிருக்கை. ஹிதம் காண்கிறிலோம் - ஹிதசிந்தைபண்ணக்

காண்கிறிலோம். இவையெல்லாமிருக்க இத்தைவிட்டு வலியத்தேட வேணுமென்கிறபடி. (௬௫)

திறம்பா தென்னெஞ்சமே செங்கண்மால் கண்டாய்
அறம்பாவ மென்றிரண்டு மாவான் - புறந்தானிம்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான், வான்தானே
கண்டாய் கடைக்கட் பிடி. (௬௬)

ப-உ.—என் - என்னுடைய, நெஞ்சமே - மநஸ்ஸே! செம் - சிவந்த, கண் - நேத்ரங்களையுடைய, மால்கண்டாய் - ஸர்வேஸ்வரன் கிடாய், அறம் - புண்யம், பாவம் - பாபம், என்று - என்கிற, இரண்டும் - இரண்டுக்கும், ஆவான் - ஸ்வாமியாவான்; இம்மண் தான் - இந்த பூமிக்கும் ஸ்வாமி; மறி - அலையெறிகிற, கடல் தான் - கடலுக்கும் ஸ்வாமி; மாருதந்தான் - காற்றுக்கும் ஸ்வாமி; வான் தான் - ஆகாசத்துக்கும் ஸ்வாமி; புறந்தான் கண்டாய் - இவைகளுக்கு வெளியிலுண்டான மஹதாதிகளுக்கும் ஸ்வாமி கிடாய்; கடைக்கண் - முடிவில், திறம்பாது - தவறாதபடி, பிடி - பற்று. (௬௬)

வ்யா.—அவ.—தொண்ணூற்றாறும்பாட்டு.—(திறம்பாது) விலக்கடியில்லையென்று இருக்கலாயிருக்கிறதில்லை, இவ்வர்த்தத்தைக்கை விடாதே கொள்ளென்று தம்முடைய திருவுள்ளத்தைப்பார்த்து அருளிச்செய்கிறார்.

(திறம்பாதென்னெஞ்சமே) நான் சொல்லிற்றுத் தப்பாதுபோருகிற நெஞ்சே! அர்த்த தத்வங்கண்டாலல்லது கால்வாங்கேனென்றிருக்கிற நெஞ்சமே! (அறமித்யாதி) விஹிதத்தைச்செய்து நிஷித்தத்தைப் பரிஹரித்துப்போருகிற நம்மோடு விஹிதநிஷித்தங்களோடு வாசியில்லை அவனைக்குறித்துப் பாதந்த்ரமாமிடத்தில். "ஏஷ ஏவ ஸாது கர்ம காரயதி - ஏஷ ஏவஸாதுகர்ம காரயதி". தம்முடைய பக்கல் கர்த்ருத்வம் தவிர்ந்தபின்பு ஒரு அசேதநக்ரியையைப் பற்றுவரன்றே. (செங்கண்மால்கண்டாய்) ஸர்வேஸ்வரன் கண்டாய். "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ - தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ".

(இம்மண்ணித்யாதி) ப்ரதிபந்தகமான அசித்தோடே கூடின சேதநனுமவனே. அநுக்தமான மஹதாதிகளைச் சொல்லுகிறது. அவனை யொழிய ஸ்வதந்த்ரமாயிருப்ப தொன்றுமில்லை. (கண்டாய் கடைக்கட்பிடி) இவ்வர்த்தத்தைத் திறம்பாது கடைக்கட்பிடி. கடைபோகப்பிடி. இவ்வர்த்தத்தினுடைய கடைப்பிடி கண்டாயே என்றுமாம். (அறமித்யாதி) ஆபாத ப்ரதீதியில் அவனையொழிய புண்யபாபமென்று தோற்றுவது; நிலைநின்று பார்த்தால் அவனே கடவனென்று தோற்றும். "திறம்பாது" என்று நெஞ்சோடே கூட்டவுமாம். "திறம்பாது.அறம்பாவமென்றிரண்டு மாவான்" என்னவுமாம். "திறம்பாது கடைக்கட்பிடி" என்னவுமாம்.

நாட்டார்க்குப் பலவழியுண்டாகிலும் நம்முடைய வழியைப் பற்றி யிராய்நீ. (திறம்பாதென்னெஞ்சமே) சொல்லென்றலைக்கிற நெஞ்சமே. (செங்கண்மால்) நம்முடைய விஷயத்திலிருக்கிறபடி கண்டாயே. (அறமித்யாதி) பெறுகைக்கும் இழக்கைக்கும் அவனுடைய நிக்ரஹாநுக்ரஹங்களையொழியப் போக்கில்லை; ஸர்வமும் பகவததீநமன்றோ. (கடைக்கட்பிடி) அறுதியாகப்பிடி. (கூசு)

அரு.—தொண்ணூற்றாறாம்பாட்டு.—கர்மாதிகளிருக்க அவனைப் பிடிக்க வேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (தம்முடைய பக்கலித்யாதி).

கடைபோகப்பிடி - நடுவேவிடாதே முடியப்பிடியென்று க்ரியையாதல்; கடைப்பிடி - அவன் சரீரி, அல்லாதவையெல்லாம் சரீரதயாபரதந்த்ரமென்கிறஎல்லையான அர்த்தத்தைக்கண்டாயே யென்று க்ருபையாதல்; திறம்பாதே - இவ்வர்த்தத்திலே சலியாதே யென்று நெஞ்சொத்துக் கூட்டுதல்; திறம்பாது-அறம்பாவமிரண்டும் அவனிட்ட வழக்கென்னுமது தப்பாதென்னுதல்; திறம்பாதே - கடைபோகச்சலியாதே பிடியென்னுதல்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (நாட்டார்க்கித்யாதி).(கூசு)

பிடிசேர் களிறளித்த பேராளா, உன்றன்
அடிசேர்ந் தருள்பெற்றா ளன்றே - பொடிசேர்
அனற்கங்கையேற்றா னவிர்சடைமேல் பாய்ந்த
புனல்கங்கை யென்னும்பெயர்ப்பொன், (கூஎ)

ப-உ.—பிடி - கைப்பிடித்த பூவோடு, சேர் - கூடியிருக்கிற, களிறு - யானையை, அளித்த - க்ருபைபண்ணி ரக்ஷித்த, பேராளா- மஹாப்ரபாவனானவனே! பொடிசேர் - சாம்பலோடுகூடினவனாய், அனற்கு - நெருப்புக்கு, அம் - அழகிய, கை - காத்தை, ஏற்றான் - ஏந்தினருத்ரனுடைய, அவிர்-ப்ரகாசிக்கிற, சடைமேல் - சடையின் மேலே, பாய்ந்த - விழுந்த, புனல் - ஜலத்தையுடைய, கங்கை என்னும் பெயர் - கங்கையென்று பேரையுடைய, பொன் - ஶ்லாக்யமான ஸ்த்ரீயானவள், உன்றன் - உன்னுடைய, அடி - பாதத்தின்மேலே, சேர்ந்தன்றே - கிட்டியன்றோ, அருள் பெற்றாள்-க்ருபையை அடைந்தாள். (தயைக்குப் பாத்ரமானாள்). (௯எ)

வ்யா.—அவ.—தொண்ணூற்றேழாம்பாட்டு.—(பிடிசேர்) "அறம்பாவமென்றிரண்டுமாவான்" என்றதுக்கு வ்யாக்யாநம் இப்பாட்டு.

(பிடிசேர்களிறளித்த) ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்கள். "ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு:- சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு:" என்னுமவனிறே மோக்ஷத்துக்கதிகாரி. அன்றிக்கே, தன் பக்கல் ப்ரவணமாகாதே விஷயப்ரவணமாகையிறே பாபமாவது; தன் பிடிபக்கல் ப்ரவணமாய் தன் பக்கலின்றிக்கே இருந்த களிறதை ரக்ஷிக்கும்போது பாபமதானிட்டவழக்காக வேணுமிறே. (பேராளா) பிடிசேர்ந்தகளிற்றை ரக்ஷித்தானென்றால் அவன் செய்தானாகில் கூடுமென்றிருக்கை. (உன்றனடிசேர்ந்தருள்பெற்றாளன்றே) இத்தால் தர்மம் அவனிட்ட வழக்கென்கிறது. (பொடிசேரித்யாதி) பஸ்மச்சந்நனாய் அக்நியைக்கையிலே ஏற்றானாயிருந்துள்ள ருத்ரனுடைய விளங்காநின்ற ஜடைமேலே பாய்ந்த புனலையுடைத்தான கங்கையென்னும் பேரையுடைத்தான விலக்ஷணையான ஸ்த்ரீ உன் திருவடிகளிலே சேர்ந்தன்றோ நாட்டுக்குப் பாவநமாயிற்று.

அவ.—"பொடிசேர்" என்றவித்தால் ப்ராயச்சித்தம்பண்ணி அத்தால் சுத்தனன்றியிலேயிருக்கிறவனையும்சுத்தனாக்கிற்று திருவடிகளில் ஸ்பர்சத்தாலே என்கிறது.

(பிடிசேர்களிறு) அவன் பிடியை நினைக்க நீ அவனைநினைத்திலையோ. ஒருகால் நினைத்தானாகில்முன்புஸ்வரூப மிதுவன்றோவென்கிறது. ஜந்மவ்ருத்தங்களன்று ப்ரயோஜநமென்கிறார். (அருள்பெற்றாள்) பிறரை சுத்தராக்கும்படி பார்த்தருளினாள். (௯எ)

அரு.—தொண்ணூற்றேழாம்பாட்டு.—அன்றிக்கே-மோக்ஷா
காரிகளன்றிக்கே. அனற்கு அங்கை யேற்றான்-அநலுக்கு அங்கையே
றான். (கூஎ)

பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருவரங்கத்தால் திரிவரேலும், ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன். (கூஅ)

ப-உ.—பொன் - பொன்போலே, திகழும் - ப்ரகாசிக்கிற,
மேனி - வடிவையும், புரி-பின்னப்பட்ட, சடை-சடையையும், அம்-
அழகிய, புண்ணியனும் - புண்யத்தையுமுடைத்தான ருத்ரனும்,
நின்று-நின்று, உலகம் - லோகத்தை, தாய - அளந்த, நெடுமாலும்-
மேலானவனான ஸர்வேஸ்வரனும், என்றும்-ஸர்வகாலத்திலும், இரு
வரங்கத்தால் - இரண்டு சரீரத்தையுடையராய், திரிவரேலும் -
ஸஞ்சரித்தார்களே யாகிலும், ஒருவன்-(புண்ணியனான) ஒருத்தன்,
ஒருவன் - (நெடுமாலான) ஒருத்தனுடைய, அங்கத்து - சரீரத்தைப்
பற்றி, என்றும் - எக்காலத்திலும், உளன் - ஸத்தையுடையனா
வான். (கூஅ)

வ்யா.—அவ.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு.—(பொன்திகழு
மேனி) ஈஸ்வரனாய் அதிகாரியாய்த் தானும் சிலர் கார்யத்துக்குக்
கடவனாயிருக்கிறவனை, இவனுடைய ஸம்பந்தத்தாலே சுத்தனானென
ன்றுசொல்லும்படி யெங்ஙனே யென்னில்; ஈஸ்வராபிமாநியாயிருக்
கும்போது சொல்லுமத்தை ப்ரமாணிக்கவொண்ணாது; இவனுடைய
ஸ்வரூபத்தைப் பார்க்கலாகாதோவென்கிறார்.

(பொன்திகழுமேனி)ஸர்வேஸ்வரனாயிருக்கும்போது மேகஸ்யாம
மாயிருக்குமிறே.(புரிசடை)*தாழ்சடையானுக்கும் நீண்முடியானுக்
கும் வாசிபார்த்துக்கொள்ளலா மித்தனையிறே. (அம்புண்ணியனும்)
"ஹ்ருஷ்வாத்தாநம்தேவதேவோபபூவ- ஹுத்வாத்மாநம் தேவதே
வோபபூவ" என்கிறபடியே. (நின்றுலகந்தாயநெடுமாலும்) ஸ்வைர
மாக அதிமாநுஷ சேஷ்டிதத்தைப் பண்ணினவனும். அவன் தலையி
லும் பிறர் தலையிலுமாகத் திருவடிகளை வைத்தவனும். (என்று
மித்யாதி)இருவரும் ஸபரிகரராய்த் திரிந்தாரேயாகிலும். (ஒருவனித்

யாதி) ஒருவனுக்கு ஸ்திதி ஒருத்தன் சரீரத்தைப்பற்றி. "வலத்த னன் திரிபுரமெரித்தவன்" என்னும்படியே.

அவ.—ருத்ரனுடைய ஐஶ்வர்யம் பொய்யோவென்னில்; பகவததீநமென்கிறார்.

(நின்றுலகமித்யாதி) ருத்ரன் தலையிலும் நாட்டார் தலையிலும் ஒக்க அடியிட்டவன். (இருவரங்கத்தால்) இரண்டு வடிவுகளாலே யென்றுமாம். அங்கத்தில் ஏகதேசத்திலே உளனென்றுமாம். (௯௮)

அரு.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு.—புண்ணியனும் - புண்ணியம் பண்ணுகையாலே தேவனானென் என்றபடி. இருவரங்கம்-அங்க சதுரங்கபல மென்னுமாப்போலே ஸேனை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார்(ருத்ரனுடைய வித்யாதி). அங்கம் சரீரமாதல் ஏகதேசமாதல். (௯௮)

உளன்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமனென்றும்
உளன்கண்டாய், உள்ளுவா ருள்ளத் - துளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளானென் றோர். (௯௯)

ப-உ.—நல் - அநுகூலமான, நெஞ்சே - மநஸ்ஸே! உத்தமன் - புருஷோத்தமன், உளன்கண்டாய் - (நம்ஸத்தைக்காக) இருக்கிறான் கிடாய்; என்றும் - ஸர்வகாலத்திலும், உளன்கண்டாய்-(நம்ரக்ஷணத்துக்காக) இருக்கிறான் கிடாய்; உள்ளுவார் - த்யாநிப்பவர்களுடைய, உள்ளத்து - நெஞ்சிலே, உளன்கண்டாய்-வாஸம்பண்ணுகிறவன் கிடாய்; வெள்ளத்தில் - திருப்பாற்கடலிலே, உள்ளானும் - வாஸம்செய்தவனும், வேங்கடத்துமேயானும் - திருமலையை வாஸஸ்தாநமாக உடையவனும், உள்ளத்தில் - ஹ்ருதயத்தில், உள்ளான் - நித்யவாஸம்பண்ணுகிறவன்; என்று - இப்படி, ஓர் - புத்திபண்ணு.

வ்யா.—அவ.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு.—(உளன்கண்டாய்) நாட்டில் பெரியராயிருக்கிறவர்களும் தங்களுக்கேற க்ஷேத்ரஜ்ஞராயிருக்கிறபடி அறிந்திருக்கச் செய்தே ஈஶ்வரர்களாக ப்ரமிக்கிற

படி கண்டு திருவுள்ளம் பயப்பட, நாம் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டால் அறுத்துவிழ விடுகைக்கு ஒருத்தனுண்டு காணென்கிறது.

(உளன்கண்டாய்) இலனானவனே யுளனென்கிறதன்று; அவனுடைய ஸத்தை நம்முடைய ரக்ஷணத்துக்கும் நம்முடைய ஸத்தை நம்முடையவிநாசத்துக்கும்.நாம் ப்ரதிபத்திபண்ணுகிறதுபிறரை யஞ்சியன்று, நம்மையஞ்சி. பித்தத்தாலே மோஹித்துக் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டேனாகில் அறுத்துவிழவிடுகிடாய் என்றறிவுடையார்க்குச் சொல்லிவைக்குமாப்போலே. (நன்னெஞ்சே) எம்பெருமான் நமக்குளனென்று சொல்லப்பாங்காயிருக்கிற நெஞ்சே! (உத்தமனித்யாதி) அவனுடைய உண்மை ஸௌஹ்ருத்தாய்க்கொண்டு. அதாவது - பரஸம்ருத்யைகப்ரயோஜநனாயிருக்கை. (உள்ளுவாரித்யாதி) இவனொருநாளுளனென்றிருக்கில், பின்னை இவனென்றும் நமக்குளனென்றிருக்கும்.தான் புகுரப்புக்கால் விலக்காதவர்களுடைய ஹ்ருதயம் விட்டுப்போகவறியான். (வெள்ளத்தினித்யாதி) திருப்பாற்கடலிலே கிடக்கிறதும் திருமலையிலே நிற்கிறதும் தம்முடைய ஹ்ருதயத்திலே புகுருகைக்கு அவஸரம் பார்த்தென்றறி.

புறம்புள்ளார்கிடக்கிடீர். (உளன்கண்டாய்) பிறர்க்குபதேசிக்கிறவர்.எம்பெருமானுளனென்றிருக்கிறாரல்லர்; நாம் நமக்கில்லாதாப்போலே அவன் நமக்கென்று முளன். (நன்னெஞ்சே) இவ்வர்த்தத்திலென்னிலும் எனக்குபதேசிக்க வல்ல நெஞ்சே. (உத்தமன்) தன்பேறாகஉபகரிக்கை.(என்றும்) "அஸந்நேவஸபவதி - அஸந்நேவஸ பவதி" ஆனவன்றேடு, "ஸந்தமேநம்ததோவிது:-ஸந்தமே நம்ததோ விது:" ஆனவன்றேடு வாசியில்லை. (உள்ளுவார்) புகுரஸம்பவிப்பார். (உள்ளத்துளன்) "இடவகைகளி கழ்ந்திட்டு". (வெள்ளமித்யாதி) என்றுமுளனாமை காட்டுகிறார். "அணைப்பார்க் கருத்தனாவான்".

அரு.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு.—பிறரையஞ்சி-பௌத்தாதிகள் ஈஸ்வரனில்லை யென்கிறதுக்கு அஞ்சி "உளன்" என்கிறதன்று; நம்மையஞ்சி - நம்முடைய ஸத்தையுண்டாக்குகைக்கு அவனுளனென்கிறது. இப்போது "உளன்" என்கிறது எப்படியிருக்கிறதென்ன; அருளிச்செய்கிறார் (பித்தத்தாலே யித்யாதி).

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (புறம்புள்ளாரித்யாதி). அங்கங்கே யிருக்கிறதெல்லாம் இவனிடத்திலே யிருக்கைக்கோ வென்ன அருளிச்செய்கிறார் (அணைப்பார்க்கித்யாதி). (௯௯)

ஓரடியும் சாடுதைத்த வொண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலா மென்னெஞ்சே - ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனையே மனத்து வை. (க00)

முதற்றிருவந்தாதி முற்றிற்று.

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ப-உ.—என் - என்னுடைய, நெஞ்சே - மநஸ்ஸே! ஓர் - ஒரு, அடியில் - திருப்பாதத்தால், தாயவனை - (ஜகத்தை) அளந்தவனை, கேசவனை - கேசியென்கிற அஸுரனையழித்தவனை, தண் - குளிர்ந்த, துழாய்மாலை - திருத்துழாய் மாலையாலே, சேர் - அலங்கரிக்கப்பட்ட, மாயவனையே - ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய ஸ்ரிய:பதியையே, மனத்து - ஹ்ருதயத்திலே, வை - வைத்துக்கொள்; (இப்படி வைத்தால்), ஓரடியும் - (ஜகத்தை யளந்த) ஒருதிருப்பாதத்தையும், சாடு - சகடத்தை, உதைத்த - அடித்த, ஒண் - அழகிய, மலர் - புஷ்பம்போன்ற, சே - சிவந்த, அடியும் - திருப்பாதமுமான, ஈரடியும் - இரண்டு திருவடிகளையும், காணலாம் - ஸாக்ஷாத்கரிக்கலாம். (க00)

வ்யா.—அவ.—நூறும்பாட்டு.—(ஓரடியும்) பெறுமத்தாலே பெவதும்அவன் திருவடிகளையவனாலே பெறுவதென்கிறது.

(ஓரடியும்) லோகத்தை யடங்கலும் தன்னதாக்கின திருவடிகளையும். (சாடித்யாதி) சகடாஸுரனை நிரஸித்த போக்யமான திருவடியையும். (ஈரடியுங்காணலாம்) இவ்விரண்டு திருவடிகளும் ப்ராப்யம். (என்னெஞ்சே) காணவேணுமென்றிருக்கிற வென்னெஞ்சே. இதுக்கு பாயமேதென்னில்; அவனென்கிறது. (ஓரடியிற்றாயவனை) ஓரடியாலே எல்லாவற்றையுமளந்தஸுலபனை. (கேசவனை) விரோதி நிரஸந சீலனானவனை. (தண்டுழாய்மாலை சேர் மாயவனையே மனத்துவை) ஸுலபனுமன்றிக்கே விரோதியைப்போக்கு மவனுமன்றிகே யிருக்கிலும்

விடவொண்ணாதபோக்யனான மாயவனையே. நாமுன் ஸஹகாரிகளென்றிராதேகாண்பதுமவனையே; காட்டுவானுமவனே. நமக்குப்ரதிபத்தியே உள்ளது.

(ஓரடியித்யாதி) சாடுதைத்த ஓரடியையும் திரு வுலகளந்த சேவடியையுங்காணலாம். காணவொண்ணாதோவென்றிருக்கிற வென்னெஞ்சே! (தாயவனை) கீழ்ச்சொன்ன வோரடி. (கேசவனை) சாடுதைத்த திருவடிகளையுடையவனை. திருவடிகளைத் தருவானும் விரோதியைப்போக்குவானும். (தண்டுழாய்) போக்யதை. (மாயவன்) இவனென்று நினையாதபடி பண்ணவல்லவன். (மனத்துவை) அநுஸந்தி. (௧00)

அவ.—(வையமித்யாதி) நினைத்தவாறு பேசியல்லது நிற்கமாட்டாமல் பேசுகிறார். (௧)

முதற்றிருவந்தாதி வ்யாக்யாநம்

முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—நூறும்பாட்டு.—திருவடிகளே உபாயமும் உபேயமுமானவும் அவையிரண்டும் அவனாலே பெறவேணுமென்றபடி. (௧00)

அந்தாதியாகையாலே முதற்பாட்டுக் கவதாரிகை யருளிச்செய்கிறார். (நினைத்தவாறித்யாதி). (௧)

அரும்பதம் முற்றிற்று.

அப்பிள்ளை திருவடிகளேசரணம்.

